கதிரகாமப்

பிள்ளைத்தமிழ்.

841.6
பாண்டி
SL/PR

சிவங். கருணலய பாண்டியப் புலவர்.

ஓம் :

திருச்சிற்றம்பலம்.

கொழும்பு விவேகானந்தசபை யியற்றமிழாசிரியர்
திருநெல்வேலிநாட்டு மலேயடிக்குறிச்சிச்

சிவங்.

கருணாலய பாண்டியப் புலவர்

இயற்றிய

திருக் கதிரகாமப் பிள்ளைத்தமிழ்.

ஆராய்ச்சிக் குறிப்புரையும், கதிரகாம
வரலாறும், ஓவியமுமமைந்தது.

இவை

கொழும்பு, ராபர்ட் பிரஸ் லிமிட்டெட் அச்சுக்களரியிற்
பதிப்பிக்கப்பட்டன.

கொல்லமாண்டு ௲௱௰௨. ஆடித்திங்கள். ௩ம் கிழமை

18-7-1937.

[Copyright Reserved.]

34106

ஓம் :
திருச்சிற்றம்பலம்.

உரிமை யுரை.

நேரிசை வெண்பா.

உரித்தா குககதிரை யொண்புலவேற் செவ்வேள்
பரித்தார் தமிழ்ப்பிள்ளைப் பாட்டுக்—கருத்தாங்கி
யெற்பெற்ற முற்றெய்வ மின்கோ மதியம்மைத்
தற்பெற்ருற் பெற்றுயர்ந்த தாய்க்கு.

ஓம்:
கதிரகாம முருகன் துணே.

கந்தரநுபூதி.

"யாமோ தியகல்வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனுற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீரினியே.

முகவுரை.

தெய்வச் செந்தமிழ்ச் சிறப்பியற்றனிமொழி, வழக்கும் செய்யுளுமென இருபாற்படும். அவற்றுட் செய்யுள் உரைச்செய்யுள், பாச் செய்யுள் நூற்செய்யுள் (சூத்திரம்) என முத்திறப்படும். அவற்றுட் பாச்செய்யுள், கடும் பாச்செய்யுள், (ஆசுகவி) இன்பாச்செய்யுள், (மதுர கவி) அரும்பாச்செய்யுள், (சித்திரகவி) பெரும்பாச் செய்யுள் ; (வித்தாரகவி) என நாற் கூறுபடும். அந் நான்கனுள்ளும் பெரும்பாச்செய்யுள், தனிநிலைப்பாச் செய்யுள், தொடர்நிலைப்பாச் செய்யுள் தொகைநிலைப் பாச் செய்யுள் என மூவகைப்படும். அவற்றுட் டொடர் நிலைப்பாச் செய்யுள்என்பதுஈற்றெழுவாய் (அந்தாதி)த் தொடையானுதல் ஒரு பொருட்செய்தியின் மேலாதல் தம்முள் ஒன்றனேடொன்று தொடர்ந்து நிற்கும் பலபாக்களின் றெகுதியாகச் செய்யப்படுதலின் அவ்

வாறு காரணக்குறிபெற்று அவ்வாற்றான் இருவேறு படும். அவ்வாறுபடும் சொற்றொடர் நிலைச்செய்யுள், பொருட்டொடர்நிலைச்செய்யுள் என்னும் இரண்டனுள்ளும் பொருட்டொடர்நிலைச்செய்யுள் பலவகைப்படும். அவற்றுட் பிள்ளைத்தமிழ் என்பதும் ஒன்று. இது பிள்ளைச் செய்தியாகிய ஒரு பொருண்மேற் பல செய்யுளாய் வருதலாற் றொடர்நிலைச்செய்யுள் எனப்படுமாயினும் ஒவ்வொரு பாவும் தனித்தனிப் பொருண்முடிந்து தொக்கு நிற்றலிற் றொகைநிலைப்பாச்செய்யுளெனினு மிழுக்காது. இனித்தொகைநிலைப்பாச் செய்யுளையும் ஒருவாற்றாற் றொடர்நிலைப்பாச்செய்யுளின்பாற்படும் என்பார்க்குப் பிள்ளைத்தமிழ்போல்வனவும் தொடர்நிலைப்பாச் செய்யுளேயாம்; இது பாட்டியனூலுடையார் கொள்கையாகும். ஏனையது அணியியனூலுடையார் கொள்கையாகும். இனிப் பன்னிருபாட்டியல்முதலிய நூலுடையாரெல்லாம் முதற்கண் எடுத்தோதி இயல் கூறப்பெறும் பெற்றி வாய்த்தலிற் பிள்ளைத்தமிழின் சிறப்புடைமை நன்கு விளங்கும்.

கடவுளருளாயினும் மாந்தருளாயினும், பிள்ளைப் பெருமாளாயுற்ற பேரருளாளரைப் பாட்டுடைத்தலைமக்களாகக் கொண்டு அன்னாரை அவரது பிள்ளைமைப் பருவத்தின்கட் செவிலித்தாயார் முதலிய மகளிர்கள் பேரன்பு சுரந்து ஆர்வமீதூர்ந்து கழியுவகை கூரப் பலபடப் பாராட்டிச் செப்பியும் அகவியும் கிளக்கும் கிளவியாகச் செந்தமிழ்ப் புலவராற் புனைந்து காட்டிப் பஃறொடை வெண்பாவாயினும் அகவல் விருத்தமாயினும்

கலி விருத்தமாயினும் அப்பிள்ளைமைப் பருவத்தின் கூறுபாடுகடோறும் ஒரொன்றாகவாவது, மும்மூன்றாகவாவது, ஐவைந்தாகவாவது, எவ்வேழாகவாவது, ஒவ்வொன்பதாகவாவது பப்பதினொன்றாகவாவது இங்ஙனம் ஒற்றைப்பட்டுவர யாத்திசைத்துப் பாடப்படுதலும் பப்பதினொரு பாக்களினிகப்பப் பாடப்படுதல் கூடாமையும் பிள்ளைத்தமிழ்ப் பாட்டியன் மரபு. அங்ஙனம் பாடுங்கால் முதற் செய்யுளி னாலடியும் தம்முள் ஒற்றொழிய எழுத்துக்கள் எண்ணலள வொத்திருத்தல் வேண்டும்' ஒரு பருவத்தின்மேல் வரும் பல பாக்களும் ஒரோசை வண்ணத்தாற் பாடப்படுமாயின் அவற்றின் ஈற்றடியினிறுதி ஒருசொற்றொடராகவே பாடப்படுதல் வேண்டும். காப்புச்செய்யுள் ஒன்பதாகவேனும் பதினொன்றாகவேனும் பாடுகவென்பது நூன்முடிபாயினும் அவற்றிற் குறைவாகவோ ஏனைப் பருவச் செய்யுட்களின் றொகையளவாகவோ, முன்னர்ச் செப்பிய தொகை வரையறையிற் பிறழ்ந்தும்வருதல் வழக்குண்மையிற் பிறவாறுபாடுதல்இழுக்காகுமெனக் கடியப்படாதாதல், எதிரதுபோற்றல் என்னும் நூற்புணர்ப்பாற் புதுவது புகுதலாகத் தழீஇக் கொண்டு ஆளப்பெறும் என்க. இனி இற்றைஞான்று வழங்கும் பிள்ளைத்தமிழ்ச் செய்யுட்கள் பலவும் அகவல் விருத்த மொன்றானேயே செய்யப்பட்டுள்ளன. ஏனைப்பஃறொடை வெண்பாவாலாயினவும் கலிவிருத்தத்தாலாயினவும் இறந்தனபோலும். மற்றுப் பதினாட்டையகவைகாறும் ஆண்பாலாரும் பூப்புத்தொடக்கங்காறும் பெண்பாலாரும் பிள்ளையென வழங்கப்படுவர்; அவரை

விளித்து மேற்போந்த மகளிர் உரையாடுந் தமிழாதலிற் பிள்ளைத்தமிழ்; எனப்பெயரும், ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற்பிள்ளைத்தமிழ் என வகையும் எய்துதலாயின. இப்பாட்டு வடமொழி முதலிய பிறமொழிக் கண்ணும் உளவாய்ப் பொதுவாகாது தமிழ்மொழி யொன்றற்கே சிறந்தமையாற் றமிழென்னும் பொதுப் பெயரே அடையெடுத்துச் சிறப்புப் பெயராய் நின்றது. தமிழ் மொழிக்கே சிறந்ததனைத் தமிழ் மொழியெனவும் பெயர் பகர்தல், தமிழ்மொழிக்கே சிறந்த அகத்திணைப் பொருணுதலியதனைத் தமிழ் நுதலிற் றெனக் களவியலுரை வழங்குமாற்றானும் பெறப்படும். இனிப் பிள்ளைத் தமிழென்பதனைப் பிள்ளைப்பாட்டெனவும் பிள்ளைக்கவி யெனவும் வழங்குவர். இனிப் பிள்ளைமை கழிந்த பாட்டுடைத் தலைமகனையும் பிள்ளையாகப் படைத்துக்கொண்டு பாடுதலும், தாம்பாடும் பிள்ளைச் செயல்களுக்குப் பருவம் வரையறுத்தலும், புகழ் புனையும் புலமகளாளர் கோண்மரபு. பிள்ளைத்தமிழ்ப் பாட்டொன்றுமே பிள்ளையைக் கொண்டாடிக் கூறுவதன்றிப் பிள்ளையைக் கொண்டாடிக் கூறும் பிற பாட்டுக்களுமுள. பெரியாழ்வார் திருமொழியிற் றாயர் முதலிய இடையர் மகளிர்கள் பிள்ளைப்பருவத்துக் கண்ணனைக்காதல்விஞ்சி யிகழ்ந்தும் புகழ்ந்தும் பாராட்டியவாறு காணப்படும். இனி ஆண்பாற் பிள்ளைப்பருவம்பதினான்கும் பிறவுமாகப் பாற்படும் என்ப. அவையிற்றின் பெயரும் முறையும் காலமும் பின்வரும் பிங்கலந்தை நூற்பாவான் இனிதுணர்ந்து கொள்க.

" பிள்ளைப்பாட்டுத் தெள்ளிதிற் கிளப்பிற்
றிங்க ளிரண்டிற் றெய்வங் காக்கென
இன்றமிழ்ப் புலவரியம்பிய காப்பும்
ஐந்தாந் திங்களிற் செங்கீரை யாடலும்
ஆறாந் திங்களிற் கூறுதல் கற்றலோ
டேழாந் திங்களி னின்னமு தூட்டலும்
எட்டாந் திங்களி னியற்றா லாட்டலும்
ஒன்பதாந் திங்களி லுயர்சப் பாணியும்
பத்தினோ டொன்றின் முத்தங் கூறலும்
ஆண்டுவரையின் ஈண்டுவரு கென்றலும்
மதியீ ரொன்பதின் மதியை யழைத்தலும்
இரண்டா மாண்டிற் சிறுபறை கொட்டலும்
மூன்றா மாண்டிற் சிற்றில் சிதைத்தலும்
நாலா மாண்டிற் சிறுதே ருருட்டலும்
பத்திற் பூணணி பன்னீராண்டினிற்
கச்சொடு சுரிகை காமுறப் புனைதலென்
றின்னவை பிறவு மாகுமி வற்றுண்
முன்னர் மொழிந்த வொழிந்தவற் றோடும்
பெற்ற வாண்பாற் பிள்ளைப் பாட்டாம்."

என்பது. இப்பருவ நிகழ்ச்சிகளுள் ஆறாந்திங்களிற் கூறுதல் கற்றலும் ஏழாந்திங்களின் இன்னமுதூட்டலும் பத்தாமாண்டிற் பைம்பூணணிதலும் பன்னீராண்டினி லுடைவாள் செறித்தலும் என்னும் இந்நான்கும் பிறவெனப்பட்டனவும் இப்பொழுது வழங்கும் ஆண்பாற் பிள்ளைத் தமிழ்களிற் சொல்லப்படவில்லை.

அவ்வவர்க்குரிய பருவமுற்றும் ஒருங்கிசைத்தல்வேண்டும் என்னும் கட்டளையின்றிப் புலவர், தாம் வேண்டியவாறு

குறையவுங் கூறிப்போதரலாமென்பதன்றி மேன்மொழிந்தநான்கும் பிறவும்பாடற்க; எனவிலக்கற்குவேண்டற்பால வாயிலொன்றும் சொல்லக்கூடாமையால் அவையிற்றைக் கூறுவார் கூறின் அதனான் நேரும் இழுக்கொன்றுமில்லையென வுணர்க. இனி இரண்டாந் திங்கட் செய்தியின் பின்னர் ஐந்தாந் திங்கட் செய்தி, மூன்று நான்காந் திங்கட் செய்திகளை யிடையிட்டு வருமாறுபோல ஐந்தாமாட்டைச்செய்தியின்பின்னர்ப் பத்தாமாட்டைச்செய்தி, ஆறு எழ் ஒட்டு ஒன்பதாமாட்டைச் செய்திகளை யிடையிட்டு வருதலமையும். இனி மொழி பயிலலும் அமுதூட்டலும் பூணணிதலும் உடைவாள் செறித்தலும் போல்வன, ஏனைச் செய்திகள் அவ்வப்பருவங்களின் நிகழ்ந்தமைந்து மாறுதல்போலத் தத்தமக்கடைத்த பருவங்களின் நிகழ்ந்தமைந்து மாறாது ஏனைப் பருவங்களினும் தொடங்கவும் தொடர்ந்து நிகழவும் பெறுதலின் அவை கூறப்பெறா வெனின், அது பொருந்தாது; என்னை? பிள்ளைத்தமிழ் பாடுதலின் கருத்துப் பிள்ளையின் வரலாறு காட்டுதலன்று; கன்று காட்டிப் பசுவைப் பாலைக்கறக்குமாப்போலப் பிள்ளைமையை நினைப்பித்துத் தாயார் முதலியோரது பெறலரும் போன்புச் சுவையை உள்ளத்தினின்றும் வெளிப்படுத்து நுகர்ந்து இன்புறல்வேண்டும் என்னும் வேணவாவேயாமாதலானும் அத்தகைய விழுமிய காதலே சிற்றுயிர்கள் மாட்டுச் சென்று பற்றுமாயின் அறம் பொருளின்பங்களையும் பேருயிர் மாட்டுச்சென்று பற்றுமாயின் அழிவிலின்பத்து ஒழிவில் வீடுபேற்றினையும் பயக்கும் ஆற்றல் சான்றது; என்பவாதலானும் இதுநோக்கியே

"இன்பமும் பொருளு மறனு மென்றாங்"
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கின்

எனத் தொல்காப்பியனாரும்

"என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப்
பொன் போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்போன் மணியினை யெய்த வொண்ணாதே"

எனத் திருமூலவடிகளும்

"என்பு தோலுடை யார்க்குமிலார்க்குந்தம்
வன்பகைப் புலன் மாசற மாய்ப்பதென்
முன்பு பின்பின்றி மூவுலகத்தினும்
அன்பின் அல்லதோராக்க முண்டாகுமோ"

எனக் கம்ப நாடரும் அன்பின் இன்றியமையாச் சிறப்பு விளக்கி வற்புறுத்திக் கூறுவாராதலானும் அன்னையர் முதலியோர்க்குப் பிள்ளையின் சொற் கேட்டற்கண்ணும் சோறூட்டற்கண்ணும் பூணணிந்து நோக்கற்கண்ணும் உடைவாள்செறித்தலை விழைதற்கண்ணும் தம்இயற்கையன்பு எல்லைகடப்பப் பொங்கி வழிதலியல்பாமாறு காண்டுமாதலானும் அதுவே, தம்உயிர்க்கு நனிபெருஞ் சுவை விளைக்குமாதலானும் அதனாற் பிள்ளைமையைப்பாடுமுகத்தான் அம்மகளிரது போன்பினைத் தம் உள்ளத்துத் தோற்றுவித்து வளர்த்தற்கட் புலவர்க்கு அவாவெழுதல் கூடுமாதலானும் ஈண்டுப் பாடப்படும் பிள்ளை நான்முகனாற் படைக்கப்பட் டிறக்கும் பிள்ளையாகாது புலவராற் படைக்கப்பட்டு நிலைபெறும் பிள்ளையாமாதலா

னும் அகத்திணைச் செய்யுள் பாடுங்கால் ஐவகை நிலங்களுள் ஒன்றற்குரிய கருப்பொருள் உரிப்பொருள்கள் ஏனை நிலங்களின்கண்ணும் உளவாதல் காணப்படுமேனும் அங்ஙனம் விரவச் செய்யுள் செய்யாது அவ்வந் நிலங்கட்குரியவெனப் படுபவற்றை யவ்வந் நிலங்கட்கே சார்த்திச் செய்யுள் யாத்தல் வேண்டும் என்பது புலவர்மரபாமாறுபோல மேற்பகர்ந்த பருவங்களுள் ஒன்றற்குரிய நிகழ்ச்சி பிற பருவங்களினும் நிகழ்தல் கூடுமேனும் அவ்வாறு செய்யுள் செய்யாது அவ்வப்பருவங்கட்கே சார்த்திச் செய்யுள் யாத்தல் வேண்டுமென்பதூஉம் புலவர் மரபாதலானும், அவை நான்கும் ஏனைப்பருவங்களிற் றாயர் செய்து காட்டலேயன்றிப் பிள்ளைகள் தாமாகவேயும் செய்யுமாதலானும் அக்காலத்து அச்செயல் அத்துணைச் சுவைப்படாவாமாதலானும், அதனாற் கூறுதல்கற்றலும் அமுதூட்டலும் பூணணிதலும் உடைவாள் செறிதலும் தத்தமக்கு முறைப்படுத்திய பருவங்களுள் நிகழ்தலே சிறப்புடையனவெனப்படுதலானும் சிறப்புடைப் பொருளைத் தானெடுத்து மொழிதலே செய்யுட்கியல்பாதலானும் பிங்கலந்தை அந்நான்கனையும் எடுத்தோதுதலானும் அதனான் அந்நூலுண்டாதற்கு முன்னர் அந்நான்கும் எடுத்துக்காட்டுண்மை கருதலளவைக்குப் புலனாமாதலானும், அவ்வெடுத்துக்காட்டுடையார் நல்லிசைப் புலமைச்சான்றோராவராதலானும் அவர் நெறி பழிக்கப்படுவதன்றாமாதலானும் பிறவாற்றானும் மேற்கூறிய நான்கனையும் பாடுதல் கூடாது என மறுப்பார் கோட்பாடு அறிஞரால் ஏற்றுக்கொள்ளற்பாற் றன்றெனத் துணிக. இனிப்பன்னிரு பாட்டியன் முதலான நூல்

கள் பிங்கலந்தைக்குப் பின்னர் எழுந்தனவாதலான் அவையெல்லாம் பிங்கலந்தை நூற்குமாறுபோலாதுமுற்கூறிய நான்கனையும் நூலாதொழிந்தனவாதற்கு வாயில், அக்காலத்து இந்நான்கும் புனைந்துரைத்த பிள்ளைத் தமிழ்ச் செய்யுள் அவராற் காணப்படாமையேயாம். காணப்படும் பொழுது, பிள்ளைத்தமிழ் பாடுங்கால் அந்நான்குங் கூட்டியும் பாடப்படும் என முடிக்கும் பாட்டியல் நூல்களும் வழிநூல்களாகத் தோன்றற்பாலனவாமென்க. இனித்தாம் எடுத்துக்கொண்டு பாடப்படும் பொருளுக்கு முன்னையோர் ஆட்சி வேண்டுமாலெனின் அதுபொருந்தாது; ஆட்சிக்கு எடுத்துக்கோள் வேண்டும். எடுத்துக்கோட்கு ஆட்சிவேண்டுமென ஒன்றனையொன்று பற்றுதல் என்னுங் குற்றம் தங்குமென்பதனால்.

இனி ஆண்பாற் பிள்ளைக்கு ஓதிய வாரானைப்பருவ முடியக்கிடந்த எண்பருவ நிகழ்ச்சியும், குழமணமொழிதல், ஐங்கணைக் கிழவனை யார்வமொடு நோற்றல், நீராடல், பாவையாடல், அம்மனையாடல், கழங்காடல், பந்தடித்தாடல், சிறுசோறடுதல், சிற்றிலிழைத்தல், ஊசலாடல் என்னும் பத்துங் கூட்டிப் பெண்பாற் பிள்ளைக்குச் செய்யுள் செய்யப்படும். இவற்றுட் குழமணமொழிதல், மூன்றாமாண்டின் நிகழ்வது. ஒழிந்தன ஐந்தாமாண்டு முதல் ஒன்பதாமாண்டுகாறும் நிகழ்வனவாமென்பர். இனிப் பன்னீராண்டினிற் காமனோன்பு கூறலுரித்தென மொழியும்; பன்னிருபாட்டியல். இனி இவ்விரு பிள்ளைகளுக்கும் செங்கீரைப் பருவத்தின் முன்னர்ப் பிறப்பு,

சுற்றத்தாருவகை, காப்பு, வளர்ச்சி, அச்சமுறுத்தல் என்றிவ்வைந்தும் பாடுதலுமுண்டு. அவை இக்காலத்துத் தனித்தனிப் பாடாதொழியினும் சுருங்கச்சொல்லன் மாட்சிபற்றி ஏனைப்பருவங்களிற் சார்த்திப்பாடாதொழிதலுமில்லை: இனிப் பிள்ளைத்தமிழ்ப் பாட்டுடைத்தலைவர் கடவுளராயின் நற்றாய்கூற்றுக் கிளக்கப்படாது. இனி அவர் மக்கட் பிறப்பாயின் அவரது மூன்றாந் திங்கண் முதல் இருபத்தொன்றாந் திங்களெல்லையினுளாயினும் ஓராண்டுமுதல் ஐயாண்டெல்லை யினுளாயினும் அவர்க்குப் புலவராற் பிள்ளைத்தமிழ் பாடிக் கொடுக்கப்படும். கடவுளர்க்கு இவ்வரையறை யில்லை. அவர், நினைப்பார் நினைந்த கோலத்தோடு, நினைந்தபொழுதே நினைந்தவாறே காட்சியளிப்பாராதலான், இதனான் அவர்க்கு இளமை கழிதலுமில்லையாதலான் அவரது பிள்ளைமை புனைந்துரையுமன்று. நிலவேந்தர் முடிசூடினதன் பின்னர்ப் பிள்ளைப்பாட்டுப் பெறார். எனவே குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் அவன் முடிசூடுமுன்பு பாடப்பட்டதாயிற்று. இனித் தம் பிள்ளைகளுடைய குணங் கண்டுழியுவந்தும் குற்றங்கண்டுழிச் சினந்தும், அப்பிள்ளைகள் செய்வன செய்யுமாற்றினை விழையாது, தாம் பணித்த நெறியிற் பிள்ளைகளை நடப்பித்தும் ஒழுகும் அறிவே பிழம்பாகிய தந்தையர் முதலிய ஆண்மக்களிடத்து அவ்வாற்றாற் பிள்ளைகள்பாற் றமக்குள்ள காதல், இடையிடையே மறைந்து மறைந்து வெளிப்படுதல் வேண்டப்படுவதன்றாதலின் அவர் கூற்றாகப் பிள்ளைத்தமிழ் பாடாது, தம் பிள்ளைகள்பாற் குற்றங் குணங்கள் விரவிக் கிடப்ப அவற்றுட் குணமேயன்றிக் குற்றமும்

உடன் காணமாட்டாத பேதைமையும் பிறந்த தம்பிள்ளையின் குற்றங்காட்டிக் குறித்த வழியும் வெகுளாது குற்றத்தையும் குணமாகக் கொண்டுவக்கும் ஒரு தலைப்பற்றும் சூழும் அன்பே பிழம்பாகிய தாயர் முதலிய பெண் மக்களிடத்து அவ்வாற்றான் அவ்வன்பின் விழுப்பம் எக்காலும் சிறிதும் மறையாது வெளிப்பட்டு நிலைநிற்றலே வேண்டப்படுமாதலின் அன்னோரதுளங்கனிந்துருகும் கூற்றாகவே பிள்ளைத்தமிழ் பாடக்கடவாராவர்; புலவர் பெரு மக்கள். இனிக் கல்வி கற்றல் முதலிய பிள்ளைச் செய்தி கூறல், தந்தையர் முதலிய கல்வியறிவுதுய்த்தொழுகும் ஆண் மக்கட்கே இயைபுடையனவாதலாற் கொழுநர் முதலியோர் அறிவித்தவாறு அறிந்தொழுகுதலன்றித் தாமாக வறிந்தொழுக மாட்டாத மடமை பூண்ட பெண்டிர் கூற்றாகிய பிள்ளைத்தமிழுள் விள்ளப்பெறாவாயின. இனி இத்தகைப் பெண்டிரது இயற்கைப் பேரன்பினை ஆடவர் தாம் விரும்பும் வீடுபேற்றுக்குச் சிறந்தது எனக் கருதுங்கால் தம்மைப் பெண்டிராக நினைவாற் படைத்துக்கொண்டு அவ்வன்பினைத் தம்பாற் செய்து கொள்ளுதலியல்பு. அதனானன்றே திருவாதவூரடிகள் ஆளுடையரசு, நம்மாழ்வார் போலும் நம்பிகளெல்லாம் தாம் பெண்டிர் நிலையின் நின்றே கடவுளைப் பெரிதும் பாடிக் காதலிப்பாராயினர். கடவுளை முட்படத் தப்பிப் போகாமல் எளிதிற் பிணிக்கும் ஆற்றல், செருக்கற்ற பேதைப் பெண்களது அன்பின் கணன்றி வேறெப் பொருளகத்தும் இயல்பான் இல்லையன்றோ? இனிப் பாட்டுண்ணும் தலை மக்களும், அவர் புகழும் உலகியல் வழக்காகவும் அவரைப் பிள்ளைகளாகப்

படைத்து விளித்து மகளிர் கூற்றாகப் புலவர் கூறும் கூற்றுப், புனைந்துரையாகிய கூத்தியல் வழக்காகவும் அமைதலிற் பிள்ளைத் தமிழின் பொருள் அவ்விரு திறமும் விராய் வருதலாகிய புலனெறி வழக்கு எனப்படும். அதனாலன்றே புலனெறி வழக்குப் பாடற்குரிய கலிப்பாவென்னும் இசைப்பாவாகிய செந்துறைப் பாட்டாற் பிள்ளைத்தமிழ் பாடுதல் பெருவர வாயிற்றென்க. அகவல் விருத்தமுதலிய பாவினங்களும் கொச்சகக் கலிப்பாவின்பாற் படுமாதலான் அகவல் விருத்தத் தாலாயினவற்றைக் கலிப்பா வாலாயினவெனக் கூறினேம். அகவற் பாவினையும் செந்துறைப் பாட்டாக்கிப் பாடினாருமுளர். தமிழ்மாலை (தேவாரம்) யுள்ளும் நாலாயிரத் திருமொழியுள்ளும் வரும் விருத்தங்கட்குப் பண்ணும் சீரும் அடைத்தலான் அவையெல்லாம் செந்துறைப்பாட்டென்பது கொள்ளப்படும். பண்ணும் சீருமுணர்த்திப் பாடற்குமட்டுமேற்கும் பாட்டு, ச்செந்துறையெனப்படும் அங்ஙனமன்றி விறல்படப்பாடியாடுதற்குமியைந்துவரும் பாட்டு, வெண்டுறையெனப்படும். இனிப்பிள்ளைத்தமிழ் புதுவதுபுனைந்தயாப்பாதலிற் றொடர்நிலைச்செய்யுட்கு வேண்டப்படும் அம்மை முதலிய எண்வகைவனப்புக்களுள் விருந்து என்னும் வனப்பாம் என்க. மற்று இச் செய்யுட்கிளவி, தாயர்முதலாகிய ஒரு மருங்குபற்றிய கேண்மையாதலாற்கைக்கிளைதிணையாய்ச் சுட்டியொருவர்ப்பெயர்கொளப்பட்டு எல்லாரானுமுணர்ந்து நுகரப்படவெளிப்பட நிகழ்தலிற்புறமாய்க், கைக்கிளைத்திணைப் புறமாகிய பாடாண்டிணையாகுமெனவும் பாடாண்டி

ணைத்துறைகளுட் குழவிக்கட்டோன்றிய காதலின்பமென்னுந்துறையாமெனவும் உணரப்படும். இவ்வின்பம் இம்மைப்பேறுதலின் அறம்பொருளின்பங்களுள் ஐம்பொறிகளானும் துய்க்கப்படுவதாகிய இன்பம் எனப் பொதுவாயொன்றாயடங்குமாயினும் சிற்றில் சிதைத்தற்றுறைக்கிளவியும் ஏனைத்துறைக்கிளவியும் தம்முள்வேறுவேறாயொத்தவின்பமென்பது வுய்த்துணர்ந்துகொள்க. சிற்றில் சிதைத்தற்றுறைக்கிளவி, இடக்கர்ப்புணர்ச்சி விளைவினது. ஏனைய அன்னவல்ல. இனிப்பிள்ளைத் தமிழ்க்கு மெய்ப்பாடு உவகை. செல்வவுவகை, புலனுவகை, புணர்வுவகை, விளையாட்டுவகையென்னும் நாலுவகைகளுள் இதுபுணர்வுவகை. ஒழிந்த மூன்றும் மகளிரது மேற்கூறிய புணர்வுவகையைச்சார்ந்து தலைமகன் மாட்டுநிகழப்பெறுவன. இனி இப்புணர்வுவகையைச் சார்ந்து மற்றை நகைமுதலிய மெய்ப்பாடுகளும் காணப்படும். இனிப்பிள்ளைத்தமிழாற்பெறும் பேறு: முன்னர்க் கூறிவந்த முறையான் நூற்பொருள் நாற்பேறுமாமென்க. இன்னும் இக்கூறிவந்தவைபோலும் பிள்ளைத் தமிழின் திறங்களெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும். இடனேர்ந்துழிச் செப்புதும்.

இனிக்கதிரகாமப்பிள்ளைத்தமிழ் என்பது, இமிழ்திரைபுடைசூழ் ஈழவளநாட்டிற் கதிரகாமம் என்னும் மூதூரிடத்துத் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியுறையும் முருகக்கடவுளைப் பாட்டுடைத்தலைமகனாக எடுத்துக்கொண்டு அப்பெருமானைப் பிள்ளையாகப்புனைந்துபடைத்து மேலே பிள்ளைத்தமிழ்க்குக் கூறிய சிறப்பியலும்

நன்மைப் (மங்கலப்) பொருத்தமுதலிய பொதுவியலும் அமைய இப்பொழுது எம்மால்,முக்கைதப்பிள்ளைத்தமிழ்ச் செய்யுள் பல்வகையாகப்பாடிப்போந்த ஆசிரியர் பலரின் நெறிச்சுவட்டினையொற்றி, அவருடைய சொல்லும் பொருளும் போற்றித்தொடுத்து முடிக்கப்பட்டுள்ளது' இத்தொடர்நிலைச் செய்யுளினகத்துச் செய்யுட்காப்புப் பாவொடு காப்புப்பருவமுதல் உடைவாள் செறித்தற் பருவ மீறாகவுள்ள பதினான்கு பருவங்கட்கும், பருவக் தொறும் மும்மூன்று பாக்களாக நாற்பதிற்றுமூன்று ஆசிரியவிருத்தப்பாக்கள் இயற்றப்பட்டுள்ளன.

இனி, நெடுவேண்முருகன், எழுத்துச்சொற்பொருளாகிய முத்திறமும் ஒருங்குணர்த்தும் இயல், இசை, கூத்து என்னுந் தமிழ் மூன்றுந் தோன்றுங்காலத்தே உடனமைந்து ஒருங்கு தோன்றுதலானே அப்பெருந்தகை, தமிழகமங்கட்குச்சிறந்த தண்ணளிக்கடவுள் என்பது வடபனிமலைக்கொடுமுடியிற் கொளுத்திய சுடர் விளக்காகும்.

இனி, அப்பெருமிதக்குரிசில் தனது இயற்கைப் பேரருளுடைமையானே தான்பெற்ற பேரின்பம் பெறுகவிவ்வையகமும் எனத்திருவுளத்தடைத்துத் தனது,அழிவும் அளவுமகன்று பொலியும் ஆற்றலாகிய அரிவைமாரொடும் மறைமொழிப்பிழம்பு (மந்திராத்துவாவடிவம்.) தாங்கி வானினின்றுங் கீழிறங்கி வீற்றிருந்து சிற்றுயிர்த் தொகுதியை மருளொழிய அருணெறியிற்செலுத்தி மண்ணுலகைப் பொன்னுலகமாக்குஞ் சிறப்பார்ந்ததிருக் கோயில்களுட் கதிரகாமம் என்பதும் ஒன்று.

இஃது ஈழவளநாட்டிற்கு இப்பொழுதைத் தலைமைப்பட்டினமாகிய கொழும்பினின்றும் ஏறக்குறைய இருநூறு நாழிகைவழிக்கொடு (சாய்ந்த)ங் கிழக்காகச் சென்று சேரும் சேய்மையிலே, தத்தம்பிடியையழைக்குங்களிற்றாரவாரங்கறங்கும் மரமடர்ந்த பெருங்காட்டினூடே, மாயோகிகள்போல இறுமாந்து நிமிர்ந்த கரிய மாணிக்கக்குன்றின் சாரலிலே, தன் இருமருங்குக்கரைகளையும் தன்பால் நீராடுவாருடைய பாவங்களையும் அரித்துக்கழுவிக்கொண்டு மலையருவியாகிய புதல்வர் ஓடிவந்து தம்மேல்வீழ அவரை மார்பிணைத்துத்தழீஇ மோந்துமுத்தமிட்டு உவந்து ஆரவாரித்து மாணிக்கக்கங்கையாகிய நங்கை, திரைக்கைகளிற் பழக்குலைகளும் மணிக்குவையுமாகிய கையுறையேந்திக்கடலாகிய கொழுநனைநச்சிநெய்தனிலமாகிய வேட்டகம் புகும்வழித்துறையிலே குயில்கூவவும் மயிலாலவும் குரங்குதாவிக் கொம்பு பிழைப்பவும் புன்முறுவல் பூத்து இயற்கைக்காட்சி வனப்புக்களாகிய கண்ணாடிகள்தோறும் தன் திருவருண்மேனிச்சாயலைக் கண்டுகளித்துத் தானுந்தன்னையனுமாகத் தன் அடியார்களாகிய செல்விருந்தோம்பிவருவிருந்து பார்த்திருக்கும் நல்விருந்தாகிய மணிமுருகப்பெருமானது "கதலிசூழ் தென்றிசைப்பயிலுமீழத்தினிற் கதிரகாமத்தினைக்காணப்பெற்றால் தெய்வமென்பதொன்றெய்தியதில்லென முரணிக்கூறு முழுமகனுக்கும்'' தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி'' மெய்வகையுணர்ந்து வீடுபெறுதல் ஒருதலையானேயுளதாம்; என்பது யாம் சொல்லவும் வேண்டுங்கொல்லோ? இதனை

உள்ளங்குவியவொருமுறை நினைப்பினும் உயிர்க்கண் வேர்க்கொள்ள மயிர்க்கூச்செறியுமன்றோ? இன்னணம் அருமைபெருமைவாய்ந்த கதிரகாமம் "வாக்கிற்கருணகிரி" யெனச் சிறப்பித்துப்புகழப்பெறுந் திருவருட்புலவரது திருப்புகழ்த்தீஞ்சுவைப்பாடல் பெறாமல் எங்ஙனம் இருக்கமுடியும். திருப்புகழிற் கதிரகாமத்தைப் பற்றிய அரிய உண்மைவரலாறுகள் சில பொதிந்துகிடக்கின்றன.

"பதிகள் பலவாயிரங்கள் மலைகள்வெகுகோடிநின்ற
பதமடியர்காணவந்த கதிர்காமா!"

என்னும் அடியில் தனிப்படைவீடு ஐந்தும் தொகைப்படைவீடு ஒன்றுமாகிய, முருகன் திருப்படைவீடுகளாறனுட்குன்றுதோறாடலாகிய தொகைப்படைவீடுகளுள் தலைமைசான்றது கதிரகாமம் என்பது குறிக்கப்படுகின்றது. திருப்புகழால் மாணிக்கக்கங்கைக்கு வடவையாறு என்பதும் கதிரகாமக்காட்டுக்கு யானைக்காடு என்பதும் கதிரகாமமலைக்கு மாணிக்கமுக்கோணமலை யென்பதும் பெயரெனத் தெரியவருகின்றன.

"கதிர்விடுவேலைக் கதிரினின்மேவிக்
கலைபல தேர்முத தமிழ்நாடா!"

எனவரும் அடியிற்குன்றெறிந்த குமரவேள் கதிரகாமத்திலிருந்து கலைபலதேர்ந்தான் எனவும் அதனாற்கதிரகாமநாடு முத்தமிழ்நாடு எனப் பெயர்பெற்றிருந்தது எனவும் குறிப்புக்கள் கிடைக்கின்றன. இன்னோரன்ன குறிப்புக்கள் ஆராய்ச்சியாளர்க்கு மிக இறும்பூதும் கழியுவ

கையும்விளைக்கும் பெற்றியனவாகும். இற்றை ஞான்று கதிரகாமநாடு சிங்களநாடாகவும் ஆண்டுவாழ்வார் சிங்களராகவும் இருத்தல் முறையே பண்டு தமிழ்நாடாகவும் தமிழராகவுமேயாயிருத்தல் வேண்டும் என்னும் ஒரு சாரார் கடைப்பிடிக்குத்தக்க மேற்கோளாகும், மேற்போந்த குறிப்புக்கள். இங்கு எடுத்துக்காட்டிய திருப்புகழிற் கதிரினின் என்றது கதிரகாமத்தையே யென்பது வேலை யென்னும் அடைமொழியாலினிது பெறப்படும். வேலை—கடல். வடவிந்தியநாட்டினைக், கி-மு, மூன்றாம் நூற்றாண்டில் அடிப்படுத்து அரசாண்டுவந்த அசோகமன்னன் காலத்தில் இலங்கையில் இலங்கைமன்னனுக்குப் பின் பெரியாராகக்கருதத்தக்கவர் கதிரகாமத்திலிருந்தனர் என மாவம்மிசம். என்னும் சிங்களப்பௌத்தச் செய்யுளாற் புகழப்படுகின்றவர், மேற்கூறியவாற்றானே தமிழ்ப்பெரியாராகல் வேண்டும்போலத்தோன்றாநிற்கும், என்னை? சிங்களர் இலங்கையிற் கி-மு, மூன்றாம் நூற்றாண்டின் முன்னர் இருநூற்றாண்டாகவேதான் சிறிதுசிறிதாகப் பெருகிவருவாராயினர். அவரும் கல்வியறிவொழுக்கமுடையரல்லரென்பது அம்மாவம்மிசச்செய்யுளானேயே கேட்கப்படும் என்ப. அன்னவியல்பினர் இருநூற்றாண்டிற்குட் கல்வியறிவொழுக்களாற்றிருந்திப் பெரியராயினர் எனக்கொள்ளல் பொருந்தாததொன்றாகும். அல்லதூஉம் ஒருதன்மையராய்வந்த சிறுபான்மைச் சிங்களருட் கதிரகாமச்சிங்களர் மட்டும் விதந்து வேறுபடவுயர்த்துச் சொல்லப்படற்பாலருமாகார். அல்லதூஉம் மலைச்சாரல்தோறும் அங்கிலக்கிழானாகிய முருகவேளைக்

குறிஞ்சிபாடித் துடிகொட்டிக் குரவையாடியாற்றுப்படுத்துவழிபாடாற்றிய வேட்டுவரொழுக்கம் தமிழகத்திற்றுரித்தாகவே நிகழ்ந்தது எனத்தமிழ்நூல்களான் அறியக்கிடத்தலன்றிப் பிறநாட்டிற்கும் பொதுப்பட நிகழ்ந்தது என்றல் கேட்கப்படாமையானும் கதிரகாம முருகன் கோயில் தமிழ்வேட்டுவராலேயே வழிபடப்பட்டிருத்தல் வேண்டும் என்பது துணியப்படும். வேட்டுவர் சிங்களரல்லர் என்பது விசயனோடு வேட்டுவரும் வந்தார் எனச் சொல்லாப்படாமையாற்பெறப்படும் என்ப. கதிரகாமம் சிங்களரதாயிற் சிங்களர் செறிந்துள்ள வேறெங்கணும் முருகன் கோட்டம் இல்லாமைக்கு வாயில் என்? இக்காலத்தும் ஈழம்வந்தேறும் தமிழருட் சிலர் சிங்களர் சார்பாற் சிங்களருடைய நடையுடை மொழிகருத்துக்களை மேற்கொண்டு சிங்களராகவே தோன்றல் கண்கூடாயிற் கதிரகாமத்தமிழ் வேட்டுவர், நெடுங்காலமாகப்பெரும்பான்மைச் சிங்களர், தம்மைச்சூழப் பெருகிவலியுற்றுவாழுஞ்சார்பாற் சிங்களராகமாறிக் காட்சியளித்தலை அவர் சிங்களர் என்பதற்கு அடையாளமாக எடுத்துக் காட்டல் ஒரு சிறிதும் பொருத்தமன்றாகும். ஆகவே கதிரகாமநாடுபண்டைக்காலத்துத் தமிழ்நாடாயிருந்தது என்பதூஉம் ஆண்டுவாழ்ந்தார் தமிழ்வேட்டுவரே யென்பதும் அவராலேயே ஆண்டு முருகன் கோட்டம் வழிபடப்பட்டது என்பதூஉம் வலியுறும். இனி அந்நாடு முத்தமிழ்நாடு எனப்பெயரெய்துதலின் அந்நாட்டுவேட்டுவரெல்லாம் தமிழ்ப்புலமைவாய்ந்திருந்தனர் என்பதாயிற்று. கதிரகாமத்தில் ஒரு வேட்டுவிச்சி தமிழ்ப்புலமை நிரம்பி முருகனுக்குப் பாமாலை சூட்ட முருகன்

அதனை உவந்தேற்றருளியிருந்தான் எனத்திருப்புகழ் கூறும். அதுவருமாறு

"கடகடவருவிகள் தபவரி யதிர்கதிர்
காமத்தாங்க மலைவீரா!

....

அயிலவ சபரிசெய் கவி புகல் தருகவி
யாளப் புயங்கொண் டருள்வோனே"

என்பது. இங்ஙனம் வேட்டுவரிற் பெண்பாலாரும் செய்யுள்பாடும் புலமை நிறையப்பெற்றிருந்தாராயின் ஆண்பாலார் தமிழ்ப்புலமை நிரம்பியிருந்தாரென்றல் ஒரு வியப்பாகுமா? சபரி—வேட்டுவிச்சி. ஆகவே கதிரகாம நாட்டை முத்தமிழ்நாடு என்றற்குத் தடையென்னை? பழங்காலத்திலே தமிழரெல்லாம் ஐந்நிலமக்களாகவே வழங்கப்பட்டுவந்தனர் என்பது தெரிதலால் தமிழ்ப்புலவரும் தமிழ்மன்னரும் ஐந்நிலமக்களின் வேறல்லராவர். இவர் கல்வியறிவொழுக்கங்களானே திருந்தினாரும் ஏனையர் திருந்தாத மாக்களுமாவர். முத்தமிழ் பாண்டிய மன்னர்கட்கு உரியனவாதலால் முத்தமிழ்நாடாகிய கதிரகாம நாட்டினையும் வேட்டுவர்பாற்பட்ட பாண்டியமன்னரே யாண்டிருந்தாராகக்கொள்க. இறையனார் களவியலுரைப்பாயிரம் முதற்றமிழ்க்கழகப் புலவனாகக்குன்றெறிந்த குமரவேள் வீற்றிருந்தான் எனவும் அக்கழகமிருந்த நாடு தென்பாற் கடல்கொள்ளப்பட்டபாண்டியநாடு எனவும் எடுத்தோதுதலைக் "கதிரினின் மேவிக்கலை பலதேர் முத்தமிழ்நாடா" என்னுந்திருப்புகழ்க்கருத்தோடு இணைத்துப்பார்ப்போமாயின் அவன், கதிரகாம முருகனேயாம்; அந்நாடு, கதிரகாமநாடேயாம்; கழகத்து

ணரும் கதிரகாமமேயாம்; என்னும் உண்மைவலியுறும். முருகவேள் கோயிலிருக்கும்இடமே அவன் புலவனுகவீற்றிருக்கும்கழகத்திற்கும் இடமாகவேண்டும். அவனுடைய வேற்றூர்கள் அதற்கு இடமாதல்பொருந்தாமையாற் கதிரகாமமே அக்கழகத்திற்கு இடமாதலமையும் இனிக் கதிரகாமம் வேட்டுவர் நாட்டுக்குத்தலைமை யூராதலின் ஆண்டுஇருந்த வேட்டுவமன்னனுக்கே வள்ளிநாய்ச்சியார் மகளாராக வாய்ந்திருத்தல்கூடும். வள்ளிநாய்ச்சியாரை முருகவேள் கடிமணம்செய்த நிலம் கதிரகாமம் என ஈழநாட்டுவழக்கமிருத்தல்போலவே திருப்புகழ்த்திருவருட்பாவும் விளக்கிக்கூறுதலான் மேற்காட்டியது உண்மையெனக்கோடற்கு இடனுண்டு. அன்றியும் ஒரு வேடன் அருளியவழிபாட்டுக்கு மகிழ்ந்து கதிரகாமத்து எழுந்தருளியிருந்தான், முருகன். எனச்செப்புதலான் முதன்முதல் ஒரு வேட்டுவனே கதிரகாமமுருகனை வழிபட்டான் என்பதுபோதரும். அதனுன் இன்றும் அவ்வேட்டுவன் மரபினரே வழிபட்டுவருகின்றனர். அதனுன் அக்கோயிற்கு அவரே உரியராகின்றனர். திருப்புகழ், வேட்டுவன் கொடுத்த அல்லது செய்த வென்னுது அருளியவெனவுயர்த்துரைத்தலின் அவ்வேட்டுவன் முருகற்கு மகட்கொடைபூண்ட மாமன்போலும். அங்ஙனம் அவன் முருகனை வழிபடுதல் சிறந்திலதாயின் அவன்பால் வள்ளிநாய்ச்சியார் சார்தலமையாது. இனி இக்கதிரகாமம் இன்னகாலத்து உண்டயிற்றென்று வரையறுத்து உரைக்கவியலாதாயினும் சீதையைத்தேடியிலங்கைக்கு வந்த அனுமான் சீதையைக்காணப் பெற்றுத்தன்னைத்

தசரதராமன் தூதன் எனச் சீதை தேறுதற்காக இராமன் கொடுப்பக் கொணர்ந்த திருக்கணையாழியைச் சீதைபாற்காட்டிக்கொடுத்துவிட்டு, அவள்பால் விடைபெற்று மீண்டு கதிரகாமத்தில்வந்து முருகக்கடவுளை வணங்கிநிற்ப அவற்கு முருகன் இன்னருளீந்து உவந்தருளினுன் என்னுமொரு குறிப்புத்திருப்புகழிற் காணப்படுதலால் இற்றைக்கு ஏறக்குறைய நாலாயிரத்தைந்நூறியாண்டுகட்கு முன்னர்த்தொடங்கியே கதிரகாமம் விளக்கமுற்றிருந்தது எனத்தெரியவரும். அப்பொழுது சிங்களர் என்னுமோரினமே உலகத்திருந்ததில்லையாதலானும் கதிரகாமம் சிங்களரதன்று என்பது ஒருதலை. அக்காலம் தென்தமிழ்நாடு கடல்கொண்டதொடக்கமாதலால் ஈழமெல்லாம் தனித்தமிழ்நாடாகவமைந்திருந்தது. அங்ஙனமாயிற் கதிரகாமநாடு முத்தமிழ்நாடாதலில் ஐயுறவு எழுதற்கு இடனின்று.

கதிரகாமம் இடைக்காலமாகிய சிங்களராட்சிக்காலத்திலும் நீர்வளம் நிலவளமிக்க பேரூராகவேயிருந்தது என்றற்கு அப்பெயரேகரியாகும் கதிரகாமம் என்பது சிங்களப்பெயர்திரிந்த தமிழ்ப்பெயர். கதரகம என்பது சிங்களப்பெயர், கம என்பது கிராம என்னும் வடசொற்சிதைவு. கிராம என்பதற்கு வயல்சூழ்ந்தவூர் என்பது பொருள். அவ்வூர் அழிந்துபோக முருகன்கோட்டமும் அதனைவழிபடும் வேட்டுவப்பார்ப்பார் மனைகளும் நீத்தார்பாழிகளும் (மடங்களும்) முருகனைக்காணவருவார் குழுமியுறையும் மன்றங்களுமே இன்று காணப்படுகின்றன. இவையும் பின்னர் உண்டாக்கப்பட்டனவேயன்

றிப் பண்டைக்காலத்தனவல்ல. சிங்களப்பகை மன்னர் படையெடுப்பே அவ்வழிவிற்குவாயில். இதனானும் கதிரகாமம் தமிழரது என்றாயிற்று, அங்ஙனம் அழியுங்கால் முருகன் கோயிலும் சிதைய அவன்கற்பிழம்பும் காணப்படாமற்போயிற்றுப்போலும். திருவுலாம்பிழம்பு (உற்சவவிக்கிரகம்) மாணிக்கத்தால் அமைந்ததாகலால் அதனை வேட்டுவர், ஊறுபடாமற்காத்தோம்பிப்பெட்டிக்குட் பொதிந்துவைத்தனர். அதுமுதற்றொட்டு அப்பேழை வாயிலாகவே உள்ளிருக்கு முருகனை வழிபாடாற்றிவருகின்றனர். முருகக்கடவுளும் அப்பேழைமுகமாகவே தொண்டர்கட்குத் திருவருள் சுரந்து உதவுகின்றனன். யாண்டும் நிறைவுற்றுக்கட்டற்றுப்பொறிகட்கு எய்தாத முழுமுதற் கடவுளும் பெட்டிக்குட் கட்டுற்றான்; என்னே! முருகனது அடியார்க்கெளிமை. மாணிக்கம் விளையும் நாட்டிலே மாணிக்கமலைச்சாரலிலே மாணிக்கக் கங்கையாற்றங்கரையிலே குடிவாழும் முருகன் திருப்பிழம்பும் மாணிக்கமாகவேயிருத்தல் வேண்டும் என்பது கூறாமேயமையும்.

"கனகமாணிக்க வடிவனே மிக்க
கதிரகாமத்தி லுறைவோனே:"

என்னுந் திருப்புகழும் ஈண்டுக்கருதற்பாலது. இங்ஙனமான பேழைப்பொருள் என்பதன் உண்மைக் கருத்துக்கந்தரநுபூதித்திருவிருத்தமொன்றால் அருணகிரியார் அழகாக விளக்கிக்காட்டுகின்றனர். அதுவருமாறு:

"வாழைக் கனிமா மதுரச்சுளையே!
யேழைக் கரிதென் றிடுவா ருளரோ
பாழைப் பயிர்செய் திடு சிற்பரையின்
பேழைப் பொரு ளாகியபே ரொளியே" என்பது.

இன்னும் இக்கதிரகாமத்தின் ஏனைவரலாறுகள் இதன் பிற்சேர்க்கப்பட்டுள்ள கதிரகாமவரலாற்றுச் சுருக்கம் என்னுங்கட்டுரையுள் இனிதுணர்ந்துகொள்க. இங்ஙனம் பழம் பெருமைவாய்ந்த கதிரகாம முருகப்பெருமான், அருணகிரியார் கூறியவாறே "இதமொழி பகரினும் மதமொழி பகரினும் ஏழைக்கிரங்கும்" பெருமானாதலான் அவன்மேல் அவனதருளான் அவன்தாள் வணங்கி இப்பிள்ளைத்தமிழ் என்பதொன்று பாடலாயிற்று. இதன் செய்யுட்களின் பொருள் எளிதிற் புலப்பட ஒரு குறிப்புரையும்வரைந்து இச்சுவடியின் இறுதிக்கட்சேர்த்தல் நலமாயிருக்கும் என அன்பர் சிலர் கேட்டுக்கொண்டதன் பொருட்டு அவ்வாறே குறிப்புரையும் பொறித்துச் சேர்க்கநேர்ந்தது. அதனை இன்னும் விளக்கமாக எழுதிப்பதிப்பித்தற்கு யாம் குறித்த காலமும் பொருளும் போதாமையான் அவ்வேட்கையினைக் கைவிட வேண்டிற்றாயிற்று. ஒல்லுமேல் இரண்டாம் பதிப்பு முதலியவற்றில் அவ்வாறு செய்துகொள்ளலாம் எனக் கருதியிராநின்றேம்.

இனி ஊழான் நேர்ந்த நல்குரவாற்பற்றப்பட்டு இதுபோலும் சுவடிகளை வெளிப்படுத்தற்கு நினைக்கவுமாட்டாதிருந்தேமாகக் கதிரகாமவேலவன் திருவருள்போல

வந்து கதிரகாமப்பிள்ளைத்தமிழ் பாடுக; என கினைப் பூட்டிக்கேட்டுக்கொண்டு அங்ஙனமே யாம் பாடுமாறு ஊக்கங்கிளர்வித்து முடிப்பித்துத் தமிழறிஞரவைக்களனின் ஏற்றுவித்து இச்சுவடி பயன்படுமாறு இன்றியமையாத நன்முயற்சியை மேற்கொண்டவரும் தக்கார்பால் அன்பும் பணிவும்ஒழுக்கமும் கடைப்பிடித்தொழுகிவருபவரும் தமிழ்மொழிக்கண் ஆர்வமும் பயிற்சியும் உடையராய்த் தமிழ்மொழிக்குப் பணியாற்றுங்கடப்பாட்டாளரும் என்னுடைய இயற்றமிழ் மாணவருள் ஒருவரும் கொழும்பு வேத்தியற்களரிக்கல்வித்துறை யெழுத்தாளருமாகிய திருவாளர் யாழ்ப்பாணத்துக் கரும்பனூர்க்குல, சபாநாதன் என்பவர்க்கும் கல்வியறிவொழுக்கங்களுடையார் மாட்டுமனமொழிமெய்களான் முறையே அன்பும் முகமனும் பணிவும்செய்தலை எஞ்ஞான்றும் மறவாது கடைப்பிடித்தொழுகுஞ் செல்வரும் எம்பால் உழுவலன்பு செறியப்பெற்றோரும் கல்விச்சுவைகண்டு உவப்போரும் கொழும்பு முறைப்பெருமன்றத்துத் தமிழ்மொழி பெயர்ப்பாளருமாகிய வெள்ளவத்தை,முதலியார் செ. சின்னத்தம்பியவர்கட்கும் எம்மை நன்குமதித்தொழுகித்தமிழ் நூலாராய்ச்சியே பொழுதுபோக்காகவுடையவரும் எம்முடைய நன்மையை விரும்புபவரும் உயர்ந்த எண்ணங்கள் வாய்ந்தோரும் வேத்தியற்களரியெழுத்தாளருமாகிய கல்கிசை, வ. கந்தையா அவர்கட்கும், மிகப்பெருந்தன்மைவாய்ந்தோரும் தமிழார்வமிக்குள்ளோரும் எம்பால் அன்புகெடாதாருமாகிய கொழும்பு வேத்தியற்றுறை முகப்பொருளறைக்களரியெழுத்தாளருமாகிய வல்வை R. வைத்தியலிங்கமவர்கட்கும்

புலவர்மரபினரும் எம்முடைய கொழும்பு வாழ்வுக்கு இன்றியமையாத காரணமாயிருப்பாரும் எம்மைத்தம்மின் வேறுகக்கருதாத பேரன்புவாய்ந்தோருமாகிய வல்வைச் சங்கர, வைத்தியலிங்கமவர்கட்கும் ஏனை என்னுடைய அன்பான இயற்றமிழ் மாணவர்கட்கும் யாம் கொழும்புப் பட்டினத்தில் முட்டுப்பாடுஇன்றித் தமிழ்ப்பணி செய்துபோதருதற்கு இன்றியமையாத அறுசுவையுண்டி அன்போடு அளித்துக்காப்பாற்றிவரும் அருட்செல்வமும் பொருட்செல்வமும் ஒருங்குவாய்க்கப்பெற்றவர்களாகிய திருவாளர் வலமபுரி, வயி. லே. இலக்குமணச் செட்டியாரவர்கட்கும் திருவாளர் வயி. வ. வடுகநாதச் செட்டியாரவர்கட்கும் கொழும்புப் பம்பலப்பிட்டியாவிலுள்ள திருப், பழைய கதிரேசன் கோயிலில் யாம் வேண்டியபோது இனிது உறைதற்கு அருமையான இடம் அளித்து உதவிக் கடவுளிடத்தும் தமிழ்மொழிக்கண்ணும் சமிழ்ப்புலவர்களிடத்தும் தங்களுக்குள்ள நல்லெண்ணத்தைப் புலப்படுத்துகின்றவர்களாகிய, கொழும்பிற் செட்டியார்தெருப் பழைய கதிரேசன் கோயில் நகரத்தார்களுக்கும், அவர்கள்போலவே கொழும்பில் யாம் விரும்புங்காலத்துத் தங்களுடைய மேல்வீட்டினை எனக்கு உதவி எனக்கு வேண்டுவனவற்றைச் செய்து எனக்குப் பற்றுக்கோடாயிருக்கும் திருவாளர் நெய்க்குப்பை, ப, ராம. லெ. இலக்குமணச்செட்டியாரவர்கட்கும் கதிரகாமத்து மாணிக்கமுருகவேள்வள்ளல், எஞ்ஞான்றும் எல்லாநலங்களையும் பொழிந்து குறைவற்ற வாழ்வு அருளி, அவர்கள் இம்மையினும் மறுமை

யினும் இன்பமுறத்திருவுள்ளம் செய்து அவர்கண் மேற் கடைக்கண்செலுத்தியருள்வாளுக. இக்கதிரகாமப்பிள்ளைத்தமிழ்ச்சுவடியைப் பதிப்பித்துத் தருதற்குரியகாலம் மிகப்போதாதிருக்தும் தங்களுடைய வியாபார முறையும் மெய்ம்முயற்சிவருத்தமும் பொருட்படுத்தாது என்பால் தங்கட்குள்ள பெருந்தகையன்பினையே குறிக்கொண்டு யாங்குறித்த காலத்துள்ளே திருத்தமுற்ற பதிப்பாக இச்செய்யுள் புறம்போக்துலாவற்கு வாயிலாயிருக்த ராபர்ட் பிரஸ் லிமிடெட், (The Robert Press, Ltd) அச்சுக்களரியின் தலைவர், முதல்வர் (Manager) அச்சுக் கோத்துப்பதித்த பணியாளர் என்றிவர்களுடைய அன்பும் பொறுமையும் பெருந்தன்மையும் முயற்சித்திறைமையும் எம்மாற்பாராட்டாமலிருக்க முடியவில்லை. அவர்கட்கு எம் நன்றியறிவும் கடவுளுடைய திருவருளும் உரியனவாகுக. கதிரகாம கிழற் கிழி (Block) கொடுத்துதவிய S. பற்பநாத அய்யரவர்கட்கும் எம் நன்றியறிவும் பணிவும் உரியனவாக.

நேரிசை வெண்பா.

வாழி மணிநெடுவேள் வாழி யவன்றொழும்பர்
வாழி குறுஞ்சுனைக்கண் மாண்குழவி—வாழி
கலக்கிய சின்,னீரைக் களிறுண் கதிரை
மலக்குறும்பு மாற்று மலை.

திருக்கதிரகாம முருகக்கடவுள் திருக்கோயில்.

உ

திருக்கதிரகாம வரலாறு.

மணியுமிழ்ந்து மாமலைமேன் மேய்வனவு நாகம்
    மடவரலார்கொய்ய மலர்வனவு நாகம்
பிணியவிழ்ந்து நன்னுளாற் பூப்பனவும் வேங்கை
    பிறங்கன்மாத் தொலைத்தவற்றான் றுய்ப்பனவும்வேங்கை
இறைக்காசா னெம்மருளா மாலையு மாலை
    யெமக்கினிதா யாமவனைச் சூடுவது மாலை
நிறைக்காய்த்தி னெஞ்சஞ்சச் சுடுவதுவுங் காமம்
    நிலங்காக்குஞ் சேயத னெடுநகருங் காமம்

"யாப்பருங் கலவிருத்திமேற் கோள்."
(பெருந்தொகை பக்,—25.)

ஆதி பவானிமடிமீது வைத்துயிர்க் கைந்தக்கர
மோதி யுணர்த்தும் பொருவருங் காசியி னேங்கிக்குகன்
கோதில் குலங்கொண்டு முக்கோணம் வாய்ந்து குலவருட்ச
மாதி யொளிருங் கதிர்காம மீழநன் மண்டபமே.

(ஈழமண்டல சதகம்)

முன்னுரை.

திருக் கதிரகாமத்தின் வரலாற்றினை மட்டும் தொகைப் படுத்தி யெழுதுமாறு எமதாசிரியர் சிவங் கருணாலயப் பாண்டியப் புலவர் அவர்கள் பணித்தார்கள். அக்கட்டளை யைத்தலைமேற் கொண்டு இக்கட்டுரை எழுதப்படலாயிற்று. சேர். பொன். அருணசலம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய

"The Worship of Muruka" எனும் கட்டுரையும், முதலியார் இராசநாயகம் அவர்கள் 'Hindu Organ' பத்திரிகையில் வெளியிட்ட கதிரகாம வரலாற்றுக் கட்டுரையும், நண்பர், வெள்ளவத்தை மு. இராமலிங்கம் அவர்கள் தந்துதவிய 'Manual of Uva' எனும் நூலும் இக்கட்டுரையினை எழுதற்குப் பெரிதும் பயன்படலாயின. இவ்வறிஞர்கட்கு எஞ்ஞான்றும் நன்றிமறவாக்கடப்பாடுடையேனாவேன்.

முருக வழிபாடு.

உலகத்தில் மன்பதை மரபினர் முதல்வர் தோன்றிய விடம் குறிஞ்சி நிலமென்பது ஆராய்ச்சியாளர் கண்ட துணிபு. கரந்தைத் திணையின் துறைகளுளொன்றாய குடிநிலையென்பதற்கு எடுத்துக்காட்டிய,

"பொய்யகல நாளும் புகழ்விளைத்த லென்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலி நீர்—கையகலக்
கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி."

எனும் புறப்பொருள் வெண்பா மாலையின் அரிய பழஞ்செய்யுளும் இப்புதியவாராய்ச் சித்துணிபினை முன்னரே கூறியிருத்தல் வரலாற்றாராய்ச்சியாளர்க்குப் பெருவியப்புப் பயக்கும். பண்டொருபொழுது மக்களறிவு இத்துணை வளர்ச்சியடையாத ஞான்று 'பேராழி யுலகனைத்தும் பிறந்தகலி யிருணீங்க, வோராழிதனை நடத்தும் ஒண் சுடர்' தவறுதலின்றி நாடோறும் தோன்றிப் பயனளித்து வருதலால் அதன் இன்றியமையாமையை யுணர்ந்த மாந்தர்பலரும்

அதனையே கடவுளாக ஒருங்கு போற்றுவாராயினர். அறிவு முதிர முதிர, அஞ்ஞாயிற்றினை நம்மனோர் உடம்பு போலவும் கல் முதலியனபோலவும் ஓர் உயிரற்ற பொருளேயாமெனக் கண்டு அதனை யியக்குதற்கு வேறொன்றன் ஆற்றல் இருத்தல் வேண்டுமென ஆராய்ந்து அவ்வாற்றலின் இயல்பும் அவ்வாற்றலுடைய தனியல்பும் கண்டுகொண்டனர். ஞாயிற்றினூடாகத் தெரியவந்த அவ்வாற்றலோடு கூடிய உயிர்ப்பொருளாகிய பரசிவத்தின்கட் கழியாவிளமையும் அழியாவனப்பும் காணப்பெற்று மருட்கையெய்தி அவைவாயிலாக அப்பொருள்படும் முருகனெனப் பெயரிட்டுத் தமக்கியன்றவாற்றான் வழிபட்டு வந்தனர். முருகன் என்னுஞ் சொற்கு இளமையழகுடையான் என்பது பொருள். இதனாற் பழந்தமிழ் மக்கள் ஒவ்வொரு பொருளிடத்தும் அழகினை ஊடுருவிப் பார்த்து வந்தனரென்பதும், அவ்வழகின் கவர்ச்சியால் அதனையே கடவுளாகப் போற்றி அவ்வுண்மை நெறியால் தாங் கருதிய பயனும் பெற்றுவந்தனர் என்பதும், தெரியப்படும். இங்ஙனம் ஒவ்வோரியற்கைப் பொருளிடத்தும் வேறு வேறாகப் பரசிவம் காணப்படும் எனும் உண்மையினை.

"இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி இயமான னாயெறியுங்காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயறாகி ஆகாசமாயட்ட மூர்த்தியாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறருருவுந்
தம்முருவுந் தாமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிகள்
நின்றவாறே"

எனும் திருத்தாண்டகம் புலப்படுத்தியிருத்தல் காண்க. மூத்த பிள்ளை வழிபாடும் முருக வழிபாடும் முறையே சிவ

வழிபாடும் சிவசத்திவழிபாடுமாமெனக் கொள்ளப்படும். சிவசத்தியும் சிவமும் பரசிவத்தின் வேறு வேறு நிலைகளென்பதனைச் சிவஞானசித்தியார் இரண்டாஞ்சூத்திரத்துட் காண்க,

முருகன் தமிழ் சங்கத்தே வீற்றிருந்து தமிழாராய்ந்தமை குறிப்பிடப்படலால், தமிழர்கள் பண்டுதொட்டு வழிபட்டு வந்த தெய்வம் முருகக்கடவுளென்பது பெறப்படும். இன்னும் தமிழ் நூல்கள் பல முருகன் பெருமையை எடுத்துரைத்தலும் அவன் எழுந்தருளி யிருத்தற்குரிய ஆறு திருப்படை வீடுகளும் தமிழகத்தின் கண்ணேயே அமைந்து கிடத்தலும், மறுக்க முடியாத பெருஞ் சான்றல்லவோ? மிகப்பழைய தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தின் கண்ணும் 'சேயோன் மேயமைவரை யுலக' மெனக் குறிஞ்சி நிலத்துக் கடவுளாகக் கூறப்பட்டிருக்குமாயின் முருகக்கடவுள் தமிழர்க்கேயுரிய கடவுளென்பதில் ஐயமுண்டோ? அன்றியும் ஆரியர்க்கு வழக்கமாகாத களவு மணம் முருகனுக்கு உரியதாகச் சொல்லப்பட்டதனாலும் முருகன் தமிழ்க்கடவுளேயாம்.

கதிருகம.

முருக வழிபாட்டிற்குரிய திருப்பதிகளுள் மூர்த்தி தலம் தீர்த்தம் எனுமும்மையானும் புகழ்பெற்றுத் திகழ்வது திருக்கதிரகாமமென்பது. இத்தலத்தின் பெயர்க் காரணவாராய்ச்சி இன்னும் முற்றுப் பெற்றிலது. கதிர காம என்னுஞ் சொல் கார்த்திகேய கிராம என்பதன் மரூஉவெனவும், கஜாகம என்பதன் சிதைவெனக் கொண்டு யானை

வாழ் கிராமமெனவும், கதிரு கிராம என்பதன் சிதைவெனக்கொண்டு கதிருமரம் (நச்சுமரம்) நிறைந்த கிராமம் (கதிருகொட என்பதுபோல) எனவும் கொள்வர் சிலர். இன்னும் சிலர் இதனைத் தமிழ்ச் சொல்லெனவே கொண்டு கதிர்காம மென்பது கடவுட்டன்மையுடைய ஒளியும் (கதிர்-ஒளி) அனபுப (காமம்—அன்பு) கலந்து விளங்குமிடம் எனவும், ஆறு கதிர்ப் பொறிகளாற் பிறந்த ஆறுமுகன் வள்ளி நாய்ச்சியார்மேற் காதல்கொண்டு மணம் புரிந்த விடமாதலிற், கதிர்காம மாயிற்றெனவுங் கூறுவர். இன்னுஞ்சிலர், 'கதிரங்கருங்காலி' யெனும் பிங்கல நிகண்டுச் சூத்திரத்தை யெடுத்துக் காட்டிக், கதிரமரம் (கருங்காலி) நிறைந்த கிராமமாதலின், இப்பெயர்த் தாயிற்றென்பர். கதிரகாமம் என்பது சிங்கள மொழிச்சொல்லின் மரூஉவாய்த் தமிழ்மொழியின்கண் திசைச் சொல்லாய்ப் பிற்காலத்து வழங்கிய வழக்கென்பதே எமது முடிபு. அம்முடிவுக்கியையக் கதிரு மரங்களையுடைய ஊரெனப் பெயர்க்காரணம் கோடலே பொருத்தமுடைத்துப்போலத் தோற்றுகின்றது.

போதுக்கோயில்.

மக்கள் யாவர்க்கும் பொதுவான இறைவனை வழிபடற்குப் பல சமயங்களும படிகளாக வமைந்திருத்தலையொப்பப், பல சமயத்தவர்களும் வழிபடும் தெய்வத்தன்மை வாய்ந்து விளங்கும் திருத்தலம் திருக்கதிரகாமமாகும்.

புத்த சமயத்தினர் வழிபடல்:— புத்த பகவான் யோகத்தமர்ந்த திருத்தலங்கள் பதினாறனுட் கதிர்காமமும்

ஒன்றாகக் கி.மு. 309க்கு முன்பே கருதப்பட்டு வந்தது. அத்தலங்களாவன :— 1 மகியங்கன (ஊவாமாகாணம்) 2 நாகதீபம் 3 களனி 4 ஸ்ரீபாதம் 5 திவாகுவா (சிவனொளி பாதத்திற்கு அண்மையில்) 6 தீகவாபி (மட்டக்களப்பு) 7 முத்தியங்கன (வதுளை) 8 திஸ்ஸமஹாவிஹார (அம்பாந்தோட்டை) 9 மகாபோதி 10 மிரிசவெற்றிய 11 ரூவான்வெலிசேய 12 தூபாராம 13 அபயகிரி 14 ஜேதவன (9-14 அநுராதபுரத்தில்) 15 ஸேலசேதிய (மிகிந்தலை) 16 கஜரகம.

சிங்களவரசருட் பெரும்பாலோர் கதிர்காம தெய்யோவையும் (கதிர்காமக் கடவுள்) பத்தினி தெய்யோவையும் (கண்ணகி) வணங்கி வந்தனரென்பது சரித்திர நூல்களால் நன்கு பெறப்படும். சிங்களரின் தலைநகராயிருந்த கண்டியிலும் இத்தெய்வங்கட்குக் கோயில்கள் அமைந்திருத்தல் மேற்கூறிய கொள்கையினை வலியுறுத்தும். கண்டியில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் 'பெரஹரா' (Perahera) எனும் விழாவில் கதிர்காமத் தெய்யோவுக்கு முதன்மை கொடுக்கப்பட்டு வந்தது. இவையாவும் சரித்திரப் பகுதியில் விரிவாக விளக்கப்படும்.

முஸ்லிம் தொடர்பு.

அல்கேதர் (Alkhedar) எனும் முகம்மதிய அடியார் கதிர்காம தலத்தை யடைந்து ஞானம் பெற்றுய்ந்தாரென்பதும் சில காலம் ஆண்டுத் தொண்டாற்றும் நோக்குடன் தங்கினர் என்பதும் ஐதிகம். இவ்வடியார் சமந்த கூடத்தி

லும் சிறிதுகாலம் வதிந்தாரென்ப. கதிர்காமத்தில் இன்னும் பெரியாரொருவர் அடங்கிய இடமுமுண்டு. பண்டைக் காலந் தொட்டுக் கதிர்காமத்தில் நடக்கும் திருவிழாக்களில் முகமதியர் விளக்குப்பந்தம் பிடிக்கும் வழக்கமொன்றுண்டெனச் சைமன் காசிச்செட்டியவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்கள். ஆனால் இப்பொழுது இவ்வழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. சமந்த கூடத்திற் காணப்படும் திருவடி ஆதாமின் திருவடியெனக் கொள்வர். இங்ஙனம் சிறந்த திருத் தலங்களில் முகமதியரின் தொடர்பிருத்தல் ஊன்றி நோக்கற்பாற்று.

புராண வரலாறு.

முருகவேள் சூரபன்மனைச் சங்கரிக்கும் நோக்கொடு எழுந்தருளியபொழுது, கதிர்காமத்தையடைந்து மாணிக்கக் கங்கையருகிற் பாசறை வகுத்து வீற்றிருந்தாரென்றும் அவ்விடம் ஏமகூடம் எனப்பட்டதென்றும் பின்னர்ச் சூரபன்மனை வென்று வாகைசூடி மீண்டபொழுது கதிர்காம கிரியில் நவகங்கா தீர்த்த முண்டாக்கிச் சிந்தாமணியாலயத்தில் தேவர்கள் துதிக்க வீற்றிருந்தாரென்றும் புராணம் கூறுகின்றது. வள்ளி நாய்ச்சியாரைக் கண்டு காதலித்து மணமுடித்த இடம் கதிர்காமமென்பது ஐதிகம். முருகப்பெருமான் முதலில் தெய்வயானை அம்மையாரையும் மணமுடித்துப் பின் திருத்தணி மலைக்கருகிலுள்ள வள்ளி மலையில் வள்ளி நாயகியாரை மணம்புரிந்து, பின்னர் இருவரையும் நோக்கித் தாம் விரும்பும் தலம் கதிர்காமமெனக்கூறி அவர்களுடன் கதிர்காமகிரியை அடைந்து சிந்தாமணியா

லயத்தில் எந்நாளும் அன்பர்கள் வழிபட்டுய்யுமாறு வீற்றி
ருக்கிறார் எனத்தக்ஷிண கைலாசபுராணம் கூறும். "பிள்ளை
யார் மலை, வீரவாகு மலை, தெய்வயானையம்மை மலை, வள்ளி
யம்மை மலை ஆகிய இவைகளும் பிற மலைகளுமாகிய இவற்
றின் நடுவிலே சோமன், சூரியன், அக்கினி யென்னும் முச்
சுடர்களின் சோதி பெற்று உலகுக் கெல்லாம் பேரொளி
யாய் விளங்குவது கதிரை மலையென்றும், அம் மலைச்சிகர
நடுவில் அநேக கோடி சூரியப் பிரகாசம் பொருந்தி விளங்
கும் சிந்தாமணி ஆலயத்தில் நவரத்தின மயமான சிங்காத
னத்தில் வள்ளி நாயகி தெய்வயானையம்மை சமேதராய்
அநேக கோடி சூரியப் பிரகாசத்தோடு கதிர்காமகிரீசர்
எழுந்தருளியிருக்கின்றா ரென்றும் இப்புராணம் கூறும்.
கதிர்காம நகரச்சிறப்பினையும் இப்புராணம் கீழ்க்காணுமாறு
குறிப்பிடுகின்றது.

"கதிர்காம நகரம் முக்கோண வடிவமான வீதியை
யுடையது. அந்நகரத்தின் நடுவிலே பவளத் தூண்கள்
நிறுத்திப் பொன்னால் இயற்றி இரத்தினங்கள் இழைத்த
திவ்வியமாகிய சோதி மண்டபம் (சுவாமி சந்நிதி) ஒன்
றிருக்கின்றது. அம்மண்டபத்தின் நடுவில் இந்திர நீல
மணியினாற் செய்து பிரகாசமும் அழகும் பொருந்திய சிங்
காசனத்தின்மேலே தெய்வயானை யம்மையார் வள்ளியம்
மையார் என்னும் இரு சத்திகளோடு ஞானசத்தி வடிவவா
கிய வேற்படையைத் தாங்கிக் கிருபா சமுத்திரமாகிய
கதிர்காமநாதர் விளங்குகிறார். அச்சோதி மண்டபத்தின்
எதிரிலே எல்லா இலக்கணமும் வாய்ந்த வள்ளியம்மை
மண்டபம் இருக்கின்றது. அதன் அருகிலே மேன்மை

பொருந்திய சமாதியோக மண்டபம் ஒன்றிருக்கின்றது
விநாயகருக்கும் பரமசிவனுக்கும் உரிய வேறு வேறு மண்ட
பங்களும் அங்குள்ளன, வீரவாகு முதலான வீரருக்குரிய
மண்டபங்களும் இருக்கின்றன.........கதிர்காம நகரத்தரு
கிற் புண்ணிய நதியாகிய மாணிக்கக் கங்கை பாய்ந்துகொண்
டிருக்கும்.

சரித்திரம்.

சீதா பிராட்டியாரைத்தேடி இலங்கைக்கு வந்த அநு
மான் கதிர்காமப் பெருமானை வணங்கிச் சென்றாரென்பது
சில சரித்திராசிரியர் கொள்கை. கி மு 500ம் ஆண்டள
வில் விஜயன் இலங்கைத் தீவில் கதிரையாண்டவருக்கு
ஒரு கோயிலமைத்தானென யாழ்ப்பாண வைபவமாலை
கூறும். சிங்களரின் சரித்திர நூலாகிய 'மகாவம்சம்,'
அசோக மன்னனது அருந்தவப்புதல்வி சங்கமித்தை வெள
ளரசுடன் தேவ நம்பிய திஸ்ஸ அரசாண்ட காலத்தில் அநு
ரதபுரியை யடைந்தபொழுது, இலங்கை யரசனுக்குப்பின்
கஜரகாமத்துப் பிரபுவையே அடுத்தபடியாகக் குறிப்பிடு
கின்றது. இவ்வரசின் கிளையொன்று இப்பிரபுவால் கதிர்
காமத்துக்குக் கொண்டுவரப்பட்டு ஆலயத்தில் நாட்டப்பட்
டதாகவும் அந்நூல் கூறும். இப்பொழுது காணப்படும்
வெள்ளரசு இதனடியிற் றோன்றியதெனக் கருதுவர். கி.மு.
300ம் ஆண்டளவில் மகாநாகன் எனும் அரசனாற் கட்டப்
பட்ட புத்த விகாரையொன்று இவ்வரசடிக்கு அரைமைல்
தூரத்துக்குட்பட விருக்கின்றது.

துட்டகெமுனு எனும் சிங்களவரசன் எல்லாளனெனும் புகழ்பெற்ற தமிழரசனை வெல்லுதற்குரிய ஆற்றலைத் தமக்களிக்க வேண்டுமெனவும் அளிப்பிற் கதிரையாண்டவர் ஆலயத்தைக் கட்டுவிப்பதாகவும் விரதம் பூண்டு அக்கடவுள் அருள்பெற்றுத் தன் பகைவனை வென்றதால் தான் கூறியவாறே கி மு. 101ம் ஆண்டளவில் ஆலயத்தைக் கட்டியதாகவும் 'கந்தஉபாத' எனுஞ் சிங்கள நூல் கூறுகின்றதெனச் சேர். பொன். அருணாசலம் துரையவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இலங்கை, சோழர் ஆளுகைக் குட்பட்ட பொழுது சிங்கள அரசனாகிய ஐந்தாம் மகிந்தனும் அவன் மனைவிமாரும் சிறைப்படுத்தப்பட்டனர். இங்ஙனம் சிறைப்பட்ட அரசனின் வழித் தோன்றலாய மானவர்மன் எனும் சிறந்த கல்வியாளன் முருகப் பெருமானின் அருள் பெறவேண்டிப் பல்லாண்டுகளாகத் தவஞ்செய்து கண்மலரையும் அர்ச்சித்து ஈற்றில் அவனருளைப்பெற்றுத் தனது சாதியினரை வருத்திய சோழரை இவ்வூரினின்றும் இந்த மானவர்மனின் சந்ததியார் துரத்த முடிந்ததென மகாவம்சம் கூறும்.

பண்டைக் காலந்தொட்டுப் பலபுலவர்களும் அறிஞர்களும் துறவிகளும் இத்தலத்தைத் தரிசித்திருத்தல்வேண்டும். யாப்பருங் கலவிருத்தி மேற்கோட் செய்யுளைப்பாடிய புலவரும் இதனைத் தரிசித்திருத்தல் கூடுமெனக் கருதற்கிடமுண்டு. இனி இத்தலத்தைப்பற்றிய பழஞ் செய்யுளொன்று பிரசங்க மாலையின்கணுள்ளது. அதனையும் ஈண்டெடுத்துக் காட்டுகின்றாம்.

எட்டைய புரநாக லாபுரம் மணியாச்சி யிரசக்க னூர்கோட் டையூர்
ஏழா யிரம்பண்ணை சந்தையூ ரூற்றுமலை யெழுமலை மருங்கை நல்லூர்
இலருமன் னூர்கோட்டை பாவாலி சிவகிரி யிலக்கைய னூர் மூல் லையூ
ரிடையகோட்டைப்பதி நிலைக்கோட்டை தேவாரம் ராமகிரி கன்னிவாடி

தொட்டப்ப னூர்கம்பை காசைவா ராப்பூரு தோகைமலை யழகாபுரி
சுரண்டைதலை வன்கோட்டை பழனியாய்க் குடிசமுத் தூர் விருப்பாச்சிபடமாத்
தூர்கடம் பூர்பெத்த னன்னூற்று நகர்குளத் தூர்காமனூர் சாப்பிடூர்
தும்பிச்சி நாய்க்கனூர் சத்தமூர்க் காடுசேற் றூர்வெள்ளி குன்ற மலைய

பட்டிவட கரையமைய நாயக்க னூர்கொல்ல பட்டிசக் கந்தி சோலார்
பட்டிமத வானையூர் மேன்மாந்தை ரோசலைப்பட்டிவீ ரமலை சிங்கம்
பட்டிநெற் கட்டுசெவல் நற்பெரிய குளமாத்தி பட்டிகுரு விகுள மதுவார்
பட்டிகரி சற்பட்டி நடுவுக் குறிச்சிகோம் பைகவண் டன் டையூர்

கட்டபொம் மன்னூர்கு மாவாடி கவிணிளசை கடுவூர்நல் லூதபப்ப னூர்
கனகொலங் கொண்டானொ டெழுபத்தி ரண்டுடன் கருது மெண்ணேழ் தேசமுங்
கவியருமை யறிபவர்க ளுண்டதினு நின்போற் கவித்திறமி யாவாறிவார்
கனமேவு புனல்சூழும் வயல்நீடு மலைமேவு கதிர்காம வடி வேலனே.

(செந்தமிழில் வெளிவந்த செய்யுள்.)

பதின்மூன்றாம் நூற்றாண்டிற் புகழேந்திப் புலவர் யாழ்ப்பாண அரசனின் உதவியுடன் இக்கோயிலைத் தரிசித்துள்ளார். இவர், கதிர்காமத்து வேலர்முன் பாம்பை மயில் விடப் பாடியதாக ஒரு செய்யுள் தமிழ்நாவலர் சரிதையிலுண்டு.

"தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோ தயந்தனக்குன்
வாயரவை விட்டுவிட மாட்டாயோ—தீயரவைச்
சீறு மயிற்பெருமா டென்கதிர்கா மப்பெருமாள்
ஏறு மயிற்பெருமா னே!

14-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவரெனக்கருதப்படும் அருணகிரிநாதரும் இத்தலத்தைத் தரிசித்து இருபத்தைந்திற்கு மேற்பட்ட திருப்புகழ்மாலைகள் சாற்றியுள்ளார். கி. பி. 1581-ம் ஆண்டளவில் அரசுபுரிந்த முதலாம் இராசசிங்கனும் சைவசமயத்தைக்கடைப்பிடித் தொழுகியவனாகக் கூறப்படலால், இவனும் இவ்வாலயத் திருப்பணியில் ஈடுபட்டிருத்தல் கூடுமெனச் சிலர் கருதுப. இப்பொழுது காணப்படும் ஆலயம் கி. பி. 1634-ம் ஆண்டளவில் அரசாண்ட இரண்டாம் இராசசிங்கனால் கட்டப்பட்டதென்பதே சரித்திராசிரியர் துணிபு.

16-ம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயர், கதிரைமலையிலுள்ள கோயிலிற் பணமிருக்குமெனக்கருதி, அதனைச் சூறையாடும் நோக்கொடு சென்ற செய்தி, 1640-ம் ஆண்டளவில் இலங்கைக்குவந்து சிலகாலமிருந்த 'ரிபேயிரோ' (Rebeiro) எனும் போர்த்துக்கேயன் எழுதிய இலங்கைச் சரித்திரத்திற் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதனையும் ஈண்டெ

டுத்துக்காட்ட விரும்புகின்றாம். "பழைய யாலா (Yala) அரசிருந்தவிடத்திற்குப் பன்னிரண்டுகட்டைத் தூரத்தில் உள்நாட்டிற், புறச்சமயிகளாற் பெரிதும் போற்றப்படும் கோயிலொன்றுளது. பலவாண்டுகளாகக்கொடுக்கப்பட்ட காணிக்கைகளாகிய தங்கம், ஆபரணம், விலையுயர்ந்த கற்கள், முதலியன இங்கு பாதுகாக்கப்படுதலின் ஆயுதம் பூண்ட ஐந்நூறு பேர்கொண்டபடையொன்று காவல் புரிந்துவந்தது. இவற்றைக்கைப்பற்றவேண்டுமென்னும் பேராசையாலுந்தப்பட்டுப் பன்முறை இவற்றைப்பற்றி உசாவினோம். 1642-ம் ஆண்டின் தொடக்கத்தில், எங்களெல்லோராலும் நன்குமதிக்கப்பட்டவரும், அவ்வூராரின் மொழி, வழக்கம் முதலியவற்றை நன்குணர்ந்தவரும் ஆயகாஸ்பார் பிகூராடிகேப் (Gasper Figueira de Cerpe) என்பவரின் தலைமையின்கீழ்ப் பெரும்பாலும் கிறீஸ்தவர்களாயுள்ள 2000 காலாட்படையும் (Lascarins) 150 போர்த்துக்கேயருமாகக் கோயிலைநாடிச்சென்றோம். குறித்த ஆலயமிருக்குமிடத்திற் கண்மையில்வந்து அங்குள்ளானொருவனை விசாரித்தபொழுது, ஆலயமிருக்குமிடம் தனக்குத்தெரியுமெனவும் மிகவண்மையிலுண்டெனவுங் கூறினான். அவனே எங்கட்கு வழிகாட்டியாகி அப்பகுதியிற் காணப்பட்ட தனிக்காடடர்ந்த மலைவழியாகக்கூட்டிச் சென்றபொழுது சுற்றியலைந்து முன்சென்றவழியையே பன்முறை திரும்பிக்கடக்க நேரிட்டது. ஆலயம் மலையினுச்சியிலுள்ளதென்பது உண்மையாயினும், அதன்கண் எத்தகைய மந்திரவாற்றல் இருக்கின்றதோ அறிகிலேன். என்னே! எங்கட்கு வழிகாட்டிய ஐவருள் முதன் மூவர் பைத்தியப்பிடித்தவர்போல் நடித்த

மையால், எங்களையேமாற்றுகிறாரெனக்கருதி அவர்களைக் கொல்ல நேர்ந்தது. கடையிருவரும் அவ்வண்ணமே செய்தமையால் கதிரகோ என்றழைக்கப்படும் அவ்வாலயத்தைக் காணாமலும், எண்ணிய செயலை நிறைவேற்றமுடியாமலும் வந்தவழியே திரும்பவேண்டி நேர்ந்துவிட்டது.

முத்துலிங்கசுவாமி—கலியாணமடம்.

கி. பி. 1600-ம் ஆண்டளவில் இந்தியாவிலிருந்து வந்த அடியார்கள் பலரைக் கண்டியரசனுக்குதவிபுரியவந்த படையென ஐயுற்ற போர்த்துக்கேய அரசினர், யாழ்ப்பாணத்திலிருந்த அதிகாரியாகிய எதிர்மன்னசிங்க பரராசசேகரன் மூலம் முந்நூறுபேர்களைக் கதிர்காமத்துக்குச் செல்லவிடாது தடுத்துத் திருப்பியனுப்பினர். அந்நாட்களில் ஒருசிலரே கதிர்காமயாத்திரைசெய்யத் துணிந்தனர். அங்ஙனம் துணிந்தவர்களுள் காஷ்மீரத்திலிருந்துவந்த கலியாணகிரி அல்லது கலியாண நாதர் எனும் அந்தணருமொருவர். இவர், வடதேயத்தலிருந்துவந்து மிக்ககாலமாகக் கதிரைமலையில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் கந்தசுவாமியை அம்மலையினின்றும் பெயர்த்துத் தமதூருக்குக் கூட்டிச் செல்லவேண்டுமென்னும் நோக்கொடு விரைந்துசென்றார். சென்று கந்தசுவாமியைக் கண்ணாரக்காணுங்கருத்தொடு பன்னீராண்டு கடுந்தவமுஞற்றியபொழுது ஒரு வேட்டுவச் சிறுவனும் சிறுமியும் இவ்வடியாருக்குத்தொண்டாற்றிவந்தார்கள். தவத்தாற் களைத்து ஞானியார் ஒருநாட்கண் அயர்ந்துவிட, வேட்டுவச்சிறுவன் இவரைத்தட்டி விழிக்கச்செய்தான். பலவாண்டுகட்குப்பின்வந்துற்ற நித்

திரைக்குப் பங்கம்விளைந்ததால் ஞானியார் சீற்றங்கொண்டு சிறுவனை யேச, அவனும் ஏதோ சாட்டுச்சொல்லி முணுமுணுத்துக்கொண்டு ஓடவாரம்பித்தான். சிறுமியும் பின்தொடர்ந்தாள். கலியாணகிரியும் அவர்களைப் பிடிக்கும் நோக்குடன் விரைந்து பின்தொடர, அச்சிறுவர் இருவரும் மாணிக்கக்கங்கையின் ஆற்றிடைக்குறையில் மறைந்து கந்தசுவாமியும் வள்ளிநாயகியுமாகக் காட்சியளித்தனர். இக்காட்சியைக்கண்ட அடியார் உரோமஞ்சிலிர்ப்ப உரைதடுமாறி அடியற்ற மரம்போல் எட்டுறுப்புந்தோய நிலத்தில் வீழ்ந்து தொழுதார். தொழுதவடியார்க்கு ஆறுதலையளிக்க விரும்பிய ஆறுமுகவேலவர் 'நின்குறையாதென வினவ' அடியாரும் தமதுள்ளக்கிடக்கையினை வெளியிட்டார். இதனைக் கேள்வியுற்ற வள்ளிநாயகியார் தமது மணாளனைப் பிரித்துக் கூட்டிச்செல்லல் தகுதியன்றாமாறும் மாங்கலியப் பிச்சையளிக்குமாறும் பரிவுடன் கேட்டனர். ஞானியாரும் மறாது இயைந்து ஆண்டேதாமும் தமது வாணாளை இறைவன் பணியிற் கழிக்கத் தீர்மானித்தார். அன்றியும் கோயிலில் அமைத்து அடியார்கள் வணங்கும் பொருட்டுப் பொற்றகட்டில் எந்திரமொன்று கீறி முருகவேட்குரிய மந்திரவெழுத்துக்களை அதன்கணமைத்து உருவேற்றிப் பெட்டியொன்றில் வைத்தார். இப்பெட்டியே விழாக்காலங்களில் யானைமேலேற்றி உலாப்போவது. இங்ஙனம் முருகன் அருள்பெற்ற அடியாரே அக்காலத்திருந்த அரசனின் உதவியொடு கோயிலைத்திருத்தியமைத்தார். இவர் ஒடுக்கமடைந்தபொழுது இவரது திருமேனி முத்துமயமான லிங்கவடிவாயிற்றாதலின் முத்துலிங்கசாமியென இப்பொழுது மக்கள்

வணங்குகின்றனர். இவரிருந்த இடம் கலியாணமடமென வழங்கப்படுகின்றது.

முதலியார் இராசநாயகம் அவர்கள் இச்சரித்திரத்தைச் சிறிது மாறுபடக்கூறுகின்றனரெனினும், அம்மாறுபாடு மிகப் பொருத்தமுடைத்தாகக் காணப்படுதலின் ஈண்டுத்தருகின்றாம்.

கலியாண நாதர் கந்தசுவாமியைப் பன்னிரண்டு வருடம் பூசித்தும் காணமுடியாமையாற், பொற்றகடொன்றில் எந்திரம் கீறி உருவேற்றிப் பெட்டியிலடைத்து முருகவேளை இந்தியாவுக்குக்கொண்டுசெல்ல ஆயத்தஞ்செய்தார். அவர் வெளியே சென்ற சமயம் பார்த்து, அவருக்கு வேலை செய்துகொண்டிருந்த வேட்டுவச்சிறுமி, அப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு கோயிலுக்கு நேராக ஓடி உள்ளே நுழைந்து மறைந்தனள். கலியாண நாதர் அவளைத்தொடர்ந்து கோயிலுக்குச் சென்றதும், வள்ளி நாய்ச்சியாரும் மணாளனும் காட்சியளித்தனர். இதற்குப் பின்னர் நிகழ்ந்தனவாகச் சேர். பொன். அருணாசலம் அவர்கள் குறிப்பிட்டனவும் முதலியார் அவர்கள் குறிப்பிட்டனவும் ஒத்திருக்கின்றன.

17-ம் நூற்றாண்டில் இலங்கையில் இருபதாண்டுவரை சிறைப்பட்டிருந்த ரொபேட் நொக்ஸ் (Robert Knox) எனும் ஆங்கிலேயன் (1681) எழுதிய 'இலங்கைச் சரித்திரத் தொடர்பு' (Historical Relations of Ceylon) எனும் நூலிற் கதிர்காமத்தைப்பற்றிய குறிப்புக்கள் சிலவுள. அவையிற்றை ஈண்டுக்காண்க.

"நான் கேள்விப்பட்டவரையில், இலங்கையின் கிழக்குக்கரை நிலப்பாகம் மலைகளாலும் கப்பல் செல்ல வசதிக்

குறைவான கடலாலும் சூழப்பட்டிருக்கின்றது; சுகமுடைய இடமுமன்று. இதற்குக்காரணம் அண்மையிலிருக்கிற பட்டினத்திற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் 'கொட்டாரகன்' எனும் தெய்வத்தின் ஆற்றல் என்பர். உப்பு அள்ளச்செல்லும் யாவரும் இத்தெய்வத்திற்குக் காணிக்கையிட்டே செல்லவேண்டுமாம். போர்த்துக்கேயருக்கோ அல்லது ஒல்லந்தருக்கோ, தங்கள் நாட்டு மன்னவனுக்கு எதிராகத் துணைசெய்த இராசத்துரோகிகளாய சிங்களர்க்கும் இத்தெய்வத்தின் பெயரும் வல்லமையும் பெருந்திகிலையுண்டாக்கிவிடுகின்றன. அவ்வழியாற் படையெடுத்துப்போக அவர்கள், துணை தானும் செய்யமாட்டார்கள்."

நொக்ஸினுடைய காலத்திற் கண்டிப்பெரஹராவிற் புத்தர் பற்கள் சேர்க்கப்படவில்லையெனவும் அவ்விழாவில் அலுத்நுவரை தெய்யோவும் (விஷ்ணு), கொட்டாரகன் தெய்யோவும் (கதிர்காமக்கடவுள்), பத்தினி தெய்யோவும் (கண்ணகி) திருவுலாவந்தன எனவும் அவ்வறிஞர் குறிப்பிட்டிருத்தல் ஈண்டு நினைவு கூர்தற்பாற்று. பத்தினி வழிபாடு, முதலாங் கயவாகுகாலத்தில் (கி. பி. 145) இலங்கையிற் பெரிதும் பரவிற்றென்பது பெரும்பாலார் கொள்கை. இவ்வேந்தன் பெயரே சிலப்பதிகாரத்தில்,

"கடல்சூழிலங்கைக் கயவாகுவென்பான்" என உரைபெறுகட்டுரைக்கண்ணும், 'கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்' என வரந்தருகாதைக்கண்ணும் கூறப்பட்டுளதென்பது இக்கொள்கையாளர்தம் துணிபு.

பாலசுந்தரி.

கண்டியில் அரசாண்ட கடையரசனாகிய ஸ்ரீவிக்கிரம ராசசிங்கன் காலத்தில் இந்தியாவின் வடபாகத்திலுள்ள அரசனொருவன் மக்கட்பேறின்மையால் இத்தலத்தைத் தரிசித்துத் தனக்குப் பிள்ளைப்பேறுண்டாகுமாயின், மூத்த பிள்ளையைக் கதிர்காமவேலருக்குத் தொண்டாற்றவிடுவேனென்ற விரதம் பூண்டு சென்றான். பிள்ளை பிறந்ததும் அதன் அழகு காரணமாகப் 'பாலசுந்தரி' யெனப்பெயரிட்டுத் தான் முன்பு செய்த விரதத்தை மறந்திருந்தான். அதனை நினைவூட்டற்குரிய செயல்கள் பல நிகழ்ந்தன. உடனே தனது பிள்ளையைக்கொணர்ந்து பல தோழியருடன் கதிர்காமத்தில் விட்டுச்சென்றான். அரசிளங்குமாரியும் தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டுத் தனது காலத்தை இறைவன் பணியிற் போக்கிவந்தாள். இத்தலத்திற்கு வழிபட வந்த கண்டியாசன் இவளைக்கண்டு காமுற்று அரண்மனைக்கு மீண்டதும் மணஞ்செய்யும் நோக்குடன் பல பரிசில்கள் கொடுத்தனுப்பினன். அவையிற்றை இவள் பொருட்படுத்தாது திருப்பியனுப்பினள். இவளை எங்ஙனமாயினும் ஒருப்படச்செய்தல் வேண்டுமெனக்கருதிய அரசன், அரண்மனைக்கு இவளை அழைத்துவரும்படி தனது படைவீரரை யனுப்பினான். என்செய்வாள் பாவம்! திக்கற்றவர்க்குத் தெய்வமன்றோ துணை! அடியாரிடத்து அஞ்சுமுகந்தோன்றினால் ஆறுமுகம் தோன்றாதிருக்குமா? இங்ஙனம் கட்டளையிட்ட அரசனையே இவளுடைய பழி சூழ்ந்தமையால் ஆங்கிலவரசினர் சிறைப்படுத்தினர். இங்ஙனம் முருகன் திருவருளாற் றப்பிய அரசகுமாரி கிழப்பருவம் வரையுமிருந்து

தொண்டாற்றி கி. பி. 1876-ம் ஆண்டளவில் இறைவன் திருவடி நீழலையடைந்தனள். இவ்வரலாற்றை இரண்டாம் இராசசிங்கன் மேலேற்றிக் கூறுவாருமுளர்.

ஜயசிங்ககிரி சுவாமி.

கண்டியரசன் சிறைப்பட்டபின்பு, 1815ல் கூட்டிய 'கண்டிச் சமாதான சங்கத்'தில் அளித்த வாய்மையின்படி, அதிகாரமும் உரிமையுமிழந்து வருந்திய அதிகாரிகளைத் துணையாகக்கொண்டு 1817-ம் ஆண்டு கண்டி மாகாணங்களிற் பெருங்கலகமொன்று உண்டாயிற்று. இக்கலகம் பெருவன்கண்மையாகவே யடக்கப்பட்டது. ஊவா மாகாணம் இத்தகையநிலைமையினின்றும் மீள நெடுங்காலஞ்செல்ல நேர்ந்தது. இக்கலகம் ஒழிந்த காலத்திற்றான் தேசாதிபதி பிரௌவுன்றிக் அவர்கள், வைத்தியத் தலைவர் டாக்டர் டேவி அவர்களுடன், கதிர்காமத்தைக் கண்ணுற்றார்கள். அப்பொழுது அவர்களை அங்கு வரவேற்றவர் ஜயசிங்ககிரி சுவாமிகளாகும். இவ்வடியாரைக் குறித்தும் கலியாணமடத்தைக் குறித்தும், 1816 முதல்—20ம் ஆண்டுவரை, படைத்தலைவராயும் மருத்துவராயுமிருந்த டக்டர் டேவி அவர்கள் 'இலங்கை வரலாறுகள்' எனும் நூலிற் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அப்பகுதியை மொழிபெயர்த்து ஈண்டுத் தருகின்றோம். "மிக மதிக்கப்படுகின்ற கல்யாண மடம் இன்றும் கதிர்காமத்தில் ஒருபுதுமைப் பொருளாகக் காணப்படும். அது, காலற்ற சாய்வுநாற்காலியொப்ப, உயர்ந்த பக்கங்களையும் பின் புறத்தையுமுடையதாய் ஒருமேடை மீது

களிமண்ணாலான பீடமாகும். அது புலித்தோல்களால் மூடப்பட்டுளது. ஆலய வழிபாட்டிற்குரிய கருவிகள் அதன்கணுள. அதனருகில் தீ எரிந்துகொண்டிருந்தது. இஃது ஒரு மண்டபத்தின் நடுவண் அமைந்துளது. இம்மண்டபம் இங்குள்ள அந்தணரின் இருப்பிடம். அப்பிராமணர், கலியாண மடமானது முதற் குருவாகிய கல்யாண நாதருக்கே யுரியதென்றும், அக்கலியாண நாதர் பத்திமேலீட்டினாற் சாதற்றுயரையனுபவியாது முத்தியடைந்தபொழுது அப்பீடத்தைத் தமக்குப்பின் தொண்டாற்ற வரும் குரு பரம்பரைக்குத் தூய்மையான ஆட்சியாக விட்டுச்சென்றன ரென்றும், அவருடைய ஆசாரிய பரம்பரையில் வந்தோர், இப்பீடத்தின்மீது கிடந்தே இவ்வுலகவாழ்வை ஒருவவேண்டுமென்றும் கூறினர். இங்ஙனம் கூறியவர், தாமும் அவர்களைப்போலவே அதன்மீதிருந்தே உயிர்துறக்கும் பெரும்பேற்றினை மிகவண்மையிற் பெறும் ஆவலுடன் நம்பியிருக்கின்றார். இதனை வைராக்கியத்துடனும் பயபத்தியுடனும் அவர் கூறியது, அவர் தம்மொழி, வெற்றுரையன்றெனக் காட்டிற்று. உருவும் உறுதிமொழியும் உளத்தில் ஆழ்ந்து பதியும் தகையவாயிருந்தன. ஓவியம் வரைவானொருவன் தன் தொழிலுக்குச் சிறந்தவரென ஆயிரத்திலொருவராகத் தேர்ந்தெடுக்கும்படியான உயர்ந்த மெல்லிய உருவுடையராகக் காணப்பட்டார். அவருடைய தாடி, நீண்டு வெண்மையாயிருந்தது. ஆனால், அவருடைய மெலிந்த யாக்கையில் முகத்திற்கு உயிர்ப்பளிக்கும் அக்கண்கள் இன்னும் ஒளி நிறைந்திருந்தன. அவர் வயோதிக தசையின் மெலிவு தோற்றாது, நிமிர்ந்து நிற்கும் நிலையுடையவராயிருந்தார்.”

ஜயசிங்ககிரி சுவாமிக்குப் பின் மடாதிபதியாக விருந்தவர், மங்களகிரி சுவாமியவர்கள். இவ்வடியாரும் 1873ல் இம்மை வாழ்வொருவினர். இவருக்குப்பின் மடாதிபதியாக விருந்தவர், பால்குடிபாபா அவர்களாகும். இவருடைய சரித்திரத்தை இனி நோக்குவாம்.

கேசபுரி சுவாமி அல்லது பால்குடி பாபா.

ஸ்ரீ கேசபுரி சுவாமியவர்கள் ஏறக்குறைய 125 ஆண்டுகட்கு முன் (1820—39 ?) வட இந்தியாவிற் பிரயாகையிலுள்ள (Alahabad) மடத்திலிருந்து இளமைப் பருவத்திற் கதிர்காமத்தையடைந்தனர். முற்கூறிய மடத்திற் சிறிது காலம் தங்கியிருந்தார். பின்பு காட்டுக் கேகிப் பலவாண்டுகளாத் தவம் புரிந்துகொண்டிருந்தார். இங்ஙனமிருக்கும் நாளில், சுரராஜபுரி சுவாமி என்றழைக்கப்படும் ஓரிளந்துறவிகள் கதிர்காமத்தை யடைந்தனர். இவர் திருவும் கல்வியும் கடவுட் பத்தியும் சிறந்த உருவும் உடையவர். இவர் முதலிற் காஷ்மீர் மகாராசாவின் குதிரைப்படைத் தலைவராயிருந்தவர் செல்வ நிலையாமையினை யுணர்ந்து துறவறத்தை நாடும் உள்ளமுடையராதலின், இவருடைய சுற்றமெனும் தொல் பசுக்குழாம் பற்றிப்பிடித்து இல்லறம் நடாத்த வேண்டுமென்று இவரை நெருக்க, இவர் இயையாமை கண்டு, விட்டுச்செல்ல நேரிட்டது. மகாராசா அவர்கட்கும் இதனை அறிவித்து அவர் வாயிலாக இல்லற வாழ்விற் புகும்படி நெருக்கியபொழுது, பெரும்பிறவிப் பௌவத் தடந்திரையாற் பற்றொன்றி எற்றுண்பானொருவன், கனி

யைநேர் துவர்வாயாரெனுங்காலாற் கலக்குண்டு, காமவான் சுறவின்வாய்ப்பட்டு உய்யுமாறறியாது மயங்குதலையாமும் பெறுதுமெனக்கருதி, வீட்டினின்றும்புறப்பட்டுஇராந்துண்டு இராமேஸ்வரத்தையடைந்தார். இத்தலத்தில் வதியும்நாளில் ஸ்ரீ பாதத்துக்குச் செல்லும்படி கடவுள் ஆணை கிடைத்தது. உடனே அவர் புறப்பட்டு இலங்கைக்கு வந்து சமனொளி மலையினையடைந்தார். ஆண்டுச் சிலநாட் டங்கியதும், கதிர் காமத்திற்குப் போகும்படியும், அங்கே மலைச்சாரலிற் கடுந் தவம் புரியும் அடியாரொருவரைக் காண்பாரென்றும், திரு வருள் ஆணையுண்டாயிற்று. சுராராஜபுரி சுவாமிகள் அங் ஙனமே யொழுகி மலையிலிருந்த தவத்தினரைக் கோயிலுக் குக் கொணர்ந்தார். சிலகாலம் முருகப் பெருமானின் கட் டளைப்படி அவர் சோறுண்டாரேனும், தமது உடல்நிலைக்கு ஒவ்வாமை கண்டு, பால்மாத்திரம் உணவாகக் கொண்டார். இதனால் இவரை மடத்திலுள்ளாரும் பிறரும் "பால்குடி பாபா" எனவழைத்தனர். இவரொடு சுராராஜபுரி சுவாமி யும்மடத்தில் தங்கினர். இங்ஙனமிருந்த பால்குடி பாபா 1898ம் ஆண்டு ஆடித்திங்கள் கொழும்பு நகரத்தில் உயிர் நீத்தார். இவருடைய சீடர்கள் உடம்பினைக் கதிர்காமத் திற்கெடுத்துச் சென்று சமாதி செய்து ஓர் கோயிலுங்கட்டி யுள்ளார்கள். சுராராஜபுரி சுவாமிகளும் இவ்வாண்டிற்றானே கார்த்திகைத்திங்களில் இறைவன் திருவடிநிழலையடைந்தார்.

கதிர்காமத்திலுள்ள எல்லாக் கோயில்களையும் மடத்தி லுள்ள சுவாமிகளே பார்த்துவந்தார்கள். அங்குள்ள சிங் களக் கப்புராளைமார் (பூசாரிகள்) சிறிது சிறிதாகக் கோயில் களின் உரிமையைக் கைப்பற்றினர். பிரௌவுன்றிக் தேசா

திபதியவர்கள் கதிர்காமத்திற்குச் சென்றபொழுது கப்பு ராளைமாரைக் கோயிற் பூசையினின்றும் விலக்கி ஜயசிங்ககிரி சுவாமியையே பார்க்கும்படி கொடுத்தார். வள்ளி நாயகி கோயில் மட்டும் வேட்டுவக் கப்புராளைமாருக் கிருந்தது. ஆனால் அக்கப்புராளைமார் மீட்டும் கலகம் செய்து பய முறுத்தி மூலஸ்தான வழிபாட்டிற் பங்கு பற்றத்தொடங்கி முற்றையும் பிடித்துக்கொண்டனர். அவர்கள் கந்தவேளை 'மச்சினு' (மைத்துனன்) என உரிமை பாராட்டுவது வழக்கம்.

வழிபாட்டு முறை.

ஒரு பற்றுமற்று அருவாய்த்தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருளை வழிபடும் முறையே (கந்தழிவழிபாடு) கதிர்காமத்தில் உண்டென்பது சிலஆராய்ச்சியாளர் துணிபு. கந்தழி வழிபாடெனிற் கோயிலமைத்தல் வேண்டற்பாற் றன்றென ஐயுறற் கிடமுண்டு. வேட்டுவர் கந்தழிவழிபாடா ற்றும் நுண்மதியுடையாரோ வென்பதும் ஈண்டாராயற் பாற்று. அனற் பிழம்பு வடிவமே இங்குக் கற்பூர தீபமாக இன்றும் நிலைத்து நிற்கின்றதெனக் கொள்ளற் கிடமுண் டெனினும், துணிந்து கூறமுடியாது.

திருப்புகழ்ப் போக்கினைக் கவனிக்குமிடத்து மாணிக் கத்தாற் செய்த விலை மதித்தற்கரிய திருவுருவம் ஒன்றிருந் திருத்தல் கூடுமெனக் கருதற் கிடமுண்டு. அன்றியும் டாக்டர் டேவி அவர்களும் கதிர்காமத்திற்குச் சென்றபொ ழுது, கதிர்காமத்திலுள்ள திருவுருவம் பெருங் கலகம்

நிகழ்ந்த காலத்து மறைக்கப்பட்டு இன்னும் காட்டிற் கிடக்கின்றதெனக் குறிப்பிட்டிருக்கின்றார். இதனாலும் மூலஸ்தானத்தில் விக்கிரகம் ஒன்றிருந்ததென்பதும் அது மிக விலையுயர்ந்ததென்பதும் பெறப்படும்.

இப்பொழுது முருகப்பெருமானின் திருவுருவம் வரைந்த திரைச் சீலையே மூலஸ்தானத்தை மறைத்து நிற்கின்றது. இத் திரைச்சீலை ஒரு பொழுதும் எடுக்கப்படுவதில்லை. கப்புராளைமார், தம் வாயை மஞ்சட் சீலைத் துண்டினாற்கட்டி அமுதினை உள்ளே காவிச்சென்று வைத்தபின்னர் வெளியே வந்து திரைச்சீலை முன்பாக நின்று ஓங்கார வடிவாகக் கைகளிரண்டையும் கூப்பி வழிபாடியற்றுகின்றனர். திருவிழாக் காலங்களிற் கற்பூரத் தீபம் இருளைப்போக்க, அடியார்களின் 'அரோகரா' வெனும் ஒலி வானத்தைப் பிளப்ப, யானை மீதெழுந்தருளிப் பல்லாயிரச் சணக்கான தொண்டர்களுக்குக் காட்சியளிப்பது, முன்னர்க் குறிப்பிட்ட எந்திரம் அமைந்த பெட்டியாகும். கதிர்காமத்திற்குச்செல்வோர் அங்கிருக்கும் காலம்வரையிலாயினும் தம் சுற்றத்தவரையும் மறந்து தம்மையும்மறந்து கடவுளிற் பற்றுடையவராகக் காணப்படுகின்றனர்.

வேல்விழா.

'குன்றமெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றங் கமரரிடர் தீர்த்ததுவு—மின்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல்

"வீரவே றாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை.'

முருகக் கடவுள் சூரபன்மனைக் கொல்லச் செல்லுமுன்னர்த் தமது வேலாயுதத்திற்குப் பூசை நிகழ்த்தினாரெனவும் இதனான் வேலின் சிறப்பு, கூறி முடிக்கும் அளவிற் றன்றெனவுங் கூறுவர். சில கோயில்களில் வேலாயுதத்தையே வழிபடுகின்றனர்.

இந்தியாவிலிருந்து ஆண்டுதோறும் அளப்பில்லா அடியார்கள் கதிர்காம வேலவனைத் தரிசித்து அவனருள் பெற்றுச் செல்வது வழக்கம். சில தொண்டர்கள் வட இந்தியாவிலிருந்து கங்கை நீரைக் குடத்தில் முகந்து நிறைத்துச் சுமந்து கொண்டுவந்து அபிஷேகம் செய்வர். யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி வழியாகவும் மட்டக்களப்பு வழியாகவும் கால்நடையாகவே பலபுகழ்மாலைகளைப் பாடிக்கொண்டு கூட்டங் கூட்டமாகச் செல்வது வழக்கம். கொழும்பு, கண்டி, காலி, இரத்தினபுரி, கம்பளை, வதுளை என்னுமிடங்களிலிருந்து ஆண்டுதோறும் ஏழுவேல் கதிர்காமத்திற்கு வருவது வழக்கம். இவற்றுடன் எண்ணிறந்த அடியார்களும் பின்தொடர்ந்து வருவார்கள். நாட்டுக்கோட்டைச்செட்டியார்கள் கதிரேசன்பால் மிக்கபத்தியுடையவர்களாதலின், இவ்வேல் விழாவில் அதிக ஊக்கமெடுத்துவந்தார்கள். வேலுடன் அதிக நாட்கள் நடப்பதாற் சிலர்இடைவழியில் நிற்க நேர்தலுமுண்டு. சிலகாலங்களில் தொற்றுநோய் பரவி வேற்படையை யெடுத்துச் செல்லும்

தொண்டர்கட்குப் பேரிடையூற்றினை யுண்டாக்கிற்று. இத்துணைத் தூரத்திலிருந்து கால்நடையாக வேலெடுத்துச் செல்லும் வழக்கத்தை உடல் நலங்காரணமாகவே அரசாங்கம் தடைசெய்துவிட்டது. இங்ஙனம் தடைசெய்த காலப் கதிர்காமத்திற் பெருங்கலகம் நிகழ்ந்த காலமாய் (1817—1818) இருத்தல் கூடும். அன்றேற் கொள்ளைநோய் பரவிய காலமாயிருத்தல் கூடும். (1858). இதனாற் கொழும்பிற் செட்டியார்தெருவிலுள்ள கதிரேசன்கோயில்வேல், புறப்பட்டுப் புதுக்கதிர்காமம் என்றழைக்கப்படும் பம்பலப்பிட்டிக் கோயிலுக்கு ஆடிமாதத்திற் சென்று திரும்பும் வழக்கமுண்டாயிற்று. சிறிது காலத்தின் பின்னர் வெள்ளவத்தையிலும் ஒரு கோயிலைக்கட்டி இவ்விரு கோயில்களுக்கும் மாறி மாறிச் செல்லும் வழக்கத்தை யுண்டாக்கிக் கொண்டனர். காலியிலுள்ள கதிரேசன் கோயில் வேல், புறப்பட்டு உனுவற்றன எனுமிடத்திற்குச் சென்று திரும்புவது வழக்கம்.

கதிரையாத்திரை

கதிர்காம யாத்திரை செய்வது இக்காலத்தில் அவ்வளவு துன்பமானதொன்றன்று. தொண்டர்களின் வசதிக்காகப் பலவிடங்களில் மடங்கள் அமைத்துள்ளார்கள். கொழும்பில் மருதானையில் ஓர் மடமும், காலிச் சிவன் கோயிற்கருகில் ஓர் மடமும், மாத்தறையிற் பெரியதோர்மடமுமுண்டு இவ்விடங்களிலுள்ள சபைகள், இம்மடங்கட்கு வருவோர்க்கு வேண்டிய வசதிகளை யளிக்கின்றன. கதிர்காமத்திலும் சில தண்ணளிச்சீலமுடையாரின் உதவியால் தங்குதற்கு மடங்களுண்டெனினும், செல்பவர்கள் மழைக் காலங்களில் தங்கி நிற்றற்குப் போதா.

இத் தலத்திற்கு ஆண்டுதோறும் இந்தியாவினின்றும் இத்தீவின் பல பாகங்களினின்றும்வரும் மக்களின் தொகை கூடிக்கொண்டே செல்கின்றதெனின், இத்தலத்தின் மகிமையினை நாயினுங் கடையேனாகிய யான் எடுத்து மொழிதல் எளிதாமோ.

“ மாணிக்க நிறைகங்கை யாடியுன் னைப்பணிய
வந்திடும் பூதலத்தோர்
வாயூமர் யாடவுங் குருடர்கண் பார்த்திடவு
மலடிகள்பின் மைந்தர் பெறவும்

காணிற்கு மாரவே லாவென்னு மன்பரைக்
கரடிபுலி யானை சிங்கங்
காலிற் பணிந்தஞ்சி யோடவும் கந்தனே
கண்கண்ட தெய்வ மெனவே

யாணிப்பொன் முத்திமண் டபமேவு கச்சியினு
னடியேனை யாண்டு கொண்டெ
னுகத்தில் வந்தபிணி தீர்த்திடவு முன்னிற்கு
மாறுமுக மெய்த்தெய்வமே

சேணிற் புலோமசை வளர்த்தபெண் பிடிகணவ
செங்கீரை யாடியருளே
தேவரொடு மனிதர்பணி கதிர்காம வேலனே
செங்கீரை யாடியருளே. ”

(சுப்பிரமணிய தலக்கோவைப் பிள்ளைத் தமிழ்.)

கதிர்காம மலைநாத ஞமெந்தை தனையேத்து
கடவுளர்கண் முனிவர் சித்தர்
கந்தருவர் கின்னரர்கள் கருடர் கிம்புருடரொடு
ககனர் வுருமுரகர் முதலாம்

பதினெண் கணத்தடிய வர்க்கெலாந் திருவருள்ப
ரிந்து பாலித்து நாளும்
பரிவினிற் கதிரைமலை தவிராது வைகினுன்
பரமசுக மூலகுபயில

முதிர்விநா யகர்தமலை வீரவா கமருமலை
மொழிதேவ சேனுமலை
முதுவள்ளி மலையஞ்சு காமமலை செந்தமிழின்
முனிமலைக ளயலின் முடுகுஞ்

சதிரிலுன் றிருவடியடைந்திடத் தகுவதோ
சாந்த நாயகி சமேத
சந்த்ரமௌ லீசனே யெந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே.

(சந்திர மௌலீசர் சதகமென்னும் ஈழமண்டல சதகம்,)

முற்றும்.

கொழும்பு,
வெள்ளவத்தை.
18-7-37.

இங்ஙனம்,
குல. சபாநாதன்.

34106

ஓம்:

பாமுதற் குறிப்பகராமுதல்.

பா	பாவெண்	பா	பாவெண்
அள்ளி	௩௧	திருவாவி	௩௯
அன்றி	௩௨	திருவேங்க	௩௪
அன்று	௩௩	நச்சரவும்	௰௫
ஆடு	௰௨	நாம்புக	உ௭
ஆழி	௰௧	நீரின்	௰௩
ஆறு	௩௰	நூலாத	உ௩
இகலு	௭	பத்து	உ௬
ஈரெழுத்	உ௮	பாண்டியர்	௩
உணர்	௰௫	பூமேவு	0
எளியாரை	௯	பொய்யா	௰௯
ஏறாரு	௰	பொருந்து	௪௧
ஐயா	உ௰	பொன்னியம்	உ
கண்ணிற்	௩௬	மணிதிருவ	௧
கீழ்பாலின்	உ௯	மலரவ	௬
குறிய	௮	மலையிறையன்	௪
குன்றந்	உ௪	மாயா	௩௫
கூட	உஉ	மான்கொன்ற	௪௰
கூளி	௪உ	முன்னை	௰௬
செம்புல	௩௭	வயிரம்	௩௮
சேரன்	௰௪	வெங்கட்	உ௫
சேரியிற்	௰௮	வேய்முத்த	உ௧
தாழை	௫		

பாவிற் பிழை திருத்தம்.

பிழை.	மருங்கெண் (பக்கவெண்)	திருத்தம்.
டுலவதன்	1	டுலவுதன்
வொளிர்தலின்	2	லொளிர்தலின்
பொழிதர	2	யொழிதர
மாஞ்சினைத்	3	மாஞ்சினைய
டுகூ	13	டுக
வடிவேலன டை	26	வடிவேல னடை
இருசார்	39	இருசார்ப்
...	101	சிதர்துடிவரி—சிதரிய துடியென்னும் ரேகை

ஓம் :

திருச்சிற்றம்பலம்.

கொழும்பு வேத்தியற் றமிழ்ப் பாடச்சுவடிக் கட்டளைப்
பெருங்குழுவினுறுப்பாளரும்

கொழும்புச் சகிராக் கல்லூரித் தமிழ்ப்
பேராசிரியருமாகிய,

அன்பர்,

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டைத்

திரு. மு. நல்லதம்பியவர்கள் வழங்கிய

சிறப்புப்பாயிரம்.

நேரிசை வெண்பா.

புலவர் பரசிமகிழ் பொன்னம் புலவன்
குலவுதமிழ்க் கொண்டல் குணக்குன்—றுலவுபுகழ்
வந்தகரு ணாலயனவ் வண்கதிர காமற்குத்
தந்தனனெண் பிள்ளைத் தமிழ்.

இன்னிசை வெண்பா.

பிங்கலநூற் கொள்கை பிறழாப்பிள் ளைத்தமிழ்ப்பா
நங்கதிரை யங்கோமா னல்கவருண் மாணுறுத்தான்
பொங்குபொருட் சொற்சுவைகள் பொற்பநலி சைப்
பைங்கருணைப் பாண்டியனென் பான். [புலவன்

ஓம் :

திருச்சிற்றம்பலம்

சிவனடியாரை வணங்குதல்

நேரிசை வெண்பா.

மறுமைநல மிம்மையென மாற்றோளிகோ ணீற்றர்
நறுமையடிப் பூணாறு ஞாலம்—வறுமை
யமையாத வானோரு மஞ்சுவரே தீண்ட
நமையாளு நம்பியினா னன்கு.

திருச்சிற்றம்பலம்.

இளமுருகன்.

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

கதிரகாமப் பிள்ளைத்தமிழ்.

செய்யுட் காப்பு.

திருமூத்தநாயனார் காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடி யிரட்டை யாசிரியவிருத்தம்.

(கலிப்பா.)

பூமேவு சிவசெஞ்சு டர்த்தவழு மிளவெயில்பொ
ரப்பிணிமு ழக்குடைந்து
புள்ளார வாரிப்ப நெகுமுளரி யம்போது
புய்த்தொரும ருப்பின்மூக்கி
னேமார மோப்பமுற் றெம்முயிர்க் குளசுவையி
கப்பகனி நிரைபுடைபெயர்
திமூமெனவ ருட்கடாங் கலுழ்தர வாரிப்ப
வீர்ம்பரிவு நீர்குடைவுறி

மாமால்வி டைக்களிறு பிடிமாலு ழமுதுவ
யக்குறுந டைக்குழவியான்
மதிமுடிக் கனிவவோ மோமெனப் பெயர்க்குயின்
மன்றவோ மோமென் றுவந்தி
யாமீடு மிருவினைக் கவளமுண் டெலவுதன்
யாணரமு மாணாகினை றுப
யாபன்னி ரண்டுகைக் கதிர்காம மானபுனை
யானையின் றமிழ்மொழியவே. (க)

கொழும்புத் தமிழ்ச் சங்கம
நூலகம்

இளமுருகன்

ஓம்:

திருச்சிற்றம்பலம்.

கதிரகாமப் பிள்ளைத்தமிழ்.

செய்யுட் காப்பு.

திருமூத்தநாயனார் காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடி யிரட்டை யாசிரியவிருத்தம்.

(கலிப்பா.)

பூமேவு சிவசெஞ்சு டர்த்தவழு மிளவெயில்பொ
ரப்பிணிமு ழுக்குடைந்து
புள்ளார வாரிப்ப நெகுமுளரி யம்போது
புய்த்தொரும ருப்பின்மூக்கி
னேமார மோப்பமுற் றெம்முயிர்க் குளனணையி
கப்பநனி திரைபுடைபெயர்ந்
திழுமெனவ ருட்கடாங் கலுழிசுர வாநிற்ப
வீர்ம்பரிவு நீர்குடைவுழி

மாமால்வி டைக்களிறு பிடிமாலு மழமுதுவ
யக்குறுந டைக்குழவிவான்
மதிமுடிக் கவினவோ மோமெனப் பெயர்கூயின்
மன்றவோ மோமென்றுவந்தி
யாமீயு மிருவினைக் கவளமுண் டுலவுதன்
யாணரடி மாணநினைதும்
யாபன்னி ரண்டுகைக் கதிர்காம மான்புணரு
யானையின் றமிழ்பொலியவே. (க)

கொழும்பு தமிழ்ச் சங்கம
நூலகம்

பிள்ளைக்காப்பு.

திருமால் முதலிய முக்கடவுளர் காப்பு.

எண்சீர்க்கழிநெடிலடி யீரிரட்டை யாசிரியவிருத்தம்.

மணிதிருவ மறுவியன் மார்பமதி னவிர்வர
மணமுடைய கோதையும் வைப்புண வொளிர்தலின்
மடமையணி கலமணி நிலமகள்பொ றுமையான்
வருமொர்துனி புலவியின் மடிதிரை யுடையிடை
வரையவிழு கிடையினண் மழமழென வொழுகுகண்
மழைவெருவி யொருதுடை மடிமிசை மலைமுலை
மருவுபொழு தடுபடை வறுவியகை நால்கிஞன்
மறையிளவ லடிதொடு மாணவ வடிகளை

யணியிதழி வளர்பொலங் காவின்மறை பின்னையை
யறிதலினை யொழிதர வாவென வெருவர
வரவுறினு மொருமுறை யானுமனை யறமக
ளஃதறிய வரின்வரு மோவென வயிர்வுற
வறிதுயில்கொ ளறிஞர்தங் நுதனடுவ ணிணைவிழி
யடைசியென வடைசியெம் மாளுடை யொருகுயி
லவவுமொரு பாலினிற் கட்கடைசெ லக்கருத்
தபர்களவ கற்புநூ லாசிரிய ரியவுளைத்

துணியவலர் மறைபுண ராரியபெண் மாதராள்
தொடர்பறுவ ளிதுவுமோ? தொன்னிறை யிலளிறை
தொடுகிழமை யுருகலள் கடியகுரல் வாயினள்
சொலன்மிகுந ளவடுணைத் தோள்புணை தழுவலன்

றுனியலென வீரடிப் பாற்குறளை மொழிபுநாற்
றுவரிதழின் வாய்நருச் சோர்தரத் தமிழ்மொழித்
துணைவியின றம்பொருள் வழுவுதலில் காதலின்
சுவைநிறையு மின்பமார் தோணுகர் கடவுளைத்

தணியுமணை மனனுழை வாழுமவர் மாஞ்சினைத்
தளிரடியில் வைகறைத் தாழ்துமெந் தலைகொடு
தகையினின ணங்குமின் கொடியிடையர் புட்கடி
தழலொழிய வெறிகவண் டழனிகர் குருமணி
தலைமைபுனை யிமையவர் கையுறையொ டும்பராய்த்
தழையவரு ளிழிதல்போற் றூழ்கதிர் மலைவருந்
தமியமிட ராரிரு ளிரியமிளிர் குமரவே
டனையினிது காத்தருட் சார்பினைப் பெறுகவே—(க)

ஏனைக்கடவுளர் பலர் காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடி யிரட்டை யாசிரிய விருத்தம்.

பொன்னியம் புதியபுனல் கொள்கலங் குப்புறிய
பொள்ளெனக் குறுகுபறவை
பூம்புகார்ப் பொருநற்கொர் செண்டுகொடை பூண்டுலாப்
புறமுய்த்த காரிவள்ளல்
உன்னிவண் மறைஞாளி யூர்காடு காள்புதல்வ
னும்பர்வேள் விக்கணுணவெள்
ளும்பனூர்ந் திழிதண்பணைக்கிழவன் மாவின்மா
னுழையினுத் தூணங்கையாள்

மன்னிவாழ் கலைஞரடி மன்னர்முடி தாழ்ப்பிக்கும்
வாய்மைநாக் கொம்பர் மகடூஉ
மடிகொண்டு மிடியாது வருவிருந் தோம்புமவர்
மலர்முகனின் வாழ்திருமகள்
கன்னிமா ரெழுவர்முப் பான்மூவ ரிவர்தமைக்
கருதிவழி பாடுசெய்வாம்
கதிரைக்கு றத்திமாப் பிள்ளையைக் காக்கெனக்
காலைதொறு மாலைதொறுமே— (உ)

முழுமுதற்கடவுள் காப்பு.

வேறு

பாண்டியர்வ ளர்த்தமுக் கழகத்த மிழ்த்தொண்டு
படுசுவைப் பொதியிலடிகள்
பண்ணன்முத லாயுமீ ரெண்டொழிலு முய்த்தோரேழ்
பாலையாழ் கொளுவி நோன்பு
வேண்டியது றக்கமன் செல்விபா லரமகளிர்
வேள்புலமை யருள்வனப்பு
விறலென்றி வற்றைப்பு னைந்துசெப் பியதிறமி
சைந்திசைக் கும்மிசைநயந்

தீண்டியபல் கறையடிக் குழூமெய்ம்ம றந்திளக
வின்றறுக லென்றழுவைமா
னியையத்து யின்றுடல மூரிவிடு கதிர்காம
வேந்தற்பு ரந்தருளுக

ஆண்டிகழு முப்பான்மை யுயிர்தொறருள் வெளியிலின்
பொளிர்திருக் கூத்து நவிலு
மொன்றிரண் டாயுயிரொ டுலகுமாய் வேறுமா
யுடனுமா முண்மைமுதலே. (ங)

செங்கீரையாடல்.

அறுசீர்க்கழிநெடிலடி யீரிரட்டை யாசிரியவிருத்தம்.

மலையிறையன் வனைபாவை யிணைகணைக் கான்மூட்டு
வார்ந்திருந் திடைநுடங்க
வள்யாமை முதுகுபுரை புறவடிய கவடுகொள
வாய்ப்பக்கி டப்பியருகே
மருவுதன் றுய்மணிக் கலனினிள வெங்கீரை
வார்ப்பவார்ப் பப்பைப்பய
மழமகவு யிர்ப்பெறிய நுதன்மீய கங்கைவிரல்
வைத்துவழி நீர்தகைந்து

விலைவிஞ்சு பசுமஞ்சள் விழுதினைத் தைவந்து
மீண்மீள மண்ணிமொச்குள்
வீழ்சுழிக் கொப்பூழி னூதியிமை மிகவூதி
மெய்ச்செவியி னறலகற்றி
விழிமுனையை யுகிர்நுனியின் விரியப்பி ளந்துமுலை
மேலாடு தூகிலாடையான்
மென்மெலென வுடலொற்றி யீரஞ்சு வற்றிநுதல்
வெண்பொடிக் காப்பிட்டுவிம்.

முலையிறுகு வார்நெகிழ வாய்மடுத் தமுதூட்டி
முகமிணைய முத்தமிட்டு
முன்கையிற் பாராட்டி வாழ்ந்தமைந் துச்சியினை
மோந்துபள் ளிப்படுப்ப
முதுகுகுனி கடுவனொடு மந்திபார்ப் பைக்கொஞ்சு
முதுகதிரை யந்தாள்வரை
முட்குடமு மாப்பலவி னிழலிளஞ் சேய்துகண்
முகிழ்விரல் வாய்புகுப்பச்

சிலைமுகிலி னவ்விவுச் சுட்டுவிர லுய்ப்பவரு
சிறுதூசி வீசிவெகுளுஞ்
செவ்விவயி றங்குழிய வாய்கூம்ப வழுமெழில்
சிவனொடு நுகரவளர்நிற்
சிவனுமக வைப்பொறையு யிர்த்துயத் தொழூவரிவர்
செங்கீரை யாடியருளே
திருவுயர்ப டைத்தலைவ! கவுணியர்கு டிப்புலவ!
செங்கீரை யாடியருளே— (௪)

வேறு

தாழைப் பழமுதி ரச்சிகர் வாழைத்
தாறுவ ழுக்கு நெறி
தள்ளவண் முத்துச் சூலுளை வால்வளை
தட்டுக் கான்றுகலுந்

தணிமாங் கனிதலை யிடறிநி மிர்ப்பச்
சாறிதழ் வாய்வடியுந்
தண்பொழி லோவப் பைம்மணி மனைதுவர்
சான்மணி சுடரெறியும்

மாழைத் தெருநேர் யாற்றுக் கதிர்கா
மக்கிழ வா! மழவா!
வளவிய வயல்சூழ் வங்கக் கலிங்க
மன்னன் றவமகளார்
மாண்புநி றப்பச் சிங்கள வேந்தனை
வன்சிறை செய்ம்மறவா!
வடமன் பன்னீர் யாண்டுந் துயிலான்
வழிபட வருகுறவா!

பீழைப் படுபிணி தீர்க்கும ருந்தே!
பெருமித வின்சுவையே!
பேணிய வடியவர் ஞானப் பேரழல்
பெற்றுரு கும்பொன்னே!
பிணிமுக வேழவு லாப்போ தருயாழ்
பிறவா வின்னிசையே!
பெரியார் கதிர்மலை வருவா ருணநெய்
பெய்வெள் ளவிழ்முறுவற்

சீழைப் புட்புன் பிறவிப் பகைமைச்
சிறுநகை முகிழ்முகிழச்
செங்கைநி லத்தின ழூத்திமு ழந்தாள்
செவ்வன்ம டித்தொன்று

சீர்ப்பரி மிர்த்துத் திருமுக மசையச்
செங்கோ செங்கீரை
திருவின் றிருமகள் வள்ளிம ணாளா!
செங்கோ செங்கீரை— (ரு)

அறுசீர்க்கழிநெடிலடி யிரட்டையாசிரிய விருத்தம்.

எளியாரை யுணர்தற்கு மவ்வவர்க் குதவற்கு
மெட்டுப்பத் துச்சாலுமோ
வென்றுபனி ரண்டுநீள் கைவிழிப டைத்துடைமை
யெத்துணைக் கடவுளரினு

மளியானு மொப்புயர்வி லாயாத லுணரவரு
மைதுசான் றென்பவாலோ
வல்லாத பிறர்போல்வி னைத்தொடர்பி லாய்நினக்
கழிவில்கனி னிளமையொக்கும்

விளியாத விருண்மைநிற் றெருடுதல்வற் றன்றுதல்
வேலேகு றித்துரைக்கும்
வேறுமீ ரியல்பிரும டந்தைமார் கூங்கோழி
மீளிமயின் மறையருளிது

தெளியாத வேழையர்வி லங்கல்ல ரோவைய!
செங்கீரை யாடியருளே
தேனருவி யுவகைவிழி நீரூறு கதிர்மலைச்
செங்கீரை யாடியருளே— (சு)

மொழிபயிலல்.

அறுசீர்க்கழிநெடிலடி யிரட்டையாசிரிய விருத்தம்.

இகலுமிணை யங்கயற் கண்ணிமக வாய்த்தமிழி
யன்றுபயி லஞ்ஞைசெம்மால்!
எம்மனோர் குடியாள வந்துமக வாய்க்கூத்தி
யற்றின்ப மார்வெள்ளமே!

தொகனனவு கனவுதுயின் மீத்துயின் மீமிசைத்
துயிலிருண்மை மருண்மைதூய்மை
தொடராது பேசாது வாளாதி ருந்தநீ
தொன்மூவெண் குன்றினங்கட்

பகலிரவு மாறப்ப சுந்தபச் சைக்குமறு
பாலின்வெள் ளைக்குநடுவட்
படர்செக்கர் வானன்ன செம்மையே யன்றவர்ப்
பகர்மொழிப கர்ந்தவாற்றை

யகலிடத் தடியேம வாயிரப் பேங்கதிரை
யண்ணலே வாய்மலர்கவே
வம்ம! வப்பாவென்னு மருமறைப் பாயிரம
கத்தலர வாய்மலர்கவே— (எ)

வேறு

குறிய மதத்த ரறமெம்பாற்
கூறக் கேட்ட செவிப்புண்ணுங்
கொடாதா ரிரப்போர்க் கடிந்துரைத்த
கொடுஞ்சொற் கேட்டசெவிப்புண்ணுஞ்

சிறிய குடியிற் பிறந்தபழிச்
செல்வர் வறிய புலவர்தமைச்
செருக்கி யிழிப்பக் கேட்டிருந்த
தீயூழ் படைத்த செவிப்புண்ணும்

நறிய வழிழ்திற் றமிழ்கேடு
நண்ணப் புற்ஞ்சொல் வழக்காறு
நாளுங் கலந்து வரல்கேட்டு
நனிசீ வடியுஞ் செவிப்புண்ணு

மறிய வொழியக் கதிரமலை
யழகே! யமிழ்தம் பொழிகவே
யம்மா! வப்பா! வென்னுஞ்சொல்
லமிழ்தம் பொழிக பொழிகவே (௮)

வேறு

மலரவ ஞன்மறை யோதக் கல்லான்
மரநிழ லமிர்தென்னன்
வாய்மையை நால்வர்க் கோதவு ரைக்கும்
மன்பே ராசிரிய!

புலரியி னிமையோர் தொழுகதிர் காமா!
புகலுரை நிற்குரையேம்
பொலிசுவை யொழுகுதல் பருகிய கேட்பேம்
புகழு மைப்பிள்ளா

புலகினி லேனைய வுயிர்மெய் யுயிர்ப்ப
வுரலிடை யாப்புண்டோ
னூதுங் குழலிசை யாழிசை கைப்ப
வுலர்மா முங்குழைய

வலரனை செந்நா வரசைய ழைத்தா
யஃதெங் ஙனமருளே
யண்பே யார்தமை நுந்தைய ழைத்தா
னஃதெங் ஙனமருளே (௯)

உணவூட்டல்.

வேறு

ஏறூரு மவனினிது கோதாட்ட வருமெங்க
ளேறே!மு ழைக்குள்யாளி
யினியநின் னடைகண்டு வெள்கியுளை யக்கதிரை
யோர்வடவை யாற்றின்றுறை

தோறும்விளை யாட்டயர்ந் தாங்காங்கு நீராடு
தொண்டர்க்க டைக்கணிக்குஞ்
சோனையருண் மாரியே! தித்தித்த தேம்பாகு
தோய்ந்தகட் டிக்கரும்பே!

கீறுமுலை யமுதூறல் பருகுகோ மானின்ப
இளர்கொங்கை யொப்பாகுபொற்
கிண்ணத்து நறுமணஞ் சிவமணம் போன்மன்பு
கெழுநெய்ய ளாய்ச்சமைத்த

சோறமுது மாயர்தயிர் தொட்டுண்ட கள்வன்மகிழ்
சூழ்மருக! வுண்டருள்கவே
சொற்றெழும் பாளரது ளங்கவர்ந் துண்டல்போற்
சோறமுது முண்டருள்கவே— (௰)

வேறு

ஆழி கடைந்து குடம்நிறைத்த
வமுது மிதற்கு நிகரல்ல
வந்தண் வேள்வி யவிசொரியு
மதுவு மிதற்கு நிகரல்ல

வாழி திருந்து செந்தமிழின்
வழக்கு மிதற்கு நிகரல்ல
வள்ளி யூடிக் குழைந்துசொலும்
வழக்கே யிதற்கு நிகராகும்

காழி ஞானப் பால்குழைத்த
கலையு மிதற்கு நிகராகும்
கதிர காமத் தன்பர்பலர்
கனிவுங் குழைத்த திதுவாகும்

கோழி கூவுங் கொடியசைக்குங்
கோவே சிறிதே யுண்டருளே
குறித்த வருண்மெய் கொழுத்துயராக்
கோவே சிறிதே யுண்டருளே— (௰௧)

வேறு

ஆடுமி ருட்டிர ளயரப் பெரியோ
ரடியி லொப்பதுபோ
லாரிய முனிவர ருந்தக்,கண்ணன
ருந்திய முறையேபோற்

காடுக றங்கக் கதிர்மலை கூவக்
கன்னியர் கூவுதல்போற்
கதிர்வடி வேன்முரு கா!வரு ளாகிய
கழிபசி மீதூர்வாய்

கூடுவி னைத்துப் பாருயி ராரக்
குற்றடி யார்நினது
கொண்டா டுங்குண ணைப் பயிருங்
கொண்டன் மழையார

வாடுத மிழ்ப்புல வோர்வயி றார
வாய்ச்சோ றார்குகவே
வள்ளித ருந்தேந் தினைமா வெனவே
வாய்ச்சோ றார்குகவே— (௰௨)

தாலாட்டல்.

வேறு

நீரின் முளைத்த மாவிழ
நெருப்பின் முளைத்தின் னருடழைத்து
நினைவு பூத்துப் புலங்காய்த்து
நிறையப் பழுத்த கற்பகமே

நேருன் னடித்த ணிழலன்றி
நிற்பார் வெப்பந் தணிவாரோ!
நெடுநாள் வானோர் வாழ்வாரோ?
நீதா னாரோ? யாமாரோ?

வோரின் னெனச்சொல் வடித்துணர்வா
ருலவாப் பெருமை யாராரோ?
வுணர்வார் கூற்றங் கொள்ளுங்கா
லுற்றார் பெற்றா ராராரோ?

காரின் மலரும் கதிர்காமக்
கடப்பா! தாலோ தாலேலோ
கலைமான் பாடக் கண்வளராய்
கனியே! தாலோ தாலேலோ— (௰௩)

வேறு

சேரன் சோழன் பாண்டியன்முச்
சீர்மைத் தமிழக முடிமன்னர்
செங்கோற் கொற்றஞ் செலவரிசை
சிறந்த கட்டிலி லமர்ந்தனான்

றீரந் தோய்ந்த நெஞ்சம்போ
விழைத்த கோட்டமெ ழுந்தருள்பே
ரின்பம ணித்திரு வருண்மேனி
யிற்றைக் கெவனோ மறையமறச்

சூரன் கோட்டை சிதையவெழுந்
தோன்றாப் பிழம்பு வெளிநிற்பத்
தொல்குடி மரபின் றலையளிபோற்
றோன்ற வொழுகிம ணிக்கங்கை

வாரங் கொண்டும ணிப்பூக்தூய்
வாழ்த்துங் கழலோய் தாலேலோ
வந்தெந் தொழும்பு கொள்காம
மணியே தாலோ தாலேலோ— (௰௪)

வேறு

உணர்நின் றந்தைகொ டாதொழிந்த
வொருமாம் பழத்திற் கழுதாயோ?
வுயிர்கள் பிறந்து படும்பாட்டிற்
குருகிப் பொருமி யழுதாயோ?

புணருங் காழிப் பெருந்தகைதான்
புடைத்தான் கொல்லோ வேனழுதாய்?
புலவர் மகளிர் கவுட்கிள்ளப்
பொறாதோ? பின்னை யேனழுதாய்?

வணர்மென் குழலி முலைச்சாய்ந்து
மார்பம் பாய லாச்செங்கண்
வளர்வாய் தவத்த ரெய்த்தலச
வாரா யன்பர்கசிந்துமலர்

கொணரும் கதிர மலைவந்த
குழகா! தாலோ தாலேலோ
கொடும்போ ரசைவு தவிர்துயிலைக்
கொள்ளாய் தாலோ தாலேலோ— (௰௫)

சப்பாணிகொட்டல்

வேறு

பொய்யாமொ ழிக்குவழு வுண்டென்ற முட்டைப்பு
சழ்ச்சிவேட் டுவ!புலவனைப்
புகழ்புனைந் தினிதுபா டியநல்வி சைப்புலவ!
புலவராற் றுப்படைப்பாட்

டெய்யாத பூதத்தை யுயிருண்ட வேற்குரிசி
லிறையனார் களவியற்க
ணெள்ளரும் பொருள்காண வொண்ணுதற் றலைவிபுண
ரின்குறிஞ் சித்தலைவநிற்

சையார வழிபடக் காதலர் காதலியர்
கையேந்து மிளநீரெனக்
கச்சின்முலை பற்றுங்க திர்க்காம வேளைக
ருக்கொண்டு நின்னைப்பெறக்

தையான திங்கட்ட வங்கிடந் தாட்கம்ம!
சப்பாணி கொட்டியருளே
தாரகன் சூரனிவர் சூழ்ச்சிநன் றென்றநகு
சப்பாணி கொட்டியருளே— (௧௬)

எண்சீர்க்கழிநெடிலடி யிரட்டையாசிரிய விருத்தம்.

நச்சர வும்புலியும் பச்சிலை நச்சியிட
நவையறு மாடலதின் சுவைநுகர் வித்துணர்வு
நல்குத லானும்வெளி புல்குத லானும்விழி
நாடுந் தண்டில்லங் காடுங் காமமதோ?

விச்சிய தின்றிவிளை விப்பவ னுந்நீயோ?
வென்றொளிர் பூமிசையே கன்றுவ திருவடியோ?
விட்புல வாணர்க்கு முட்புல னாகாத
வெளியோ? நின்னுடல மளியோ? நின்னியல்பே

யிச்செய னீதாமே யாயின வர்க்கன்றி
யாதுந் தெரியாதென் றோதும் மறைமுடிபே
யெம்மிரு கண்மணியே மன்னுயிர் தம்முயிரே
யிளஞா யிற்றிரொளி யெனமா மயிலிவர்வோய்

அச்சிலி ருக்குமுயிர்ப் புக்கில ளிப்பலெனத்
தொட்டவ ளைக்கையாற் கொட்டுக சப்பாணி
சொற்பொரு ளல்லாத மெய்ப்பொருண் முனிவர்க்குச்
சுட்டிய பொற்கையாற் கொட்டுக சப்பாணி (௧௭)

அறுசீர்க்கழிநெடிலடி யீரிரட்டை யாசிரியவிருத்தம்.

சேரியிற் கிள்ளைமொழி சூதினைவெ குண்டுகிமிர்
திருவெருமிரு மாமைமுலையாற்
றீப்பறப் பப்பொருத புண்கூர்த லிற்கலவி
செய்யிகலி டைந்தயருநீர்

செழுநொச்சி சூடியெயில் காத்தகூ ரிலைவஞ்சி
திருமுடிவ ளைந்துசென்று
திகழுழிஞை சூடிமுற் றித்தும்பை சூடிச்செ
ருச்செய் துயிர் பருகிவென்றி

யீரியற் றுணர்வாகை சூடிப்பு லால்கமழு
மெறிகாழ்க்க ரந்தை யிணர்வே
லெழிலுறக் கைக்கொள்ளு மள்ளரா மாறென்னை ?
யிமையோரு முனிவோருமீண்

டிழிதரவு மீனேரு மேனுலகி னேறவுமி
யைந்தகண் ணேணியென்னு
மின்கதிர காமத்தி ருக்குன்ற வண்சார
லெங்கள்பெரு மானடிகளே !

வாரியிற் புனல்வற்று மூழிமுகின் மொள்ளுறும
ணிக்கங்கை யாறுகுடையும்
வான்மகளிர் தம்மாகம் வெதுவெதென விஃதெவன் ?
மடவிர் ! வெந்நீரியாறுகொல் ?

மதனைப்பொ டித்தநுத லழல்வந்த காளையிசை
வைகலு ணீராடலின்
மாறியது கொன்? மொழிமி னனைநல்கி யவர்கொங்கை
வருடுமிள மென்கையிணை பக்

கூரியற் குறுநகைவெண் முத்தந்து கிர்ப்பேழை
கொட்டமா முங்கவிந்து
குழுமுதேன் கொட்டநும் மளிதுளும் பிப்புறங்
கொட்டவிழி யிமைகொட்டயாம்

கொடுமையைக் களைகொட்ட வுமையுநாக் கொட்டநீர்
கொட்டுதிர் சப்பாணியே
குன்றவர்ம கிழ்ந்துபூக் கொட்டிக்கை கொட்டநீர்
கொட்டுதிர் சப்பாணியே (கஅ)

முத்தந்தருதல்.

அறுசீர்க்கழிநெடிலடி யிரட்டை யாசிரியவிருத்தம்.

முன்னையொரு பொழுதுதமி ழகமுடைய தாய்ப்பின்பு
முனையாரி யர்க்குறையுளாய்
முனிவர்வேட் கும்வெண்ப ணித்திரட் குவையநெடு
மொழிவான ளாவுவெற்பி

னன்னையன் பென்னக்கு ளிர்ச்சிபெரு குந்நாண
லஞ்சுனைப் பொய்கைபூப்ப
வான்மீன் றிதலைநகி லடையவுநெ முங்குறவ
ணைப்பச்சொ ரிந்தமுத்தம்

பின்னையிம யக்கரும் பூங்கோதை யள்ளிப்பி
றங்கன்முலை யூற்றெடுப்பப்
பெற்றனெ டுச்சிமோந் திதழ்வாய் நெரித்துணப்
பெய்தவெழு கோடிமுத்தம்

இன்னையவ காமமணி யாற்றங்கரைக்கொழித்
தின்றமுத் தந்தருகவே
எம்பொருளு டம்பாவி யாவும்விற் பேம்வணிக!
விந்தமுத் தந்தருசவே. (கக)

வேறு

ஐயா ருறிரு ளாவியரு
ளப்பா லெய்ப்பின் வைப்பேயோ?
வவ்விய மில்லாப் புலவர்குழீஇ
யழகிது சாவுங் கெழுதகையோ?

செய்யா வியற்கைப் பொருளாக்கந்
தேர்ந்த வுணர்வின் றெளிவேயோ?
தேனெய் கரும்பு பழமமிழ்தந்
தீம்பால் குழைத்த திரள்பதமோ?

கையாக் குடிமை யளிதூய்மை
கல்வி கற்பென் றிவையுடையாள்
கணவன் வாழ்வோ? வெல்புகழோ?
கடவு ட்செந்தமிழ் முப்பாலோ?

வையா! முருகா! நின்முத்த
மன்பே? முத்தந் தருகவே
யருமைக் கதிர மலைவாழ்வே
யம்மே! முத்தந் தருகவே. (உ௦)

வேறு

வேய்முத்த மும்மஞ்சின் மின்முத்த மும்மிப்பி
விண்முத்த முங்கொம்பியல்
விழைமுத்த மும்மாதர் கழைமுத்த மும்மீனின்
விளைமுத்த மும்மேனவுந்

தேய்முத்த மெய்யறிஞர் தேடாத முத்தமுண்
டிஞ்சுவையி லாமுத்தமோர்
திரியமா றம்முத்த முத்தமோ? கதிர்மலைத்
திருநீறு பூத்த செந்தீத்

தூய்முத்த மீன்முத்த மே!குறவெ யர்ப்புள்ளி
சொரிமுத்த நெற்றி யிணர்கண்
டுளிமுத்த முக்கமதி முகமுத்த முத்திருகு
தொகைமுத்த முண்டு கனியும்

வாய்முத்த மேமுத்த முலகெலாம் போதாத
வாழ்முத்த முண்ணவருளே
வானுமுயி ருங்கைத்து வேண்டேப்வெ றுத்தயாம்
வாழ்முத்த முண்ணவருளே (உக)

வருகை.

வேறு

கூட லமணர் கூட்டழித்த
குழந்தாய்! வருக வானவர்கோன்
குடுமி முடியை யுடைத்ததொடிக்
கோப்பாண் டியனே! வருகதுவர்க்

கோடல் புனைய வருக குலக்
கொழுந்தே! வருக பிசைந்துமுலை
குடிக்க வருக வொருமுத்தங்
கொடுக்க வருக பொழுதொழிந்த

தாடல் வருக ரெய்யழிய
லாமோ? வருக சிறாடிப்ப
ரசே! வருக வழக்காட
லழகோ? வருக மாமன்மகள்

தேட வருக தெள்ளமுதே!
திருவே! வருக வருகவே
தெவிட்டா தொழுகுங் கதிர்காமத்
தேனே! வருக வருகவே. (உஉ)

வேறு

நூலாத நூலாடை யூசியொடு குயிலாத
நொய்யசின் மெய்யுறையது
நோன்பிற்ற ழும்பிநின் னுள்ளுமுள மெனவாட
நுண் ணுதன்மு டிக்கொண்டையின்

குழந்தை வேலன்

மேலாய பூச்செண்டு கண்பிணித் தாடநில
மிசையறம் நடையாடலுண்
விழையாத விழுமியோர் வேணவாத் தளவாட
மெள்ளமெய் தள்ளாடவெண்

ஞலாய கைமுகன் பெருமிதமு மோடவின்
ஞடர்சிறை நீங்கியோட
நாடோட நடுவூடு கடலசுரர் படையோட
நாயனைய மவலமோட

மாலாகி யாமழன் மெழுகினெக் கென்புருகி
மழையோட வேவருகவே
வளர்கதிர வரைமுற்ற மமர்முருக! வெமர்சுற்றம்
வாழவின் னேவருகவே— (௨௩)

வேறு

குன்றந் தோறும் பன்றிபுனங்
கொன்று நொக்கக் குறவர் செலல்
குறித்துப் பகலிற் றினைகோழி
கொறிப்ப வுணக்கும் பாறைமிசைச்

சென்றங் கெறிந்த விளநிலவிற்
செங்கை பிணைந்து குரவைதழீஇச்
சிரித்துக் குலுங்கு மகளிரொடு
திரியுங் கதிர்கா மக்கள்வா !

வின்றஞ் சியும்யா மெடுப்பேமென்
றிருந்தா யேலஃ தெமக்கொல்லா
தேங்கி யழக்கை காலமுக்கி
யிஞ்சிச் சாறாட் டேந்தினவு

தின்றந் தோபாற் குடங்கொட்டிச்
சிந்து முலைகாண் வருகவே
சிங்கக் குருளை தவழ்வதுபோற்
செல்வா! வருக வருகவே.— (உச)

நிலாவழைத்தல்.

அறுசீர்க்கழிநெடிலடி யீரிரட்டையாசிரிய விருத்தம்.

வெங்கட் டேறற் றேட்கடுப்பின்
மீக்கூர் களியா னகையரும்ப
மீன்கண் மறுகச் செவ்வழியாழ்
வெறிப்பப் பணைத்துத் தருக்கிமத

வேளைச் சினந்து பணிகொள்ள
விரைசேர் குரும்பை வெளிவிம்ம
விரும்புங் களம ரேர்ப்பகட்டை
வெடிசே லுழக்கி யுகைத்தோட்ட

வங்கட் கரும்பிற் களைகளையோ
டாண்மை யுளமும் பறிப்பார்கட்
கமர்சூற் கமுகஞ் செறிவேலிக்
கப்பா லிதணிற் கொடிச்சியர்க

ளருமா ணிக்கங் கிழங்குதினை
யளிகண் மொய்க்குங் கொம்பிற்றே
னார்வம் வழங்கி நறைக்குவளை
யார வாங்கிக் குழற்கணிந்து

தங்கட் குரிய பரண்காவல்
சாருஞ் சாரற் கதிரமலை
தனித்துக் காட்டு ணிலைநின்ற
தவத்தின் விளைவித் தமிழ்ப்பிள்ளை

தனது குவியா நீலமொடு
தனியே யலர்ந்த தாமரைகாண்
டடுக்கு மீக்கோள் வாய்வைத்துச்
சாய்ந்து மலர்ந்து சிரிக்கின்றான்

றிங்கட் செல்வா நினைக்கண்டு
திருக்கை யோச்சி விளிக்கின்றான்
றேடக் கிடையா னின்னும்மைச்
சிறப்பாற் சிறிது நின்னோடு

திருவிளை யாடல் செயப்போலுந்
திருவுள் ளக்கிடை வாநிலவே!
சிறுவன் றமப்பன் செய்ந்நன்றி
சிதையா தாட வாநிலவே!— (உரு)

வேறு

கீழ்பாலின் வேந்துகுடை பற்றமேல் பாற்கடவுள்
கிளர்கவரி வீசவடபாற்
கிழவன்மடி சுருள்கொடுப் பத்தென்ன வன்போற்றி
செய்யநா ரதமுனிவர்பேர்

யாழ்சால வின்சுவைப் பண்செய்ய வரைதோறும்
யாடுபாய் கதிர வெற்பின்
யாளியணை மீதுநா ளோலக்க மாயிருந்தி
யாண்டுமுள விருதிணை யுயிர்

தாழ்வோடு தன்னாணை நெறிநிற்ப வுய்க்குமித்
தலைவனைச் சிறியனென்ற
தறுகணா டற்சூரு மலரோனு மாழுமிழி
தகவினைநி னைக்கநிலவே!

வாழ்வான கடலலவ னுறழவிண் டவழலவ!
வந்துவிளை யாடுவாயே
வடிவேலன டைகைபிழி சாறயில லாமினிது
வந்துவிளை யாடுவாயே. (உசு)

வேறு

நாம்புக ழுருள்பூங் கடம்பினமர்
நம்பி யழகு குதலைகட்கு
நயமில் புல்லொடு கல்லுருகும்
நரைக்கூன் றிங்கா ணீயுருகாய்

நளிகார்க் கரந்து நகைக்கின்றாய்
நாணா தெங்கள் பறம்பினிமேல்
நணுகினி துக்கா ணெற்றுவனும்
நம்பன் சடைமுடி புகல்புகலின்

வாம்பொரு சிம்புட் கழறுகைப்ப
மதியே பொன்றக் கெடாதுய்ந்தாய்
மதியா னுண்டு மிதிப்பனிவன்
மதலை துடுக்கன் குறும்பாளன்

வணக்கும் பொருப்பு வில்லியுரை
வாங்கா னவற்கு மாசிரியன்
வாவி நீந்து மன்னம்போல்
வனப்பிற் கேய்ந்த குணனில்லாய்

காம்பும யிற்பரி மேலழகன்
கானங் கோழி முட்டைகளிற்
கழனித் தாரா வடைகிடக்குங்
கதிர்கா மப்பிள் ளைப்பெருமாள்

கலைமுக மதிபோ லகவிருளைக்
கழிக்கு மாற்ற வின்மையினாற்
கவற்சி யுட்கிக் குறைகின்றாய்
கழறும் போது கறுக்கின்றாய்

தேம்பிய வாழிப் புள்ளன்னார்
தேக்க நிலவு கொப்புளித்துத்
திறம்பா மங்கு லியங்குமிது
செருக்கு வேண்டா கருநஞ்சு

சேர முழுதும் பரவாமுன்
றிரும்பி யீண்டு வாநிலவே!
திருக்கை தீண்டப் படிநெழியத்
திருந்தா யாட வாநிலவே! (உஎ)

சிறுபறை முழக்கல்.

வேறு

ஈரெழுத் தீரிருசொன் முப்பொருளி னற்பாவி
னைந்தமுச் செய்யுளணிக
ளிசைகூத் திவற்றையவ் வக்கலைஞர் கழகத்தெ
டுத்தகட் டுரைமுழக்க

விவ்வூனை மண்ணொடெரி நரிதின்னு முன்னீரி
ரண்டாவ தூறுதி நிலைக
ளெய்துபாக் குயிர்வளியொ ருக்கிக்க திர்க்காம
மேகிவாய் வாளாவதிந்

தோரெழுத் தறிவுவெளி யுயர்வுள்ளி யும்மினென
வுறுவர்வாய்ப் பறைமுழக்க
வொல்லெனவி சைக்குமரு விச்சாரல் வித்திவிளை
யுலர்தினையின் மடையெதிர்படைத்

துறுபுலித் துப்பினிமிர் கானவர்து ணங்கையொடு
மொண்டொண்ட கம்முழக்க
வூர்ப்பொதியி விற்குனிப் போன்முழுத் தோன்மடியு
டுக்கைவன் பறைமுழக்கக்

கூரெழுத் தாணியென வன்சூரன் மார்பேடு
குறிகொளப் புகழெழுதுவேல்
கொண்டதிண் டிறல்பரவு மிமையோர்க ளடுவென்றி
கூறுவிட் பறைமுழக்கக்

குன்றுகுடை யாவெடுத் தானிரைபு ரந்தான்கு
றிப்பிற்செ லத்துரத்துங்
கோலக்கு ளிற்றுழ வேழ்துளையின் விரன்ஞெண்டு
கூடவேய்ங் குழன்முழக்கச்

சீரெழுத்துன்னியென வினைதோளுயர்த்தித்தி னுக்கெனச்
சாய்த்திடக்கை
சேப்புறவி டுக்கிக்க ளித்துச்சி மிட்டிவரி
சிதர்துடிக் கைக்குணில்கொடு

திருமாமி நாணவும் மிருதாயர் காணவுஞ்
சிறுபறைமு ழக்கியாடாய்
தெங்தோம்நு மக்கினரு டங்தோமெ னப்படச்
சிறுபறைமு ழக்கியாடாய்— (உஅ)

வேறு

பத்துமு டித்தலையின் கொத்துவி ழுத்தியவிற்
பற்றிய கையழகன் பத்துத் தேரன்மகன்
பண்டும கட்பரிசு கொண்டுகொ டுத்தவளம்
பாடுமி லங்கைமுகி லாடுபு கழ்க்காமத்

த்துமி ருற்குன்றிற் றுய்த்தர சாளுமெழிற்
றனியொரு மருமானே யினியொரு பொருள்
தங்கியி ருக்குமிவ ரிந்திர ரிவர்பிரமர் [கேட்பேந்
தண்டமி ழன்பரிவர் கண்டுகொ ளைய! விவ

ரித்தனை பெயருமுயர் முத்திப் பேறுமிகழ்ந்
திவனுற் றனரஃதுஞ் சிவணற் றகுதித்தன்
றென்றுநி லப்பிறவி நன்றென் றெண்ணுவர்பே
ரின்பக் கடலாடி யன்பிற் றுளிசொட்டத்

தித்தவெ னக்கைச்சீர் செப்பவெ ழுந்தாடச்
சிவமத யானைவரச் சிறுபறை கொட்டுகவே
செந்தமிழ் நாடெல்லா முய்ந்ததெ னக்கொடிய
செருவிறல் பலாறியச் சிறுபறை கொட்டுகவே
(உக)

வேறு

ஆறுகூற் றத்தமிழ்ப் பேராமை யூராமை
யாளருண் முந்நீர்திளைத்
தாடுவான் வருமிருட் பொதுள்புதற் றலைகரந்
தாறலைக் குஞ்சிங்களர்

வேருவே ருயிரிந் தோடநின் பொருள்கவர
வேண்டுமெயு ரொப்புவேளிர்
வினைதொடர வோடப்ப சுந்தமிழ்ப் புலனுழுநர்
மீனுவர்க் கடன்மாடரின்

மாறுசீர் முன்றிலைத் தீண்டாது போகவவர்
வறுமைப்ப சாசமோட
மலருண்மண மாகுநின் மான்யானை மருளவரு
மாவோட யாளியோடச்

சீறுமா லரவோட நாததத் துவவிடிச்
சிறுபறைமு ழக்கியாடாய்
சேண்கதிர வெற்புமுத் தமிழ்நூல்கள் கற்பநின்
சிறுபறைமு ழக்கியாடாய்— (௩௰)

சிற்றில் சிதைத்தல்.

வேறு

அள்ளித் திரட்டு மணிப்பாலி
னழித்துத் திருத்தி மனைகோலி
யாய்த வடுப்புக் குவைகூட்டி
யதிற்செம் பவழத் தீமூட்டிப்

பள்ளித் தவர்பொற் பழங்காகப்
பானை மணியாற் றுமான்வெண்
பசும்பா லுலைநீ ரூற்றியமைப்
பருமுத் தரிசிச் சோறுக்கி

வள்ளிக் கிழங்குக் கறிகுழம்பு
வைத்தே மிற்றைப் பகன்முழுதும்
வளைக்கை கடுக்கு முதுகுபுறம்
வளைந்து சுளுக்கு மிதனருமை

வெள்ளித் தகர்க்கொம் பீர்த்தாடு
மெந்தாய்! சிற்றி லழியேலே
வெங்கதிர் காமணி ளக்கேநிற்
கென்னுஞ் சிற்றி லழியேலே— (௩௧)

வேறு

அன்றி லங்குருகு குன்றி னூடுபுக
வம்பு விட்டதக வொன்று நெஞ்சினை
யன்று விடுமற் பொன்று விப்பவம்
பாளி னங்கையின லங்க றந்தனை

நன்றி நல்லியக் கோடன் வெல்லவே
னட்ட பாடிவே லூரு மாய்த்துசெந்
நாவ டங்குதலி லாத பூவனுமி
ஞால மேன்மகனு மாதல் கேட்டுமோ

லின்றி யாநினக் கஞ்ச லின்றியுமி
றைஞ்ச லின்றியுமி ருப்பெ மோவடி
யேழை யேமொடுநி னக்கு நேர்ந்தபகை
யென்ன வோவிதியை யன்றி நின்னிவட்

சென்றி யென்றவளை நோவவேமோ கதிரை
சேர்ந்த சேந்த!சிதை யற்க சிற்றிலே
சீற டிக்கொடெந் தலையெ ழுத்ததுசி
தைக்க வேந்த! சிதை யற்க சிற்றிலே—(௩௨)

வேறு

அன்றுதொ டங்கி யாளாவே
மகம்போந் துண்டா லாகாதோ?
வழிக்கும் பூந்தா ளேவாதோ?
வணியுங் குலைந்து போகாதோ?

வென்றுநி னக்கிடர் செய்தோமோ?
விறைவன் பிழைக்கின் முறையுண்டோ?
வெம்மா மிக்கு நேற்றந்தி
யார்நின் குறும்பு சொன்னாரோ?

நன்றுமை யாள்புனை யுஞ்சிற்றி
ணுணவ ழிக்குஞ் சிவன்மகனே!
நனைக்கோங் கெம்மக லம்புடைக்கு
ஞான்றுத மிழ்க்கா மப்பொதும்பர்

சென்றமு யங்கா மோ?கேண்மோ
சீறேல் சிற்றில் சிதையேலே
சிதையாப் பேரில் செய்பெரியோய்!
சிறியேஞ் சிற்றில் சிதையேலே— (௩௰௩)

சிறுதேருருட்டல்.

வேறு

திருவேங்க டக்கோடு வடவரைப் பாவுடைய
செந்தமிழ் வளநாட தன்
றென்வரைக் கதிரக்கு றுஞ்சோலை கெழுமுஞ்செ
ழுங்கதிரை யம்புரவல!

பெருநாளு மாடியங் திங்களின் றேநீற்பி
றப்பித்த வான்கங்கையாள்
பீடுபெறு முகமதியு நகைநிரம் பிற்றப்பி
றங்குதிரு நீற்றுவெள்ள

மொருவாம லாகாசி வாவென்னு மார்பொலியு
றங்குமா வினையெழுப்ப்
வொருகோடி கப்புரானி ளக்கிலகு மெய்க்குறிப்
புன்னுமவர் தம்மிழப்பத்

தெருவோகை யயிலயிற் றிருவிழாப் பூமழைச்
சிறுதேரு ருட்டியருளே
தேடுமுழு மாணிக்க மே!குணக் குன்றமே!
சிறுதேரு ருட்டியருளே— (௩௪)

எழு சீர்க்கழிநெடிலடி யிரட்டையாசிரிய விருத்தம்.

மாயாக் களிமண் ணியனால் வாய்மை
வாய்ந்தகொ டிஞ்சியி மிழ்சிறுதேர்
மடனாயி ரச்சினி னிருவினை யீருருண்
மாறிக் கோத்து மருளுமவா

வியா வாணி செருகிவெ றும்பாழ்
வெட்டவெ ளிக்கண ருட்கையினால்
வினைபல விளைதர வீர்த்துமு ருட்டியும்
விளையா டும்முனை வன்புதல்வா!

பேயா மதமுறு கோள்களெ லாமுறை
பிறழ்புரு ளப்பயி லாராண்மைப்
பேராண் மைத்தமி ழாசிய லாழி
பெட்பவொ ராழியொ டுருளவொளி

சீயாக் கதிர்கா மப்புக ழுருளச்
சிற்றில் சிதையவு ருட்டுகவே
சிறிபோ ரீட்டிய திருவில் பொருள்பொற்
சிறுதே ருருளவு ருட்டுகவே— (௩௫)

அறுசீர்க்கழிநெடிலடி யிரட்டையாசிரிய விருத்தம்.

திருவாவி நன்குடிதி ருப்பருங் குன்றமிகு
தெண்குன் றுதொறுமேரகஞ்
சேக்கையலை வாயினிய பழமுதிர் சோலையித்
திண்பாடி வீடாறுமே

யுருவாகு மாறகக் களமாவை யாறெழுத்
தோராறு பேற்றுமுகமு
மொழுகுபன் னிருகண்மடை யாறருள்பு றம்பொசிய
வோவாவி ராறுபடையும்

மருவாம லீராறு தாடொடுகை கன்றவார்
வட்டுடைவ னப்பசையவும்
மாமுனிவர் கண்டவெளி மட்டுமிக் கதிர்காம
மறுகுதொறு முள்ளந்தொறுஞ்

செருவீறு சேவலங் கொடியாட நிற்குமஞ்
சிறுதேரு ருட்டுவாழி
திருவாள ரீழவள நாடர்கொணர் பொன்மணிச்
சிறுதேரு ருட்டுவாழி.— (௩௬)

பூணணிதல்.

செம்புலமு ழாநிற்கு மைந்துமலி புனவன்றெ
விட்டக்கொ டிச்சிகொடுபோங்
கிளையினது வெய்துநெய்ப் பாற்பொங்க னெறியிடைத்
திறவாது கண்முகைத்துத்

தப்புலமி றந்தபழ வேங்கையின்ம ராடியின்
றண்ணிழற் குளிர்தூங்குறுஞ்
சான்றோர்ப்ப ணிந்தவர்தம் வாய்ப்பெய்த ருத்தித்த
ழைக்குங்க திர்க்காமனே !

யும்பரொரு வர்க்குமில் கட்டழகு னக்குண்டு
கப்பிதற் கழகுமுண்டோ ?
வொப்பனைசெ யக்காமு றும்பேதை மைக்குணனொ
ழித்தலுமெ மக்குளுண்டோ ?

விம்பரது பொழுதறிபொ றிப்பூட்டு கைப்பூட்டி
ணைப்பொலந் தொடிபூண்கவே
யிறைவ !கமு ங்கமுத் தியையுமுத் தாரமொடி
மைப்பொலங் கொடிபூண்கவே— (௩௭)

வேறு

வயிரம் பதித்துத் தெருளுள்ளம்
வளையவ ளைக்கு நான்ஞெகிழும்
வள்ளிக் கொடிகண் மணிபதிக்கு
மார்பிற்ப தக்க முகிலூர்தி

செயிரின் றியமும் மணிக்கோவை
தெளிநான் முகனுன் மணிமாலை
தேரிள வன்மா ரொன்பதின்மர்
திகழ்ந்த வொன்பான் மணிமாலை

தயிருண் டோடிய நல்லம்மான்
றந்த துயல்பன் மணிமாலை
தனியாண் பால்பெண் பாலொருவர்
சாத்தும் புன்னகை மணிமாலை

யுயிரின் புறுகதிர் மலைக்குமரா !
வுணர்வு திருடப் புனைந்தருளே
யுலகினை யணியும் நின்வடிவ
முாவோர் வருடப் புனைந்தருளே— (௩௮)

வேறு

கண்ணிற் கணிகண் ணேடுதன் மாந்தர்
காண்டக வுரைவினவுங்
கல்விக் கணிபொருள் கசடற, மொழிதல்
கருதற் கணியருளே

மண்ணிற் கணிகதிர் காமக், கோட்ட
மதிநூற் கணியுவமம்
மன்பெரு மைக்கணி பொறையே மனையற
மாட்சிக் கணிமகவே

யெண்ணிற் சால்பிற் கணிநா னுடைமை
யிளைஞர்க் கணிபணிவே
யெங்கண்மு டிக்கணி நின்றிரு வடியே
யெழுதரு மழமுருகே!

விண்ணிற் கணிநீ நின்றிரு மெய்க்கணி
வினையெம் பொற்பணியே
வேசறு மடியார் விழிவாய் பருகவி
துத்தனர் பொற்பணியே— (௩௰௬)

உடைவாள் செறித்தல்.

வேறு

மான்கொன்ற முடைநாறி றைச்சியொடு திரிதாடி
மயிரணற் கொடுவிலெயினன்
வழிபாடு தரவருளி வலவையாற் றங்காடு
வந்தகதி ரைத்தெய்வமே!

யூன்குன்ற மாமசுரர் வண்கண்மை யாற்றலா
வும்பரார் நுந்தையடிவீழ்ந்
துளறிப்பு லம்பிமுறை யிட்டனர் விடியற்க
ணுந்தையஞ் சறகவென்று

வான்குன்ற லொழியுநுந் தலைவனின் னுஞ்சிறிஞன்
மழலையுநி ரம்பிற்றிலன்
வருகநா ளைந்தாண்டி னிப்போக வென்றருள்வ
முங்கினுங் கடிதுபோர்க்குத்

தான்சென்று வாவிடுப் பான்போலு நின்னைவாள்
சாலுடைசெ றித்தல்பயிலே
தருமிளம் பருவமங் கையர்பிறழ்கண் வாளோடு
தாழுடைசெ றித்தல்பயிலே— (௪0)

வேறு

பொருந்து மெளியே மவவின்மைப்
பொதியோ வியமெய் யுறைபோர்க்க
பொல்லா விருசார் பற்றின்மைப்
பொன்னஞ் செருப்பிற் கழல்சேர்க்க

முருந்து மூரன் முகமனிக்கு
முதல்வா! கதிரை யெம்பெரும!
முந்து குறங்கில் வட்டுடைஞாண்
முழுந்தா டொடங்கி நுசுப்புவரை

விருந்து பொடிப்பச் சுருக்கிப்பல்
வேறு கலையின் செல்வமெனும்
விளிப்பிற் பச்சை மணிநிரைத்த
வெருள்பாம் பன்ன கச்சினையார்த்

தெருந்து முமிழ்காழ் மறைத்தடற்று
வீர்வாண் ஞானஞ் செறித்தருளே
யெண்செந் நிலைக்கைப் பிடிவயிர
வீர்வாண் ஞானஞ் செறித்தருளே— (ச0௧)

வேறு

கூளிச் சுற்றத் தூசிப்பஞ்லங்
குணலைக் கூத்தியனுங்
கொன்புத் தேளிர் யாழ்சூழல், முழவிசை
குவிபூப் பொதுளுமரோ

வாளிச் செலவிற் றேரைகைக், குடைமயில்
வடிவிந் திரன்வந்தான்
வண்டமிழ் ஞானத் தொண்டர், படையணி
வலனு வலங்கொட்டுந்

தூளிப் பொடிமூ வுலகும், பூசச்
சூரடி மைவாழ்வு
தொலைவுற வுலவிவ ரப்பேரமுந்
துண்ணென வேஙிமிரத்

தாளிற் றரியலர் நாணநி மிர்ந்து,
தார்வா ளுடைசெறியே
தமியேங் கதிர்மலை யாண்டகை! வாழி
தார்வா ளுடைசெறியே— (ச0௨)

ஓம்:

குறிப்புரை.

௧. பூ—பொலிவு (மங்களம்) சிவவென்னுஞ் சொற்குப் பொருள், உயர்வற வுயர்ந்தவன் என்பது. சிவ, வென்பது மக, விளவெனவந்த அகரவீற்றீரெழுத்தொரு மொழித்திணைப் பொதுப் பெயர், அஃறிணைப் பெயர்கள்போலவந்த அகரவீற்றீரெழுத்தொரு மொழியுயர்திணைப் பெயராதலிற் சிவச்செஞ்சுடரென வொற்றிரட்டியாது இயல்பாற் புணர்ந்து நின்றது. முற்கூறிய பொருட்கு இவ்விரண்டெழுத்துச் சிறப்புப் பெயருண்மை.

"சிவசிவ வென்றே தெளிகில நமர்
சிவசிவ வாயுவுந் தேர்ந்துள்ளடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள்ளார்கள்
சிவசிவ வாகுந் திருவருளாமே" என்னும்

நுண்டிருவைந்தெழுத்துத் திருமந்திரச் செய்யுளான் உணரப்படும். சிவவென்பது பேராற்றலுடையதும் அவ்வாற்றலுமாயிருப்பானொருவன் என உறுப்புப்பொருள் படும் காரணக்குறிப்பெயர். சி—ஆற்றலுடையது, (செம்பொருள்.) வ—ஆற்றல் (சத்தி) உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் இணைந்து கிடந்த வோரெழுத்திற்கு உயிர்மெய், என்பது உம்மைத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகைப் பெயராயவாறுபோலச் சிகரப்பொருளும் வகரப்பொருளும் இணைந்து அமைந்துகிடந்த வொருபொருட்குச் சிவ, வென்பது உம்மைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகைப் பெயராயிற்றெனக் கொள்க. சிவவென்னுமிவ் விரண்டெழுத்தும் தத்தம்பொருளைச், சொல்லுவாரது குறிப்பாலுணர்த்தும் இடைச்சொற்களாக நின்று ஓரெழுத்தொரு மொழிப்பெயர்ச்சொற்றன்மைப்பட்டுப் புணர்ந்து தொடர்ச்சொற்களாய் நின்றன. "மன்

னிய சிவன்யான்" எனச் சிவன் தன்னைத்தான் சிவன் எனப்பெயர்
கூறியதும் இத்தமிழ்ப்பெயர்ச் சொல்லுண்மைக்குத்தக்க மேற்கோ
ளாகும். ஈண்டுச் சிவன் எனனகரவொற்று இறைவன், உமையாள்
என்றாற்போல உயர்திணைப்பாலை விளக்கவந்ததன்றி அஃது அப்
பெயரது ஈற்றெழுத்தன்றாமென்க. ஏனையிடங்களினும் இவ்வாறு
கண்டுகொள்க.

செஞ்சுடர்—செந்நிறவொளி. செஞ்சுடராகிய இளவெயில்
என இருபெயரொட்டாக்குக. சிவசெஞ்சுடர் என்பது சிவத்தினு
டைய செஞ்சுடரெனப் பண்புத்தற்கிழமைப் பொருளின்கண் வந்த
ஆறாம் வேற்றுமைத்தொகை நிலைத்தொடர். தவழும் என்பது இள
வெயிலைச் சிறப்பித்து நின்ற இடைப்பிறிது வரலெனப்படுமாதலிற்
செஞ்சுடர்த்தவழு மிளவெயிலென்னும் பண்புத்தொகை, தழாஅநி
லைத் தொடராமென்க. தவழுமிளவெயில் என்பது அடையடுத்த
குறித்துவருகிளவி. இனிச்செஞ்சுடர் என்பதனை ஞாயிறு (சூரியன்)
என்பதாகக்கொண்டு ஞாயிற்றினது இளவெயிலெனவிரித்துச் சிவ
மாகிய செஞ்சுடர் எனப்பெயரொட்டாக்கிச் சிவவென்பது வட
சொல்லாதலின் ஒற்றிரட்டித்துப் புணராதா கற்பாற்று என்பாரும்,
அவ்வாறாக்கிச் சிவம் என்பது தமிழ் மொழிப் பெயர்ச்சொல் எனக்
கொண்டு சிவம் என்பது செய்யுளாக்கி மகரவொற்றுக்கெட வல்
லெழுத்து மிகற்பாற்றன்றாதல் கூடும் என்பாரும் உளர். செஞ்சுட
ரிளவெயிலெனவே சிவவென்பான் ஞாயிறாகும் என்பதும் பெறப்
படும். சிவன், இயற்கைப்பேரொளி ஞாயிறாதலிற் சிவனை மேல்
ஞாயிறெனக்குறிப்பிற்கொண்டது குறிப்புருவகமன்று. தவழும்—
மெள்ளவூர்ந்து பரந்துவிரியும். இளவெயில் — எப்பொழுதுங்
குளிர்ந்தவெயில்; பிறிதினியைபு நீக்கிய அடையடுத்து நின்றது.
ஈண்டு இளவெயிலென்பது பராசத்தியென வழங்கப்படும் அருளாற்ற
லென்க. பொர—தீண்டுதலால். ஈண்டு இளவெயில் பொருதலா
வது; உயிர்களது ஆணவமல நீக்கத்துக்கண் திரோதான சத்தி

யென வழங்கப்படும் சிவனது மறைப்பாற்றல் பராசத்தியாகிய அரு
ளாற்றலாகக்காணப்பட்டுத் தனிநிலையுயிரிற்படிதலாகிய சத்திநி
பாதமாமெனக்கொள்க. பிணி—கட்டு: பூவின் இதழ்கள் கூம்பித்
தம்முள் ஒன்றனோடொன்று அழுந்த அமுக்கியிறுகி நிற்றலும்,
ஆணவமலக்கட்டுமாம்.

முறுக்கு—பின்னல்: பூவினிதழ்கள் தம்முடகலந்து செறித
லும் ஆணவமலக்கட்டினுளைய உயிரது மயக்கவுணர்வுமாம். உடை
ந்து, நெகு—மலரும். முளரி—தாமரை. அம், சாரியை; அழகு
மாம். போது—பூ. முளரியம் போது என்றது சிவனடியன்பருள்
ளத் தாமரையை "மலர்மிசையேகினான்" என வள்ளுவனார்
அவ்வுள்ளத்தினை மலர் என்றது கண்டுகொள்க. "உலகந்தழீ
இயதொட்ப, மலர்தலுங், கூம்பலுமில்லதறிவு" என்னுந் திருக்குற
ளில் அறிவிற்குவேறாகிய உள்ளம் மலர்தலுங் கூம்பலுமுடையது;
எனக்குறிப்பாற் பூக்களின் வினையை உள்ளமும் உடையதாகக் கூற
லானும் உள்ளமுந்தாமரை யென்பது உணரவரும். இதனை இலக்
கணையாகிய சமாதியென்னுங் குணவணியென்பாருமுளர். அல்ல
தூஉம் பெரியாரெல்லாரும உடம்பினகத்து ஆறுநிலைக்களங்களில்
உள்ளம் அமைந்துநிற்கும் நிலையினைப் பலபலவிதழ்த் தாமரைப்பூக்
களாகக் கண்டு கூறியுணர்த்துவதூஉம் ஈண்டுக்கருதற்பாலது. இவ்
வாற்றால் உள்ளமும் புறத்தாமரைபோலும் அகத்தாமரையாதலிற்
பிணிமுறுக்குடைந்து நெகுமுளரிப்போது என்றது இயைபுருவக
மன்று; குறிநிலையணியென்க. காணப்படும் குளத்துத்தாமரையென
வொலித்தலான். அன்றியியைபுருவகமெனினுமாம். முளரிப்போது
உடைதல் சிவஞானம் உயிரதுள்ளத்தின் கட்பிறத்தலாகவும் நெகு
தல், சிவபத்திச்சுவைதோன்றி யின்புற்று மகிழ்தலாகவும் கொள்ளப்
படும். உயிர்கள் கட்டுநீங்கிச் சிவபத்தியாலின்புற்று மகிழுங்காற்
சிவப்பொலிவினை நாவாற்பலபட வாழ்த்திப்புகழுமியல்பினைப் புள்
ளாரவாரித்தலென்றது உருவகவணி. புள்—வண்டு: தாமரைப்பூ

மலர்ந்தால் அதன்கண் வண்டுகளொலிக்கும் எனக்கொள்க. ஆர வாரிப்பவென்பது காரியப்பொருட்டுச் செயவென்வினையெச்சம். புய்த்து—பறித்து: பொர உடைந்து நெகு முளரிப் போதினைப் புய்த்து என்க. ஒரு மருப்பு—ஒற்றைக்கொம்பு. மூக்கு—புழைக்கை. யானைக்குப் புழைக்கையே மூக்குமாமாதலின் அதனை மூக்கென வழங்குதலுமுண்டு. மருப்பினையுடையவென்க. மூக்கின்; இன், எழனுருபு. மூக்கின்வைத்து எனவொருசொல் வருவித்துரைத்தல் இசையெச்சம். எமம்—இன்பம். அம், கடைக்குறை. ஆர–நிறைய மோப்பமுற்று—மோந்து. யானை தாமரைக் குளத்திற்குளித்து விளையாடப்புக்கால் அதன்கண் உள்ள தாமரைப்பூக்களைப்பறித்து மோந்து புழைக்கையில் வைத்துக்கொள்ளுதலியல்பா மென்க. ஈண்டு யானைக்கன்றென்றது செங்கலைப்பிழம்பை (சாந்தவடிவத்தை) யாதலின் அந்நிலைக்கண் மெய்யன்பருள்ளம் வேண்டுதல் வேண் டாமையொழிந்து முயற்சியற்றுப் பொறிவழிப்புலன்களிற்போகாது பாழ்போலக்கிடத்தலை இவ்யானைக்கன்று அன்பருள்ளத்தாமரைப் பூவைப்பறித்தலாகக்கூறியது உருவகமாமாறு கண்டுகொள்க.

உயிர்க்குளன்—உயிராகியகுளம் என இயைபுருவகம். குளம்; குளன்: ஈற்றெழுத்து மயக்கம். அணை—குளக்கரை. என்றது ஒருவழியுணர்வு. (உயிரது ஏகதேசஞானம்.) வரையறைப்பட்டு நிற்றலின். இகப்ப—நீங்க; என்றது. ஒருவழி யுணர்வழிந்து முற் றுணர்வுண்டாக வென்றவாறு. நனி—மிக. திரை—அலை; அன் பினுலாகிய ஆர்வத்திற்கு உருவகம். புடைபெயர்ந்து—மிக்கெழுந்து மோதுதலாற் புடைபெயரவெனவெச்சத்திரிபாக்குக. இழுமென, அருவியொழுகு மொலிக்குறிப்பிடைச்சொல். கடாம்—மதநீர். கலுழி—அருவி. சுரவாநிற்ப—ஊறிவழிந்துகொண்டிருப்ப. ஈர்—குளிர்ந்த. பரிவு—அன்பு. பரிவாகிய நீர் எனவுருவகம். "ஈரமிலை இ" யென முப்பாலுள் அன்பினை ஈரமென்றது கண்டுகொள்க. குடை வழி—முழுகிக்குளித்து விளையாடுங்கால், யானை தாமரைக்குளத்திற்

குளித்து விளையாடுதலின்கண் மிகவிருப்பமுடையனவாதலியல்பு. குடைவழி; வழி, வினையெச்சவிறுதி நிலையுருபு. மாமால்—திருமால். விடை—திருமாலாகிய ஆனேறு. விடைக்களிறு—ஆனேற்றினையூர் ந்துவருங்களிறு. என்றது சிவபெருமானை. விடைக்களிறு என்பது முரண்விளைந்தழிவணி. பிடி—பெண்யானை. என்றது உமையாளை. களிறும் பிடியும் உருவகமல்ல. பெருமானும் பெருமாட்டியும் முறையேகளிற்றியானையும் பிடியானையுமாகக் கோலமாறித்தம்முட் புணர்ந்து யானைக்கன்றினைப் பயந்தார் என்பதாகப்புராணமுண் மையான். மாலும்—மயங்கும். மயங்குதல்; விழைவுவெறுப்பற்றுச் செம்மை (சாந்தம்) யினின்ற அவ்விரண்டும் தங்கன்றின்கட் பற்றுச் செய்து அதனது திருவிளையாடல் கண்டுகளித்தல். மாலும் என் னும் பெயரெச்சவினை குழவியென்னும் எதுப்பெயர்கொண்டு முடியும். மயங்குதற்கு எதுவாகிய வெனவிரிக்க. மழ—இளைய. முது—மூத்த. வய—வலிய. யானைக்கன்றைக்குழவி யென்றலு மரபாம். "குஞ்சரம் பெறுமேகுழவிப்பெயர்க்கொடை" என்பது தொல்காப்பியம். புய்த்துமோப்ப முற்றுக்குடைவுழி யென்க. உயிர்க்குளனது அணை திரைபுடைபெயர்தலால் இகப்பக் (அழிந்து நீங்கக்) குடைவுழியென்க. சுரவாநிற்ப நீரிற்குடைவுழியென்க. குடைவுழிக்களிறு பிடிமாலும் குழவியென வியைக்க. வால்—வெள் ளிய. வான்எனக் கொள்ளினுமாம். கவின்— அழகாகவிளங்க. திருமுத்தபிள்ளையார்க்கும் மதி திருமுடியிற் சூடப்பட்டிருத்தல்,

மதியாய் சடைமுடித்து மாசுணப்பைம்பூட்டுச்
சதியாய் குறுந்தாட்டுத் தான—நதியாய்
இருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தெனுள்ள
முருகவிட்டு நின்ற வொளி" என்னும் பழைய

வெண்பாவானுணரப்படும். ஓம் என்னும் பெயர் யானைமுகக்கட வுளுக்குச் சிறந்தது. இவ்வுண்மை, அக்கடவுட்குரிய நிலைக்களமாகிய மூலாதாரத்தாமரையிதழிலமையுமெழுத்து ஓம் என்பது எனச்செப்

புதலாற்றுணியப்படும். அல்லதூஉம் அக்கடவுளது திருமுகம் ஓம் என்னும் வடிவெழுத்துப் போலுதலானும் அக்கடவுள்தான் வினையெல்லாக்கடவுளர்க்கும் முந்துற வணங்கப்படுதலானும் மேற்கூறிய பொருள்வலியுறும். கூயின்—கூப்பிட்டு அழைத்தால். மன்ற, தேற்றப்பொருள் குறித்துணர்த்தும் ஓரிடைச்சொல். "மன்றவென் கிளவிதேற்றம் செய்யும்" என்பது தொல்காப்பியம். "மடலை மன்றவாழிய முருகே" என்னுங் குறுந்தொகைச் செய்யுளில்வரும் எடுத்துக்காட்டும் காண்க. ஓம் ஓம் என்றுவந்து—ஓம் ஓம் என்று தன்னையுணர்த்திச் சொல்லிக்கொண்டுவந்து. ஒருவர் ஒருவரைப் பெயர்கூவியழைத்தால் அவ்வழைக்கப்பட்டார் தம்மையுணர்த்தித் தாம் கேட்டற் குறிப்புணர்த்துதற்கு ஓம் ஓம் என்றல் வழக்காறு; சாத்தா! எனவிளித்தாற் சாத்தன் ஓம் எனச்சொல்லித் தன்னையுணர்த்துவான் என்றவாறும். ஒருவர் வினையசெயற்கு உடம்பட்டானும் ஓம் என்பன்; சாத்தா! இதுசெய்வாயோ? வெனவினவிற் சாத்தன் ஓம் என்பான் என்றவாறு. ஓம் ஓம் என நின்ற இவ்விரண்டடுக்குக்கள், விரைவு பொருண்மையினின்றன. மேற்கூறிய யானைக்கன்றை ஓம் ஓம் எனப் பெயர் கூவியழைத்தால் அக்கன்று ஓம் ஓம் எனச் சொல்லிக்கொண்டோடிவரும் என்றதாகக்கொள்க. இரு; என்பதனைக் கவளத்திற்குங்கூட்டியுரைக்க. இருவினையிரு கவளம் என்றது உருவகம். இருவினை: இன்பநுகர்ச்சியுந் துன்ப நுகர்ச்சியுமாகிய இரண்டு ஊழ்வினைகள். கவளம்—யானையுண்ணுமுணவு. குளித்தலும் வருதலும் உண்ணுதலும் உலவுதலும் ஒரு வினை முதலின் முறையே நிகழுஞ் செயல்களாதலின் குடைவுழி மாலுங்குழவிவந்து உண்டு உலவுமென்றது வினைமுதல் விளக்கணி. குழவியாகிய தன் என வியைக்க. யாணர்—அழகு. மாண—திருந்த: நன்றாக. நினைதும்—நினைப்பாம். யாவென்பது அசைநிலையிடைச்சொல். இதற்கு "யாபன்னிருவருளர் மாணாக்கர் அகத்தியனார்க்கு" என்னும் எடுத்துக்காட்டினையே தொல்காப்பியவுரையாசிரியர் பல

ரும் வரைந்துபோதருவர். பன்னிரண்டுகையானையெனக்கூட்டுக. இது சிறப்புருவகவணி. முருகக்கடவுளை யானையென்றலின். யானைமுகக்கடவுளை முதுயானையெனவே இவ்யானை இளயானையாம் என்க. களிற்றினையானையென்றலுமரபாம். கதிர்காமமான்—வள்ளிநாய்ச்சியார். மானுக்குப்பிறத்தலான். உவமையாகுபெயருமாம், உருவகவுயர்வு நவிற்சியணியுமாம். காதல்பற்றிவந்த திணைவழுவமைதியெனினுமாம். கதிரகாமம் என்பது கதிர்காமம் என மருவிவந்ததாதலிற் கதிர்க்காமம் என ஒற்றுமிகாதாயிற்று. கதிர்க்காமம் என்றே வழங்காமையிற் கதிர்க்காமம் எனத் திருப்புகழ்ப்பாடலில் வருவதூஉ மரூஉவேயாம். காமம்—ஊர்—கதிர, என்பது ஒரு நச்சுமரம் கதிரவென்னும் ஒருவகை நச்சுமரங்களையுடைய வூர் என அவ்வூர்க்குக் கதிரகாமம் என்பது காரணக்குறிப்பெயர் எனக்கொள்க. இப்பெயர், சிங்களச்சொற் சிதைந்த தமிழ்ச்சொல். கதிரகிராம, என்னும் ஆரியச்சொற்சிதைந்து கதிரகம; எனச் சிங்களவடசொல்லாயிற்று. இனிக் கதிரம் என்னும் வடசொல்லிற்குக் கருங்காலிமரம் எனவும் பொருளுண்மையிற் கருங்காலி மரங்களையுடைய வூர்; என்றுமாம். இனிக் கார்த்திகேய கிராமம் என்னுஞ்சொற் கதிரகாமம் என்று மருவிற்று என்பாரும் கஜரகிராமம் என்னுஞ் சொற் கதிரகாமம் என மரூஉவாயிற்று என்பாரும் உளர். கார்த்திகேய கிராமம் என்பது முருகவேளூர் எனப்பொருள்படும். கஜாகிராமம் என்பது யானைக்காட்டூர் எனப்பொருள்படும். இனிப் பிடியைப்புணரற்பாலகளிற்றியானை மானைப்புணரும் எனமுரணக்கூறியது முரண்விளைந்தழிவணி. யானையின்றமிழ்—பிள்ளைத்தமிழ் என்னும் செய்யுள். யானையென்பது உவமைபற்றிவந்த திணைவழுவமைதிப் பெயராதலிற் பிள்ளையெனப் பொருள்படுதற்குரித்தாதல் கண்டுகொள்க' செய்யுளும் வழக்குமெனத் தமிழ்மொழி இருகூறுபடுமாதலிற்றமிழ் என்பது ஈண்டுச்செய்யுண்மேல் நின்ற பொதுப்பெயர். ஆகுபெயராற் செய்யுளையுணர்த்திற்றன்று. ஒரு செய்யுளும் செய்யுளேயாம்.

பல செய்யுளுஞ்செய்யுளேயாமாதலிற் பல செய்யுளாகிய செய்யுட்டொகுதியென்னும் நிலையுணத்துங்காலும் தமிழ் என்பது இயற்பெயராதலன்றி யாகுபெயராதலில்லையென்க. பிள்ளைத்தமிழ் என்னும் செய்யுள் தமிழ் மொழிக்கே சிறந்தகூறுபாடு; ஆதலின் அடைசிறந்த தமிழ் என்னும் பொதுப்பெயராலே வழங்கப்படும். தமிழ் மொழிக்கேயுரியது, தமிழ் என்னும் பொதுப்பெயராலே வழங்கப்படுதலுமுண்டு என்பது தமிழ் மொழிக்கே சிறந்த அகத்திணைப்பொருள் நுதலிய இறையனார்களவியலைத் தமிழ் நுதலிற்று என அவ்வுரையாளர் அப்பாயிரத்துட் கூறுதலாற்கொள்ளக்கிடக்கும். பிள்ளைத் தமிழ் என்னுஞ் செய்யுள், இயற்றமிழும் இசைத்தமிழும் கூத்துத் தமிழுமாய் விரவிக்கிடத்தலான் அம்மூன்றற்கும் பொதுப்பெயராகிய தமிழ் என்னும் பெயரால் வழங்கப்படுதற்குரித்தாதல் பெறுதும். பிள்ளைத் தமிழின் மாட்டுக்கிடக்கும் எழுத்தும், சொல்லும் அணியும் இயற்றமிழ். பாட்டு இசைத்தமிழ். பொருளும் மெய்ப்பாடும் கூத்துத்தமிழ். முருகனைப் பிள்ளையாகப்படைத்துக் கருதிக்கொண்டு புனைந்து எண் வகைச் சுவையுந்தோன்றச் செப்பிக்கூறுதலிற் பொருளும் மெய்ப்பாடுங் கூத்தெனப்படும். இங்ஙனம் உள்ளோன்றலைவனாக இல்லதோர் பொருண்மேற் செய்தல், கூத்திற்குரியவிலக்குக்கள் எனச்சொல்லப்படும் பாட்டுக்களுக்கு உறுப்பாய்வரும் பதினொன்கனுட் பிறப்பென்னும் உறுப்பாமென்க. பிறப்பினையோனியென வழங்குவர். பிள்ளைத்தமிழ் என்பது பிள்ளைப்பாட்டு எனவும் வழங்கப்படும். பொலிய—இடையூறின்றியினிது முடிந்து விளங்கி நிலைபெற்றுவாழ. பொலியக்குழவியாகிய தன்னடியை நினைதும் என வினைமுடிக்க. வெயில்பொருதலால் உடைந்து செகு முளரியம் பூவைப்புய்த்து மூக்கிற்கொண்டு குடைவுழி மயங்கப்படுங் குழவியாகிய தன்னுடைய அடியைத் தமிழ்பொலிய நினைதும். எனவும் உயிராகிய குளனில் ஈர்ம்பரிவாகிய நீரில் திரைபுடைபெயர்தலால் அணையிகக்குமாறு அருவிசுரவாகிற்பக் குடைவுழி; யெனவும். ஓம் ஓம்

எனப்பெயர் கூயின் ஓம் ஓம் எனக்கூறித் தன்னையுணர்த்திக் கொண்டு முடியில் மதிகவினவந்து உண்டு உலவு தன்னடியைத் தமிழ்பொலிய நினைதும் நாம். எனவும் தொகுத்துத் தொகுத்து வினை முடிவுத்திறங்களெல்லாம் கண்டுகொள்க.

க. மணி—கௌத்துவவிரத்தினம். மணியவிர் வர எனக் கூட்டுக. திருவென்பது திருமாலின் திருமார்பின்கட் கிடக்கும் மறுவிற்குப் பெயர். அகரம், சாரியை. வியல்—அகலம். மார்பம், : அம், சாரியை. அது, முதனிலைப் பொருளிறுதி நிலையுருபு. இன், எழனுருபு

அவிர்வா—ஒளிவிட்டு விளங்க. வரு, துணை வினை முதனிலை, கோதையென்பது கோதை சூடிக் கொடுத்த நாய்ச்சியார்க்குப் பெயர்; இஃது ஆகு பெயரால் திருமகளையுணர்த்திற்று. வைப்புணல்—வைக்கப்பட்டிருத்தல் உம்மை, இறந்தது தழீஇயவெச்சவும்மை. மார்பதிற் கோதையும் வைக்கப்பட்டிருத்தல் ஆண்டு மணி விளக்கு அவிர்வருதலான் ஒளிர்ந்தது—விளங்கிற்று.

'மணமுடைய கோதையும் வைப்புண லொளிர்தலின் என்புழி முன்னே பிறனை மணஞ் செய்த பெண்ணொருத்தி வைப்பாட்டியாக வைக்கப்பட்டிருந்தது மணிவிளக்கொளியில் தெரிதலால் என மற்றொரு பொருளும் பலபொருட் சொற்றொடரணிபற்றித் தெரிந்து கொள்க. இது புணைவுளிப்பல்பொருட் சொற்றொடரணி. துனி புலவி, உம்மைத்தொகை. "துனியும் புலவியு மில்லாயிற் காமங், கனியுங் கருக்காயு மற்று" என்பது இன்பத்துப்பால். மடிதிரை—வளைந்த அலை; மடித்த மடிப்பு. உடையாவது கடலெனக் கொள்க. இடைவரைய வென்பதனை இடத்தை நீக்க வெனவும் மருங்குலை நீக்க வெனவும் கடலுக்கும் உடைக்கும் பொருந்தக்கொண்டு இரு பொருள் கொள்க. இடம் நீகக வென்றது கடல் வற்றி நிலம் வெளிப்படுதலை எனவும் மருங்குலை நீக்க வென்றது ஊடிய ஒருத்தத்

தால் நிலமகளுடல் மெலிய இடையினின்றும் உடை கழலுதலையெனவும் கொள்க. விழுகிடை—விழுந்துகிடத்தல். கண்மழை—அழுத கண்ணீர்; உருவகம். திருமாலின் துடைமடியில் நிலமகளிருக்கின்றாள் என்றன் மரபு. மடிமிசைவைத்து என ஒருசொல் வருவிக்க; இசையெச்சம். மகிழ்வித்தற் பொருட்டு மடிமிசை வைத்து என்றது தற்குறிப்பேற்றம். மலைமுலை யென்றதனை உவமத்தொகையும் பண்புத் தொகையுமாய் முறையே உவமவணியும் உருவகவணியுமாகப் பெண் என்றதற்கும் நிலம் என்றற்கும் பொருந்தப் பல்பொருள் கொள்ள நின்றதாகக் கொள்க. சில மலைகளிற், கிடந்த திருக்கோலத்தோடு எழுந்தருளியிருத்தலை முலை மருவுதல் என்றது தற்குறிப்பேற்றம். மருவுபொழுது வறுவியகையெனப் புணர்க்க. வறுவிய—இல்லாத நால்கு—நான்கு. "பால்புரை புரவி நால்குடன் பூட்டி" யென்பது பொருநராற்றுப் படை. மறை—மறையோர் பிறப்பு, மறையோன் எனினுமாம், கொல்லர் பிறப்பையும் கொல்லரையும் கொல்லனையும் கொல் என வழங்குமாறுபோலக் கொள்க. இளவல்—இளையாழ்வார். (ராமாநுஜாசாரியார்) உடையவர் எனவும் வழங்கப்படுவர். உடையவருடைய அடியையத் தொட்டு வணங்கு மாணவனாகிய வடிகள் என்றது திருமாலை. திருமால் உடையவரிடம் கோலமறைந்து உள்வரி கொண்டு சென்று அவரைப் பணிந்து தன்னை மாணவனாக ஏற்றுக்கொண்டு தனக்கும் ஐந்திரு நல்லாக்கம் (பஞ்சம்ஸ்காரம்) செய்தருளுமாறு வேண்டிப் பெற்று மறைந்து அவ்வைந்திரு நல்லாக்கத்தின் சிறப்பினையும் உடையவர் சிறப்பினையும் மெய்யுணர்தலின் சிறப்பினையும் உலகிற்கு வற்புறுத்தியுணர்த்தியருளினான். உடையவரைத் திருமாற்கு இளவல் என்றது உடையவர் இராமன் தம்பி இலக்குமணனது அவதாரம் என்பதுபற்றி. காமந்துறந்தமையின் இளவல் பெரியனாயினன். காமந்துறவாமையின் மூத்தோனாயினும் திருமால் இளவலைவழிபட்டான் என்னும் பொருளும் ஒலித்தது காண்க. அடிகள்—பெரு

மான், "சாவக நோன்பிக ளடிகளாதலின்" என மாதரி கோவலனை அடிகள் என்றது நினைத்துக் கொள்க. இதழி—கொன்றை. சிவபெருமான் திருமுடிமேலணிந்த கொன்றைப்பூவினைக் காவென்றது மிகுதிபற்றி. தாமரைக்காடு என்ற கம்பராமாயணம் திருவவதாரப் படலம் கருதுக. பின்னை—தங்கை; என்றது கங்கையை. கங்கையும் உமையும் மலையரசன் மகளிர் என்பர். அம்முறை பற்றியும் சிவபெருமானுக்கு இரண்டாமனைவி யென்பது பற்றியும் கங்கை உமைக்குத் தங்கையெனப்படுவள். கொன்றைப் பூவோடு கங்கை மேற்கொள்ளப்பட்டிருத்தலைக் காவில் மறைய வைத்திருக்கின்ற மனைவி யென்றது தற்குறிப்பேற்றம்.

கங்கையை உமை அஞ்சிப்பாராதிருத்தற் பொருட்டுப் பாய்பு வைக்கப்பட்டிருப்பினும் என்றதுந் தற்குறிப்பேற்றம், ஆனும்—ஆயினும். மனையற மகள்—உமை. காஞ்சிபுரத்தில் முப்பத்திரண்டறமுஞ் செய்தலின். நுதல்—புருவம். அறிதுயில்—சமாதிநிட்டை. அறிஞர்—ஞானிகள். நுதல்—புருவம். நடுவண்—ஆறு ஆதாரங்களுள் ஆஞ்ஞையெனப்படுவது. இணை—இரண்டு. விழியும் என்னும் உம்மை தொக்கது. நுதல் நடுவண் விழிசெருகுதல், பிரத்தியாகாரம் எனப்படும் யோகாங்கம். அடைசியென—செருகினாற்போல. குயில் என்றது உமையாளை. இது உமைக்குக் குரலினிமையும் நிறமும் என்னும் ஒப்புமைபற்றி வந்த உவமையாகு பெயராகிய உருவகவுயர்வு நவிற்சியணியாதலன்றியும் சிவபெருமான் கட்டளையாற் குயிலாய்ப் பிறந்து ஆயிரம் யாண்டு கூவித் திரிந்தாள் என்னும் புராண கதையும் உண்மையின் இயற் பெயருமாம். அவவும், பெயரெச்ச வினைச்சொல். அவா என்பது குறியதன் கீழாகார வீற்று அஃறிணைப் பெயராதலின் அவ எனக்குறுகி உகரச்சாரியை பெற்று வினை முதனிலையாய் நின்றது. "அவவுக்கைவிடலது மனும்பொருளே" என்னும் பாலைக் கலியினும் அவா, அவவு என நின்றது கண்டுகொள்க. சிவபெருமான் யோகம் செய்தல்

போலக் காட்டித் தன் கருத்தை உமையாளுக்கு மறைத்ததாகக் கூறியது பொருள்துமாற்றணி (யுத்தியணி) யின் பாற்படும். இயவள்—தலைவன். களவு கற்புநூலாசிரியர் தலைவன் என்றது மிகுதி பற்றிக் களவியல் எனப் பெயர் சொல்லப்படும் நூலை இறையனார் ஆக்கியமை கருதி.

துணியவென்பது தொடங்கிப் படைப்புக் கடவுளைக் கூறுகின்றது. படைப்புக் கடவுளே திருவள்ளுவனாக வந்து முப்பால் நூலருளிச் செய்தனன். ஈண்டுப் படைப்புக் கடவுள் திருவள்ளுவனாக வுட்கொண்டு புனையப்படும். வள்ளுவனார்க்கு வடமொழியும் தமிழ் மொழியும் இரு மனைவியாராகப் படைத்து வைத்துக் கொண்டு, அவருள் வடமொழியைத் தமிழ் மொழியிடம் புறங்கூறித் தமிழ் மொழியின் ஊடல் தீர்த்துத் தமிழ் மொழியைப் புணர்ந்து இன்பம் நுகர்ந்தவாறு பல்பொருட் சொற்றொட (சிலேடை) ருருவக வணியாற் கூறப்படும். துணியவலர்மறைபுணர்—உண்மைப் பொருளைத் துணிந்துணர்தற் பொருட்டு விரிந்து பரந்து சென்ற வேதம் பொருந்திய; எல்லாராலும் ஐயமின்றி யறியப்படுமாறு பழித்துக் கூறுதலையுடைய களவிற் புணரப்பட்ட. ஆரியமென் என பதனை என் என்றுவது மெல் என்றுவது பிரித்துக் கொண்டுரைக்க. தொடர்பு—எழுத்துக்களுள் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்றற்குரிய பிறப்பையும் ஓசையொற்றுமையையும் உடைய எழுத்துக்கள் தொடர்ந்து நிற்றல். மனைவிக்கு, மணம் செய்து கோடற்குரிய குடிமுறையென்க. எழுத்துத் தொடர்ந்து நிற்றல் தமிழ் மொழியின் மாட்டுண்மையும் வடமொழியின் மாட்டின்மையும் கண்டு கொள்க. ஓகாரம், எதிரமறைவினாவோகாரம். உம்மை, முற்றும்மை. இதுமட்டுமன்று; இன்னுமுண்டு; அவை வருமாறு என்றவாறு. தொல்—பழமை. நிறை—நிறுத்தல். அஃதாவது ஒரு மொழி முதலிறுதிகளில் நிறுத்தப்படவேண்டும் எழுத்துக்கள் நிறுத்தப்படுதல். அன்றி ஒரு நாட்டெல்லைக்குள் நிறுத்தல் எனி

னுமாம். இவையிரண்டும் வடமொழிக்கில்லை; தமிழ் மொழிக்குண்டு. பெண் என்றற்கேற்ப ஐம்பொறிகளைப் புலங்கள்தோறும் சொல்லாமல் தடுத்து நிறுத்தலாகிய கற்புடைமையிலாள் என்றதாகக் கருத்துக் கொள்க. இறை—முன்னங்கை; கடவுள். தொடு—பிடித்த; தொடர்ந்த. கிழமை—உரிமை. கைப்பிடித்து மணஞ்செய்த வுரிமைபற்றி என்னிடம் அன்பாற் கரைந்துருகுகின்றிலள் என்றவாறு. இனிக் கடவுளோடு உயிர்கள் ஆண்டான் அடிமையியையுடைமை கண்டு அக்கடவுளை நோக்கிக் கருங்கல்லும் கரைந்துருக மனங் கரைந்துருகிக் கூறும் தேவார திருவாசக நாலாயிரங்கள் முதலியன போல்வன வடமொழிக் கில்லாமையும் குறிக்கப்பட்டது. கடிய குரல்வாயினள்—அஞ்சத்தக்க ஆரவாரச் சொற்களைச் சொல்லும் வாயினையுடையளாயிருக்கின்றனள். இத்தன்மையாளும் மனைவியாகக் கொண்டு கூடிவாழத்தகுதியளல்லளாவள் என்றவாறு. இனி உரப்பியும் எடுத்தும் கனைத்தும் முயன்று கூறவேண்டும், அரிய இன்னாத வல்லோசை வடமொழிக்கு மட்டும இருத்தலும் தமிழ் மொழிக்கு அரிதின் முயன்று கூறவேண்டாது எளிதின் எவ்வுயிர்களானுமியலும் மெல்லிய வினிய வோசையே யிருத்தலும் உணர்ந்துகொள்க. சொலல் மிகுநள்—ஒரு பொருண்மேற் கூறியது கூறல், மிகைபடக் கூறல் முதலிய வழுப்பட அடக்கமின்றி ஓயாமல் வாயாடிக்கொண்டிருப்பவள். இப்பெற்றி வாய்ந்தாளும் வாழ்க்கைத்துணை வியாதலிலள். இனி வடமொழிக்கட், கற்பார் கற்றற்கு மனங்கொள்ளாதவாறு நூறுயிரம் பத்துநூறுயிரம் முதலிய தொகையளவான பாக்களையுடைய பாரதமுதலிய செய்யுட்கள் மிக்கிருத்தலும் தமிழ் மொழிக்கட் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினுடைய மக்கட் பிறப்பினருமைக்குத் தக்கவாறும் கற்றற்கு உள்ளம் மடி கொள்ளாதவாறும் ஏறக்குறையப் பன்னீராயிரத்திற்கு மேற் போகாத தொகையளவான பாக்களையுடைய செய்யுட்களே யிருத்தலும் அவற்றுளெல்லாம் இடைச் செருகலை யொழித்து ஆராயிற்

கூறியது கூறல் முதலிய வழுக்கள் காணப்படாமையும் அவற்றுக்கு மாறான சுருங்கச் சொல்லல் முதலிய மாண்புகளே காணப்படுதலும் ஆராய்ந்துகொள்ளப்படும். அவள் என்றது வடமொழி மாதராளை. தோளைப் புணையாகத் தழுவல்செய்யேன் என விரிக்க. தழுவலன்—தழுவேன் என்றது இனி வடமொழி உலக வழக்காற்று மொழியாய் வாராது என்பதனையுட்கொண்டு. அதனால் என்பது இசையெச்சமாக விரித்துரைத்துக் கொள்க. துனியல்—ஊட வேண்டா; எதிர்மறைவியங் கோள்வினை முற்று. ஈரடிப்பாற் குறளை மொழிபு என்பது பல்பொருட் சொற்றொடர். (சிலேடை) மனைவிக்கேற்ப இரண்டு காலடியின்கண் வீழ்ந்து வணங்கிப் புறஞ் சொற் சொல்லி; யெனவும் தமிழிற்கேற்ப இரண்டு பாவடிகளை யுடைய, முப்பாலையுணர்த்தும் குறள் வெண்பாவாலாகிய திருக்குறள் என்னும் நூலைச்சொல்லி யெனவும் உரையுரைக்க. மொழிபு—சொல்லி. நால்வாய் என வியைக்க, படைப்புக கடவுட்கு நான்கு முகமுண்மையின நால்வாய் என்பது கூறப்படும், துவர்—பவளம் செம்மை நிறம் எனினுமாம். இதழினையுடையவாய் என்க. நறு—தேன். சோர்தர—சொரிய. நால்வாயும் என்னும் முற்றும்மை தொக்கது. சோர்தர மொழிபு எனக்கூட்டுக. நால்வாயுந்தேனைச் சொரியச் சொல்லி என்றவாறு. தமிழ்மொழியாகிய துணைவியின்; தோள் என இயைக்க. இன்பம்—காமவின்பம். ஆர்—நிறைந்த; பொருந்திய வெனினுமாம். துணைவியின் தோளின்பம் அறமும் பொருளும் வழுவுதலில்லாததாய்க் காதற் சுவை நிறைந்துள்ளது. எனவே வடமொழியாளின் தோளின்பம் அறமும் பொருளும் வழுவியதும காதற்சுவை நிறையாதுமாயிற்று என்பது பெறப்படும். அகத்திணையியல் என்னும் நூல் தமிழ்மொழிக் கண்ணேயே சிறந்து காணப்படுதலும வடமொழிக்கண் அங்ஙனம் காணப்படாமையும் உலகமறியும். அறம்பொருள் இன்பமெனவே திருக்குறளிற் கூறப்படும் முப்பாலும் பெறப்பட்டன, கடவுள்—பிரமதேவன்.

துனியலெனச் சோர்தரக் குறளைமொழிபு தோள்நுகர் கடவுள் என முடிக்க. தணியும்—காமம் முதலிய குற்றங்கள் குறைந்து அடங்கிய. தணியு மனமாகிய மனையுழையென மாறிக் கூட்டுக. மனை—வீற்றிருக்கும் பலகை உழை—எழனுருபு. அவர்—முற்கூறிய கடவுளர் மூவர். சினை—கொம்பு. தளிரடி—தளிர்போலச் சிவந்து மெல்கிய திருவடிகள். வைகறை—துயிலெழும் விடியற்பொழுது, தலைகொடு—தலையால். தலைகொடுதாழ்தும் என்க. தகையினின்—அழகினால். அணங்கும்—வருத்தும்; "தகையணங்குறுத்தல்" என்னுந் துறைப் பெயரும் ஈண்டுக் கருதற்பாலது. மின்கொடி—மின்னலொழுங்கு. புள்—தினைக்கதிர்மேய வரும் கிளி முதலிய குருவிகள், கடி—ஓட்டும். தழல்—குருவியோட்டும் கருவிகளுள் ஒன்று.

"தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங், கிளிகடி மரபின" என்பது பெருங்குறிஞ்சி. தழலொழிய—தழலைப் புடையாமல். எறி—வீசியோட்டும். கவணெறியென மாறிக் கவணால் வீசியோட்டும் என விரிக்க. தழல்—நெருப்பு. குரு—நிறம்வாய்ந்த. மணி—மாணிக்கக் கற்கள். இவை கதிர்காம மலை படுவளம்.

"கல்லிற் பிறக்குங் கதிர்மணி" யென்பது நான்மணிக்கடிகை. தலைமை புனையிமையவர் என்றது கீழ்பால் முதலிய எண்பாற் காவற் கடவுளரை. கையுறை—காணிக்கைப்பொருள். பராய்—வாழ்த்தி. அருள்தழையவென மாறுக. இழிதல்—வானுலகினின்றுமிறங்கி வருதல். அருள்—முருகக் கடவுள் திருவருள். தழைய—தம்பால் மிகுதற்பொருட்டு. தாழ்—கீழ் வீழ்கின்ற; இடப்பொருட் பெயரொடு முடிந்த பெயரெச்சத் தொகை. புனங்காக்குங் குறச்சிறுமியரால் கவணில்வைத்து எறியப்பட்டு மேற்போன மணிக்கற்கள் தாழ்கின்ற கதிர்மலை யென்க. இமையவரும் மிக்கவொளி யுடையராதலின் மாணிக்கக்கற்கள் வீழ்தல் இமையவர் கீழிறங்குதலை யொக்குமாயிற்று. இனிது—இடையூறின்றாக. சார்பு—துணை.

“அறத்திற்கேயன்புசார் பென்பவறியார், மறத்திற்கு மஃதே துணை” யென்பது முப்பால். அருளாகிய சார்பென்க. ஈண்டு அருள், முக்கடவுளர்க்கும் மன்னுயிர்களைத் துன்பம் தீண்டாதவாறு காக்க வேண்டும் என்றெழும் இரக்கம். அதனைப் பெறுதலாவது: உள்ளவதனை இழவாமற் காத்தோம்பல். பெறுக: வியங்கோள், வேண்டிக்கோடற் பொருண்மைத்து; பெறவேண்டும் எனவுரைக்க. பெறுக என்னும் வியங்கோட் பயனிலைக்கு அவர் என்பது இசையெச்சவெழுவாய். இனி வாழுமவர் என்பதனை யெழுவாயாகக் கொண்டு அவா, அருட் சார்பினைப் பெறுவாராக வெனப் பொருளுரைத்து, அதன் பொருட்டு அவருடைய அடியில் என அதன்பொருட்டு என்பதும் அவருடைய என்பதும் இசையெச்சமாக வருவித்துரைக்கப்படும் எனக்கொள்ளினுமாம்.

உ. பொன்னி—காவிரியாறு அம், அழகுமாம், சாரியையுமாம். கொள்கலம்—கமண்டலம். குப்புறிய—தாவிக்கவிழ்ந்தருளுதற்கு. பொள்ளென, விரைவுக்குறிப்பிடைச்சொல். குறுகு—வந்தடைந்திருந்த. பறவை—காக்கை; என்றது யானைமுகக்கடவுளை. யானைமுகக்கடவுள் இந்திரனுடைய சீகாழிப்பூந்தோட்டம் அழிந்துபோகாது செழித்தற்பொருட்டு அவனுடைய வேண்டுகோளாற் காக்கைவடிவமெடுத்துப் போய்க் குடகுமலையில் வந்திருந்த அகத்திய முனிவருடைய கரகத்தினுள் இருந்த காவிரி நீரைக் கொட்டிக்கவிழ்த்து யாறாகப்பெருக்கெடுத்துச் சீகாழிப் பூந்தோட்டத்திற்கு அந்நீர்போமாறு செய்தவரலாறு கந்தபுராணத்து அசுரகாண்டத்துப் பெறப்படும். புகார்—காவிரிப்பூம்பட்டினம். பொருநன்—அரசன். அவன்: கரிகாற்சோழன். இவனுக்கு ஐயனார் செண்டுப்படைகொடுத்ததனைக்

“கச்சிவளைக்கச்சி காமக்கோட் டங்காவன்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு” எனச்

சிலம்பதிகாரத்து இந்திரவிழவூரெடுத்தகாதையுரையில் அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டிய மேற்கோள்வெண்பாவான் உணர்ந்துகொள்க. உலாப்புறம்—திருவுலாப்புறம் என்பதொருநூல். இது ஞானவுலாவெனவும் ஆதியுலாவெனவும் தெய்வீகவுலாவெனவும் வழங்கப்படும். இது சேரமான்பெருமாள் நாயனாரால் அருளிச்செய்யப்பட்டு நம்பியாண்டார் நம்பிகளாற் பதினொன்றாந்தொகைத் திருமுறையிற் கோக்கப்பட்டுள்ளது. இஃது அந்நாயனாராற் சிவபெருமான் திருமுன் கயிலைமலையிற் களமேற்றப்பட்டதனை ஆண்டுக்கேட்டுக்கொண்டிருந்த கடவுட் சாத்தன்கொண்டுவந்து திருப்பிடவூரில் அந்தணர்கட்கு வெளிப்படச்சொல்லிக்கொடுத்தருளிப் போயினான் என்னும் வரலாற்றினைச் “சேரர்காவலர் விண்ணப்பஞ்செய்தவத்திருவுலாப்புறமன்று, சாரல் வெள்ளியங்கைலையிற்கேட்ட மாசாத்தனார் தரித்திந்தப்,பாரில் வேதியர் திருப்பிடவூர் தனில் வெளிப்படப்பகர்ந்தெங்கும்,நாரவேலைசூழுலகினில் விளங்கிடநாட்டினார் நலத்தாலே” என்னுந் திருத்தொண்டர் புராணத்து வெள்ளானைச்சருக்கத் திருப்பாட்டான் உணர்ந்துகொள்க. உய்த்த—கொண்டுவந்துகொடுத்த. காரி—மாசாத்தன்; கரியோனாதலின். வள்ளல்—பெருங்கொடையாளி. உன்னி—(தனக்குத்தகுதியாகக்) கருதி. வள்.—அழகிய. மறை—வேதம். ஞாளி—நாய். ஊர்—ஏறிச்செலுத்துகின்ற. காடுகாள்—மாரியம்மை. காடுகிழாள் என்பதன்மரூஉ; காடுகளுக்கு உரியவள் என்றவாறு. இவன் வைரவக்கடவுள்தாய். உம்பர்—தேவர். ஆகுபெயர். உம்பர் வேள்வி—தேவர்களைக் குறித்துச்செய்யும் வேள்வி. உண—(வேட்போன் மந்திரமூலமாகக்கொடுக்கும் தனக்குரிய அவிப்பாகத்தினை) உண்ணுதற்கு. உம்பல்—யானை. இழி—இறங்கிவருகின்ற. தண்டலை—மருதநிலம். கிழவன்—உரியோன். மா—திருமகள். மாவின் நாத்தூணங்கையாள் என்க. மானுழை—உழைமான்; இருபெயரொட்டு. மானுழையினை ஊர்தியாகவுடைய நாத்தூணங்கையாள் என்க. நாத்தூணங்கை—கணவனுடன்

பிறந்தாள். ஈண்டு நங்கையென்பது புதல்வன் மனைவிக்குக்கூறும் முறைப்பெயரன்று: சிறந்த பெண்பாற்பொதுப்பெயர். நாத்தூணாகிய நங்கையென விருபெயரொட்டாக்குக. மகன் மனைவி பெயராகிய நங்கையென்பதும் கணவனுடன் பிறந்தாளுக்கு வழங்கப்படுதல் இக்காலத்துக் கொங்குநாட்டு வழக்கு. நாத்தூணாள் என்பது இக்காலத்து உலகவழக்கிலுமுண்டு. திருமகளுக்கு நாத்தூணாள் என்றது பாலைக்கிழத்தியாகிய துர்க்கையை. மதுரையிற்கண்ணனோடு ஒரு வயிற்றில் தேவகிக்குப் பிறந்தாளாதலின். சத்தியின் கூறு என்பதுபற்றி அங்ஙனம் கூறியதூஉமாம்.

மன்னி—ஒருதன்மையாய். நிலைபெற்று எனினுமாம். கலைஞரடியில் மன்னர் முடியை வணங்கச்செய்யுமகடூஉவென்க. “மண்கண்டவெண்குடைக்கீழாக மேற்பட்டமன்னருமென் பண் கண்டளவிற் பணியச்செய்வாய்” என்னும் சகலகலாவல்லி மாலை ஈண்டுக்கருதற்பாலது. மகடூஉ—பெண்மகள். கொம்பர்மகடூஉ—(வஞ்சிக்) கொம்புபோலுமுருவமுடைய பெண் என உவமத்தொகை. நாமகடூஉ—நாவில் வீற்றிருக்கும் மகடூவென ஏழாம் வேற்றுமைத்தொகை. வாய்மையென்பது ஆகுபெயராற் செய்யுள் அல்லது நூலையுணர்த்தி நிற்கும். செய்யுள் அல்லது நூலையோதும் அல்லது செய்யும் நாவென்க. நாமகடூஉ—நாமகள். மடிகொண்டு—மடியை யின்பமெனக்கொள்ளுதலால்—எனவே பொருள்வருவாய்த்தொழிலை முயலுதலால் என்றதாயிற்று. மிடியாது—வறுமைப்படாமல்—செல்வமுடையராகி யென்றவாறு. முகன்—முகம். போலி. மலர்போலும். கன்னிமாரெழுவராவார்: பிரமணி, நாராயணி, மாயேசுவரி, கௌமாரி, வராகி, உருத்திராணி, இந்திராணி, என்றிவர் எனப் பிங்கலந்தைகூறும். முப்பான் மூவர்—முப்பத்துமுக்கோடிப் புத்தேளிர். அவராவார்: பன்னிரண்டுகோடி ஞாயிற்றோரும் பதினொண்கோடி யுருத்திரரும் எட்டுக்கோடி வசுக்களும் இரண்டுகோடி மருத்துவரும் என்றிவர் என்பர். மாப்பிள்ளை—மணவாளன். காக்க, ஈறுதொகுத்தல். ஏகாரம் ஈற்

றசைநிலை யிடைச்சொல். யாம் தோன்றாவெழுவாய். யாம், பிள்ளையைக்காக்கெனக் காலைதோறும் மாலைதோறும் இவர்தமைக் கருதி வழிபாடுசெய்வாம் எனவினை முடிக்க.

ந. பாண்டியர் வளர்த்த; “மருவுமுத்தமிழை முன்னாள் வளர்த்த பாண்டியரேபோல” என்பது நிகண்டுசூடாமணிச் சிறப்புப்பாயிரம். முக்கழகம்: முதலிடைகடைத்தமிழ்ச் சங்கங்கள். தொண்டு—ஒன்பது. ஒன்பதாகிய சுவையாவன; நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், வெகுளி, பெருமிதம், உவகை, நடுநிலை, என்பனவாம். இவற்றுள் இரக்கமும் துன்பமும் அழுகையெனப்படும். இளிவரலெனினும் இழிப்பு எனினும் அருவருப்பெனினும் ஒக்கும். மருட்கையெனினும் வியப்பு எனினும் ஒக்கும். பெருமிதம் எனினும் வீரம் எனினும் ஒக்கும். சுவையை நுகரும் அடிகள் என விரிக்க. அடிகள் என்றது அகத்தியனாரை.

பண்ணல் முதலாக ஆயப்படும் இருவகை எண்டொழில்களாவன: பண்ணல் முதலிய வெட்டும் வார்தல் முதலிய வெட்டுமாம். அவற்றுட் பண்ணல் முதலிய வெட்டாவன: பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு, என்பனவாம் ஏனையெட்டாவன: வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடையென்பனவாம். இவற்றின் விரிவெல்லாம் சிலப்பதிகாரத்திலும் அதன் உரைகளிலும் விளங்கவுணரப்படும். ஈண்டு எடுத்துரைப்பிற்பெருகும். இவை யாழ் நரம்பின்கண் இசைமீட்டற்குரிய தொழில்கள். உய்த்து—(யாழ்நரம்புகளிற்) செலுத்தி. பாலையாழ் என்பது ஒருவகை யாழ்ப்பண்ணுக்கு ஆகுபெயர். அதன் வகையேழாவன: செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை யென்பனவாம். பாலையாழ், நாற்கூற்றுப் பெரும்பண்களுள் ஒன்று.

இது பண்களுட் சுவைமிகுதியும் சிறப்புமுடையது என்பர். இதன் விரிவைச் சிலப்பதிகார அரங்கேற்றுகாதையுரைகள் முதலியவற்றிற் கண்டுகொள்க. கொளுவி—மூட்டியெழுப்பி. (தொடங்கிவாசித்து) செல்வி—தேவசேனைநாய்ச்சியார். அரமகளிர்—தேவவுலகத்துப் பெண்கள். வேள்—முருகக்கடவுள். புலமை—கல்வியறிவு. விறல்—வெற்றி. மிசைந்து இசைக்கும் இசை—(திறத்தைப்பாடுங்கால்) அனுபவித்துப்பாடும் இராகப்பாட்டு. உய்த்துக்கொளுவிப் பாலையாழ்ப்பண்ணில் திறத்தையிசைக்கும் இசையைவிழைந்து என இயைத்துக்கொள்க. முருகவேள் தேவசேனைநாய்ச்சியாரை மணமுடிக்கப்போவதாகக் கேள்வியுற்றபொழுது தோழிகளாகிய மற்றைத் தெய்வப்பெண்கள் தேவசேனை நாய்ச்சியாரிடத்து அவருடைய மாப்பிள்ளையாருக்குரிய புலமையும் அருளுடைமையும் வனப்புடைமையும் போர்வெற்றிப் பேராண்மையும் என்னும் சிறப்புப் பண்புகளை எடுத்து விளக்கிக் கூறித் தேவசேனைநாய்ச்சியார்க்கு உவகையும் நாணமும் மிகச்செய்ததனைப்பாலைப்பண்ணிற் பாட்டாகப்பாடி முருகக்கடவுள் கதிர்காமத் திருக்கோயிலிலிருந்து முருகனை உவகை மிகுவித்துத் தாம் இன்பவடிவமாதற்பொருட்டு அகத்தியனார் யாழ்வாசிக்கும் இசையை விரும்பியென்றவாறு. யானைகள் யாழிசைக்குருகிவயப்படுதல் "கைவலத்தியாழ்வரை நின்றது களிறு" என்பதனானும் பெருங்கதைச் செய்யுளிற் கூறப்படும் உதயணன்வரலாற்றானும் பெறப்படும். கறையடி—யானை. இளக—உருக. இன் துறுகல்—(படுத்துஉறங்குதற்கு) இனிய குண்டுக்கல். உழுவை—புலி. உழுவைமான்; உம்மைத்தொகை. ஒன்றற்கொன்று பிறப்புப்பகையாகிய அவ்விரண்டு விலங்குகளும் முருகக்கடவுள் திருவருளாற் பகைமையொழிந்து நட்புற்று ஓரிடத்துஉறங்குவனவாயின. அவ்விரண்டும் யானையைக் குண்டுக்கல் என்று ஒப்புமைபற்றி மயங்கினவென்றது மயக்கவணி. மூரிவிடுதல்—துயின்ற சோம்பலைப் போக்குதற்கு உடலை நெளித்து நிமிர்த்து ஓசைவரச்செய்தல்.

ஏந்தல். தலைவன். ஊண்—இன்பதுன்ப நுகர்ச்சி. திகழும்—விளங்கும். ஊணாற்றிகழும் என விரிக்க. அஃதாவது: வினைப்பயனுகர்ச்சியால் ஆணவமலந்தேய அறியாமை குறைந்து அறிவு விரிதல். பான்மை—வகைமை. மூவகையுயிர்கள்: ஓரழுக்குயிர், ஈரழுக்குயிர், மூவழுக்குயிர். என்பனவாம். வெளியில் என்பதற்கு ஆதாரமின்றியென்பது கருத்து. மன்னுயிர்களாகிய பிறவற்றிற்குப் பேரின்பம் விளங்குதற்குக் காரணமும் இறைவனாகிய தனக்குப் பேரின்பம் விளங்கிநிற்றலின் காரியமுமாகிய கூத்து என விரிக்க. கூத்து—படைப்பு முதலிய ஐந்தொழிலாகிய விளையாட்டு வரிக்கூத்து. தில்லைவெளியிற் கூத்து எனின் உருவகவணியாம். மறைத்தலும் அருளலும் உயிரின் கண்ணும் ஏனைப்படைப்புக்காப்பு அழிப்பு மூன்றும் உலகின் கண்ணும் நிகழ்த்தப்படுமாயினும் உலகோடு உயிர்க்குள்ள ஒற்றுமை நயத்தான் உயிர்தொறும் ஐந்தொழிற்கூத்து நவிலும் எனக்கூறிற்று. நவிலும்—பயிலும். என்றது உயிர்கள் கட்டுண்டு மயங்குங்காலும் வீடுபெற்று விளங்குங்காலும் ஒப்ப இடைவிடாது செய்யும் என்றவாறு; இஃது இன்பக்கூத்து எனப்பட்டதனால் இஃது இறைவனாற் செய்யாது செய்யப்படும் எனவும் இயற்கையெனவும் அதனால் இறைவற்கு இளைப்பும் வருத்தமும் ஓய்வும் கட்டும் உண்டாகாவெனவுந்தெளிக. ஒன்றிரண்டாய்; என்பதனை ஒன்று இரண்டாய் எனவும் இரண்டு ஒன்றாய் என மாறியும் இருமுறை இரட்டுறமொழிந்து இருபொருள் உரைத்துக்கொள்க. இறைவனுடைய இந்நிலை, ஒற்றுமையுமாகாது வேற்றுமையுமாகாது அவ்விரண்டும் விரவியதொரு நிலையாமென்க. ஒன்றாய்—வேறன்றி. இரண்டாய்—வேறாய். இறைவன் சத்தியோடு வேறன்றி நின்றே வேறாயும் வீடுபெற்றவுயிர்களோடு வேறாய் நின்றே வேறன்றாயும் நிற்பன் என்பதனைக் கேட்டு ஆராய்ந்து தெளிந்து நுகர்க. உலகிற்கு இடம் உயிர்களும் உயிர்கட்கு இடம் இறைவனுமாதலின் இறைவன் உலகினை நேரே சார்ந்து நிற்றலின்றி உயிரோடு சார்ந்து நிற்கும் வாயிலால் உலகினை

யும் சார்ந்துநிற்குமுறைமை தோன்ற உயிரொடுலகு எனக்
கூறிற்று. ' இறைவன் உலகுயிர்களோடு கலப்புத்தன்மையால்
அவையேயாயும் பொருண்மையாகிய தன்னியல்பால் அவற்றின்
வேருகியும் அவற்றைத் தொழிற்படுத்துங்கால் அவற்றுடனின்று
அவ்விரண்டு தன்மையாயும் பிற்பன். வேருதல், சிறப்பியல்பு.
ஏனையிரண்டும் பொதுவியல்பு. இன்னும் இத்திறம்பலவும் ஈண்
டுரைக்கற்பாலவல்லவாம். நவிலுமுதல்; உடனுமாமுதல்; உண்மை
முதல் எனத்தனித்தனி கூட்டுக. முதல்வனே உண்மையென்றது
ஏனைப்பசுவும் பாசமும் பதியை நோக்கப் பொய்ம்மையாமதுபற்றி.
முதல்—முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருள். உல
கத்தோற்றத்திற்கு நிமித்தகாரணம் என்றுமாம். முதல் எனினும்
காரணம் எனினும் ஒக்கும். இப்பொருளின்கண் இறைவனுக்கு
முதல் என்பது ஆகுபெயரன்று. முதல் எந்தலைப் புரந்தருளுக
என முடிக்க.

ச. இறையன்—அரசன். இணை—இரண்டு. மூட்டு—முழந்
தாளும் துடையும் பொருந்தும் பொருத்துவாய்ப்புறம். வார்ந்து
இருந்து—வளையவிருந்து. நுடங்க—நெளிந்தசைய. வள்—அழகிய
புரை—ஒக்கும். புறவடிக்கு யாமைமுதுகு வடிவுவமம். புறவடிய;
உடைமைப் பொருளின்கணின்ற வினைக்குறிப்புப் பெயரெச்சம்.
ஈண்டுக்கவடு—கணைக்காலும் புறவடியும் பொருத்து மூட்டுவாய்ப்
புறத்தின் நிமிர் வளைவு. இணையென்பதனைப் புறவடியோடும் கவடு
என்பதனோடும் கொண்டுவந்து கூட்டியுரைக்க. கொள—பொருந்த,
வாய்ப்ப—நழுவி விழாமல். கொளக்கிடப்பி; வாய்ப்பக்கிடப்பியென்க.
தாய்மார் குழந்தைகளைப் புறவடிக்கவட்டிற் கிடக்கவைத்திருந்து
நீராட்டுதல் மரபு. தனதாய் என்றது உமாதேவியின் தாயாகிய
மலையரசன்மனைவி மேனை எனப்படுவாளை. மணிக்கலன்—மாணிக்
கச் செம்பு. (செம்பு—கரகம்) பைப்பயவார்ப்பவார்ப்பவென மாறுக.
அடுக்கு, இடைவிடாமைப் பொருண்மேற்று. உயிர்ப்பு—மூச்சு

காற்று. எறிய—விடுதற்பொருட்டு. நுதன்மீயகம்—நெற்றியின்மே
லிடத்தின்கண். அகம், ஏழனுருபு. வழிநீர்—ஒழுகும்நீர். தகைந்து—
தடுத்து. விஞ்சு—மிக்க. பசு மஞ்சள்—சிறு பசுமஞ்சள் என்ப
தொருசாதி மஞ்சள். விழுது—மை; என்றது அரைத்த மஞ்சளை.
தைவந்து—தடவி. மீண்ட மீள—மீளமீள: அடுக்குத் தொடர்.
மண்ணி—நீராட்டி. மொக்குள்—நீர்க்குமிழி. வீழ—ஒப்ப. வரு—
தோன்றுகின்ற. அறல்—நீர். உகிர்—நகம். குழந்தைகளின் கண்
கள் பெரியவாதற்கு அவற்றின் முனைக் கீற்றுக்களைத் தாய்மார் தம்
நகத்தினுல் மெல்லெனக் கீறுதலுமரபென்பர். பிரபுலிங்க லீலையில்
இங்ஙனம சொல்லப்பட்டுள்ளது. ஆடு—அசைகின்ற. கதிர்காம
மலைச்சாரலில் திருவெண்ணீறு போல்வதொன்று மண்ணின்கண்
விளைதலின் ஆண்டுத் திருவெண்ணீறே மண்ணும் என்பது கருதி
மண் காப்பிட்டு எனக் கூறற்பாலது வெண்பொடிக் காப்பிட்டு
எனக் கூறிற்று. விம்முலை—விம்மும் முலை; வினைத்தொகை.
வார்—கச்சு. நெகிழ—ஒதுங்கச்செய்து. செய்து என்பது இசை
யெச்சம். மடுத்து—புகுத்தி. வாரை நெகிழ்த்து முலைக்கண்ணினை
வாய்க்குட் புகுத்தியென்க. அமுது—பால். இணைய—இரண்டா
கத் தோன்ற. வாழ்ந்திருந்து—மகிழ்ந்திருந்து. அணைக்கண்—
படுக்கையின்கண். கிடப்ப—படுத்துக்கிடவா நிற்ப. முது—பழைய.
கதிரை, கதிர்காமம் என்பதன் மரூஉமொழி. மேலுங்கண்டுகொள்க.
கதிரையின்கண்என விரித்துக்கொள்க. மரன், ஈற்று மயக்கம்.
கொஞ்சுமரன் என்க. கொஞ்சுமென்பது நிலப்பெயர் கொண்டு
முடிந்தது. கீழ்—ஏழாம் வேற்றுமையுருபு நிழற்கீழ் அணைக்கண்
உச்சியினை மோந்து கிடப்பவெனக் கூட்டுக. மொய்—செறிந்த.
துகள்—தூசி. துகள்விரல்—தூசிபடிந்த விரல். முகிழ்விரல்—
தாமரையின் சிறு மொட்டுப்போலக் குவிந்த விரல். அடங்க—எல்
லாம். குழறி—தடுமாறி. விதிர்ந்து—நடுங்கி. சிலைமுகில்—ஒலிக்
குமுகில்: கை. சிலைத்தல்—ஒலித்தல். வில்லையுடைய முகிலெனிற்

சிலை வடசொல். கைம்மாறு கருதாது உயிர்களுக்கு உடல் பொறி நிலம் புலங்களைக் கொடுத்தலான் உமாதேவி கைக்கு முகிலுவமை மாயிற்று. உய்ப்ப—வாய்க்குட் செலுத்த. வரு—வெளிவருகிற. செவ்வி—பொழுதில். வயிறுகுழிய வாய்கூம்ப வழூமென்றது. தன்மை நவிற்சியணி. எழில்—அழகினை. நுகர—அநுபவிக்க. பாவை சிவனோடு நுகரவென வியைக்க. பாவை நுடங்கவார்ந் திருந்து, கிடப்பி, வைத்துத்தகைந்து, தைவந்து, மண்ணி, ஊதி, அகற்றிப், பிளந்து, ஒற்றிச், சுவற்றி, ஊட்டி, இட்டுப், பாராட்டி, வாழ்த் தமைந்து மோந்து கிடவா நிற்குங்காற் சேய் புகுவிப்பக் குழறி விதிர்ந்து அஞ்சித் துகள்கள்வீசி வெகுளுஞ்செவ்வியில் அழும்எழிலை அவள் தன் கணவனோடு அனுபவிக்க வளர்ந்த நின்னை எனக் கூட்டி முடிக்க. சிவண—ஒப்ப. நன்மகவு, புலமை, அருள், வனப்பு, வெற்றி, புகழ் முதலியன பெறுமகவு. வயிறுவாய்த்து—சூர்கொண்டு, உய—பெற்று உயிர்வாழ்ந்து இன்புறுதற்பொருட்டு. இவர்—இங்குவந்து வரங்கிடக்கும் இக்கற்புடை மகளிர். தொழுவர்—பிள்ளைவரம் வேண்டிக் கும்பிட்டுப் பாடுகிடப்பர். இவர்க்குப் பிள்ளை கிடைத்தற்பொருட்டு என்பது குறிப்பெச்சம். திருவயிர் படை—புத்தேளிர் படை. படைத்தலைவன் என்றது சேனாதிபதி என்ற பெயர் விளக்கியவாறும். கவுணியர் குடிப்புலவ! வென்றது முருகன் ஆளுடைய பிள்ளையாராய் வந்தவினால். கவுணியர் என்பது கௌண்டின்யவென்பது சிதைந்த வடசொல். கௌண் டினியர் என்பது ஒரு சிறந்த தவமுனிவர் பெயர். அவருடையமரபு, கௌண்டினிய கோத்திரம் எனப்படும். கோத்திரம் எனினுங் குடியெ னினும் ஒக்கும். கௌண்டினியன்: குண்டினிமென்னும் முனிவன் மக ன் எனப்பொருள்படும் வடசொல். திருமுருகாற்றுப்படைத் திருவே ரகக் காட்சியிற் கூறிய "இருவர்ச் சுட்டிய பல்வேறுதொல்குடி" என்னும் அடியினுரையில் நச்சினார்க்கினியர், "குடி—குண்டினர், காசிபர் என்றாற்போல்வன" வெனப் பார்ப்பார் குடிப்பெயர்க்கு

எடுத்துக்காட்டாக இக்குண்டினர் பெயரை யெடுத்தாளுதலான் இக்குடிப்பெயரின் உண்மையும் பெருமையும் புகழுந் துணியப்படும்.

௫. தாழை—தெங்கு. சிதர்தாறு என்க. தாறு—பழக்குலை. தள்ள—விலக. வள்—பெரிய. உளை—வருந்தும். வால்—வெண்மை. வளை—சங்குகள். தட்டு—தடுத்து. தளைந்து என்பது தட்டு எனவரும்; களைந்து என்பது கட்டு எனவருமாப்போல' பாக்களிற்றளை தட்டும் என்புழியும் இப்பொருட்டு. கான்று—கக்கி. உகலும்—சிந்த. சூலானுளையும் வாலியவளைகள் விலகினார் கால் தட்டு முத்தைக்கக்கிச் சிந்தவென்க. தணி—தாழத்தொங்குகின்ற. தலையை நிமிர்ப்பவென்க. சாறு, தலையிடறிச்சிதைந்த மாம்பழச் சாறு. வாயிலேவடியும் பொழில் என்க. ஓவம்—ஓவியம். பைம் மணி—மரகதவிரத்தினம்; பொழிலாகிய மனையெனவுருவகமாக் குக. பொழில்கள் மாணிக்கக்கங்கையாற்றினிருகரையினும் ஒழுங் காகப் பலநிறப்பூக்களோடு இலைகளாற்பசுத்துக்காணப்படுதலின் ஓவப்பைம்மணி மனையெனச்சிறப்பித்துருவகிக்கப்பட்டன. துவர் —செந்நிறம். சால்—அமைந்த. மணி—மாணிக்கவிரத்தினம். இவை மாணிக்கக்கங்கையாற்றினூற் கொண்டுவந்து கரைப்பொழி லில் ஒதுக்கப்பட்டன. அன்றிக்கதிர்காமமலைச்சாரலில் விளைவன வெனினுமாம். சுடர்—விளக்கொளி. எறியும்—வீசும். எறியும்— வீசுதற்கு இடமாகின்ற; என நான்காம் வேற்றுமைக்கோடற் பொருளில் வந்த பெயரெச்சம் தெரு, வென்னும் இடப்பெயரொடு முடியும். மனை, மணி, விளக்கினொளி வீசுதற்கு இடமாகின்ற தெருவென்க. மனையின் றொழில் தெருவின் றொழிலாகக் கூறப்பட்டது. மாழை—பொன், தெருநேர்—தெருவையொக் கும். யாறு—மாணிக்கக்கங்கை. தாழ்ந்துநீளச் செல்லுதலா னும் இருகரையினும் பொழில்கள், ஓவியந்தீட்டிய, மரகதவிரத் தினத்தாலான, மாணிககம் விளக்காக வொளிவீசும் மேனிலை மனைகள் போலத்தோன்றுதலானும் மாணிக்கக்கங்கை மக்கள் நடக்கும் ஊர்த்தெருப்போல்வதாயிற்று. "யாறெனக்கிடந்த

தெரு" வென்பது மலைபடுகடாம். "யாறுகிடந்தன்ன வகனெ
டுந்தெரு" என்பது மதுரைக்காஞ்சி. கதிர்காமக்கிழவா—கதிர
காமத்திருவூர்க்கு உரியோனே! மழவா—வீரனே! வங்கக்கலிங்
கம்—வங்காளநாட்டின் ஒரு கூறாகிய கலிங்கநாடு. மகளார், ஆர்;
உயர்வுப் பன்மைப் பொருண்மை குறிக்கு மிடைச்சொல். தவ
மகள்—முருகன் திருவருளால் அவனுடைய திருவடிப்பேற்றின்
பொருட்டு உலகவாழ்வில் வெறுப்புப்பிறந்து துறவுபூண்டு கதிர
காமத்து வீற்றிருந்து முருகனை வழிபட்டு இன்புற்று நோற்றொ
ழுகிப்புகழும் சிறப்பும்பெற்று வாழ்ந்த பாலசுந்தரியெனப் பெயர்
வழங்கப்படும் நங்கையார்; இவருடைய வரலாற்றுவிளக்கம், முதற்
கட்சேர்க்கப்பட்டுள்ள கதிரகாமவரலாறு என்னும் கட்டுரைக்கட்
பெறப்படுமாதலின் ஆண்டுக்கண்டுகொள்க. மாண்பு—தவச்செய
லும் ஞானப்பேறும். நிறுப்ப—அழியாது நிலைபெறச்செய்தற்
பொருட்டு, சிங்கள வேந்தன்—கண்டிநாடாகிய, சிங்களநாட்டின்
கூற்றத்தை யாண்டுவந்த வேராசன். இவன் பெயர் திருவிக்கிரம
ராசசிங்கன் என்பது. இவன் இயற்பெயர், கண்ணுச்சாமியென்
பது என்ப. இவன் ஓர் ஆந்திரத்தமிழன். இவனே, கி—பி.
1798 முதல் 1815 வரையும் சிங்களநாட்டை யாண்டுவந்த கடை
மன்னன். இவனுக்குக் கோட்டை (இராசதானி) கண்டி. இவன்,
கி—பி. 1815-ம், ஆண்டிற் பிருட்டன்படைகளாற் கைக்கொண்டு
காவல்செய்து 1816-ம் ஆண்டில் தமிழகத்துத் தொண்டைநாட்டு
வேலூரிற் சிறைப்படுத்தப்பட்டிருந்து கி—பி. 1832-ம் ஆண்டில்
இறந்துபோயினன், என்பர். இவன் பாலசுந்தரியாருடைய பெய
ருக்குத்தகவுள்ள கட்டழகினால் ஈர்ப்புண்டு அவர்மேற் காதல்
செய்த வரலாற்றினை முன்னுரைக்கட்கண்டுகொள்க. வடமன்—
ஆரியன். இவன் வடவிந்தியாவினின்றும் கதிரகாமத்திற்குவந்து
யாதோவொரு காரணங்கருதி வேலவனை எந்திரமந்திரவலியால்
தன்னாட்டிற்குக் கொண்டுபோதற்கு முயன்றவொருதவமுனிவன்.
கலியாணகிரி யென்பது இவன் பெயர். இவன் வாழ்ந்தகாலவரை

யறை இன்னுந் துணியப்படவில்லை. கலியாணகிரி யென்னும்
இவன் பெயர், இம்முனிவனே கதிரகாமமலைக்குக் காரணம் பற்றி
யிட்டு வழங்கியதாய்த் தனக்குந்தானே வழங்கிக்கொண்ட பெயர்
போலும். இவனைப்பற்றிய வரலாறும் முன்னுரைக்கட்குறிக்கப்
பட்டுள்ளது ஆண்டேவிளங்கக்கண்டுகொள்க. இவனால் நிறுத்தப்
பட்ட முருகமந்திரவடிவமே கதிரகாமத்திருக்கோயிலில் இப்பொ
ழுது வழிபாடாற்றப்பட்டுவருவது என்பர்.

அக்கோயிலில் இப்பொழுது விக்கிரக வடிவமில்லையாயினும்
முருகன் திருவருள் ஆண்டு வெளிப்பதற்குக் காரணம் அம்மந்திர
வடிவம் ஆண்டு நிலை பெற்றிருப்பதேயாம் என்பர். அம்மந்திர
வடிவமடங்கிய தகடுதான் பெட்டிக்குட் பொதியப்பட்டுச் சிறப்புச்
செய்யப்பட்டு வருகின்றது எனக் கூறுகின்றனர். இக்கூறிய
வரலாற்றால் அவ்வடநாட்டு முனிவன் கதிரகாமத்திற்கு வருமுன்
னரே முருகக் கடவுள் ஆண்டு வீற்றிருந்தருளியது பெறப்படும்.
பெறப்படவே முன்னிருந்த முருகன் கோயில் எக்காரணத்தாலோ
சிதைக்கப்பட்டுப் போனதன்பின்னர் அவ்விடத்திலேயே பின்பு
இப்பொழுதுள்ள சிறிய குடிசைக் கோயில் அமைக்கப்பட்டிருக்க
வேண்டும் என்பது தெரியவரும். மாணிக்க விக்கிரகமும் மறைக்
கப்பட்டுப் போயிற்றுப்போலும். இன்னும் இதனை நன்கு ஆராய
வேண்டும். பீழை—துன்பம். பெருமிதம்—வீரம். சுவையென்
றது ஒன்பது சுவைகளுள் ஒன்றென்றவாறு. பெருமிதச்சுவைக்
குக் கடவுள் முருகனாதலின் முருகன் பெருமிதச்சுவை வடிவமா
யிருப்பன். சுவையென்றது புலனெந்தலையன்று. பொன் உருகு
தற்குத்தக ஞானத்தைப் பொழல் என்றது தகுதியணி. ஏது
வணிப்பாற்படுப்பர் தண்டியார். இத்தகுதியணியினுள் உருவக
வணிகலத்தலும் கண்டுகொள்க. பிணிமுகம், என்பது முருகக்
கடவுளுடைய யானைக்குப் பெயர் அவனுக்கு யானையூர்தியும்
உண்டு. யாழிற்பிறவா வின்னிசையென்றது விலக்குருவகம்.

முறுவல்—பல். முறுவற் சிறுநகையெனக் கூட்டுக. அவிழ்முறுவல்—சோறுபோலும் வெள்ளிய சிறிய பற்கள். சிறுநகையைக் கண்டார்க்குப் பிறவி கெடுமாதலிற் சிறுநகை பிறவிக்குப் பகையாதற்றன்மை யுடைத்தாயிற்று. முகிழ் முகிழ—சிறிது சிறிதாக அரும்பிவெளித் தோன்றிவர. சீர்ப்ப—வாய்ப்ப. திருமகள்—செல்வ மகள். திருமகளாகிய வள்ளி. வள்ளியைப்பெற்ற மானாக வந்தது திருமகளாகிய இலக்குமியாதலின் வள்ளி திருவின் திருமகளாயினள். இனி வள்ளி முற்பிறப்பின்கண் திருமாலின் வலக்கண்ணிற் பிறந்திருந்தவாறே இப்பிறப்பின்கண் வந்து தோன்றுதலால் திருமகளுக்கு மகளென்றவாறுமாம். இனித் திருவின் திருமகள் என்பதற்கு எல்லார்க்கும் நல்லஆக்கத்தைக் கொடுக்கின்ற திருமகளாகிய கடவுளுக்கும் தான் ஆக்கங் கொடுக்கின்ற திருமகளாகிய கடவுள், வள்ளியென்றதாகக் கொண்டு வள்ளியை இலக்குமிக்கும் இலக்குமியாக்கித் திருவினுடைய திருவாகிய மகள் என விரித்துப் பொருளுரைப்பினுமாம். திருமாலுக்கும் இடுக்கண் செய்த சூரனைக்கொன்று திருமாலையும் வாழ்வித்துக்காத்தலின் முருகனால் திருமாலின் மனைவியாகிய திருமகளும் வாழ்ந்தாளாயினள். ஆகவே முருகனுடைய சத்தியாகிய வள்ளி திருமகளுக்குந் திருமகள் என்பது பொருந்துமாதல் கண்டுகொள்க. அன்றி முருகனைப்பரசிவமாகக் கொள்ளுங்கால் வள்ளி பராசத்தியாமாதலானும் வள்ளி திருமகளுக்குந் திருமகள்; எனக் கூறப்பட்டனள் எனினுமாம். செங்கோ வென்பது செங்கீரையென்பதன் மரூஉமொழி. செங்கீரையென்பது இசையெச்சம். செங்கீரையாடுக வென்றதெனக் கொள்க.

சா. எட்டுப்பத்து என்பது உலகவழக்கு நவிற்சியணியாய்க் குறிநிலையுமாயிற்று, ஐந்தாறு என்றல்போல் எட்டுப்பத்து என இணைத்தும் உலகம் வழங்குதல் ஒலித்தது. பிரமதேவனுக்குக் கையும் விழியும் எவ்வெட்டு. உருத்திரனுக்குப்பப்பத்து. அவை உணர்தற்கும் உதவற்கும் போதாதனவாம் என்றவாறு. பன்னி

ரண்டு கைவிழியுடைமையான் முருகன், அவரினுமிக்கான் என்றவாறு. சாலுமோ—போதுமோ; ஓகாரம் எதிர்மறை. போதாவென்றவாறு. பன்னிரண்டு; னகரவொற்றுத், தொகுத்தல். பன்னிரண்டுநீள் என்னும் அடைமொழியை விழிக்கும் கூட்டிக்கொள்க. ஐது—அழகியதாகிய. சான்று—மேற்கோள் (சாட்சி) ஆலும், ஓவும் அசைநிலையிடைச்சொற்கள். என்ப; வென்பதனையும் அசைநிலையாக்கினுமாம். விளியாத—கெடாத. இருண்மை—ஆணவமலத்தின் தன்மை. அஃதாவது: அறியாமை. வற்று—வல்லது. வேல், ஞானசத்தியைக்குறிக்குமாதலின் இருண்மை, தீண்டாமை குறித்துக்கொள்ளப்படும். வேறு, ஏனையென்னும் பொருட்டு. ஈரியல்பும் என உம்மைமாறுக. எனவே ஞானசத்தியொழிந்த இரண்டு சத்திகளை ஈரியல்பு என்றவாறாயிற்று. இருமடந்தைமார்: வள்ளிநாய்ச்சியாரும் தேவசேனைநாய்ச்சியாரும். வள்ளிநாய்ச்சியார் இச்சாசத்தியும் தேவசேனைநாய்ச்சியார் கிரியாசத்தியுமாகக்கொள்க. இரு மடந்தைமாரும் ஈரியல்பாம் எனமுடிக்க. மாரும் என்னும் முற்றும்மைதொக்கது. ஈரியல்பும் என்னும் முற்றும்மையைக் கூட்டிக்கொள்ளினுமாம். இங்ஙனம் வேற்படையும் மனைவியரிருவரும் ஞானசத்தியும் ஏனையிரண்டு சத்தியுமாம் என்பது.

"ஞானசத்தியினல்வைகு நவையறுசிவன்பாகத்தி
னனபேரிச்சா சத்தியரிதுசெய் கிரியாசத்தி
யூனமின் மூன்றுமொன்றாயுயர்வுடனிருத்தல்போல
மானவேற் படையான்சிந்து மாநகர்வதிந்தான் மாதோ

என்னுந்திருச்செந்தூர்த்தலபுராண வள்ளியம்மை திக்கலியாணவத்தியாயச்செய்யுளானும்.

"கல்லகங்குடைந்த செவ்வேற்கந்தனோர் தருவதாகி, வல்லியர் கிரியை ஞானவல்லியின் கிளையாய்ச்சூழப், பல்லுயிர்க் கருளைப்பூத்தப்பவநெறி காய்த்திட்டன்பர், எல்லவர் தமக்குமுத்தியிருங்கனியு

தவுமென்றும்.'' என்னுங்கந்தபுராண வள்ளியம்மை திருமணப்
படலச் செய்யுளானும் பிறமேற்கோள்களானும் பெறப்படும்.
வள்ளியை ஆன்மாவென்பார்க்குத் தேவசேனையாகிய கிரியாசத்
தியோடொத்த இச்சாசத்தி வேறுவேண்டுமாதலானும் அஃதின்
மையானும் வீடுபெற்ற ஆன்மாவைப்பக்கத்திலவைத்து வேறுபாடு
தோன்றக்காட்டி நிற்றல் பொருந்தாமையானும் பொருந்துமேல்
சிவபெருமானுக்கும் வீடுபெற்ற ஆன்மாவோடுவேறுபடத்தோன்றி
நின்ற வடிவங்காட்டி வழிபடவேண்டுமாதலானும் அங்ஙனம் வழி
படக்காணாமையானும் வீடுபேற்றின்கண் ஆன்மாச்சிவத்தை
நுகர்தலன்றி சிவம் ஆன்மாவை நுகருமென்றல் கூடாமையா
னும் அங்ஙனம் நுகருமேல் அஃது ஆன்மாவை நுகர்வித்தா
லாமாதலன்றித் தான் நுகர்தலாகக்கொள்ளப்படாததலானும்
வேட்டுவக்கிழவனை மணஞ்செய்துகொள்ள வள்ளி உடம்பட்டு
விட்டுப் பின்னர் முருகவடிவத்தை மணஞ்செய்துகொண்ட
தனையுய்த்துணருங்காற் கற்புக்கு இழுக்கு நேருமாதலின் வள்ளி
இயற்கையாகவே முருகனுக்கு வாழ்க்கைப்படவேண்டும் என்னும்
வேண்டுகோளும் முருகன்பாற் பேரன்பும் உடையளாயிருந்தி
ருக்க வேண்டும் என்பது தெரிதலின் அவளை வலிந்து ஆட்கொள்
ளவேண்டியதில்லையாதலானும், முருகக்கடவுளை நினைந்திருப்ப
வளை வேட்டுவன் முதலிய வடிவத்தால் மயக்குதல் கூடாமையா
னும் கிரியையின்றிச்செய்யுமணம் இச்சையினாலாவதாதலிற் களவு
மணம், வள்ளி இச்சாசத்தியென்பதனைக்காட்டி நிற்றலானும் முரு
கன், வேட்டுவன் முதலியவடிவத்தால் வாராது தன்னியல்பால்
வள்ளிக்குக்காட்சியளிப்பானாயின் அவள் உடனே தன்னை மணஞ்
செய்துகொள்ள வுடம்பட்டுவிடுவள், அதனாற் களவொழுக்கச்
சுவை நிகழ்ந்து வள்ளி இச்சாசத்தியென்பது தோன்றாதாதலா
னும் வள்ளி பக்குவமில்லாத ஆன்மாவாயின் அவள்போலும் இன்
னும் பல மகளிரை அவ்வாறு மணஞ்செய்தவாலாறு சொல்லப்பட
வேண்டுமாதலானும் அங்ஙனம்சொல்லப்படாமையானும் களவு

மணம் ஆன்மாவைக் கடவுள் ஆட்கொள்ளுமுறையோடு ஒருபுடை
யொப்புமையுடையதாதலின் திருக்கோவை முதலிய செய்யுட்களை
நுவலாநுவற்சியணிபற்றிப் பெரியோர்கள் கூறினார்கள் எனத்
தெரிதலானும் பெண்களுக்கு இன்றியமையாத கற்பு என்னும்
அறம்கெட ஆட்கொள்ளுமுறையாகிய ஞானத்தை யேற்றுதல்
கூடாமையானும் கூடுமேல் கற்பென்பது இறைவன் சொல்லி
யருளிய அறம் எனப்படாமையானும் முற்கூறியவாற்றால் வள்ளி
கடவுள் நினைவின்றி மயங்கியிருந்தாள் என்பது பொருந்தாது
எனப் பெறுதலிற் குறவரை ஐம்புலவேடரெனல் பொருந்தாமை
யானும் அவர்களும் முருகனை வழிபடுந்தன்மையுடையராதலா
னும் ஐம்புலவேடராயின் வள்ளியை முருகனுக்கேயல்ல வேறியா
ர்க்கும் மணஞ்செய்து கொடுக்கக்கடவரல்லராதலாதனும் அங்ஙனம்
சொல்லுதல் பொருந்தாமையானும் முருகனும் தங்களைக் கேளாது
வள்ளியைக்கொண்டவதற்கே மகண்மேற்கொண்ட வுலகியற்காத
லால் வேடர் முருகனோடு பொருதார் எனச் சொல்லுதலன்றி
வள்ளியை மணஞ்செய்துகொண்டதற்குப் போர்பொரவில்லை
யாதலானும் முருகனும் அழகிய செல்வ வேட்டுவக்கோலத்தோடு
வள்ளியினிடம வந்து கேட்டதுபோலக் குறவரிடம்போய் வள்ளி
யை மணஞ்செய்துதரவேண்டும் எனக்கேட்டிருப்பானாயின் அவர்
களே வள்ளியை முருகனுக்கு மணஞ்செய்து கொடாமலிருக்க
மாட்டார்களாதலானும் அங்ஙனம் கொடுக்கத்தக்கவரை ஐம்புல
வேடர் என்றல் தகாமையானும் அவரும் வள்ளியைக்காத்து
வளர்த்ததன்றி முருகனை வழிபடச்செய்யாமல் வள்ளியை மயக்க
விலலையாதலானும் அங்ஙனமயக்குதல் குறவர்சாதி வழக்கமன்றாத
லானும் தம்பிள்ளைகளை முருகவழிபாடுசெய்யப் பயிற்றுதலே அச்
சாதி வழக்கமாதலானும் முன்னோரும் வள்ளியை ஆன்மாவெனக்
கூறாமையானும் இச்சாசத்தியெனவே கூறுதலானும் பிறவாற்றா
னும் வள்ளியை ஆன்மாவென்றல் பொருந்தாமைகண்டுகொள்க.
கோழியுமயிலுமுறையே ஆகமஞானமும் அனுபவஞானமுமாகிய

மறைமொழியும் திருவருளுமாம் என்றது நிரனிறைபணி. ஏழையர்—பிறமதத்துமாக்கள்.

௭. இகலும்—மாறுபடும். இணை—இரண்டு. இயன்று பயில்—சொல்லிப்பழகிய. அஞ்ஞை—அன்னை. கண்ணியாகிய அன்னையென்க. செம்மல்—மகன். தொகல்—கூடுதலையுடைய துயில்—சுழுத்தி மீத்துயில்—துரியம். துயின்மீயென்பது மீத்துயில் என நின்றது. கண்மீயென்பது மீகண் எனவருமாப்போல. மீமிசைத்துயில் — துரியாதீதம். துயின்மீமிசையென்பது மீமிசைத்துயில் எனமாறிற்று. துயிற்குமேலிற்குமேல் என்றவாறு; அஃதாவது. சுழுத்தியவத்தைக்குமேலாகிய துரியாவத்தைக்குமேல் எனப்படும் துரியாதீதாவத்தையென்பதாம். இருண்மை—கேவலாவத்தை. மருண்மை—சகலாவத்தை. தூய்மை—சுத்தாவத்தை. வாளாதிருந்த—சும்மாவிருந்த. தொன்று—முன். வெண்குன்று—கயிலாயமலை. குன்றினங்கண—குன்றினிடத்து, பகலிரவுமாற—பகற்பொழுது இராப்பொழுதாக வேறுபட. பச்சையென்றது உமையினிறத்தை. மறுபால்—முருகக்கடவுட்கு வலப்பக்கம். வெள்ளையென்றது சிவபெருமானிறத்தை. செக்கர்வான்—அந்திமேகம். செம்மையென்றது சிவனுக்கும் உமைக்கும் நடுவேயிருந்த முருகனது நிறத்தினை. செம்மை; ஈண்டுமுருகக்கடவுள். பச்சையையும் வெள்ளையையும் முறையே உமையும் சிவனுமாகக்கொள்க. செக்கர்வானன்னசெம்மை யென்றது சிவனும் உமையும் முறையே பகற்பொழுதும் இராப்பொழுதுமொப்பர் எனக்குறிப்பான் உவமங்கோடற்கு. அவர் என்றது அவ்விருவரையும். பகர்மொழி: அம்மா அப்பா, என்பன. அகவிடம்—உலகம். மன்போசிரியவென்றது குறிப்பேது.

௯. புலரி—விடியற்காலம். புகலுரை—நீசொல்லப்பழகிக்கொள்ளவேண்டும் சொற்களை. உரையேம்—சொல்லிக்கொடுக்க முயன்றேமல்லேம். பருகிய—குடித்து இன்புறுதற்கு. கேட்பேம்—நீசொல்கவென்று கேட்கின்றேம். ஊமைப்பிள்ளா

யென்று முருகனைக்கூறியது, உப்பூரிகுடிகிழான்மகன் உருத்திரசன்மனாகிய ஐயாட்டையகவை யூமைப்பிள்ளையாகவந்தது கருதி. உயிர்மெய்—உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களுமென உம்மைத்தொகை. ஏனையவுயிர்:—அகரமொழிந்த பதின்மூன்றுயிர். உயிர்ப்ப—ஒலிப்ப. அலர்-தாமரையிதழ். செங்நாவரசு—திருநாவுக்கரசுநாயனார். அவரையழைத்தது: ஆளுடையபிள்ளையார் அப்பா! என்றழைத்தது. உயிர்ப்பவும்கைப்பவும் குழையவும் அரசையழைத்தாயெனவும் உயிர்ப்பவும் கைப்பவும் குழையவும் அருள் எனவும் தனித்தனிக்கூட்டிக்கண்டுகொள்க. உயிர்ப்ப அழைத்தாயென்றது வாயங்காப்பவென்றவாறு; வாய்திறத்தலோடே அகரவெழுத்தும் பிறத்தலானும் அதனால் ஏனையெல்லாவெழுத்துக்கட்கும் அவ்வகரம் இன்றியமையாதகாரணமாய் நிற்றலானும் அகரமுதலாகிய அம்மா அப்பா என்னும் இயற்கைத்தமிழ்ச்சொற்களையே சொல்லத்தொடங்குதலானும் அன்றேல் அகரமட்டுமேயாவது ஒலித்தொழிதலானும் அவ்வாறு கூறப்பட்டது என அறிக. அஃது:—அவ் அப்பா அம்மா என்னுஞ் சொற்கள். அண்பேயார்,—அணுகிய பேயார் எனவினைத்தொகை. பேயார்—காரைக்காற் பேயம்மையார். தந்தை — சிவபெருமான். அவன் அவரையழைத்தது: அம்மாவென்றது.

௰. கோதாட்ட — குற்றத்தைக்குணமாகப்பாராட்ட; இது சிறுகுழந்தைகளிடத்துத் தாய்தந்தையர் முதலியபேரன்புடையார்க்கு நிகழ்தல் வழக்கிற்கண்டுணர்க. ஏறேயெனவிளித்தது ஆணேறுமாம் சிங்கவேறுமாம்; ஆகுபெயரன்று; உவமைபற்றிவந்ததிணைவழுவமைதி. யாளி—சிங்கம். வெள்கி—நாணி. உளைய—வருந்திக்கிடப்ப; என்றது தற்குறிப்பேற்றவணி. ஏர்—அழகு. நீர், மேலெழுந்தவென்றுமாம். மாணிக்கக்கங்கையாறறிற்கு வடவையாறு என்பதும் ஒருபெயர். இதுவேமுற்படவழங்கிய பெயர் போலும் இஃது அருணகிரிநாதரருளிச்செய்த கதிரகாமத்திருப்புகழிற் கண்டெடுக்கப்பட்டது. சோனை—விடாப்பெருமழை. பாகு—குழம்பு. தோய்ந்த—இறுகிய. கட்டிக்கரும்பு என்றதனைக்

கரும்பின் கட்டியென மாற்றிப் பொருள்கொள்ளப்படும். கட்டி—வெல்லச்சக்கரை. சிறு—முருகன், பால்குடிக்குங்கால் நகத்தாற் கீறிய; என்றவாறு. அமுது—பால். ஊறல்—ஊற்று. கோமான், அண்மைவிளி. போலும் என்னும் முற்று, ஈற்றுயிர்தொக்குத் திரிந்துநின்றது. போனம் என்னும் முற்றுவினைச்சொல்லின் பின்னர் அத்தகை நறுமணத்தையுடைய நெய்யென இசையெச்சம் வருவித்துரைத்துக்கொள்ளப்படும். அன்பாகப்பொருந்திய நெய் என விரிக்க. எனவே அன்பை நெய் என்ற குறிப்பும் பெறப்படும். அன்பை நெய்யாக உருவகிக்குங் குறிப்பிற்குப்பொருந்த நறுமணத்தைச் சிவமணம் என்ற உருவகமும் படக்கூறியவாறு கண்டுகொள்க. அங்ஙனங்கொள்ளுங்காற் போலும் என்பது உவமவுருபன்று. உரையசைநிலையிடைச்சொல்லாகிய ஒப்பில்போலி. அவ்விடத்து நறுமணம் சிவமணமாகவுடைய அன்பாகிய நெய்யென விரித்துணர்ந்துகொள்க. இங்ஙனம் கொள்ளவே இரட்டுறமொழிதலுமாயிற்று. சோறென்றது "பாதகமேசோறுபற்றினவா" என்புழிப்போலவும் நின்றது. தொட்டு—தோண்டி. சொற்றேமும்பாளர்—பொய்யடிமையில்லாதபுலவர். உளங்கவர்ந்துண்டல் என்பது "என்னுள்ளங்கவர்கள்வன்" என்னும் பிள்ளையாருளிச்செயலை நினைப்பிக்கும். கவர்தல்:—தன்னையே நினைக்குமாறு செய்தல். உண்டல்: அத்தியான முதிர்ச்சியாற் சமாதியிலொடுங்கச்செய்தல்.

௰௧. ஆழி—திருப்பாற்கடல். குடம்—அமுதகலசம். அந்தண்—அந்தணர்; மறையோனை மறையெனவும் கொல்லனைக் கொல் எனவும் அரசனை அரசு எனவும் வழங்குமாறுபோல. அன்றி வேள்விக்கேற்ற அடையாக்கினுமாம். செந்தமிழின் வழக்கு: உலக வழக்கு செய்யுள் வழக்குக்கள். குழைந்துசொலும் வழக்கு—ஊடிச்சொல்லாடும் தருக்கவாதம். காழி—சீகாழியூர். பிள்ளையார் உண்ணப்பாற் சோற்றையுண்டவளவிற் சிவசம்பந்தஞானம் பிறந்தமையான் அச்சோறு ஞானத்திற்கேற்புடைத்தாகிய கலை

யென உருவகிக்கப்பட்டது. செய்யுளும் பண்ணும்பாடுதலாற் கலையும் சிவனைப் புகழ்தலால் ஞானமும் உடையராயினர். கனிவு—உருக்கம்: பரவச அன்பு. குறித்த—குறிகொண்ட. குறி: பெயரும வடிவும் குணமும் முதலாயின. அருண்மெய், அருளாகிய திருமேனியெனவும் அருட்சத்தியாலாகிய திருமேனியெனவும் கொள்க. சோற்றுணவுண்டால் உடம்பு பெருத்து வளரும் வழக்கியல் குறிப்பித்தது.

௰௨. ஆடும் என்றது ஐந்தொழிற்படுதலை. இருட்டிரள்—மும்மலம். அயரா—இளைப்ப; ஈண்டுக் கருத்து: பக்குவமாக என்பதாம். பெரியோன்—பரமசிவன். ஆடியிளைத்தல்: ஐந்தொழில் செய்து உயிர்கட்குத் தன்னையடையும் பக்குவம் வருவித்தல். ஆரியமுனிவர்: துருவாசர். துரியோதனன் வேண்டுகோளாற் காடுறை வாழ்க்கைப் பாண்டவர்பால் உரியபொழுது கழிந்து விருந்தாக வந்த துருவாசர் வெகுண்டு வைதிடாமைப் பொருட்டுத் துரோபதையினது அன்புடைமைக்கருளிக் கண்ணன் வந்து தோன்றிக் கழுவிக் கவிழ்த்திய பானையில் ஒட்டிக்கிடந்த ஒரு சோற்றவிழை யுண்டவளவில் நீராடப்போன துருவாசமுனிவர் நிறையச் சோறுண்டவர்போன்று வயிறு நிரம்பப்பெற்று விருந்துண்டலை வெறுத்து. விருந்து படைக்கமாட்டாமையால் நேரவிருந்த வெகுளியும் சாபமு மொழிந்து பாண்டவரையும் துரோபதையையும் வாழ்த்திச் சென்ற வரலாறு பாரதத்துட் கேட்கப்படும். அவ்வாறேபோல் முருகன் உண்ண உலகமுண்ணும் என்றவாறெனக் கொள்க. ஆர என்பனவெல்லாம், நிறைய உண்ணும்படியாக என்னும் பொருளனவாம். மலைகூவுதல்: எதிரொலியொலித்தல். மலை யெதிரொலி செய்தலைக்கேட்டு மகிழ்தற் பொருட்டு மலையையழைத்தல் சிறுமியர் விளையாட்டுக்களுள் ஒன்று.

௰௩. நீர்—கடல்நீர். மா—சூரபன்மனாகிய மாமரம். இனி, "அவுணரெல்லாருந் தம்முடனே யெதிர்ந்தார்வலியிலே பாதி

தங்கள் வலியிலே வந்து கூடும்படி மந்திரங்கொண்டிருந்து சாதித்த தொருமா" மரம் எனினும் அமையும். இங்ஙனமாகியவொரு மா மரம் முருகக்கடவுளால் வெட்டப்பட்டது என "அவுணர் நல்வல மடங்கக்கவிழிணர், மாமுதறடிந்த மறுவில் கொற்றத்து" என்னும் முருகாற்றுப்படைத் திருப்பரங்குன்றக் காட்சியடிகட்கு எழுதிய நச்சினார்க்கினியருரையால் தெரியவரும். இது மாயை மாமாத லிற் கீழ்நோக்கின பூங்கொத்துக்களையுடைத்தாயிருந்தது என்பார் நக்கீரர் "கவிழிணர்மா" வென்றார். இனிச் சூர்மாவை அவ்வாறு கூறாமல் வேர் மேலாகித் தலைகீழாக முளைத்திருந்தது என்பர் பிறர். நெருப்பு—நெற்றிக்கண்ணெருப்பு. நெருப்பின் முளைத்து என்றது தகுதியின்மையணி. நினைவு—அனுபவ தத்துவ ஞானம். புலங்காய்த்து என்பது பல்பொருட்சொற்றொடரணி (சிலேடை). ஐம்புல அவாவினை யவியச்செய்து எனவும் புலத்தினைக் காயாகக் காய்த்து எனவும் இருபொருள் தோன்றநிற்றலின். காய்காய்த்து என்பது புனைவுளியாயும் அவியச்செய்து என்பது புனைவிலியாயும் கொள்ள வருதலின் இருமைப் பல்பொருட் சொற்றொடர் என்க. நிறையப் பழுத்தவென்பதும் இருபொருள்படும். ஆன்மா அணுவாகாது வியாபகமாகப் பக்குவமாகி நிற்குமிடமானவென வும் மாத்திடமெல்லாம் நிறையப் பழம் பழுத்தவெனவும் கொள் ளப்படும். எனவே வீடுபேறேபழம் என்றவாறாயிற்றுகக்கொள்க. கற்பகம், சிறப்புருவகம். நேர்—வாய்த்த. அடி, மாத்தினடியும் காலடியுமாம். வெப்பம்—புழுக்கம். என்றது பிறவியான்வரும் மூத்திறத்துத் துன்பங்களை. அவையாவன: தன்னால் வருவதும் பிறவுயிர்களால் வருவதும் ஊழால் வருவதுமாம். தணிவாரோ வாழ்வாரோவென்னும் ஓகாரங்கள் எதிர்மறை. வாழ்வாரோ வென்ற கருத்து முன்னமே சூரபன்மனு லிறந்துபட்டிருப்பா ரென்றவாறு. ஓரின்—ஆராய்ந்தால். ஓரின் நீயார் யாமார் எனச் சொல்வடித்துணர்வார் பெருமையென்க. நீ யாரோ? யாமாரோ? வென்னும் ஓகாரங்கள் அசைநிலையோகாரங்கள். என—என்று ஐயுற்று ஆராய்ந்து. சொல்—ஞான நூல்களை. வடித்து—ஆராய்ந்து

துணிந்து. உணர்வார்—அனுபவித்துணர்பவர். உலவா—கெடாத. பெருமையை உணர்வார் எனக் கொண்டு கூட்டுக. ஆரோரோ வென்னும் ஓகாரம் அசைநிலை யிடைச்சொல். ஆர் ஆர் என்பன எதிர்மறைப் பொருள் குறிக்கும் வினாவினைக் குறிப்பு முற்றுக்கள். கொள்ளுங்கால் என்பதற்கு அங்ஙனமுணராரையெனச் செயப்படு பொருளும் அவாய்நிலை யான் இசையெச்சமாக வருவித்துரைக்கப் படும். கலைமான்—நாமகள்.

௰௪. கொற்றம்—அரசியல் செல, நாடெங்கும் பரவ. வரிசை—மேம்பாடு. சிறந்த—ஏனையரசர்க்கும் பொதுவாகாது தமக்கேயுரித்தான. கட்டில்—சிம்மாதனம். ஈரம்—அன்பு; "ஈரமிலா இப்படிறிலவாம்" என்பது முப்பால். தோய்ந்த—நனைந்த; மனத்திற்கு நனைதலாவது: ஆர்வமிகுதல். இழைத்த—செய்த. கோட்டம்—கோயில். மணிமேனி—மாணிக்க விக்கிரகம; அழகிய மேனியுமாம். எவனோ—எக்காரணத்தாலோ. கோட்டை—இராசதானி. எழும்—படையெடுத்துப் புறப்பட்ட. பிழம்பு—வடிவம். வெளிநிற்ப வென்பது கட்புலனாகவெனவும் உருவின்றிப் பாழ் வெளியே வடிவமாகக் கொண்டு வழிபட நிற்ப வெனவும் இரு பொருள்படும். தலையளி—அன்பான் முகமலர்ந்து இன்சொற் கூறல். தொல்குடி—பழம் பெருங்குலம். மரபு—பாரம்பரியம். தொல்குடி மரபின் தலையளி, யாரையு முவப்பித் தலிற் குளிர்ந்து, இடையறாது வழி வழியாகத் தொடர்ந்தொழுகி வருமாறுபோல மாணிக்கக் கங்கையும் எவ்வுயிர்க்கும் குளிர்ந்து வற்றாது இடையறாது தொடர்ந்து ஒழுகி வருதலின் அவ்வாறு தொல்குடி மரபின் தலையளியொழுகுதல்போல ஒழுகும் எனப்பட்டது. இனித் தலையளியாவது: முருகன்பால் அவ்வாறு மேற்கொண்ட தலைமையன்பு எனக்கொண்டு அக்கங்கை நீரின் இடையறாத குளிர்ச்சியுடைமையைத் தலையளியெனத் தற்குறிப்பேற்றமாகக் கூறியதெனக் கொள்ளினுமாம். இப்பொருட்கு,ப்போல் என்பது ஒப்பில் போலியாகிய அசைநிலை இடைச்சொல்லாகவும்

தொல்குடி மரபு என்றது, அவ்வாறு உயர்ந்த மலைக்கட் பிறந்து பண்டுதொட்டே இடையறுது நீரொழுகும் ஒழுக்கத்தையெனவும் கொள்ளல் வேண்டும், வாரம்: அன்பும் யாற்றங்கரையுமாம். அலையெறியு மாணிக்கத்தை அடிதூவும் பூவென்றது உருவகவணி தூய்—தூவி. தூவுதலும் வாழ்த்துதலும் தற்குறிப் பேற்றம்; மணி சிதறுதலைப் பூவருச்சித்தலாகவும் அலையும், வெள்ளமும் ஆரவாரித்தலை வாழ்த்துதலாகவும் குறித்தமையான். காமம்; கதிரகாமம் என்னும் பெயரின் இசையெச்சம்; மரூஉமொழி யெனினுமாம். இவ்வாறு முன்னும் பின்னும் வருமாறுணர்க. தந்தை—சிவபெருமான். ஒரு மாம்பழம்—தன்னை வலம் வருதலால் உலகத் தொகுதியை வலம் வந்தவனாகிய மூத்த பிள்ளைக்குத், தான், சொன்னவாறே சிவபெருமான் பணயமாக நல்கிய மாம்பழம். பெருந்தகை — சிவபாதவிருதயர். புடைத்தல் — அடித்தல் கொல்லும் ஓவும் என்பனவற்றுள் யாதானுமொன்றனை வினைவிடைச்சொல்லாகக் கருதிக்கொண்டு ஏனையதனை அசைநிலையிடைச்சொல்லாகக் கொள்ளல் வேண்டும். புலவர்—தேவர் கவுள்—கன்னம். வணர்—சுருண்ட. குழலி—வற்புழிக்கோடலான் வள்ளியென்க. முலைச்சாய்ந்து—முலை தலையணையாக அதன்கண் தலைவைத்து. பாயல்—படுக்கையணை. அலச—தளர்ந்து வருந்த. கொணரும்—கொண்டுவந்து வழிபடும். அசைவு—இளைப்பு. தவிர—நீங்குதற்குக் காரணமாகிய. கொள்ளாய்-கொள் என்னும் ஏவல் வினை.

௰௬. பொய்யாமொழி—பொய்யாமொழி யென்னும் புலவர் பெருமான், தஞ்சைவாணன் கோவையாக்கியோன். வழு—மாறுபடக்கூறல் என்னும் மலைவு. முட்டையென்பது, கோழிக் குஞ்சையும் பாடுவதில்லையெனப் பரியாயவணிபடக் கூறித் தன் வேண்டுகோட்கு உடம்படாத அம்முரட்டுப் புலவன் அக்குஞ்சைக் காட்டினும் குறைந்த முட்டையைப் பாடினனாகச் செய்தற்கு வேட்டுவக் கோல முருகக் கடவுள் தனக்குத் தானே இட்டுக்

கொண்ட விடுகுறியாக்கப் பெயர். முருகக் கடவுள், ஏனைச் செல்வரைப் பாடும் புலவரைப் போலாது புலவனைப்பாடும் புலவனுயினன் என்று கூறியவாறு காண்க.

“ விழுந்ததுளி வானத்தே வேமென்றும் வீழ்ந்தா
லெழுந்து சுடவருமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிப்பகைஞர் போல் ”

என்பது வேட்டு முருகன் பொய்யா மொழியைப் பாடிய திருப்பாட்டு. புலவராற்றுப்படை—திருமுருகாற்றுப்படை. பாட்டு என்றது, பத்துப் பாட்டு என்னும் சான்றோர் தொகைச் செய்யுளின்கட் டொகுக்கப்பட்டுள்ளது என்றவாறு. பாட்டால் உயிருண்டவென விரித்துப் புணர்க்க. பாட்டின் பெருமையை அறியாத பூதம் எனினுமாம். கையார—கைநிறைய. கையேந்தும்—ஒழுக்கத்தோடு தாங்கும். அஃதாவது: இடைக்குக் கீழ்ப்படாமல் மேற்படத் தாங்கும் என்றவாறு. காதலியர் முலைகளை, அவர், முருகனை வழிபட மார்பிணைத்துக் கைநிறைய ஏந்திக்கொண்டு வந்திருக்கும் இளநீராகும் என இளநீரல்லாததனை யிளநீரென மயங்கக் கருதிக் காதலர் கைப்பற்றியதென்றது மயக்கவணி. முருகவேளைக் காமவேள் என்ற நயமும் உணர்க. தவங்கிடந்தாட்கு—தவங்கிடந்தவுமையம்மை, மகிழ்வெய்தற் பொருட்டு. அமம-உரையசை நிலையிடைச் சொல்; யான் சொல்லுவதனைக் கேள் என்னும் ஏவற் குறிப்புணர்த்தும். நன்று என்பது இகழ்ச்சிக்குறிப்புச் சொல். நல்லதன்றென்பது கருத்து; “ கற்கறித் நன்கு அட்டாய் ” எனக் கூறுவதுபோலப் படிற்றுப் புகழ்ச்சியணி.

௰௭. அரவு—பாம்பும் பதஞ்சலி முனிவரும். புலி--புலி விலங்கும் வியாக்கிரபாத முனிவரும். கதிரகாமத்தில் முருகக் கடவுளது திருவருளாற் பாம்பும் புலியும் அறிவு வந்து முருகக் கடவுளை யருச்சித்தின் புறுந்தன்மையனவென்க. நவை—குற்றம்.

ஆடல்—சிதம்பரத்திற் கூத்தாகவும் கதிர்காமத்தில் திருவிளையாடலாகவும் கொள்க. வெளிபுல்குதல், சிதம்பரத்திற்கும் கதிர்காமத்திற்கும் ஒப்பக்கொள்ளப்படும்; வெளி வடிவமாகக் கோயில் கொண்டெழுந்தருளி நிற்றல். தில்லங்காடு—தில்லைவனம், சிதம்பரம். காமம்—கதிர்காமம். அது—பகுதிப்பொருள் விகுதி. வினாவோகாரம் தெரிநிலைப் பொருள் குறித்துநிற்கும். விளைவிப்பவன்—பரமசிவன். வென்று—புலன்களை வென்று. ஒளிர்—உண்மையறிவு தோன்றும். பூ—மணம். "மலர்மிசை யேகினான்" என்பது முப்பால். கன்றுவ, கூத்தாடிச்சிவப்பன வெனவும் விளையாடிச் சிவப்பனவெனவும் கொள்க. உள் வெளியெனக் கூட்டி மனவெளியென்க, புலனாகாத பொறிகளாற் பற்றப்படாதவெனவும் உருவமில்லாதவெனவும் இரு பொருள் கருதிக் கொள்க. உடலம்—வடிவம். அளி—அருள். இயல்பு—குணம். இதுகாறும் கதிர்காமத்தைச் சிதம்பரமாகவும் முருகக் கடவுளைச் சிவபெருமானாகவும் கூறியதாகக் கொள்க. நீதாமேயாதல் என்றது ஞானயோக சமாதியுடையார் தம் உயிர்த்தன்மை மறையச் சிவமேயாய் நிற்றல். மறை முடிபு—வேதாந்தம்: உபநிடதம். இன ஞாயிற்றினொளியென வென்றது "பலர்புகழ்ஞாயிறு கடற்கண்டாங்கு" என்ற நக்கீரனார் வாய்மையினை நினைந்து. துச்சில்—ஒதுக்குப்புறமான விடம். ஈண்டுத் துச்சிலென்றது உடம்பினகத்து நெஞ்சினுள் ஒரு விரலளவாய சிற்றிடம். உயிர்ப்புக்கில்—உயிர்க்குப், புறம்போகாது நிலைத்துத் தங்கி வாழ்தற்குரிய வீடு. அளிப்பல்—கொடுப்பேன். தொட்ட—அணிந்த. வளை—கைக்காப்பு. ஒரு காரியத்தைத் தொடங்கி முடித்தன்றி நில்லேன் என்னும் நோன்பிற்கு நினைகுறியாகக் கங்கணமணிதல் அக்காலத்துச் சூளுறவுகளுள் ஒன்று. மெய்ப்பொருள்—சுட்டிறந்த பொருள்

௰அ. சேரி—குறச்சேரி. கிள்ளை—கிளி, கிள்ளைமொழி—வள்ளிநாய்ச்சியார்; உவமத்தொகைநிலைக் களத்துப் பிறந்த அன்மொழித்தொகைப் பெயரெழுவாய். சேரியில் வளர்ந்தவென

விரிக்க. பயனிலை தொக்க தொகை. திரு—வீற்றுத்தெய்வம். ஞெமிரும்—பரந்திருக்கும். "தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றது" என்பது நெடுநல்வாடை. "வரிமணன் ஞெமிரக் கற்பக கடக்கும்" என்பது புறம். மாமை—சுணங்கு. இகல்—போர். இடைந்து—தோற்று. அயரும்—சோர்ந்து விழும். முற்றி—(மதில்) வளைந்து. சூரனை யுயிர்பருகியெனக்கூட்டுக. வென்றி வாகையென்க. கல்வி வெற்றிவாகை முதலியனவு முண்மையின் இது போர் வெற்றிவாகையென விதந்து கிளக்கப்படும். ஈரியல்—இரண்டு வகை; அவை: பொன்னாற் செய்த பூவும் மலர்ப் பூவுமாம். துணர்—பூங்கொத்து. எறி—கைவிடும். காழ்—வேற்காம்பு. இணர்—பூ. சூரன் கவர்ந்து சிறைசெய்து வைத்த புத்தேளிரை மீட்டலிற் கரந்தைப் பூவுஞ் சூடிற்று. எழிலுற—அழகாக. மள்ளர்—வீரர். "செருவிலொருவ பொருவிறன் மள்ள;" என்பது பெரும்பாண். கலவிப் போரில் தோற்கும் நீர் இங்ஙனமான வேற்படையைக் கைக்கொள்ளும் வீரராமாறென்னை? யென்றது கூடாமையணி. தண்டியார்க்குச் சிறப்பணி. இனி அங்ஙனம் வியந்தது வியப்பணியுமாம். இங்ஙனம் பலவணிபட நிற்றல் கலவையணி. ஈண்டு—இந்நிலவுலகத்திற்கு. இழிதா—இறங்கிவா. ஏனுலகு—ஏனைத்துறக்கவுலகம். கண்ணேணி—கணுக்களையே படியாகக் கொண்டு ஏறியிறங்க இணைத்துப்பிணைக்கு மூங்கிலேணி. பெருமானடிகள் என்றது—முருகக் கடவுளை. இஃதொரு பெயர்ச்சொல் என்பதனை "ஆலவாயிற் பெருமானடிகள்" எனக் களவியலுரை வழங்குமாற்றான் உணரலாகும். இஃது ஒருமைப் பன்மை மயக்க வழுவமைதித் தொடர். பெருமானடிகளது வெற்றியை வேற்படைக்குக் கூறியது; "நீடியவரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை சூடிய சிலை"யென இராமன் வெற்றியை அவன் விற்குக் கூறியதுபோலக் கொள்க

வாரி—கடல் ஊழி—உலகமுடியும் கடைக்காலத்தில். ஊழிக்கண் எனவுருபுவிரித்து மொள்ளுறுமென்பதனொடுமுடிக்க.

ஊழிக்காலத்துமுட்பட நீர்வற்றற்பாலதல்லாத கங்கையெனற்பாலதனை அம்முகில் மொள்ளும் கங்கையெனவேறொருவாற்றாற் குறிப்பித்தது, பிறிதினவிற்சியணி. வற்றற்குரியகங்கையை வற்றாது என்றது தொடர்புயர்வு நவிற்சியணி. ஆகம்—உடம்பு. இசை—புகழ். வைகலும் என்னும் உம்மைதொக்கது; நாள்தோறும் என்பதுபொருள். நாள்நீராடல் என்பது நாள்தோறும், விடியற்காலையிற் குளித்தற்கு ஒருபெயர், நாள்—விடியற்காலம். மாறுதல், ஈண்டுவெதும்புதல். கொல், ஐயக்குறிப்பிடைச்சொல். என—என்று தோழியரைநோக்கிக்கூறி முருகவேண்மேற்சென்ற காமவெப்பம் பொறுத்தலாற்றாது போய்ப்புழுங்கிவருந்த. வான் மகளிர், தமக்கு முருகனது கட்டிளவனப்பின் மேனிகழ்ந்ததனை வாலுண்டாய காமவெப்பத்தைக் கங்கையாறுதந்ததாகக்கூறுவது, மயக்கவணியும் தண்ணீர்யாற்றினை வெந்நீர்யாறென்றது வியப்பணியும் இயற்கைவெந்நீர்யாறுகொல்லோ? முருகன் நீராடலானுயசெயற்கை வெந்நீர்யாறுபோலுங்கொல்லோ? எனவையுற்றவையுறவு, ஐயவணியும், இங்ஙனமாதலிற் கலவையணியுமாம் எனக்கொள்க. நல்கி—அங்ஙனம் அம்மகளிர்படும் ஆற்றாமைக்கு இரங்கி அவர்—அவ்வானவர் மகளிர். வருடுதல்—தடவுதல். அவ்வெப்பமொழிதற்பொருட்டு வருடுமெனக்கொள்க. பேழை—பெட்டி. பற்கோவைகளை முத்துக்கோவைகளாகவும் அவற்றைப் பொதிந்து சிவந்தவாயை அம்முத்த நகைகளைப்பொதிந்து மூடிவைத்திருக்கும் பவழப்பெட்டியாகவுங்கொண்டு வாய்திறப்பமுறுவனகைவெளிப்படுதலைப் பவழப்பெட்டியைத் திறந்து முத்தநகைகளைக்கொட்டுதலாகக்கூறியவாறென்க. இஃது இயைபுருவகமும் வண்ணவுருவகமுமாம். அருள்ததும்பிப் புறங்கொட்டவென்றது, ஒருகொள்கலம் நிறையவிருந்த தண்ணீர் முதலியன, அக்கலம் அசைந்தவழித்துளும்பிப்புறங்கொட்டுமியல்புதோற்றிற்று. சப்பாணிகொட்டுங்கால் திருமேனிகுலுங்குதலைக் கலமசைலாகவும் திருவருள்மிக்கு நன்குவிளக்கமாதலை நீர்ததும்பிப் புறக்கொட்டுதலாக

வும் இலக்கணையாக்கியுருவகித்தவாறு கண்டுகொள்க. களைகொட்டுதல்—களைசெதுக்குதல். உலகத்து அறம்வளரவொட்டாமற் றடைசெய்து இடுக்கண்விளைத்தலான் மறம் களையெனப்படுமே;

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்" என்னும்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வாய்மொழியை நோக்குக. நாக்கொட்டல்—ஆர்வமீதூர்ந்து முத்தமிட நாவால் இச்சிச்சென்னுங் குறிப்பொலிபடவொலித்தல்; இஃது

" ஆற்றங் கரையி னருகிருந்த மாமரத்திற்
காக்கை யிருந்து கஃகஃகெனக்—காக்கைதனை
யெய்யக்கோ லில்லாம லிச்சிச் செனவெய்தான்
வையக்கோ னூர்தம் மகன் " எனவரும்

வெண்பாவிலும் கூறப்பட்டிருத்தல் உணர்க. கைகொட்டல்—கைதட்டிக்கூத்தாடுதல். கொம்மைகொட்டிக் கூத்தாடுதலாகக் கொள்ளிற்குன்றவரை மகளிராகக்கொள்க. கொம்மையென்பது கும்மியென மரூஉவாய் வழக்கிற்பயிலும். இச்செய்யுளிற் பிள்ளை முருகனைப் பன்மைப்பாலாகக்கூறியது, அன்புமிகுதியான் உயர்த்துதற் பொருண்மைக்குறிப்பின் கண்ணதாகும். ஈழகத்திற் சிறுபிள்ளைகளைப், பெற்றோருமுட்பட நீர் எனவுயர்த்துக்கூறுதன் மரபு. (ஈழகம்—ஈழநாடு)

௰௬. தமிழகம் என்பது தமிழ் நாட்டின் இயற்பெயர். தமிழகத்தினையுடையதாய் எனச் செயப்படுபொருள்பட விரிக்க. தமிழகத்தினுடையதாய் எனக்கிழமைப்பொருள்பட விரிப்பின் தமிழகமுடையாராற்கைக்கொண்டு தம்முடையதாக ஆளப்பட்டது என்னுங்கருத்தன்றித் தமிழகத்தின்கட்பணிமலை அமைந்துகிடந்தது என்னுங்கருத்துப்பெறப்படாது. முனை—போர். குவைய—குவியலையுடைய. நெடுமொழி—புராணப்புகழ். வானளாவுதல்,

நெடுமொழிக்குமாம் வெற்புக்குமாம். வெற்பு; இமயமலை. முருகக் கடவுளைப்பயந்தது பொய்கையாதலிற்றாய்க்கு இயல்பாகவாய்ந்த அன்புடைமையே பொய்கைக்கு இயல்பாகவாய்ந்த குளிர்ச்சியுடைமையெனத்தற்குறிப்பேற்றிக்கூறியவாறு கண்டுகொள்க. என்னவென்பது ஈண்டுஉவமவுருபன்று; ஆகவெனமாட்டேற்றுப்பொருள்படும் பண்புருபு. இமயமலைச்சுனை குளிர்ச்சிமிக்கிருத்தலியல்பு. அன்னை, இருதிணைப்பொதுப்பெயர்; தொகுதியொருமை. சுனையாகிய பொய்கையெனப்பெயரொட்டாக்குக. பொய்கை—மாந்தராலாக்கப்படாதநீர்நிலை. பொய்கையிற்பிறந்ததற்கியையப் பூப்பவெனவும், தாயனையமீனெனவும் ஒலிப்பித்தது குறிநிலையணி. ஆரல்—கார்த்திகை. மீன்—விண்மீன். திதலை—சுணங்கு. இளம்பருவத்திற்கேற்பமகளிர் சிலவுறுப்புக்களிலமையும் நிறவேறுபாடு. நகில்—முலைகள். அடையவும்: உம்மை, இசைநிறையிடைச்சொல். அடைய—எல்லாம்: கார்த்திகைப்பெண்களறுவர்க்கும் இவ்விரண்டாகவுள்ளமுலைகள் பன்னிரண்டுமென்றவாறு. ஒருமுங்கல்—அழுந்தல். கோதை—உமையாள். அள்ளி—வாரியெடுத்து. பிறங்கல்—மலை. இன்னயவ—மிகவினிமைபயப்பனவாகிய. காமம்—கதிரகாமம்; விருப்பம் எனவும் ஒலித்தது. மணியாறு—மாணிக்கக்கங்கை. யாற்றங்கரையில் முத்தங்கொழிக்கப்படும் என்னும் இயையும் ஒலித்து நின்றது காண்க. யாவும் விற்பேம் என்புழி உயிரும்பிறவும், இறைவனுக்கு முறையே அடிமையும் உடைமையுமாம் என்னும் மெய்ம்மைதோன்றக்கூறியவாறு கண்டுகொள்க. உடல்பொருளாவியைவிற்பேம் முத்தந்தருகவென்றது மாற்றுநிலையணி (பருவருத்தனை) ப்பாற்படும். வணிகவென்றது, இப்பொழுது விலைக்குமுத்தங்கொடுக்கவென்பது கருதியுருவகித்ததுமட்டுமன்று; வள்ளிக்குவளையல் விற்கும் வணிகனாகவந்தமையும் மதுரையில் மாணிக்கம் விற்கவந்த வணிகன்மகனாதலும் உப்பூரிகுடிகிழான் என்னும் வணிகன்மாட்டு ஐயாட்டையகவை யூமைப்பிள்ளையாகிய உருத்திரசன் மனாகவந்து

தோன்றினமையும் உடன் கருதிக்கூறியதன்மைநவிற்சியணியுமாம் எனக்கொள்க. சொரிந்தமுத்தமும் எழுகோடிமுத்தமுமாகிய முத்தத்தையாற்றங்கரையிலே கொழித்து இன்று (எமக்குத்) தருக எனக்கொண்டு கூட்டிவினைமுடிவுசெய்துகொள்க.

௨௰. ஐயாறு, பண்புத்தொகை. ஐயாறாறு, உம்மைத்தொகை. முப்பத்தாறு என்றவாறு. இது சிவாகமதத்துவங்களைக்குறிக்கும் தொகைக்குறிப்புப் பெயர். இருள்—ஆணவமலம். ஆவி—ஆன்மா. அருள்—சத்தி. அப்பால் என்பது தனித்தனிப்பிரிந்துசென்று கூடியுந்தன்பொருள்விளக்கி நின்றது. அஃதாவது: ஐயாறாறுதத்துவங்களினப்பால் ஆணவம்; அதற்கப்பால் ஆன்மா; அதற்கப்பால் சத்தி; அதற்கப்பாலுள்ளது சிவமாகிய வைப்புப்புதையல் என்க. ஐயாறாறு என்பது இரட்டுறமொழிதலாய்த் தத்துவங்களையும் அவற்றின் முதற்காரணங்களாகிய ஓரிருமாயையையும் குறிக்கும். அங்ஙனம் குறிக்குமிடத்து, மாயைக்கு அன்மொழித்தொகைப் பெயராகக்கொள்க. மாயைகூறவே அதனைப்பற்றுக்கோடாகவுடைய கருமமும் கூறப்பட்டது என்பது, பொருட்பேற்றளவையால் தட்டப்பம்போலத் தானேபோதருமென்க. ஈண்டு மூவைந்துபதினைந்து அவத்தைகளும் அவத்தாதீதமும் பெறப்படுதல் காண்க. இன்னும் விரிப்பிற் பெருகும். உய்த்துணர்ந்து விரித்துக்கொள்க. அழகிது, குறிப்புமுற்றுவினையெச்சம். உசாதலுக்கு அடை. கெழுதகை-நட்புரிமை. இயற்கைப்பொருள்—பௌதிகமூலப்பொருள். பொருளால் என மூன்றன்றொகை. ஆக்கம்—செயற்கைப்பொருள் தோன்றுதல். தேர்ந்த — கருவிகளாலாராய்ந்துணர்ந்த, அச்செயற்கைப்பொருளாவன: ஞாயிறுதிங்கள் முதலியனவும் இப்பொழுதைய ஊர்திப்பொறி, வினைசெய்பொறி, விளக்குப்பொறி முதலியனவும் மருந்து முதலியன பலவுமாம். செய்யாமை ஈண்டுத்தனிமையைக்குறித்து நின்றது. கலப்பின்றித்தனித்த மூலப்பொருள் என்றவாறு. தேனாகிய நெய் என இருபெயரொட்டாகக்கொள்க. தேனையும் நெய்

யென்பர். பன்னாடையின் பெயராகிய நெய்யரி என்பதற்குத் தேனைவடிப்பது எனப்பொருளுமுரைத்து மேற்கோளுங்காட்டுவர் “அன்னமாவே” யென்னும் நன்னூற்பாயிரச்சூத்திரத்திற் குறிப்புரையாசிரியர், உ. வே. சாமிநாதையரவர்கள்.

தீம்பால்—ஆன்பால். குழைத்த—கூட்டிக்கலந்து சமைத்த. திரள்—பக்குவமான. பூப்புத்தொடங்கி நுகர்தற்குரியபக்குவமாயினாளைத் திரண்டாள் என வழங்கும் உலகம். பதம்—செவ்வியுணவு. கையா—இகழ்ந்து வெறுக்கப்படாத. குடிமை—உயர்குடிப்பிறப்பு. வெல் என்பது காரணப்பொருட்டுப் பெயரெச்சத்தொகை. காரியப்பெயர்கொண்டது. கல்விமுதலியவற்றின் வெற்றிப்புகழும் மிகக்களிப்புப்பயக்கும். கடவுட்செந்தமிழ்—கடவுளாற் பேசப்படும் செந்தமிழ்மொழி. மக்களாற்றோற்றுவியாதது; என்றவாறு. முப்பால் என்பது அடையடுத்தவாகுபெயர், திருக்குறள் என்னும் நூலின் இயற்பெயர். இதுபதினெண்கீழ்க்கணக்கிற்றொகுக்கப்பட்டது. இப்பொழுது தமிழ்மொழிக்கண் நூற்பேறு நாற்பொருளும் பாற்படுத்துக்கூறிமுடிக்கும் முதனூல் இஃதொன்றுமேயாம். நூற்கு ஆகாவெனக்கடியப்படும் குன்றக்கூறல் முதலிய குற்றம்பத்தும் முற்றச்செறுத்துச் சுருங்கக்கூறல் முதலிய மாட்சிபத்துங் காட்சிப்படுத்து உடன்படல் முதலிய எழுதிறக்கோளும் தழுவுறவமைந்து நுதலிப்புகுதல் முதலியவாகிய நூற்புணர்ப்புப்பலவுமேற்புறப்பெற்று உரைக்கிடனாத்தமிழ் வலைப்பினில் நிலவிச்சொற்சுவைபொருட்சுவை பொற்புறமிளிருமிவ்வருமந்த நூல்

“நவிறொறும் நானயம்போலும் பயிறொறும்
பண்புடையாளர் தொடர்பு” எனத்தானே

கூறியவுவமைக்குத்தானே யெடுத்துக்காட்டாயமைந்து வீற்றிருக்கும். இந்நூற்படைப்பு, உலகப்படைப்புக் கடவுளாகிய நான்முகன் திருவள்ளுவனாரெனவந்து திருவாய்மலர்ந்தருள்செய்தது.

“திருத்தகுதெய்வத் திருவள் ளுவரோ
டொருத்தரு கற்பலகை யொக்க—விருக்க
உருத்திரசன்மரென வுரைத்து வானி
லொருக்கவோ மென்றதோர் சொல்”

என்னும் வெண்பாவினுள் இவ்வெண்பாப் பாடினவன் பெயர் ஓம் என்பது எனவும் எனவே அவன் முழுமுதற்கடவுளாம் எனவும் எனவே அவனே திருவள்ளுவர் வாயிலால் முப்பால் மொழிந்தருளினானும் எனவும் ஓம் என்பதன்கண்ணுள்ள மூன்றெழுத்தே முப்பால் எனப்படும் எனவும் அம்முதன்மறைமொழியே முப்பாலின்றொகையாகிய முகவுரைப்பாயிரமென்பதெனவும் அதனான் அதனை ஒவ்வொருகுறட்பா முதற்கண்ணும் ஒவ்வொருபான் முதற்கண்ணும் நூன்முதற்கண்ணும் கூட்டியும் தனித்தும் ஓதவும் நினைக்கவு நுகரவும் வேண்டும் எனவும் பிறவும் பெறப்படுதல் உய்த்துணரக்கிடத்தலின் இந்நூற்பெருமையுணர்ந்து சொல்லுவாரெல்லாம் “தேவர்குறளும்” எனவும் “வள்ளுவர் நூலன்பர் மொழி வாசகம்” எனவும் பிறவிடங்களினும் சிறப்பித்து முதற்கண்வைத்துப் புகழப்படும் பெற்றிவாய்ந்தது இம்முப்பால். தமிழ்மொழிக்கண் உள்ள சுவைமிக்க நூல்களையெடுத்தோதும்

“திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேண் மாக்கதையைக் கூறேம் குறளணுகேம்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு” என்னும்

அருமைவெண்பாவினுள் திருக்குறள் ஏனையசுவைநூல்களினும் சுவைவிஞ்சியது என்னுஞ் சிறப்புத்தோன்ற இடமுதலாகிய விறுதிக்கண்வைத்து அதனையணுகேம் எனக்கூறுங்குறிப்புமொழியால் ஆன்றோரது அவியுணவுபோலுஞ் செவியுணவாகிய அம்முப்பாலின் ஒப்புயர்வில்லாச்சுவைநயமிகுதிதெளியப்படும்.

௨௰௧. மஞ்சு—மேகம். விண்முத்தம் — விள்ளுமுத்தம். வினைத்தொகை. வெடிக்குமுத்தமென்றவாறு. கொம்பு, எனப் பொதுவிற்கூறினமையான் யானைக்கொம்பும் பன்றிக்கொம்புங் கொள்க. இயல்—உள்ள; "வேண்டினுண்டாகத்துறக்க துறந்தபின், ஈண்டியற்பால பல" என்னுந்திருக்குறளின்வந்த இயல் என்னுமொழிக்குவரைந்த பரிமேலழகருரை நினைக்க. கொம்பின்கண்உள்ளவெனவிரிக்க. விழை—விரும்பப்படும். மாதர்; காதலையுணர்த்துமுரிச்சொல். காதலைப்பிறப்பிக்குங்கரும்புமுத்தமென்க. மீனின்—மீனிடத்து. எனவும்—பிறவும். வடங்கோத்தற்குத் துளைத்தல் முதலியவற்றால்தேயுமுத்தம் என்க. ஏர்—அழகு; எழுந்து. திரிய—கெட; அலைய. மாறும்—வேறுபடும்; விற்கும். அழகுகெட வேறுபடுமுத்தமெனவும், எழுந்து அலைய விற்கப்படுமுத்தமெனவும் இரட்டுறமொழிதலால் இருபொருளும் கொள்ளப்படும். முத்தமோ; ஓகாரம், எதிர்மறை. முத்தமன்றென்பது. தூய்முத்தமென்று சிவபெருமானைச்சொன்னாள். அவன் மூங்கிலிற்பிறந்தானென்பதனால். ஈன்முத்தம், ஈன்றமுத்தமென இறந்தகாலவினைத்தொகை. முத்தமென முருகனைக்கூறியது, முத்துக்குமாரசாமி, முத்தையன், சரவணமுத்து; என்றாற்போலும் பெயர்வழக்குமுடைமை நினைந்தென்க. துளிமுத்தம்—துளிக்கின்றமுத்தம். மதியென்றது முத்துப்பிறக்குமியைபுடையது எனவொலித்தற்கு. (ஒலி—தொனி) முத்துப்பிறக்கும் நிலன் இருபதனுள் இந்துவும் ஒன்றெனக்கூறுப. முகம்—முகத்தில். முத்தமுத்தி—முத்தமிட்டு. நகு—அதனால் அம்மகளிர் நாணிச்சிரிக்கின்ற.. தொகை—கூட்டம். முத்தமென்றது பற்களை. உருவகவுயர்வுநவிற்சியணி. கனியும்—சிவந்து இனிக்கும். முத்தமே—முத்தமொன்றுமே. ஏகாரம், பிரிநிலைப்பொருளில் நின்றதேற்றேகாரம். போதாத—விலையாகநிரம்பாத. வான்—வீட்டுலகம். வாழ்தல்—நிலைபெற்று மகிழ்தல். வாழ்என்னும்பெயரெச்சத்தொகையினை வாழ்தற்குவாயிலாகியமுத்தமென ஏதுப்பெயரொடுமுடிக்க.

இதனுள் முத்தமெனப்பலகால்வருதல் சொற்பொருட்பின்வருநிலையணியும் சொற்பின்வருநிலையணியுமாகக்கொள்க. முன்னும் பின்னும் இங்ஙனம் வருவனவும் இங்ஙனம் பிரித்தறிந்துகொள்க.

௨௰௨. கூடல்—மதுரையம்பதி; இது மதுரையென்னும் வடமொழிப்பெயர் வழங்குமுன்வழங்கிய தனித்தமிழ்ப்பெயர்; இரண்டியாறுவந்துகூடிய நிலத்தின்கண்ணதாயிருந்தமையாற்கூடல் என ஆகுபெயர்த்தாயிற்று. பின்னுள்ளோர்பிறவாறு கதைகூறுவாருமாயினர். கூட்டு,—என்னுயிரவர்திரள். குழந்தாய்!—ஆளுடைய பிள்ளாய்! குடுமிமுடி,—மயிர்க்குடுமிமறையக்கவித்த மணிமுடி. கோப்பாண்டியன்: அரசுகட்டிலிற்றுஞ்சியபாண்டியன் நெடுஞ்செழியன். இவன்தொடியான் வானவர்கோன்முடியையுடைத்தது,

"இடிப்படைவானவன் முடித்தலையுடைத்த
தொடித்தோட்டென்னவன்கடிப்பிடுமுரசே"

என்னுஞ்சிலப்பதிகார ஆய்ச்சியர்குரவைச் செய்யுளடிகளினும் பிறவற்றினும் பெறப்படும். இவன்செயற்கரும்பேராண்மைச்செயலான் முருகக்கடவுட்டன்மைவாய்ந்திருந்தான் எனத்தெரியவருதலின் இவனை முருகக்கடவுள் எனமுன்னோர்கூறுப. இங்ஙனமே முருகக்கடவுட்டன்மை நிரம்பவாய்ந்திருந்த, உப்பூரிகுடிகிழான் மகனார், ஆளுடையபிள்ளையார்போல்வாரைப்பெரும்பான்மை பற்றி முருகக்கடவுள்எனக்கூறி வழிபடுதல் மறுக்கப்படுவதன்றாமாறு உய்த்துணர்க. திருமாலின்கூறாகிய இராமன் கண்ணன் முதலியோரைப் பெரும்பான்மைகருதித் திருமால்எனக்கூறிவழிபடுமாறும் நீணிலங்காக்கும் காவலர்பிறரையும் அங்ஙனம்கூறிவழிபடுமாறும் நினைத்துக்கொள்க. துவர்க்கோடல்—செங்காந்தள். ஆடல்—விளையாட வேண்டா; எதிர்மறைவியங்கோள். வேண்டிக்கோடற்பொருண்மையினின்றது. நெய், தேய்த்துமுழுகிய எண்ணெய்க்காப்பானுளதாயபயன். ஓகாரங்கள், எதிர்மறை.

தேட,—நின்னோடுகூடித்தெருவில் விளையாடவருகின்றவள்நின்னையிவ்விடத்துக்காணாமையாற் பிரிவாற்றகில்லாதுவருந்தித்தேடிக்கொண்டிருப்ப. அமுதே! திருவே! தேனே! எனவொரு பொருண்மேற்பலவுருவகங்களை ஆர்வத்தாற்சொல்லுதல், ஆர்வமொழியணி. முற்பிற்பாட்டுக்களினும் கண்டுகொள்க. பல பெயர்களைக்கூறினுமது. தெவிட்டாதொழுகுந்தேன் என்றது விலக்குருவகவணி.

உ௯௩. நூலாதநூல்—மக்கள் கையாற்கருவியாற்செய்யாது பட்டுப்புள் இழைத்த நூல்; என்றது: பட்டுநூல். ஊசியொடு-தன்னூசியால். குயிலாத—தையாத "ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" எனப்பயிலும் எடுத்துக்காட்டு நினைக்க. கொய்ய—மெல்லென்ற. சில்—சிறிய. சில்பலியரிசியைச் சிறுபலியரிசியென்ப. சிறிதினைச் சிலவென்றல் மரூஉ வழக்கென்ப. மெய்யுறை—சட்டை. அங்கியென்னும் வடமொழி வழக்குச்சொல்லினுறுப்புப் பொருளுமிது. தெய்வத் தன்மையாற்றலால் தையாமலே பட்டாடையில் முருகனுக்குச் சிறு மெய்யுறை யமைந்தது. சிறு சட்டை செய்து குழந்தைகளுக் கணிதல் வழக்கம். அது, முதனிலைப் பொருட் டிறுதிநிலையுருபு. நோன்பு—தவம். தழும்பி-அடிப்பட்டுப்பழகி. நின் உள்ளும்—நின்னை நினைத்துருகும். உளம்என—தொண்டருள்ளம்போல. ஆட—அசைய. மெய்யுறை ஆட என்க.; சிறுசட்டை, முருகன் திருமெய்யிற் போர்க்கப்பட்டுக் கிடந்தசைந்து அழகாக விளங்கிக்கொண்டிருப்பவென்றவாறு. திருமேனியைப் பொதிதலும் அசைதலுமாகிய வொப்புமையால் முருகன் சிறு மெய்யுறை தொண்டருள்ளத்தோடு ஒப்பிக்கப்படும். "பெரிது பெரிது புவனம் பெரிது" என்னும் அகவலுள் இறைவனைத்தொண்டருள்ளத்தொடுக்கம் எனச்செப்புதல் ஈண்டு நினைக்கப்படும். நுண்ணுதல்—சிறு நுதல். முடிக்கொண்டை-கொண்டை முடி. விழுமியோர்—முனிவர். வேணவா—வேட்கையினாலாகிய அவா. மூன்றன்றொகை. வேட்கை, பொருள்கண்மேற்

றோன்றும்பற்றுள்ளம். அது மேன்மேலெழுதல், அவாவெனப்படும். வேணவாவொடு கூடியதளவு என விரிக்க. தளவு—முல்லை: நகை. எண்ணலாய கைம்முகன் என்பது நிரனிறையணி. எட்டாயகையும் நான்காய முகமும் உடையவன் என விரித்து நிரனிறைப் பொருளாமாறு கண்டுகொள்க. பெருமிதம்-செருக்கு. நளி—செறிவு. கடலிடைக்குடை—தீவகம். கொடுவினையர்—சூரன் முதலிய அசுரர். அவலம்—துன்பம். மாலாகி—அன்பான் மயங்கி. மெழுகின்—மெழுகுபோல. நெக்கு—நெகிழ்ந்து. என்பு—என்பும் என விரிக்க. உருகி—உருக. எச்சத்திரிபு. மழை—கண்ணீரென்க.

உ௯௪. புனம்—தினைப்புனம். கொன்று—மிதித்தழித்து. நொக்க—தின்று குறைத்தலால். செலல்—இரவிற் புனங்காத்தற்குப் போதல். குறித்து—காத்திருந்து நோக்கி. பகலிற்றினையை யுணக்கும் பாறையென்க. கோழி:காட்டுக்கோழி. கொறிப்ப-கொத்தித் தின்ன; காரியப்பொருட்டு வினையெச்சம். உணக்கும்—காயவிரிக்கும். இனிப் பகலிற்குறித்து எனமாறி மகளிர் புனங்காக்கும் பகற்பொழுதிலே இரவுக்குறி யுணர்ந்துவைத்து எனினுமாம். பிணைந்து—கைகோத்து. தழீஇ—மெய்யணைந்தாடி ஒல்லாது—இயலாது. அந்தோ—ஐயோ; இடைச்சொல்; தனக்கும் குழந்தைக்கும் பயன்படாதூறி வாளாவழிந்தோடுதலைக் குறித்திரங்குதலைக் குறித்து நின்றது. பாற்குடங்கொட்டிச் சிந்துமுலை—பாற்குடத்தைக் கவிழ்ப்பப் பால் வழிந்து சிந்துதல் போல அமுதப்பால் அன்பு மிகுதியான் மிக்கூறிச்சுரந்து வழிந்து சிந்தியோடும் முலை. இங்ஙனம் குழந்தைமேற் செல்லும் அற்புள்ளத்தால், மகவை முலைப்பாலூட்டாத வழியும் முலைப்பால் சுரத்தலுண்மை,

"சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த

தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு."

என்னும் திருக்களிற்றுப் படியாரானும் உணரப்படும்.

"மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே."

என்புழியும் இத்தாய்மைபெறப்படுதல் கண்டுகொள்க.

உயிரு. வெங்கள்—காய்ச்சினகள். தேறல்—தெளிவு. கள்ளின் கடுப்பிற்குத் தேட்கடுப்பு, உவமை. "தேட் கடுப்பன்ன நாட்படுதேறல்" புறம். களி—கள்ளுண்ட மயக்கம். மீக்கூர்ந்த களி—மாற்றமுடியாது மீதூர்ந்த களி. கடுப்பினால் மீதூர்ந்த வென்க. மீன்கண்—மீன்போலப் பார்வை பிறழுங்கண். மறுக—சுழல. செவ்வழியாழ்—மருதநிலப்பண். வெறிப்ப—இசை பிறழ்ந்து பண் உருக்கெடுதல். பணைத்து—பெருத்து. மதவேள்—மன்மதன். பணிகொள்ள என்றது தற்குறிப்பேற்றம். விரை—அகிற் குழம்பு முதலிய மணப்பொருள்கள். குரும்பை—முலை; உருவகவுயர்வு நவிற்சியணி. வெளிவிம்ம—மறைப்பின்றிப்புடைத்துத் தெரிய. விரும்பும் அம்முலைகளைப்பார்த்துக் காமமீதூர்ந்து தொடர்ந்து உழாமல் நின்றுகொண்டிருக்கும். களமர்—உழவர். ஏர்—கலப்பை. பகடு—ஆணெருமை. வெடிசேல்—துள்ளிய சேல் மீன்கள். உழக்கி—சேற்றைக் கலக்கி. உகைத்து—அவ்வேர்ப்பகட்டைப் பாய்ந்துகைத்து. அம்—அழகு. கண்—கணுக்கள். களைகளை—களைந்து எறியவேண்டிய களைகள்; எனவினைத்தொகை. அவற்றோடு ஆடவருள்ளங்களையும் பறிப்பார் என்றது அவர் தம்மை விழையச் செய்தலை; புணர் நிலையணி. பறிப்பார்—பறிக்கும் மருதநிலவுழத்தியர். அமர்—விரும்பப்படும். இதண்—பரண். இதணிலுள்ளவெனப் பயனிலைத்தொகை. கொடிச்சியர்—குறிஞ்சிநில மகளிர். அரு—மருத நிலங்களில்

விளையமாட்டாத. அளிகள்—வண்டுகள்: தேனீக்கள். நறை—தேன்; நறுமணமெனினுமாம். ஆர—நிறைய. வாங்கி—பெற்று. கதிரமலை தன்னியல்பால் தனித்துக் காட்டுள் நிலை நின்றதனைத் தவம் என்றதும் தமிழ்ப் பிள்ளையை அத்தவத்தின் விளைவு என்றதும் தற்குறிப் பேற்றவணி. தவமாவது பிறரொடு கூடாது தனித்துக் காட்டுட்போய் ஊண் உறக்க முதலியன விழையாது குளிர் வெப்ப முதலிய விரட்டைகளாற் றளர்வெய்தாது நிலை நிற்றலாம். தமிழ்—இனிமை. தமிழ்நாட்டுப் பிள்ளையெனினுமாம். குவியா—மலர்ந்த. நீலம்—கருநெய்தற்பூ; பண்பாகு பெயர்; என்றது: பிள்ளையின் கண்ணினை. தனியே—ஏனைத் தாமரைகளுக்கு மாறாய் வேறாகவே. ஏனைத் தாமரைகளெல்லாம் நிலவினைக் கண்டு குவிய இஃதொன்றுமே குவியாது மலர்ந்தது என்று கூறுவாள் தனியே யென்றது பொருந்துதல் கண்டுகொள்க. அன்றி யேனைத் தாமரைகளின் கூட்டத்திலன்றி யொன்றாகவே யெனினுமாம். அன்றி யேனைத் தாமரைகள் போலக் குளத்திற் பூவாதே எனினுமாம். அலர்ந்த—விரிந்த. தாமரையென்றது பிள்ளையின் முகத்தினை. அது நிலவினைக்கண்ட அளவில் நகை தோற்றியதனை அலர்ந்த தாமரையெனக் கூறினள். தாமரை, முதலாகு பெயர்; பூவையுணர்த்தி நிற்றலின். தனியே யலர்ந்த தாமரை யென்றது ஒட்டணி. நீலம் என்றது உருவகவணி. நீலப்பூவொடு கூடி விரிந்த தாமரைப்பூ வென்றது வியப்பணி. தடுக்கும்—கால் கைகளைப் புடைப்பெயர்க்குங்கால் தடை செய்கின்ற மீக்கோள்—போர்வை. உம்மை—முற்பிறப்பு. சிறப்பு—நல்வினை. போலும், ஐயக் குறிப்பிடைச் சொல். ஈண்டு ஐயமாவது: குறிப்பானன்றிச் சொல்லா லுணராமை. கிடை—ஈண்டுக் கருத்து. கிடந்தவாறு என்க. தமப்பன்—சிவபெருமான்; அவன் நிலவிற்குச் செய்த நன்றியாவது: வீரபத்திரன் காலாற்றேய்ப்புண்டு இறந்துபட்டொழியாதவாறு தன் திருமுடிமேல் எடுத்து வைத்துச்சூடி யுயிர் பிழைப்பித்தருளிய வுதவியாம். சிதையாது

என்றது விளையாட வருதற்குக் குறிப்பேதுவாய் நின்றதாதலின் ஏதுவணிபாற்படும்.

௨௰௩. கீழ்பால்—கிழக்குத் திசை. வேந்து—இந்திரன். மேல்பாற் கடவுள்—வருணன். வடபாற் கிழவன்—குபேரன். சுருள்—வெற்றிலை மடிப்பு. தென்னவன்—தென்பாற் காவலனாகிய கூற்றுவன். பேர்யாழ் என்பது மகதியாழ் என வழங்கும் வடமொழிச் சொல்லோடொத்த தனித் தமிழ்மொழிச்சொல். மகதியாழ்: நாரதமுனிவன் மீட்டும் யாழ். இஃது ஆதியாழ் எனக் கூறவும்படும். இஃது ஆயிரம் நரம்பு தொடுத்தியன்றது. வெற்பின்: இன், ஏழனுருபு. யாளியணை—சிங்காதனம். மீது, ஏழனுருபு. நாளோலக்கம்—கொலுவிருத்தல். இருதிணை; உயர்திணை, அஃறிணை யென்பன; இயங்குதிணை, (சரம்) நிலைத்திணை (அசரம்) யெனினுமாம். ஆழும்—அழுந்தும். இழிதகவு—இளிவரல். (அவமானம்) இழிதகவினை நினைக்கவென்றது

"இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுகதாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும்போழ்து"

என்னும் பொய்யா மொழியின் பொருளினை நினைந்து. தறுகண்—பழிபாவமஞ்சாமை. ஆடல்—போர் வெற்றி. சூர்—சூரபன்மன். அலரோன்: பிரமதேவன்; பூவிற் பிறந்திருந்தோன் எனவும் பழிமொழியை யுடையோன் எனவும் முதனிலை, இருபொருள் பயந்து இரட்டுற மொழிதலாயிற்று. கடல் வாழ்வான அலவன் என மாறுக. உறழ—ஒப்ப. கடல்வாழ்வானவெனவும் விண்டவழ் எனவும் நின்ற அடைமொழிகள் அலவன் என்னும் பலபொருளொருசொற் பொருளை வெளிப்படுத்து நிற்றல் வெளிப்படையணி. ஒருசார் ஒட்டணி யென்பதுமிது. அலவன் என்பது ஞெண்டிற்கும் சந்திரனுக்கும் பெயர். சந்திரனுக்கு இருமடியாகு பெயர்; கடகராசிக்கு உடையானென்பதனால். இரண்டலவ

னுக்கும் பொதுத் தன்மை: உருண்ட வடிவும், வெள்ளியநிறமும், நீல நிறத்தோற்றப் பரப்பின்கண் ஊர்தற் றொழிலுமென்க. நீனிறக்கடற்கு நீனிற விண், பொருளாகும். அடை—தேனடை: தேன்றட்டு. கையாற் பிழியும் என விரிக்க. சாறு—தேன். அயிலலாம்—உண்ணலாம். தேன்: ஞானானந்தமுமாம். இனிது—வருத்தமின்றி: வலிந்து பிடித்துக் கொணரப்படாமல் நீயே வந்து விடுதலால் வருத்தமின்றி யென்றவாறு. வேலன் சாறென்க. அடை கைபிழியென்பது, சாற்றிற்கு அடை. வேலன் பிழிந்தவென்ற தன்றென்றவாறு. வேலன் மலையினுள்ள தேனாதலால் வேலன் தேனாகும் எனக் கொள்க. இது, கதிரகாமக்குறக்குலவடியார்களால் முருகனுக்கு மடை கொடுக்கப்படுவது. இத்தேனை ஞானானந்தமுமாம் எனவும் உரைத்தது உருவகவுயர்வு நவிற்சியணி பற்றி. ஞானானந்தத்திற் காட்டிலும் தேன் உயர்ந்ததன்றாயினும் மக்களால் நுகருஞ் சுவைகளுள் உயர்ந்தது என்பது கொண்டு ஞானானந்தம் தேனாகவுருகிக்கப்படுதல் மறுக்கப்படுவதன்றென்பது மரபு. இங்ஙனங் கொள்ளுங்கால் வேலன்சாறு என்புழி வேலன் என்பது, மலைத்தேனன்றெனப் பிறிதினியைபு நீக்கி நின்ற அடைமொழி. இக்கருத்து இவ் அடைமொழியை எடுத்தலோசைப் படக்கூறத்தானே பெறப்படும்.

௨௰௭. உருள்பூ—உருளும் பூவென வினைத்தொகை. தேருருள் போன்றிருக்குமாதலின் உருள்வதாயிற்று. "உருள்பூந் தண்டார்" என்பது முருகு. முருகக் கடவுள் கடப்ப மரத்தின் கண் வீற்றிருத்தல், முருகினுட் காணப்பட்டது. நயம்—அறிவின்பம். கல்லும் என்னும் இழிவு சிறப்பும்மை தொகுக்கப்பட்டுள்ளது. நரை—வெண்மை. கூன்—வளைந்த. நளி—செறிந்த. கார்—மேகம். சாந்து—மறைந்து. நகைக்கின்றாய் என்றது தற்குறிப்பேற்றம். பறம்பு—மலை. இதுக்காண் என்பது "உதுக்காண்டோன்றும்" என்பதுபோல நின்றது. எற்றுவன்—உதைப்பான். ஆம் என்பது துணியாமைக் குறிப்புணர்த்தும் ஓரிடைச் சொல்.

இது செய்யுளினின்றி வழக்கின்கண் வழங்கும். இது புதியன புகுதல். நம்பன்—சிவபெருமான். புகல்—அடைக்கலம். வாம—வாவும் என்னும் பெயரெச்சம் ஈற்றுயிர்மெய் மறைந்து நின்றது. தாவிப் பறந்து செல்லும் என்றவாறு. சிம்புள்—எண்காற்புள். என்றது வீரபத்திரக் கடவுளை; எண்காற்புள் வடிவமாயிருத்தலின். துகைப்ப—மிதித்துத் தேய்ப்ப. பொன்றக் கெடுதல்—மீளாது இறந்தொழிந்து போதல். மதலையாதலால் தந்தை தலையென்றும் பாராமல் அவ்விடத்தும் நின்னை மிதிப்பான் இவன் என்க. துடுக்கு—விரைந்து செய்தல். குறும்பு—ஆராயாது செய்தல். வணக்கும்—வளைக்கும். பொருப்பு—மலை. வில்லியென்றது சிவபெருமானை. உரைவாங்கான் என்றது முருகனைச் சிவபெருமான் பார்த்துப் பிரமனைச் சிறைவீடு செய்கவென்னுங் கட்டளையை அவன்னேற்றுக் கொள்ளாமை கருதி. சிவபெருமானுக்குப் பிரணவபொருள் செவியறிவுறுத்தினமையால் அவற்கும் ஆசிரியன் என முருகன் கூறப்பட்டான். வாவி—குளம். வனப்பிற்கேய்ந்த குணனில்லாயென்றது: ஒருவர்க்கு அழகு எவ்வளவு மிக்கிருக்கும் அவ்வளவு மிக்கிருக்கும், குணமும் என்னும் உறுப்பியல் நூலார் கூற்றுக்கு முரண்பாடு நின்னிடத்துக் காண நின்றாய் என்றவாறு. உறுப்பியல் நூலுடையார், ஒருவர்க்கு அவர் எழிலினளவாகக் குணமிருக்குமெனக் கூறுவார் என்பது நைடதத்துட் காணப்பட்டது. குணனில்லாய் என்றது வியப்பணி. காம்பு—மூங்கில். மூங்கிலின் மேலிருக்கும் மயிலென விரிக்க. பரி—குதிரை. ஈண்டுக் குதிரையென்பது, குதிரைப் பொருண்மேல் நில்லாது சிறந்த வூர்தியென்னும் பொருண் மாத்திரையாய் நின்றது. மயிலாகிய பரியென இரு பெயரொட்டாக்குக. பரிமேலழகன் என்புழித் திருக்குறளுரையாசிரியருள் ஒருவனெனவும் ஒலித்தது குறிநிலையணி. காட்டுக்கோழி முட்டைகளை தம் முட்டையென மயங்கக் கருதித் தாராப் பறவை அடைகிடக்கும் என்றது மயக்கவணி. திரிபதிசயவணியென்பர் தண்டியார். கலை,

பல்பொருட் சொற்றொடரணி. (சிலேடை) கல்வியெனவும் பிறைக்கலையெனவும் இரு பொருள்படுதலின். முகமதியென்றது வேற்றியலுருவகம் (விருவக உருவகம்.) அகவிருள்—அறியாமை. இயல்பால் வளர்ந்து சந்திரன் தேய்தலைப் பொருமையிற்கவன்று நாணிக் குறைகின்றாய் என்றது, தற்குறிப் பேற்றவணி. கழறும்போது கறுக்கின்றாய் என்பது இங்ஙனம் அழுக்காறுறுதலாகாதுகாண் என நினக்கு இடித்துரைக்கும்பொழுதில் வெகுள்கின்றாயெனவும் சொல்லுதல் போல மலர்ந்த தாமரைப் பூவை வாடிக் கூம்பச் செய்கின்றாயெனவும் இரு பொருள்படும். இது பல்பொருட் சொற்றொடர்த் தற்குறிப்பேற்றவணி. தேம்பிய—உணவின்றி வருந்திய. ஆழிப்புள்—சக்கரவாகப் பறவை. இது நிலவையுண்ணு மியல்பினது என்பர். அப்புட்போல்வார்—முருகன் திருவருளுண்ணும் ஞானயோகிகள். தேக்க—நிறையவுண்ண. கொப்புளித்து—வெளிப்படச் சொரிந்து. திறம்பா—தோற்றமும் ஒடுக்கமும் இல்லாத. மங்குல்—விண்வெளி. இது—இம்மதி; என்றது, பிள்ளை முகத்தினை. இது இயங்கும் என முடிக்க. களங்கத்தைக் கருநெஞ்சு என்றது உளபுலவேதுத் தற்குறிப்பு; பாம்பு தீண்டியதுண்மையின். சோர—ஒருங்கு. முழுதும்—இடமெல்லாம். திருந்துதல்: நஞ்சால் வரும் நோயும் சாக்காடும் நீங்கிப் பிழைத்து இன்புறுதல்.

உ௰அ. ஈரெழுத்து : முதலெழுத்துச் சார்பெழுத்து என்பன. முதலெழுத்து முப்பதும் சார்பெழுத்து மூன்றுமாம் எனக் கொள்க. அன்றி உயிரெழுத்து மெய்யெழுத்து என்னும் அவ்விருசாரெழுத்துக்கள் எனினுமாம். அங்ஙனம் கொள்ளுங்காற் குற்றியலிகர குற்றியலுகரங்களுட்பட வுயிரெழுத்துப் பதினாறும் ஆய்தப் புள்ளியுட்பட மெய்யெழுத்துப் பத்தொன்பதுமாம் எனக் கொள்ளப்படும். ஈரிருசொல்—இயற்சொல், திரிசொல், நாட்டுச்சொல், வடசொல் என்னும் நான்கு சொற்களுமாம். பெயர்ச்சொல், வினைச்சொல்,

இடைச்சொல், உரிச்சொல் என்னும் நான்கு சொற்களும் எனினும் ஒக்கும். முப்பொருளாவன—அகத்திணைப்பொருள், புறத்திணைப் பொருள், அகப்புறத்திணைப்பொருள் என்பனவாம். அறம், பொருள், இன்பம் என்பனவெனினுமாம். நாற்பாக்களாவன—வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா ; என்பனவாம். நூற்பா, மருட்பா, பரிபாடற்பா வென்னு மூன்று பாவும் பன்னிரண்டு பாவினங்களும் மேற்கூறிய நான்கினுடைய குறைவும் கலப்பும் சிதைவுமல்லது வேறன்மையின் அந்நான்கன்பாற் பட்டடங்கும். இயைந்த—அப் பாக்கள் தனித்துநின்றும் சேர்ந்துநின்றும் உண்டான. முச்செய் யுள் மூவ்வணிகளென மூன்றினை அணிகளுக்குங் கூட்டியுரைத்துக் கொள்க. முச்செய்யுட்களாவன:—தனிநிலைச் செய்யுள், தொடர் நிலைச்செய்யுள், அவ்விரண்டுமாகிய தொகைநிலைச் செய்யுள் என்பன வாம். மூவ்வணிகளாவன—பொதுவணி, பொருளணி, சொல்லணி என்பனவாம் ; இவ்வைவ்திறமும் இயற்றமிழ். இசையும் கூத்து மெனவே முத்தமிழும் பெறப்பட்டன. அறுபத்துநாலும் பிறவு மாகப் பிறநூலார் விரித்துக் கூறிய கலைகளெல்லாம் மேற்கூறிய மூன்று கலைகளாகத் தொகை வரையறைப்படுதலிற் றமிழ்நூலார் தமிழ்க்கலையை முத்தமிழென்றல் தொன்றுதொடு வழக்காருகும். இந்நெறி இவர்க்கே சிறந்ததன்றிப் பிறர்க்கும் பொதுவன்று.

நச்சினார்க்கினியர், இவை கலைகளுட் சிறப்புடையவையாதலால் முத்தமிழ் எனக் கூறப்படும்எனவும் ஏனைக்கலைகள் இவற்றுள் அடங் காவெனவும் மூன்றென்பது தொகை வரையறையன்றென்பதும் போதரத் தொல்காப்பியப்பாயிர வுரைக்கண் வரைந்திருக்கின்றனர். அது பொருந்தாமையுய்த் துணர்ந்துரைத்துக்கொள்க. அவ்வப் புலவர்—இயற்றமிழ்ப் புலவர், இசைத்தமிழ்ப் புலவர், கூத்துத்தமிழ்ப் புலவர். கழகம்—அவ்வக்கலைகள் பயிலுமிடமும், அவற்றைப்பலரும் அறிந்துகொள்ளக் காட்டுமிடமாகிய ஆயக்களமுமாம். ஆயம்—

கூட்டம் ; எண்பேராயம் என்புழியுணர்ந்துகொள்க. அவைக்களம் என்றவாறு. எடுத்த—சொல்லுதற்கு மேற்கொண்ட. கட்டுரை—மாணவர்க்கு ஓதும் பொருள்பதிந்த சொற்றொடரும், பெருங்குழாங் களின்கண் எடுத்துவிளக்கும் நெடுமொழியாகிய களமுமாம். களம் பிரசங்கம், கோட்டியென்பன ஒரு பொருளன. ஆகுபெயர்கள். ஊன்—உடம்பு, ஆகுபெயர். உடம்பை யூனென்றது, அதனது அரு வருப்புத்தன்மை நினைவுகோடற் பொருட்டு. நரி தின்னுமுன் என்றது அறிவு வாய்த்தற்குத்தக்க மக்கட் பிறப்பு உள்ளபொழுதே யென்றவாறு. ஈரிண்டாவது என்பதனை நிலையென்பதனோடுங் கூட்டி நான்காவதாகிய நிலையும் எனவுரைத்துக்கொள்க. உறுதி நிலை கள் உன்பது உம்மைத்தொகை. உறுதியும் நிலையும் என்றவாறு. உறுதிப் பொருள்கள் நான்கு. நிலைகள் நான்கு. நான்காவதுறுதி: வீடுபேறு. நான்காவது நிலை: துறவு. வீடுபேறும் துறவுநிலையும் ஒன்றற்கொன்று முறையே ஆக்கமும் முதலுமாய் நின்று இனமா னவாம். எய்துபாக்கு—அவ்விரண்டையும் அடைதற்பொருட்டு. எய்துபாக்கு என்பது செயவென் வாய்பாட்டின்பாற்படும் வினையெச் சம். உயிர் வளி—பிராணவாயு. ஒருக்கி—ஆயாமம் செய்து: தடுத்து நிறுத்தி. பிராணாயாமம், உபலக்கணம்; இயமம் முதலிய எட்டு யோகாங்கமும் செய்து என்றவாறு. வாய் வாளாமை—பேசாமை, இதுவும் உபலக்கணம்; பட்டினி பொறுத்தலும் தட்ப வெப்பம் பொறுத்தலுமின்றி வாய் வாளாமை முடியாதாதலின் அவ்விரண்டு பொறைகளும் அவற்றால் ஏனைப் பதினொரு பொறிகளும் நான்கு உட்பொறிகளும் தாமே தொழிலொழிந்து வாளாவிருக்குமாதலின் அவ்வெல்லாப் பொறியடக்கங்களும் தழுவிக்கொள்ளப்படும். ஓ ரெழுத்து: ஓம்என்பது. மெய்யெழுத்துச், சார்தற்றன்மையான் எண்ணப்படாதாதலின் ஓரெழுத்தாயிற்று. யோக ஞானமுடை யார்க்கு அதுவல்லது ஒலிக்கமுடியாதாதலானும் ஒலிக்கப்படாது ஆதலானும் ஒலிப்பின் வேறு பயனில்லையாதலானும் ஓரெழுத்தும்

என எதிரது தழீஇயவெச்சவும்மை கொடுக்கப்படாதாயிற்று. அறிவு வெளியைப் பரமாகாசம், சிதாகாசம் என்றாற்போல வழங்குவர் வடநூல்வழிவந்த தமிழாசிரியர். உயர்வினைப் பாத்துவம், அல்லது பாதத்துவம்என வழங்குவர் வடநூலார். உய்தல்—எல்லாத் துன்பங்களினின்றும் நீங்கி நிற்றல். உறுவர்—முனிவர். வாய்ப்பறைக்கு நாக்கடிப்புக் கொள்க. இரைக்கும்—ஒலிக்கும். மடை—பலிச்சோறு. துப்பு—வலி. கானவர்—வேட்டுவர். துணங்கை—கைமடக்கி விலாவிலடித்துக்கொண்டாடுஆடுங்கூத்து. இது சிங்கிக்கூத்து எனவும்படும், சிங்கியடித்தல் என வழக்கிலும் வழங்குதலுண்டு. தொண்டகம்—குறிஞ்சிநிலப்பறை. ஊர்—பாத்தலையுடைய. பொதியில்—திருச்சிற்றம்பலம். குனிப்போன்—கூத்தாடுவோன். முடை, புலால் நாற்றம்; இது தோலின் சாதித் தன்மையணி. தோல்மடி—விலங்கின் றோலைஉள்புறமாகவும் புறம் உள்ளாகவும் மடித்துப் பறையின் கண்ணுகப் போர்த்த. விட்பறையினைத் தேவ துந்துபியென்பர் பிறர். இமையோர்களுடைய விட்பறையெனவியைக்க. முருகனுடைய, சூரனைக் கொன்ற வெற்றியைக் கூறும் பறையென்க. மாடுகளை யடித்தோட்டப்படாதாதலிற் கண்ணன் ஆக்களைக் குறிப்பிற் செலத் தாத்துவானாயிற்று. அக்குள்—கைம்மூலம்; கம்புக்கூடு என இக்காலத்து வழங்கப்படும். கக்கம் எனவும் வழங்குவர். மாடுமேய்ப்பார், வழியிற் குழலூதுங்கால் ஆத்தாத்துங்கோலை இடக்கக்கத்தில் வைத்து இடுக்கிக்கொண்டு இடத்தோளிற் றலைசாய வைத்துக்கொண்டு குழலூதுதல் மரபு. புல்லாங்குழலூதுங்கால் எழ்துளையிலும் மூன்றும் நான்குமாகிய எழ்விரலும் தனித் தனிச்சேர்ந்து உள்வளைந்து மாறிமாறிப் புடை பெயர்ந்து வருதல், ஞெண்டூர்தலோடொக்கும் எனக் கூறுவர். ஞெண்டு, வடிவும் தொழிலும் விரவி வந்த விரவுவமம். சீர்—அழகு. எழு—தூண்; கணைய மரமுமாம். துன்னியென—திணெணெனச் செறிந்தாற்போல. இணைதோள், இணைந்த தோள் என வினைத்தொகை.

இணைந்த—இரண்டாய்த் தம்முள் ஒத்த. ஒருதோளை யுயர்த்தி ஒருதோளைச் சாய்த்து என்க. சாய்த்து—தாழ்த்து. சேப்பு—சிவப்பு. உற—மிக. குணில்—பறையடிக்குங் குறுந்தடி. திருமாமி—திருமகளாகிய மாமி. இரு தாயர்—கங்கையும் உமாதேவியும். தெந்தோம்: பறையடிக்கும் ஒலிக்குறிப்பிடைச் சொல். தெந்தோமைத் தந்தோமென்றது தற்குறிப்பேற்றவணி.

௨௰௧. அழகன்—இராமன் என்னும் வடசொல்லின் தனித்தமிழ் மொழி பெயர்ப்பு. பத்துத் தேரன்—தசரதன். தேர் மறவர் பதின்மர் அசுரருடைய பத்துத் தேரையும் அழித்தோனாதலின் அவன் அக்காரண குறிப் பெயரனாயினன். ஈண்டு மகட்பரிசு என்பது ஒருவர், தம் புதல்வியரை மணஞ்செய்து கோடலுரியார்க்குக் கொடுக்குங் கையுறை. (தக்ஷிணை) அஃது ஈண்டுத் திருமால் வள்ளி தெய்வயானையார்க்குக் கொடுக்கும் பரிசு என்க. கொண்டு—இராவணனொடு போர் செய்து வென்று கைக்கொண்டு. திருமால் பரிசாகக் கொடுத்த இலங்கைநாடு என்க. இங்ஙனங் கூறியது, தற்குறிப்பேற்றவணி. இராமன் திருமாலெனவும் முருகக் கடவுளின் இரு மனைவியரும் திருமாலின் புதல்வியரெனவும் வழங்கும் புராணமுணர்ந்துகொள்க. வளம்—வருவாய்; வினைபொருள். காமக்குன்றென வியைக்க. கதிரகாமமென்றவாறு. தத்தும்—உடைந்து குதித்து விழும். இறால்—தேன்கூடு. துய்த்து—மாமனார் வீட்டில் விருந்து நுகர்தற்குரிய பலவகைத் துப்புரவுகளையும் நுகர்ந்து. சீர்—சிறப்பு. மருமான்—திருமாலின் மருகன். இனி–இப்பொழுது. வினைமாற்றிடைச் சொல்லுமாம். பொருள்—(செயப்படுபொருள்) காரியம். அஃதும்—அம்முத்திதானும். உம்மை, உயர்வுசிறப்பும்மை. சிவணல்—தாம் அடைதற்கு. தகுதித்தன்று—தகுதியுடையதன்று. எனவே வீடுபேற்றின் சுவையினும் கதிரகாமவேலனைக் காண்டற்சுவை நனிவிஞ்சிற்றாயிற்று. என்றெனவும் என்றும் எனவும் பிரித்துக்கொள்க. நிலப்பிறவி—மண்ணுலகிற் கதிர

காமத்தோடு யாதானுமோரியைபுடைய யாதானுமாய்ப் பிறக்கும் பிறவி. கடலாடித் துளிசொட்டவென்றது நீராடினார்க்கு அந்நீர் தமதுடலினின்றும் சொட்டிக்கொண்டிருக்கும் இயல்பு தோன்றக் கூறிற்றாம். கைச்சீர்—கையாற்றட்டுந் தாளம். செப்ப—சொற் சொல்லுதல்போல வொலிப்ப. ஆட—கூத்தாட. யானைவருங்கால் முன்னே பறை கொட்டுதலும் போரில் வென்றால் வெற்றிப்பறை கொட்டுதலுமாகிய வியல்புணர்ந்துகொள்க.

௩௰. தமிழ்—தமிழகம். தமிழகத்தின் ஆறு கூற்றமாவன: பாண்டி, சோழ, சேர, கொங்கு, தொண்டை, ஈழவளநாடுகள். பேராமை—போர்க்கட் புறங்கொடுத்தோடாமை. ஊராமை—புறங்கொடுத்தோடினாரை வலிந்து சென்று வருத்தாமை. ஆளர்—உடையார். பேராமையும் ஊராமையும் உடையார் என்றவாறு எனவே போர் மறவர் என்பதாயிற்று.

"பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா
லூராண்மை மற்றதனெஃகு"

எனவிப்பொழுது வழங்கும் குறட்பாடம்.

"பேராமை யென்ப தறுகணொன் றுற்றக்கா
லூராமை மற்றத னெஃகு"

என முன்னர் வழங்கியிருக்கவேண்டும்போல இப்பொழுது தோன்றுகின்றது. பரிமேலழகர் எழுதிய விளக்கவுரை ஊராண்மைக்குப் பொருத்தமின்மையும் ஊராமைக்கு மிகப் பொருத்தமுடைமையும் இராவணனை இராமன் வலிந்து மேற்சென்று வருத்தாமையையே எடுத்துக் காட்டுதலும் உற்றக்கால் என்னும் வினையெச்சத்திற்குச் செய்து என்னும் ஒருசொல்லை இசையெச்சமாக வருவித்தன்றி அதனையினிது முடிக்க மாட்டாமையும், உற்றக்கால் என்பது "உற்றழி யுதவியும்," எனவும் "உற்றிடத் துதவி" யெனவும் வருமாறுபோல இடையூறுற்றால் எனப் பொருள்தந்து நிற்றலின் எதிரிகள் இடையூறுற்றால் எனப்பொருள் கூறவேண்டு

மாயின் ஒன்று என்னும் அடைகொடுக்கமாட்டாராதலும் ஒன்றுற்றக்காலெனின் எதிரிகள் பிறரால் ஓரிடையூறுற்றால் எனப் பொருள் படுமன்றித் தன்னால் ஓரிடையூறுற்றால் எனக்கருத்துப் பொருள் படாமையும் தான் எதிரிகளால் ஓரிடையூறுற்றால் எனவே யினிது நடைப்போக்கிலேயே பொருள்படுதலும் ஒன்றுற்றக்கால் தான் பேராமையைத் தறுகண் என்பவென வினிது பொருள்படுதலும் மற்று எனும் வினைமாற்றிடைச் சொல், ஒன்றுற்றக்கால் என்னும் உடம்பாட்டு வினையையும் அதன் பயனிலையாகிய பேராமையென்னும் எதிர்மறை வினையையும் மாற்றி எதிரி ஒன்றுறாது புறங்கொடுத்துப் பெயர்ந்தோடுதலின்கண் எனப் பொருள் தோற்றிநிற்றலும் பேராமையும், ஊராமையும் முறையே தான் புறங்கொடுத்தோடாமையையும் பிறர் புறங்கொடுத்தோடின் அவர்மேற் செல்லாமையையும் உணர்த்தித் தம்முள் இயைபுடையனவாயின மாய்நிற்றலும் இங்ஙனம் இனமாதலையே மற்றென்பது சுட்டி நிற்றலும் குறட்பாவும் ஒரு பொருண்மேல் வருதலும் பிறவும் எம்கருத்தினையே வலியுறுத்தவல்ல சான்றுகளாகக் காணப்படுகின்றன. இன்னும் அறிஞர்களெல்லாம் ஆராய்ந்து உண்மையைத் துணிந்து நிறுத்தக் கடவாராக. முந்நீர்—கடல். கதிரகாம வேலன் திருவருளாகிய முந்நீரென்க. திளைத்து—முழுகிக் குளித்து. ஆடுதல்—நீராடுதல். ஆடுவான்—ஆடும்பொருட்டு என வினையெச்சம். வரும் ஆறு எனக்கூட்டுக. பொதுள்—தழைத்த. செறிந்தவெனினுமாம்; வினைத் தொகை. புதல்—தூறு. அலைக்கும்—பொருள்பறித்து வருத்தும். வேறுவேறாய்—தனித்தனியாய். இரிந்தோட—திக்கிட்டோட. வேண்டும்—விரும்பின. அயுரொப்பு என்பது யுரொப் என்னும் இங்குலிச் சொல்லின் தமிழ்த் திரிபு. இது, ஆசியம், அயுரொப்பு, அப்புரிக்கம், அமரிக்கம், அசுற்றெலியம்; என்னும் உலகத்தின் இப்பொழுதைய ஐம்பெருங் கூற்றங்களுள் ஒன்று. வேள் என்பதன் பன்மை, வேளிர். வேள்—வெளியவன்; வெள்ளைநிறமுடையான். கரியனைக் காரியெனவும் செய்யனைச் சேய் எனவும் வழங்கிய சாய

லான் வெளியனை வேள்எனக் கூறினேம். வேள் என்னும் முதனிலை வேள்என நீண்டு திரிந்து வேறுபட்டதற்கேற்ப வெள்ளையவனாகிய, இயைபுடைய வேறு பொருள் படுதல் தக்கதாமென்க. ஈண்டு வேளிர் போர்ச்சுக்கீசியர். இவர்நாடு போர்த்துகல் என்பது. இவர் கி.பி 1615 முதல் 22—6—1658 வரையும் ஈழ நாட்டினை யாண்டுகொண்டிருந்தனர். அப்பொழுது கதிரகாம வேலனது உண்டியற் பொருட்டிரளைக் கவர்ந்துகொள்ளவேண்டும் எனக் கெடுவினை நினைந்து இருமுறை கதிர்காமக் கோயிலுக்குப் படைதிரண்டு சென்று சேர்ந்தபொழுது அவ்வுண்டியற் பேழையைக் கண்டு கொள்ளவுமுடியாது போயிற்று. இவ்வாலாறும் முன்னர்ப் பெறப்படும். புலன்—கல்வியறிவு. புலனுழுநர்—கல்வியறிவையே உழு தொழிலாகக்கொண்டு வருவாய் பெற்றுண்டுதவி வாழ்பவர். "புலனுழுதுண்மார் புன்கணஞ்சி" யென்பது புறநானூறு, மாடு—செல்வம். மாடர்—செல்வர். நன்றியில் செல்வமுடையார்க்கு உவர்க்கடல் உவமம். கடல்போலுமாடர் எனவுவமத்தொகை. "உவர்க்கடலன்ன செல்வருமுளரே" யென்பது புறம். சீர்—செல்வம். சீர்மாறு மூன்றில் என மாறுக. செல்வம் மாறிவிடும் மூன்றிலென்க. தீண்டுதல்—புலையாது புலைமை. அவர்: அப்புலனுழுநர். வறுமைப் பசாசம் ஓடவென்வென்பது பறைகொட்டிப் பசாசம் ஓட்டும் நாட்டு வழக்குக் குறித்து நின்றது. மலருண் மணம்போன்ற நின்மான் யானையென்றது முறையே மான் பெற்ற வள்ளியம்மையையும் தெய்வயானை யம்மையையும். மருள, வியப்பவெனவும் மயங்கவெனவுமிருபொருள் கொள்க. வியப்பவென்புழி ஓடவென்னும் எச்சவினைகளொடு முடியும். மயங்கவென்புழி வரும் என்னும் பெயரெச்ச வினையொடு முடியும். மான்யானை மருளவருமாவோடயாளியோட வென்பது புனைவுளிப் பல்பொருட் சொற்றொடரணி. மா—குதிரையும் குதிரை முகமுடைய சூரபன்மனும். யாளி—சிங்கமும் சிங்க முகமுடைய சூரன் தம்பியும். பின்னர்க் கேட்கும் வள்ளியம்மையும் தெய்வயானை யம்மையும் தன்னை

யுவக்கும்படியாக முருகன் தன்மேற் போர்க்கு வரும் சூரபன்மனும் சிங்கமுகாசுரனும் தோற்றோடவெனவும் கதிரகாமக்காட்டுள் வாழும் மானும் யானையும் வருந்தி மயங்கும்படியாக அவற்றைக் கொல்ல வருகின்ற, அவற்றின் முறையே பிறவிப் பகைகளாகிய குதிரையும் சிங்கமும் அஞ்சிக் கொல்லாது ஓட வெனவும் இருபொருள்படுதல் கண்டுகொள்க. மலருண் மணம்போலு மான் யானையெனக்கூட்டிமுடிப்பிற் பல்பொருட் சொற்றொடரணி யெனக்கொள்ளாது ஒலியாகிய குறி நிலையணியெனக் கொள்க மால்—மயக்கம், ஈண்டு ஆகுபெயரால் மாயா மலத்தை யுணர்த்திற்று மாயையாகிய பாம்பிற்குக் கரும மலத்தைச்சீற்றமாகவும் ஆணவ மலத்தை நஞ்சாகவும் கருதிக்கொள்க. அரவோட்டத்திற் கியைய இடியென்றது இயைபுருவகம். ஏனைய வோட்டத்திற் கியைய இடியென்பதனை இடிபோலும் என உவமவணியாகக் கொள்க. அரவிற்கு இடியாகிய நாத தத்துவம் எனவும் நாததத்துவமாகிய சிறு பறையெனவும் மாறி உருவகவுருவகமாக்கிக் கொள்க. ஏனையவற்றிற்கு நாததத்துவம்போலும் இடி; இடிபோலும் சிறுபறையெனவுவமைக்குவமை வழுவாக்காது நாத தத்துவத்தையும் இடியையும் ஒக்குஞ்; சிறு பறையென இடைப்பிற வரலடைமொழியாக்கித் தனித்தனியுவமையாக்கிக் கொள்க. சேண்—உயர்ச்சி. வெற்பும் எனும் உம்மை பொதியின் மலையேயன்றி யெனப் பொருள்தரும்; இறந்தது தழீஇயவெச்சவும்மை. பொதியின் மலையில் அகத்தியனார்க்கு முத்தமிழ் நூல்களை முருகக் கடவுள் கற்பித்தருளினானெனவே பொதியின் மலையும் முத்தமிழ்நூல் கற்றது என்பது கொள்ளப்படும். இப்பொழுது முருகக் கடவுட் பிள்ளையின் சிறு பறையினினின்றும் எழுத்தோசைகளும் இசையோசைகளும் கூத்தாகிய தாளமும் எழக் கதிரமலையில் எதிரொலி யெழுதலைக்கருதிக் கதிரமலையை முத்தமிழ் நூல் கற்பதாகவும் முருகன் அதனைக் கற்பிக்கும் ஆசிரியனாகவும் கூறியது தற்குறிப்பேற்றம். ஆசிரியர் பாடம் சொல்லிக்கொடுத்தவுடன் மாணவரும் ஆசிரியர் சொல்லியவாறே அடுத்து எதிராக இடையீடின்றிப் பாடம் சொல்லுமியல்பு

போலச் சிறுபறையொலித்தவாறே கதிரமலையும் அடுத்து எதிராக இடையீடின்றி ஒலித்தல் அமைந்து காணப்படும்.

௱௰௧. பரல்—சிறு பருக்கைக் கற்கள். மாணிக்கமே ஆண்டு சிறு பருக்கைக் கற்களாய்க் கிடக்கும். குவை—குவியல். பள்ளி—முனிவ ராசிரமங்கள். தவர்—முனிவர். பொற்பழங்கரகம்—பொன்னாற் செய்யப்பட்ட, பழையதாய்க் கழித்துப் போகடப்பட்ட கமண்டலம். இவை இல்லறத்தாராற் கதிரகாம முனிவர்கட்குத் தானமாகக் கொடுக்கப்பட்டன. பானை—சோறு பொங்கும்பானை. பானையில் வார்த்தவென வருபும் பொருளும் விரிக்க. மணியாறு—மாணிக்கக் கங்கை. ஆமான்—காட்டுப்பசு. யாற்றுப்பால் எனக் கூட்டி யாற்றின்கட் பெருகிவரும் பால் என்க. எனவே மாணிக்கைக் கங்கையாற்றிற் காட்டுப்பசுக்கள் கறந்தபால், வெள்ளமாய்ப் பெருகி வருவது அல்லது தண்ணீர், வெள்ளமாய்ப் பெருகி வருதலில்லை யென்றதாகக் கொள்க. பசும்பால்—குளிர்ந்த பால். யாற்றின்கட் பெருகிவரும் பாலை முகந்து கரகப்பானையில் உலை நீராக வார்த்தார் அச்சிறுமியர் என்க. உலைநீரிற் பெய்தவென விரிக்க. அமை—மூங்கில். எள்ளி—இகழ்ந்து தகர்—யாடு. ஈர்த்து—இழுத்து. ஆடும்—விளையாடுகின்ற. நாரத முனிவர் வேள்வியிலெழுந்து உயிர்களைப் பாய்ந்து கொல்லவந்த ஓர் யாட்டினைக் கொம்பைப் பிடித்து அடக்கி ஊர்தியாகக் கொண்டருளினான் முருகன். அதனை நினைந்து சிறுமியரால் தகர்க்கொம்பு ஈர்த்தாடும் எந்தாய் என விளிக்கப்பட்டான் அம்முருகன். என் ஆம்—அழித்ததனால் (நிற்கு) என்ன நன்மை கிடைக்கும். என் என்னும் வினாவினைக் குறிப்புப் பெயர் ஈண்டு எதிர்மறைப்பொருள் குறித்து நின்றது. ஒரு நன்மையும் உண்டாகாது என்றவாறு.

௱௰௨. பரசுராமனோடு கூடி முருகக் கடவுள் சிவபெருமானிடம் விற்கல்வி பயின்றுகொண்டிருக்குங்கால் ஒரு பொழுதின்கண் இமயமலைச் சாரலில் முருகக் கடவுள் பரசுராமனோடு உலாவி வருங்கால் அன்றிற் பறவைகள் கொடுமுடியினுயரத்தால் வடபாற் செல்லமாட்டாது வருந்தி முயன்றதனைக் கண்டிரங்கி அம்மலையை அம்புவிட்டெய்து துளைத்து வழியுண்டாக்கி எளிதாகப் பறந்துபோய் வருமாறு முருகன் செய்தான். அதனால் அம்மலை அன்றிற்குன்று எனப் பெயர் சொல்லப்படும். வடமொழியிற் கிரவுஞ்ச பருவதமென வழங்கப்படும். கிரவுஞ்சம்—அன்றில். "குருகு பெயர்க்குன்றங்கொன்றோன்" என்பது மணிமேகலை. குன்று துளைத்தது பரசுராமன் எனவும், ஒற்றுமை நட்புரிமை பற்றியும் ஏவன் வினை முதலென்பதுபற்றியும் முருகன்மேல் ஏற்றிக் கூறப்படும் எனவுங் கூறுதலுமுண்டு. அங்ஙனங் கூறுதலின் கருத்து: முருகனது அடியார்க்கெளிமை, "சால்பிற்குக்கட்டளை யாதெனிற் றோல்வி துலையல்லார் கண்ணுங் கொளல்" என்னுங் குறளின் பொருள், தந்தையே ஆசிரியனுமாயிருத்தலால் மக்கட்குக் கல்வி சிறவாமை, மகன் என்னும் உரிமைபற்றி மற்றை மாணாக்கர்க்குக் காட்டிலும் மறைப்பொருளை மகனுக்குச் செவியறிவுறுத்தி நடுவு நிலையும் வாய்மையும பிறழ்தலில்லாத ஆசிரியன் தன்மை முதலியனவற்றை விளக்குதலாம். நெஞ்சினை—மனமுடையாய். அன்று—பாரதகாலம். வீடுமன்—சந்தனுமகன் அம்பாள், காசிநாட்டரசன் மகள். இவள் வீடுமனால் வலிந்து கொணரப்பட்டுப் பின் அவள் விரும்பியவாறு சாலுவ நாட்டரசன்பாற் போகவிட அவனும் புறக்கணிப்பப் பின்னர்ப் பரசுராமனாலும் வீடுமன்பாற் சேரமுடியாது நொந்து வீடுமனைக் கொல்லுதற்பொருட்டு முருகக் கடவுளை நோக்கித் தவஞ் செய்து அவன் தோன்றி வீடுமனைத் கொல்லத்தக்காரால் அணியப்படும் ஒருபூமாலை கொடுக்கப்பெற்றாள். நல்லியக் கோடன், சிறுபாணாற்றுப்படைப் பாட்டுடைத் தலைவன். நாகர் குடிகளுள் ஓவியர் குடிப் பிறந்தவன். தொண்டைவளநாட்டு இரு பத்துநாலு கோட்டங்களுள் எயிற்கோட்டம், ஆமூர்க்கோட்டம், வேலூர்க்கோட்டம் என்னும் மூன்று கோட்டங்களையுடைய ஏறுமாநாடாண்ட குறுநில மன்னன். இவன், தன் பகைமிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்ட

பொழுது முருகன் கணவிற்றோன்றி இன்ன கேணியிலுள்ள பூவைப்பறித்துப் பகைவரையெறி யென்று கூறி மறைய, நல்லியக் கோடனும் அவ்வாறே செய்ய, அப்பூ, வேற்படையாக மாறிப் பகைவரைக் கொன்றது. வேல் பூவாகப் பூத்திருந்தவூர்க்கு அதனால் வேலூர் என்ற பெயருண்டாயிற்று. அவ்வூர் இப்பொழுது உப்பு வேலூர் என்று வழங்கப்படுமென்பர். செந்நா—நூல்கள் பயின்ற நா. பூவன்—தாமரைப் பூவிற்றோன்றிய படைப்புக் கடவுள். உம்மை, உயர்வு சிறப்பும்மை. இஞ்ஞாலம் என்பது தொக்கது. முருகக் கடவுள் அசுரரை அழித்துப் புத்தேளிரைக் காத்ததற்காக இந்திரன் தன் மகளார் தெய்வயானையாரை முருகக் கடவுளுக்குக் கொடுத்தபொழுது முருகக் கடவுள் தம்கையிலுள்ள வேலைநோக்கி ‘ நமக்கு எல்லாந் தந்தது இவ்வேல்" என்று சொல்ல அருகிருந்த பிரமன் "இவ்வேலிற்கு இந்நிலை என்னால் வந்ததன்றோ" என்றானாக நம்கையில் உள்ள வேலுக்கு நீ கொடுப்பதோராற்றலுண்டோ? என்று வெகுண்டு "இங்ஙனங் கூறியநீ மண்ணிடைச் செல்வாய் என்று வைய அவனும் அவ்வாறே மண்ணிடைப் பிறந்தான் என்பர். சீறடிக் கொடு—சிறிய திருவடிகளால். சீறடிக்கொடு எம் தலையெழுத்துச் சிதைக்கவென்றது: நின் காலடியில் எம் தலை தோய விழுந்து யாம் கும்பிடுகின்றோம் என்றவாறு.

௩௰௩. அன்று—அநாதி. ஆளாவேம்—அடிமையாயிருப்பேமுடைய. அகம்—சிற்றில். போந்து—வந்து. ஓகாரங்களெல்லாம் எதிர்மறை. எம்மாமியென்றது பிள்ளையார் தாயாரை. சொன்னாரோவென்னும் ஐயவோகாரம், யாம்சொல்லவில்லையென்னுங் குறிப்புணர்த்திற்று. நன்றும்—மிகவும். சிற்றிலையழிக்கும் என்க. செய்சிற்றிலென்றது உலகத்தொகுதியை. அழிக்குந்தோறுங்காமக் குறிப்புத்தோன்றியுள்ளமொடுங்குதலின் நாணுவள், உமை. கோங்கு நனையெனமாறுக. நனை — அரும்பு. கோங்கரும்புபோலுமுலையென்க. வடிவுவமம். அகலம்—மார்பு. புடைத்தல்—முகிழ்த்தெழு

தல். தமிழ்—இனிமை. காமம்—கதிரகாமம். பொதும்பர்—சோலை. இனித்தமிழ்மொழிக்குச் சிறந்த அகத்திணைக்களவொழுக்கத்திற்கு வாய்ந்தபொழிலெனவேறொருபொருளும் ஒலித்தது குறிநிலையணி. முயங்குவாமோ? எனவரற்பாலது "ஆடாமோவூச"லென்பதுபோல முயங்காமோ? என மரீஇவந்தது. முயங்குவாம் வருவாயாளெனத் தழுவிப்பேசிச் சிற்றிலழியாதவாறு சிறுமியர் முயன்றதுகாண்க. கேண்மோ; மோ: முன்னிலையசைநிலையிடைச்சொல். சிதையா—எஞ்ஞான்றுங்கெடாத. பேரில்—பேரின்பப்புணர்ச்சிக்குரிய பெருவீடு. சிதையாப்பேரில்செய்பெரியோயென்றது கருத்துடையடைகொளியணி. சிறியாரதுசிற்றிலைச்சிதைத்தல் பெரியாரதுபெருமைக்குத்தகாதுஎன்னுங்கருத்தைப்பெரியோய் என்னும் அடைகொளி உடையதாயிருத்தலின். இனிச்சிற்றில்சிதையற்கவெனக்கூறுமூன்றுசெய்யுளின்கண்ணும் பலதிறப்பட்ட விலக்கணிவருமாறோர்ந்துணர்க. வருகைச்செய்யுள்முதலியவற்றினும் இவ்விலக்கணிவருதலுய்த்துணர்ந்துகொள்க.

௩௰௪. கோடு—மலை. வடவரைப்பு—வடவெல்லை. தென்—தெற்கு. வரை—எல்லை. கதிரம்—கருங்காலிமரம். கதிரை—கதிரகாமம். பெருநாள்—திருநாள். ஆடித்திங்கள்—ஆடி மாதம். அம், சாரியை. இவ்வாடிமாதம் என இகரச்சுட்டு இசையெச்சமாக வருவித்துரைக்கப்படும். பெருநாளும் இன்றேயாம் எனக்கூட்டியுரைக்க. நிற்பிறப்பித்த—நின்னைப்பெற்ற. வான்கங்கை—ஆகாய கங்கை. பீடு—பெருமை. மதியைக்கங்கையாள் முகம் என்றது தற்குறிப்பேற்றவணி. நகையென்பதனை முறுவல் எனவும் பிறைக்கலையெனவும் இரட்டுறமொழிந்து கொள்க. ஆடித்திங்களின்கண் நிறையுவாவிற் (பௌர்ணமி) கதிரகாமவேற்றிருவிழா நிகழ்த்தப் பெறுமாதலின் மதிநிரம்பிற்று எனக்கூறப்பட்டது. திருநீற்று வெள்ளம் என்றது சைவமதத்தினர் திருக்கூட்டம். வெள்ளம்—

ஆற்றுநீர்ப்பெருக்கு. திருக்கூட்டம்; இடையறாது மிகப்பெருகி இடமறைய ஒலித்து அலையால்வெளுத்து வந்துகொண்டிருத்தலின் வெள்ளம் என ஒட்டணி தோன்றக்கூறப்பட்டது. இனிவெள்ளம், மிகுதிபற்றியும் ஆரவாரம்பற்றியும் அலைதல்பற்றியும் கடல் என்னும் பொருள்படக்கூறப்பட்டதுமாம்; அல்லது ஓரெண்ணின்பெயருமாம், ஒருவாமல்—இடைவிடாமல். மால்—திருமால், திருபபாற்கடலில் உறங்குமால் என்க. எழுப்ப—துயிலுணர்த்த. மாலினையெழுப்பவென்றது தொடர்புயர்வு நவிற்சியணி. ஒருகோடியென்னும் வரையறைப்பெயர் ஈண்டு அளவின்மையைக்குறித்து நின்றது. கப்புரம்—கற்பூரம். வேறுநெய்விளக்கு முதலியன கதிரகாமவேலவற்கு இடப்படாமையிற் கப்புரவிளக்குமட்டும் கூறப்பட்டது. வேறுவிளக்கு இடாமைக்குக்காரணம்,முருகனுக்கு ஆண்டுவிக்கிரகவடிவமில்லாமையேயாம். மெய்க்குறிப்பு—உண்மைக்கருத்து. அஃதாவது வெளுத்தகப்புரம் நெருப்புப்பற்றப்பட்டு எரிந்து முறையே ஆவியாய்க்கரைந்து மேற்சென்றுமறைந்து காணப்படாதவாறுபோல மும்மலங்களினின்றும் நீங்கித்தனித்துத்தனக்குத்தானே விளங்கிநின்றவுயிர் சிவஞான நெருப்புப்பற்றப்பட்டுச் சிவஞானவடிவமாய் விளங்கியெரிந்து சிவமாய்க்கரைந்து மேற்சென்று தான்மறைந்துகாணப்படாதுபோம்; என்னும் அனுபவஞானமாகிய கருத்து. இனிக்கப்புரத்தை உயிர்களோடு ஒப்பியாது முருகக்கடவுளோடொப்பித்து முருகக்கடவுள் ஆன்மாவின்கண் ஞானவடிவமாய்நின்று அஞ்ஞானத்தைப்போக்கித் தத்துவப்பொருள்களை விளக்கிப் பின்னர் அவ்வான்மாக்களோடு கதிரகாமக்கோயில்வெளிவடிவமாய் மறைந்துநிற்கின்றான் என்னும் உண்மைக்கருத்தெனினுமாம். விக்கிரகவடிவமெல்லாம் கடவுளுக்குரிய மந்திராத்துவாவடிவமாகிய உபசாரவடிவம் என்பர். விக்கிரகவடிவம் என்பது ஐம்பூதங்களுள் ஒன்றைத்திருமேனியாகப் பாவனையாற்கொண்டு பற்றிநிற்றல். கதிரகாமத்திருக்கோயிலில் ஆகாயப்பூதத்திருமேனிக்குரிய மந்திரவோசைவடிவம் நிறுத்தப்பட்டிருத்த

லின் ஆண்டுவெளிவடிவமாக வழிபட்டார்க்குத் திருமுருகன் திருவருள் சுரந்துநிற்கின்றான். அம்மந்திரவடிவத்திற்குவேண்டும் பீடமாகிய தகடும் விக்கிரகமும் ஒருபெட்டிக்குள்வைத்துப் பூட்டப்பட்டுச்சிற்றுடல்போலும் சிறுகுடிற்கோயிலினுள்வைத்து உபசரிக்கப்படுகின்றன. அப்பெட்டியே திருவிழாக்காலங்களில் யானைப்பிடரில் வைக்கப்பட்டுவீற்றிருந்து திருவுலாப்போந்தருளுதல் இப்பொழுது வழக்கமாகக்காணப்படுகின்றது. அதனை அங்ஙனம் வழிபட்டு எழுந்தருளுவிப்போர் இப்பொழுது சிங்களப்பார்ப்பார். இவர் வேட்டுவர் பாற்பட்டவர். அப்பெட்டிக்குள்ளேதான் முருகனுக்குரிய மாணிக்கவிக்கிரகம் இருக்கவேண்டும்போலும். அவ்விக்கிரகம் மாணிக்கவிரத்தினமாயிருத்தலும் பெட்டிக்குள்வைத்து மறைத்தற்கு ஒரு காரணமாயிருக்கவேண்டும்போலும். தம்மிழப்பவென்றது தந்தன்மையாகிய உயிர்த்தன்மையிழந்து சிவத்தன்மையெய்தவென்றவாறு. தெருவில். ஓகை—மகிழ்ச்சி. அயில்—கூர்மை. அயில்—வேற்படை. அயிற்சிறுதேர், திருவிழாச்சிறுதேர், பூமழைச்சிறுதேர் எனத்தனித்தனிக்கூட்டுக. அயிற்சிறுதேர்—வேற்படையையுடையசிறுதேர். முருகன் தன்கையில்வைத்திருந்தவேற்படையைச் சிறுதேருருட்டுதற்பொருட்டு அத்தேரின்மேல்வைத்து அவ்வேற்படையையுடைய தேரினை அவ்வேற்படைவைத்திருந்தகைகளாலுருட்டிளுதலிற் சிறுதேர், வேற்படையுடைத்தாயிற்று ஆடிவேல்விழாவென்னும் பெயர்க்குப்பொருள் ஈண்டுத்தற்குறிப்பேற்றியுரைத்தவாறு கண்டுகொள்க. திருவிழாச்சிறுதேர்—திருவிழாக்கொண்டாட்டத்தைப் பயக்கும் சிறுதேர். பூமழைச்சிறுதேர்—மாந்தரும் கடவுளரும் பெருமகிழ்ச்சியாற்சொரியும் பூமழையையுடைய சிறுதேர். ஓகையும் அயிலுமுடைய அயில். முருகன் திருக்கையைத்தீண்டப்பெறுதலால் வேற்படைமகிழ்ச்சியுடைத்தாகும். தெருவிலுருட்டியருளெனக. பற்றறுத்து இன்பம் விளைத்தலான்முருகன் அறிஞாற்றேடத்தக்க முழுமாணிக்கமாம். ஏனையுலகியன்மாணிக்கம், பற்றைவளர்த்துத் துன்

பம் விளைத்தலிற்றேடத்தக்கதன்றாயிற்று. முழுமாணிக்கம்—இலக்கணமெல்லாம் நிரம்பப்பெற்ற மாணிக்கம். பெரியமாணிக்கமெனினுமாம். முருகன் எல்லாநற்குணங்களும் ஒருங்குதிரண்டிருக்கப்பெற்று நிலைபெறுதலிற் குணக்குன்றமெனப்படுவன்.

௩௰௫. மாயா; என்பதனை ஆகாரவீற்றுத்தனித்தமிழ்ப்பெயரெனக்கொண்டு உலகப்பரப்புத்தோன்றியொடுங்கற்கு ஆக்கமுத (முதற்காரணம்) லாயிருப்பது என உறுப்புப்பொருள்தோன்றவுரைகூறுவர், சிவஞானபோதப்பேருரையாளர் மாதவச்சிவஞானயோகிகள். மாய்—மாய்ந்து: மறைந்து. ஆ—ஆதல்: உண்டாதல்; வெளிப்படுதல்; முதனிலைத்தொழிற்பெயர். மறைந்துவெளிப்படுதல் என்னுந்தொழிற்பண்பின்பெயர், அப்பண்பினையுடைய முதற்பொருளையுணர்த்தி நிற்றலின் அடையடுத்தபண்பினாகுபெயர். மாயாவென்பது மருஉவால் இறுதிநிலையுருபுதொக்குப்புணர்ந்த வினையெச்சத்தொடரான்றிப்பாடாண் என்றாற்போலத்தொகைநிலைத்தொடரன்மையான் அன்மொழித்தொகைப்பெயரன்று. உடல், பொறி, நிலம், நுகர்ச்சியென்னும்நான்கன்றொகுதியாகிய உலகம் என்னும்பருப்பொருட்காரியவடிவமாகத்திரிந்துவிரிந்து வெளிப்பட்டுக்காரணவடிவமாகிய நுண்பொருளாக மடங்கியொடுங்கி வெளிப்படாது நிற்றற்றன்மையமைந்தது என்றவாறு. பின்னர் உயிர்களுக்கு இருவினையுண்மைகூறுதலால் ஈண்டுமாயாவென்றது மாயாவினது, அழுக்குப்படிந்துதூய்தல்லாத ஓரிடத்தினையென்பது குறிப்பாற்பெறப்படும். களியென்பது தழாலணி (சிலேடையணி) பசைப்பசுமண் எனவும் மயக்கம் எனவும் இருபொருள் தருதலின். மண்ணியல்—மண்ணாலான. வாய்மை—வாக்குக்கள். நால்வாய்மைகளாவன: நுணுக்கம், (சூக்குமை) பான்மை, (பைசந்தி) இடைமை, (மத்திமை) கேள்வி, (வைகரி) என்பனவாம்; இந்நான்குவாய்மைகளும் தூமாயா (சுத்தமாயை) வினது இயப்பொருண்மை (நாததத்துவம்) (இயம்—நாதம்.

பொருண்மை—தத்துவம்.) யின்வளர்ச்சித்திரிபு (விருத்திப்பரிணாமங்) களாமெனக்கொள்க; ஈண்டுநால்வாய்மையென்பது, ஐம்பால், (கூந்தல்) ஐயுணர்வு (திருக்குறள், மெய்யுணர்தல்; ௪) என்பனபோல அன்மொழித்தொகைப்பெயராகநின்று நால்வாய்மையுடைய தூமாயாவினையுணர்த்திற்று; தூமாயா, சிவபெருமானது திருவருளாற்றல் சென்றுபற்றித்தொழில் செய்யும் இடமும் செயப்படுபொருளுமாம். கொடிஞ்சி:—தேரில்வீற்றிருப்போர்கைப்பற்றுதற்கமைந்ததோர்தேருறுப்பு; இது தாமரைப்பூவடிவமாகவமைந்திருக்கும் என நச்சினார்க்கினியர் கூறுவர். இமிழ்—ஒலிக்கின்ற. கொடிஞ்சியையுடைய சிறுதேரென்க. மண்ணுணியன்ற சிறுதேர். அச்சு—உருளைகோக்குமிடம். மன்னுயிராகிய அச்சின்கண்; எனவுருவகம். இருவினையாகிய ஈருருள். உருள்—தேர்ச்சக்கரம். அச்சினின் ஈருருளையைக்கோத்து. மாறிக்கோத்தல்—ஓரச்சின்கண் இருவினையாகிய ஈருருளையை மாறிமாறியிணைத்தல். மருளும்—மயங்குதலானாகிய மயங்குதல்: ஒருபொருளைமற்றொருபொருளாகத்திரியக்கோடல். அவாவாகிய ஆணி. வீயா—கெடாத. ஆணி: அச்சுருவாணி. உருளைகழலாமல் அச்சிரும்பின்கடைக்கட் செருகும் அது. வெறும்பாழ்வெளி: உயிர்முதலிய எல்லாப்பொருட்கும் பற்றுக்கோடாய் அவற்றொற்றுக்குண்ணாது நிற்குமுழுமுதற் சிவனதொருதனிநிலைமை. வெட்டவெளி: அப்பொருள் தனக்கொருபற்றுக்கோடின்றி நிற்கும் நிலைமை. அருள்—திரோதானசத்தி (மறைப்பாற்றல்) அதுவே மாயையைத்தீண்டித் தொழில்செய்தலிற் சிவபெருமான் கையெனப்படும். வினைபலவிளைதர என்பது தழாலணி; (சிலேடையணி) சேர்த்துருட்டற்றொழில்கள் பலவுந்தோன்றவெனவும் உயிர்களது வினைத்தொகுதி, ஆணவமலம் பக்குவப்பட்டுக்கழிதற்கு இன்ப துன்பப்பயன் நுகர்விப்பவெனவும் பலபொருள்படும். ஈர்த்தல்: தான் முன்னின்றுதேர்பின்வரக்கயிற்றாலிழுத்துச்செல்லல். உருட்டல்: பின்னின்றுதள்ளியுருட்டலும் தேர்மேலேறியிருந்து கால்களாலா

தல் பொறிகளாலாதல் உருளைகளைச்சுழற்றியுருட்டலுமாம். ஈர்த்தலும் உருட்டலும் முறையே உயிர்களின் ஒடுக்கமுறை நிகழ்ச்சிமுறை (பிரவிருத்திமார்க்கம் நிவிருத்திமார்க்கம்) களைக்குறிப்பனவாம். பேயாம்—பேய்த்தன்மைபெறுதற்குக்காரணமாகிய; பேய்த்தன்மை: பேயாய்ப்பிறத்தலும் பேய்கோட்படுதலும் பேய்போல அறிவுதிரிந்து ஒழுக்கமின்றி வேண்டியவாறு திரிந்துழன்று பிறவுயிர்கட்கு இன்னா செய்தொழுகுதலுமாம். கோள்—கொள்கை. முறை: காரணகாரியமுறையும் முன்பின்றொடர்ச்சிமுறையும் இலக்கணமுறையும் நீதிமுறையுமாம். பிறழ்பு—பிறழ்ந்து; தடுமாறி. உருள—கெட. பயில்—பழகிய. ஊராண்மை—நாகரீகம்: கல்வியறிவொழுக்கங்களான் மேன்மேலுயர்ந்துசெல்லல். "ஊராண்மையெனபதோங்கிச் செல்லல்" என்னும் பிங்கலந்தை நூற்பாவிற்குமிதுவேகருத்து. ஊராண்மைக்குப்பொருள் நாகரீகமென்றுரை கூறியவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தமிழ்ப் பேராசிரியர் சோமசுந்தர பாரதியாரவர்கள். "ஊராண்மைக்கொத்தபடிறுடைத்தென்பது" கலித்தொகை. பேராண்மை—செயற்கருஞ்செயல்செய்தல். "பேராண்மையென்பதரியசெயலே" யென்பது பிங்கலந்தை. அரசியலாழி—ஆணைச்சக்கரம். பெட்ப—விரும்ப. ஓராழி: ஞாயிற்றுச் செல்வனது தேர்க்குரிய ஒற்றையுருளை. சீயா—நீக்காத. திரு—நல்வினை. திருவில்பொருள்—அறத்தானன்றி மறத்தான் ஈட்டப்பட்டுத்தீநெறியிற் செலவிடும்பொருள். உருளும்—நிலைபெறாது நீங்கிப்போய்க்கொண்டிருக்கும். திருவில் பொருள் உருளும் என்பது.

"அருளொடு மன்பொடும் வாராப்பொருளாக்கம்
புல்லார் புரள விடல்" என்னு

முப்பாலாற்பெறப்படும். உருளுமெனினும் புரளுமெனினும் ஒக்கும். "சகடக்கால்போலவரும் என்பது நாலடி."

௱௰௬. பழந்தமிழ் வழக்கு என இப்பொழுது தெரியவருதலால் ஆவிநன்குடியெனவும் பருங்குன்றமெனவுங் கூறினும். ஆவிநன்குடி யென்பது ஆவியது நல்ல குடியிருந்தவூர் என அன்மொழித் தொகையாய்க் காரணப் பொருள்படும். ஆவி: வேளாவி என்னும், வேளிர் குடிப்பிறந்த ஒரு குறுநில மன்னன். இவன் ஆவியர் குடிக்கு முதல்வன். பருங்குன்றமென வழங்கியதனை ஒலிவேற்றுமை பெரிதுந் தோன்றாமையானும் சிறந்த பொருளுடையது என்பதனானும் பாண்டியர் தமிழ்க்கழகச் சான்றோராலேயே பரங்குன்றம் எனச்சிறிது திருத்திச் செய்யுளினும் வழக்கினும் பயின்றதாகல் வேண்டும். குன்றம்—சிறுமலை. உருண்டு பெருத்த சிறிய கற்களைப் பருக்கைக் கற்கள் என்றல்போல உருண்டு பருத்த சிறிய மலையைப் பருங்குன்றம் என்றல் தக்கதேயாம். கிரியென்னும் வடசொற்குப் பரன் என்னும் சொல்லியையுமாறுபோலக் குன்றம் என்னுந் தமிழ்ச் சொற்கு இயையாமையும் பரு என்னுந்தமிழ்ச் சொல் இனிதியையுமாறும், பரங்கிரியென்பது செய்யுளினன்றி வழக்கிற் பயிலாமையும் நுனித்தாராய்ந்து இருங்குன்றமென்றாற்போலப் பருங்குன்றமென்றிருத்தல்வேண்டுமென்பது தெளிக. கூடலை மதுரையெனப் பிறர் வழங்கியதனைத் தமிழரும் வழங்கியவாறுபோலப் பரங்குன்றம் எனப் பிறர் வழங்கியதனைத் தமிழரும் வழங்கினரெனக் கொள்க. தமிழர் தாமே பரங்குன்றமென வழங்குமியல்பினரல்லர். இனிப் பருமையைக் குன்றத்திற்கு அடையாக்கிக் குன்றமென்பதே நின்று ஒழிபளவையானும் இனத்தானும் பொதுமை நீங்கித் திருப்பரங்குன்றத்தினைச் சிறந்துணர்த்திற்றெனக் கொள்ளினுமமையும். தெண்குன்று—தெளிந்த குன்று: புகழான் விளங்கிய குன்றென்றவாறு. ஏரகம்: மலைநாட்டகத்தொரு திருப்பதியென்பர் திருமுருகாற்றுப்படையுரையாசிரியர் நச்சினார்க்கினியர். சுவாமி மலையென இக்காலத்து வழங்கப்படுவது என்பர் திருப்புகழ்ச் செய்யுளுடையார் சேக்கை—தங்குதற்கு உரிய ஆலவாய்—திருச்சீரலைவாய். இக்காலத்துத் திருச்செந்தூர் என வழங்கப்படும்; இது. சேந்தனார்

என்பது செந்தூர் எனவும் சேந்தனில் என்பது செந்தில் எனவும்
மரீஇ வழங்கப்பட்டுத் திருச்சீரலைவாயைப் புகலும். திண்
பாடிவீடு—அழிவின்றி நிலைபெறும் பாசறை. உரு—உட்கு:
நன்கு மதிப்பு. ஆகும்—தோன்றுதற்கு வாயிலாகிய அகக்கள
மாவை—மூலாதாரம் முதலாகவுள்ள, உள்ளம் நின்று நினையும்
நிலைக்களங்களாக வுடையநீ; முன்னிலை வினையாலணையும்
பெயர். ஆறு படை வீடுகளும் ஆருதாரங் ளாமென்றவாறு.
ஆறெழுத் தென்பது முருகன் திருமறை. அது: நாமோகுமா
ராய வென்பதென்பர் நச்சினார்க்கினியர். சரவணபவ என்பது
இக்காலத்துப் பெருவழக்கு. வேறும் முருகன் பெயர்த்தமிழ்த்
திருமறை, ஆறெழுத்துக்களை யுடைத்தாயின் அதனைக்கொள்ளினு
மாம். ஆறெழுத்தான் உணரப்படும் ஆறு செல்வ முகங்களின்
கண்ணும் எனவுரைக்க ஆறு செல்வங்களுமே ஆறுமுகங்களாயு
முள்ளன. ஆறு செல்வங்களுமாவன: ஆட்சி, திண்மை, புகழ்,
மெய்யுணர்தல், திரு, அவாவின்மை யென்பனவாம். மடை—நீர்
போகும் வாயில். அருளை நீரென்னுமையால் மடை, ஒருவழி
யுருவகம். ஆறு—வழி; மடைவழியாக வென்க. ஒழுகு மடைக்
கண்களாகிய மடைவழியாக, நெஞ்சகக் குளத்திற் றேங்கிக் கிடந்த
அருளாகிய நீர் வெளியே கசிந்தொழுக வென்க. ஓவா—விட்டு
நீங்காத. தேரோட்டுதற் பொருட்டுத் தன்பன்னிரு கைகளினும்
பன்னிரு படைகளும் மருவாவாயின. முழந்தாள் வரையும்
படக்கைநீண்டு வளர்ந்திருத்தல் தலைவனியல். கையும் என்னும்
முற்றும்மை தொக்கது. கன்ற—நொந்து தழும்பு பட. வார்—
நீண்ட. வட்டுடை: முழந்தாளளவு முடிக்கும், போர் மறவருடை.
முருகன், படைத்தலைவனுதலின் வட்டுடை கூறப்படும். வனப்பு—
அழகு. வட்டுடையாலேயாகிய வனப்பு. வனப்பமைதல்-கட்ட
ழகு; இலாவணியம் என்பர் வடநூலார். மாமுனிவர் கண்டவெளி:
முழு முதலாகிய அறிவுவெளி. அதுவரையுந் தேருருட்டுவாவது:
அறிவால் தத்துவங்களைக் கடந்து திருவருள்வெளியைச் சேர

லையாம் என்பது கருத்து. மறுகு—தெரு. செரு—போர்.
வீறு—சிறந்த; வினைத்தொகை. பொன்மணிச் சிறுதேர்—பொன்
னாற் செய்து மணிகளழுத்திய சிறுதேர். வாழி என்பன வாழ்க
வென்றுமாம் அசைநிலையிடைச்சொல்லுமாம். ஆறு திருப்படைவீ
டும் ஆருதாரங்களாக வுடையநீ, பொசியவும் கன்றவும் அசையவும்
உருட்டு எனமுடிக்க. உம்மையில்லனவற்றிற்கு உம்மை தொக்
கனவாக்கி விரித்துரைக்க.

௩௰௭. செம்புலம்—முன் உழாது கிடந்த கொல்லை நிலம்.
உழாநிற்கும்—உழுகின்ற. மைந்து—இளமைப் பருவத்து வலிமை.
மலி—மிக்க. புனவன்—குறவன். தெவிட்ட—வெறுப்ப: வேண்டு
மளவு முண்ணுதற் பொருட்டு. கொடுபோம்—கொண்டுபோகின்ற.
தினையினது சோறு; வெய்துசோறு; நெய்ச்சோறு; பாற்சோறு,
எனத் தனித்தனிக் கூட்டிமுடிக்க. பொங்கல்—வடியாது பொங்
கின சோறு. வெய்து பொங்கல்—வெப்பமுடையதாகிய பொங்
கல். வெய்து என்பது வினைக்குறிப்பு முற்றுப் பெயரெச்சம்;
இரு பெயரொட்டாகக் கொள்ளின் முதனிலையிற் பொருள் சிறந்து
அஃது எடுத்தலோசையாற் சொல்ல நிற்றலில்லையாம் பாற்
பொங்கலையென விரித்து அருத்தி என்பதனோடு கொண்டுபோய்
முடிக்க. நெறியிடை—வழி நடுவே. கண் திறவாது முகைத்து
என்க. முகைத்து—மூடி. கண்மூடியிருத்தல், பிரத்தியாகாரம்
என்னும் யோகவுறுப்பு. யோகிகள் உள்ளம் அடங்கி உண்ணோட்
டங் கொள்ளுதற்காம் புறப்பார்வையைக் கண்மூடி யொழித்தலியல்பு.
தம்புலம்—ஆன்ம ஞானம். இறந்த—கடந்து அப்பாற்பட்டுநின்ற.
பழவேங்கை—பழைய வேங்கை; என்றது முன்னர் வள்ளியோடு
களவொழுக்கமொழுகப்புக்கு வேட்டுவர் வரவையஞ்சி மறைதற்கு
வேங்கை மரமாய் நின்ற முருகக் கடவுளை. இனிப் பழவேங்கை
யென்பதற்குப் பழம்பழாத, உலகத்து வேங்கைமரம்போலாது
முருகக் கடவுளாகிய வேங்கைமரம் பழம் பழுக்கும் வேங்கை மரம்
என வெளிப்படுத்துக் கூறியதாகக் கொண்டு பொருளுரைத்துப்

பழமாவ : முத்திப்பழம்; என்றதாகக் கொள்க. "முத்திப் பழம்" என்னும் ஆட்சியினை

"முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்
தத்தி பழுத்த தருவென்னுங்—கத்தியினால்
மோகக் கொடியறுக்க முத்திப் பழம் பழுக்கும்
ஏகக் கொடியெழுங்கா ணின்று"

என்னுந் திருக்களிற்றுப்படியாரிற் கண்டுகொள்க. பழவேங்கை யென்றது வெளிப்படையணி யென்னும் ஒருசார் ஒட்டணி. வேங்கையின் என்னும் இன், "திருவின் செய்யோள் போன்றினிதிருப்ப" என்னு மணிமேகலையடியிற் போல அல்வழிச்சாரியை. மாவடியென்பது மாரடியென மருவி வழங்கும். வேங்கையாகிய மாத்தின் அடியென்க. மாத்தினடி திருவடியாய் நின்றது. தண்மையும் நிழலும் திருவடிக்கியையப் பேரின்பமும் பிறவி வெப்ப மொழிதலுமாமாறு கருதிக்கொள்க. குளிர்ந்து என்னும் வினையெச்சம் குளிர் எனச்சிறுபான்மை தொக்குநின்றது; "வரிப்புனைபந்து" என்றாற்போல. குளிர்தல்—தங்குதல். இஃதொரு நாட்டுச்சொல் என்ப. தூங்கும் என்பது யோக சமாதி யொடுக்கங்கொள்ளும் என்னும் கருத்தாமாறுங் காண்க. சான்றோர்—துறவாணமைந்தோர்: பன்னாட் பட்டினி நோன்பு கிடந்தமையாலுற்ற மெய்த்தளர்ச்சியால் அம்முனிவர் தாமே எடுத்துண்ணமாட்டாமையாற் குறத்தி அம்முனிவர் வாயிலூட்டவேண்டியதாயிற்று. அருத்தி—உண்பித்து. தழைக்கும்—மனமகிழும் குறத்தியானவள் தன் கணவனுக்குக் கொண்டு போம்பாற் பொங்கலை முனிவர்க்குக் கொடுத்தலாற் கணவனும் வெகுளாது மகிழுமியல்புடையான் என்க. தமக்கு இம்மை மறுமை வாழ்வு எளிதிற் கிடைக்கும் என்பதனால் அவர் இருவரும் அவ்வாறு மகிழ்வராயினர். தழைக்கும் என்னும் பெயரெச்சம் கதிர்க்காமம் என்னும் இடப்பெயரொடு முடியும். உம்பர்—தேவர்; ஆகு

பெயர். உகப்பு—உயர்வு; உரிச்சொல்; "உகப்பேயுயர்வு" என்பது தொல்காப்பியம். உகப்பிதற்கும்—உயர்வாகிய இவ்வழகிற்கும். அழகும் என்னும் உம்மையை இதற்கும் எனமாறுக. ஓகாரங்கள் எதிர்மறை. ஒப்பனை—அலங்காரம். ஈண்டு ஒப்பனை செய்தல்: அணிகலம் பூணுதல். இம்பரது—இவ்வுலகத்தின் கண்ணதாகிய. பொழுதறி பொறி—கடிகாரம். சிறு கடிகாரத்தைப் பொற்றொடர்க்காப்பிற் பூட்டி முன்னங்கையிற் பூட்டிக்கொள்ளுதல் இக்கால வழக்கு. இணை—இரண்டு. பொலந்தொடி—பொற்காப்பு: தொடர்க் (சங்கிலிக்) காப்பு. பொறியைப் பூட்டின பொலந்தொடி யென்க. கையிற் பூட்டுதற்கமைந்த பொலந்தொடியென்க. கமுகு போலும் கழுத்தென விரிக்க. அம்: சாரியை. கழுத்து: முருகக்கடவுள் கழுத்து. கழுத்து—கண்டம். இயையும்—தகுந்த. முத்தாரம்—முத்துமாலை. முத்துக் கமுகிலிருத்தல் பொருந்துமென்றது தகுதியணி. முத்துப்பிறக்குமிடங்களுட் கமுகமரமும் ஒன்று. இமை—விட்டு விளங்குதல்; முதனிலைத் தொழிற் பெயர். இமைத்தலை யுடையவென்க. பொலங்கொடி—பொன்னரிமாலை. பூண்களென்னும் வியங்கோள் முன்னர் வந்த வியங்கோள்போல வேண்டிக் கோடற் குறிப்பின் கண் நின்றன.

௩௰அ. வயிரம்—வயிரவிரத்தினம். தெருள்—ஞானம். காற்சிலம்பினையே நோக்கி நிற்குமுள்ளம், நினைவு முதிர்ச்சியான் அச்சிலம்பாகவே காணப்படுமாதலிற் சிலம்பின் வளைவினை உள்ளத்தின்மேலேற்றி உள்ளம்வளையவெனக் கூறியது காண்க. இனித் தெருளுள்ளமானது முருகனுடைய திருவடிகள், தன்னினின்றும் போகாமல் தனக்கு அகப்பட்டுக் கிடக்குமாறு அத் திருவடிகளை வளைத்துத் தடுத்துப் பற்றிக்கொண்டாற் போலும் ஞெகிழம்; எனினுமாம். வளைய—அகப்பட. வளைக்கும்—தடுத்து நிறுத்திப் பற்றிக்கொண்டாற்போலும். நால்—ஒலிக்கின்ற; வினைத்தொகை.

ஞெகிழம்—சிலம்பு. வள்ளிக்கொடி—வள்ளிநாய்ச்சியார். அவர், முருகனுடைய திருமார்போடு சேர்தலாலழகு மிக்க பதக்கத்தின் வாய்ப்பட்டுப் பதக்கத்தையே நோக்கிய நோக்கு மீட்கமாட்டாமையைக் கண்மணி பதிக்குமெனக் கூறினான். இனிக் கண்மணி பதிக்கும் என்புழி மணியென்பது ஒரு சிறப்புவாய்ந்த இரத்தினம் எனவும் ஒலித்து நின்றது காண்க. முகிலூர்தி—இந்திரன். செயிர்—குற்றம். இன்றிய—இல்லாத. மும்மணிப்போவை—புருடராகம், வயிடூரியம், கோமேதகம் என்னும் மும்மணிகளாலாகிய மாலை. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், மாணிக்கம் விற்ற திருவிளையாடல், இருபத்திரண்டாஞ் செய்யுளும் அதன் கீழ்க் குறிப்பும் பார்க்க. முகிலூர்தி கொடுத்த மும்மணிக்கோவையென்க, நான்முகன் தந்த நான்மணி மாலையென்க. இளவன்மார்-தம்பிகள். ஒன்பதின்மர், வீரவாகு தேவர் முதலிய ஒன்பதின்மர் என்க. திகழ்ந்த—பிறத்தற்கு வாயிலாகிய; என்றது: அவ்வொன்பதின்மருடைய தாயர் ஒன்பதின்மரும் ஒன்பது இரத்தினங்களினின்றும் பிறந்தாரென்னும் புராணவழக்குக் கருதியவாறு. ஒன்பான் மணிமாலை—நவமணிமாலை. தயிருண்டோடிய நல்லம்மான்: திருமால். நல்லம்மான்—தாயுடன் பிறந்த மாமன். துயல்—அசையும். பன்மணி மாலையென்பது ஓரணிகலம். மும்மணிக்கோவை, நான்மணி மாலை, நவமணிமாலை, பன்மணி மணிமாலையென்பன அவ்வப்பெயர்களையுடைய தொடர் நிலைச் செய்யுட்களையுணர நிற்றல் குறிநிலையணி. தனியொருவர்—உவமையில்லாத வொருவர்; பிரிவில்லாத வொருவர் எனினுமாம்: ஆண்பால் வடிவமும் பெண்பால் வடிவமும் தம்முள் ஒன்றனுள் ஒன்று மறைந்து நில்லாது வேறு வேறாய் வெளிப்பட்டுக் காணப்படுகின்ற வொருவரெனினுமாம். இவ் வடிவங்களுள் ஆண்பால் வடிவம் பெண்பால் வடிவத்தைத் தன்னுட் கரந்தொடுக்கி நிற்கும் என்பது

"பெண்ணுரு வொருதிறனாகின் றவ்வுருத்
தன்னுளடக்கிக் கரக்கினுங் கரக்கும்"

என்னும் புறத்திற் கண்டுகொள்ளப்படும். ஆண்பால்—ஒருவன். பெண்பால்—ஒருத்தி. ஒருவனும் ஒருத்தியுமாகிய ஒருவர் என்றது பெண்ணொருகூற்றுக் கண்ணுதற் கடவுளை. ஆண்பால் பெண்பாலொருவர் என்பதற்கு ஆண்வடிவுக் கூறும் பெண்வடிவுக் கூறுமாயிருக்கு மொருவர் எனினுமாம். (பால்—கூறு சிவனும் உமையும் ஈண்டு ஒருவர் என்னும் பொதுச் சொல்லாற் கூறப்படுகின்றனர். ஒருவர் என்பது ஆண் பெண் பொதுப் பன்மையாகக் கொள்ளப்படாத வழி உயர்வுப்பன்மையாகும் எனக்கொள்க. ஆண் பெண் வடிவமாகிய சிவசத்தியினை ஒருங்கு உடன் குறித்தற்குத் தமிழ் மொழியிலுள்ள இவ்வொருவர் என்னுஞ் சொல்லன்றி உலகத்து வழங்கும் வடமொழி முதலிய வேறு பல்லாயிர மொழிகளுள்ளும் இல்லையென்பர் குமர குருபரவடிகள்.

"அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க்
கானந்தப் பெருவாழ்வா மாடல்காட்ட
மருவருக்கன் மதிவளிவான் யமானன் றீநீர்
மண்ணெனுமெண் வகையுருப்பின் வடிவுகொண்ட
ஒருவனுக்கு மொருத்திக்கு முருவொன் றுலவ்
வுருவையிஃ தொருத்தனென்கோ வொருத்தியென்கோ
இருவருக்கு முரித்தாக வொருவரென்றோ
ரியற்சொலிலதெனில் யான்மற் றென்சொல்கேனே

என்பது அப்பெரியார் திருவாய் மொழிந்த சிதம்பரச் செய்யுட் கோவைச் செய்யுள். இதனை விரித்துரைத்து மேற்கூறிய கருத்தமைந்தவாறு நோக்கி மகிழ்க.

இதனாற் சிவவழிபாடு தமிழரிடத்தே முதன்முதற் பிறந்து உலகமெலாம் பரவிற்று என்பதூஉம் அதனான் அது கடவுண் மொழியென்பதூஉம் பிறவும் பெறப்படும். இவ்வாய்மை திரு

வருளான் உணரப்பெற்றதனானன்றே திருவாதவூரடிகளும் "தென்னாடுடைய சிவனே போற்றி" யெனவும் "தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே" எனவும் "பாண்டிநாடே பழம்பதியாக" எனவும் "சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்" எனவும்

"ஏதமிலா விண்சொன் மரகதமே யேழ்பொழிற்கு
நாதனமை யாளுடையா னாடுரையாய்—காதலவர்க்
கன்பாண்டு மீளா வருள்புரிவா னாடென்றுந்
தென்பாண்டி நாடே தெளி"

எனவும் பலகாலும் வற்புறுத்தி மொழிந்து போதருவாரயினர். சாத்தும்—சூட்டும். புன்னகை—குறுமுறுவல். மணி—முத்து; என்றது பற்களின் ஒளிகளை. மாலை—வரிசை. சிவனும் உமையும் மகிழ்ந்து சிரிக்குங்கால் அவர் பல்வரிசைகளின் ஒளி வரிசைகள் முருகன் திருமேனிமேற் றோன்றுதல், புன்னகைமணி மாலையெனப்பட்டது. உயிர்—ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிரீறாகிய வுயிர்களெல்லாம். இன்புறு—இம்மையின்பம், மறுமையின்பம், வீடுபேற்றின்பங்களைப் பொருந்துதற்குக் காரணமாய் நின்ற. இனி இன்புறுஎன்னும் அடைமொழியைக் கதிர்மலைக்கே கூட்டுதலன்றிக் குமாரனுக்குங் கூட்டி. அறம்பொருளின்பங்களாகிய மூன்றின்பங்களைப் பொருந்துதற்கு வாயிலாகிய கதிரமலையில் எழுந்தருளியிருக்கும், வீடுபேற்றின்பத்தைப் பொருந்துதற்கு வாயிலாகிய குமரனே! என விரித்துரைப்பினுமாம். உணர்வு: புலங்களையே அவாய்ச்செல்லும், உயிர்களது உணர்வு; திருடுதல்: தன்னையே அவாய் நிற்குமாறு திருத்துதல். பிறருடைமையை அவரறியாமற் களவாடச் செல்லுவார், தம்மைப் பொய்க் கோலஞ்செய்து தாம் பிறர் மனைகளுட் புகுமாறுபோலப் பிறருணர்வினை அவரறியாமற் களவாடச் செலலும் நீயும் நின்னைப் பொய்க் கோலஞ் செய்து அவருள்ளங்களிற் புகுகவென்பது கருத்து. இங்ஙனமே

இறைவன் மெய்யுணர்வுள்ள மில்லாதாரைத் தன்னகப்படுத்தற் பொருட்டுச் செயற்கைக் கோலங் கொள்ளுதலைத்

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடிப்பூசி யென்னுள்ளங்கவர்கள்வன்"

என ஆளுடைய பிள்ளையார் கூறினர். அணியும்—தாங்கிய. உலகினைத் தாங்கிய நின் வடிவமென்றது விசுவரூபத்தை. முருகனுடைய திருமேனி யுறுப்புக்களில் உலகமெல்லாந் தாங்கப்பட்டுத் தங்கி நிற்றலைக் கந்தபுராணத்துட் சூரபன்மனுக்கு அறுமுகக் கடவுள் தன் உலகெலாமாகிய வடிவங் காட்டியது கூறியவாற்றான் உணர்ந்துகொள்க. உரவோர்—திண்ணிதாகிய மெய்யுணர்வுடையோர். மெய்யுணர்விற்குத் திண்மையாவது: ஐயந் திரிபு அறியாமைகளின்மை. புலங்கடோறுஞ் செல்லாமை யெனினுமாம். வருட—தடவ. நினைந்துருகுதல், வருடுதல் எனப்பட்டது. வருடப் புனைதலாவது: முருகக் கடவுள் தன் திருமேனியிற் சாத்திய மணிமாலை முதலியன, விண்மீன் றொடை, ஞாயிறு, திங்கள்முதலியஒளியுலகங்கள் போலச் சுடர்விடுதலான் அவ்வணிகலம் பூண்ட காட்சியைக் கண்ணுற்ற அறிஞர்கள் உலகங்களையெல்லாந் தாங்கி நிற்கும் முருகன் திருக்கோல நினைவு பிறந்து அக்கோலத்தைக் கண்டு மெய்ம்மறந்து உருகுமாறு அங்ஙனங் கோலங் கொள்ளுதலாம் என்றவாறு. ஞெகிழமும் பதக்கமும் கோவையும் மாலைகளும் புனைந்தருள் என முடிக்க. கண்ணோடுதல்—பயின்றார் சொல்லியன மறக்கமாட்டாமை; (தாட்சண்ணியம்) ஆகுபெயர்.

௩௰௯. கண்ணிற்கணி கண்ணோடுதல் என்பதனைக் "கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம் மஃதின்றேற் புண்ணென் றுணரப் படும்" என்னு முப்பாலாற் பெறுதும். காண்—அழகு. தக—பொருந்த. உரை—நூற்பொருள். வினவும்—ஆசிரியரிடத்துக் கேட்டு ஆராய்ந்த தெளிந்த. பொருள்: தாங்கற்ற அறம் பொரு

ளின்பம் வீடு பேறுகள். கசடு—அறியாமை, திரிபு, ஐயங்கள். மொழிதல்: மாணாக்கர்க்கும் அவைக்களத்தி லுள்ளோர்க்கும் விளக்கி வழுவின்றி மனங்கொள்ளக் கட்டுரைத்தல். கல்விக்கணி பொருள் கசடறமொழிதல் என்பது "கல்விக்கழகு கசடறமொழிதல்" என்னும் நறுந்தொகையாற் பெறுதும். மண்—நிலவுலகம். கோட்டம்—கோயில். மதிநூல்—மதியாலாராயும் நூல் மதி—இயற்கையறிவு; மதியை வளர்க்கும் நூலெனினுமாம். மதிக்கு நூல் வேண்டுமென்பதனை "மதிநுட்பம் நூலோடுடையார்க்கு" என்னுங் குறளான் உணர்க. நூற்கணி பிறவும் உளவேனும் சிறப்புடைமைபற்றி உவமமே அணியெனப்பட்டது. இனிச் சிறப்புடைமை கருதாது பிறவணிகள் அணிகளல்ல; உவமம் ஒன்றுமே அணியெனக்கூறுவாருமுளர். மன்—மிக்க. பொறை. குற்றங்கண்டு வெகுளாதொழிதல். "பொறையெனப்படுவதே தாடவர் தமக்குப் பூண்." என்பது வில்லி புத்தூராழ்வார் பாரதம். மனை—இல்லாள். அறமாகிய மாட்சி; மாட்சி—நற்குண நற்செய்கைகள். மனையறமாட்சிக்கு அணி மகவு என்பது

"மங்கல மென்பமனைமாட்சி மற்றத
னன்கல னன்மக்கட் பேறு"

என்னுந் திருவள்ளுவராற் பெறுதும். எண்ணின்—ஆராய்ந்தால் சால்பு—எல்லா நற்குணங்களாலும் நிறைந்திருத்தல்: சான்றாண்மைக்கு நாணுடைமை அணியென்பது

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கஃதின்றேல்
பிணியன்றோ பீடுநடை"

என்னும் பொய்யாமொழியாற் பெறுக. பணிவு—அந்தணர், சான்றோர் அருந்தவத்தோர், தம்முன்னோர், தந்தை, தாய், ஆசிரியன் என்றிவர்க்கு இருக்கை விட்டெழுதல் முதலியன செய்தல்.

"பணிவுடைய னின்சொல னாதலொருவற்
கணியல்ல மற்றுப்பிற"

என்பது குறள். எழுத அரு என்பது எழுதரு எனத் தொக்கது. எழுதவரியவெனினுமாம். "ஓவியத் தெழுதவொண்ணாத" என்றவாறு. மழ, இளமைப் பண்புணர்த்துமுரிச்சொல். அரசனை அரசு என்பதுபோல முருகனை முருகு என்றலும் பொருந்துமென்பது முருகாற்றுப்படை யென்புழி யுணரப்படும். விண்: துறக்கவுலகமும் வீட்டுலகுமாம் அணி என்பனவெல்லாம் அணிகலம் என்னும் பொருளனவாம்; சொற்பொருட் பின்வருநிலையணி. இதற்கு இஃது அணியெனக் கூறியன நிகரொடுத்துக் காட்டொப்புமைக் கூட்டவணி. வினையேம்பொற்ப —வினையேமால் நின்னை அணிவிக்கப்படும் பொன்னூலாகிய அணிகலங்கள். இனி அருவமும் உருவமுங் கடந்த நீ உருவத் திருமேனி கொண்டதற்கு அழகாவது வினையேமை ஆட்கொள்ளுதலேயாம் என்னுங் கருத்தாற் பொற்பணி யென்னுந்தொடர்க்கு அழகாகிய அடிமைத் தொழில் எனப் பொருளுரைப்பினுமாம். அழகென்பது ஈண்டுப் பயன் என்னுந் துணையாய்நின்றது.

"வண்ணந்தான் சேயதன்று வெளிதேயன்ற
னேகனேக னணுவணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் றடுமாறி யிமையோர் கூட்ட
மெய்துமா றறியாதவெந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டா
யெம்பெருமா னென்சொல்லிச் சிந்திக்கேனே."

என்னுந் திருவாசகச்சதகத் திருவிருத்தத்துள் மேற்கூறிய கருத்து விளக்கப்பட்டுள்ளது. வெறும்—தம்மைத்தாம் வெறுத்துத்

தளர்ந்து வருந்துகின்ற. அடியார் முன்னரெல்லாம் முருகக்கடவுளைக்காண முயலாததங் குற்றத்தின் பொருட்டுத் தம்மைத் தாம் வெறுத்துத் தளர்ந்து சோர்வாராயினர். "எசினும் யானுன்னையேத்தினு மென் பிழைக்கே குழைந்து வேசறுவேனை விடுதி கண்டாய்" என்னும் நீத்தல் விண்ணப் பத்துள்ளும் வேசறுதல் என்பது இப்பொருட்டாதல் காண்க. விழிவாய்—கண்களாகிய வாயால். பருக—குடிக்க; நின் திருமேனியிளமையழகாகிய அமுதினைப் பருகவென்றவாறு. வாய் என்பதும் பருகவென்பதும் உருவகம். விதுத்தனர்—விரைந்தனர். விதுத்தற்குப் பொருள் இஃதாம் என்பது "கண்விதுப் புறுதல்" என்புழிப் பெறப்படும். பொற்பு—அழகை. அணி—பூண்களால் அழகு செய்வாயாக. விதுத்தனர் என்பதன் பின் அதனால் என ஏதுவருவிக்க. பலரும் ந— பார்க்க வருவாராயிற் சிறுர் தம்மை நகை முதலியன அணிவித்துக்கோடல் விரும்புவராதலான், அடியார் பலரும் நின்னைப் பார்க்க விரைந்தனராதலால் நகைகளையெல்லாம் பூட்டிக் கொள்வாயாக எனக் கூறுகின்றனள்.

௪௯. முடை—புலால் நாற்றம். திரி—முறுக்குண்ட. தாடி—மோவாய் மயிர். அணல்—கதுப்பு. வேட்டுவர் மயிர் களைந்து கொள்ள மாட்டாமையால் மயிரணலும் திரிதாடியும் கூறப்படும். கொடுவில்—வளைந்தவில் உயிர்க்கொலை செய்தலிற் கொடிய வில்லுமாம். எயினன்—வேட்டுவமறவன். வழிபாடு—பூசை. தர—செய்ய. அருளி—அதற்கு இரங்கி. வலவையாறு—மாணிக்கக்கங்கையாறு. இது வலவையாற்றின் கிளையாதலால், வலவையாறு என்பதனை வடவையாறு என அருணகிரி நாதர் வழங்குவர். இவ்யாறு சமனொளி மலையிற் பிறந்து பெருகி மாணிக்கம் விளையும் நாட்டில் ஓடும் மாவலி கங்கை, வலவையாறு, கம்பளை, கல்லணை என்னும் நால்யாறுகளுள் ஒன்று எனப் பெரும்பற்றப் புலியூர்நம்பி

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் கூறும். அக்கூற்று வருமாறு:

"கருதிடிற் கங்கை மாவலிகங்கை கம்பளை கல்லணை யென்றுந்
தருசமனொளி சூழ்நதிகளொன் றிடமாஞ்சாதி நான்கந்தணன் வெள்ளை
பரிவுறுமரசன் சிவப்புவாழ்வணிகன் பச்சைசூத்திரன் கருப்பவைதா
மருவிய பெயர்கோ மளங்குருவிந்தம் பதுமராகம்பணுமணியே"

என்பது. வேட்டுவனொருவன் கதிரகாம முருகனை வழிபட அதற்கு முருகன் மகிழ்ந் தெழுந்தருளிய வரலாறு

"வனமுறை வேடனருளிய பூசை
மகிழ்கதிர்காம முடையோனே"

என்னுந் திருப்புகழடிகளிற் காணப்படும். இன்றும் கதிரகாம வேட்டுவர் மானைக் கொன்று இறைச்சியை முருகனுக்குப்படைத்து விழாக் கொண்டாடி வழிபட்டு அவ்விறைச்சியைத் தம்முட் கூறுசெய்து உண்டு மகிழ்வர் என்பராதலின் முதற்கண் வழிபட்டான் எனப்பட்ட வேட்டுவன் மானிறைச்சி படைத்து வழிபட்டமை புலனாகும். ஊன்குன்றம்—இறைச்சிமலை. ஊன்குன்ற மாமசுரர் என்றது சிறப்புருவகம். வன்கண்மை—கொடுமை. ஆற்றலா—பொறுக்கமாட்டாத. உம்பரார்—தேவர். நுந்தையென்றது சிவபெருமானை. உளறி—குழறி: அச்சமிகுதியால் நாத்தடுமாறி. புலம்பி—அழுது. முறையிட்டனர்—தம்மைக் காத்தருள வேண்டும் என விண்ணப்பித்தனர். உம்பரார் விடியற்கண் நுந்தையடி வீழ்ந்துளறிப் புலம்பி முறையிட்டனர் என்க. வான்—துறக்கம். குன்றல்—கெடுதல். ஒழியும்—நீங்கிவிடும். சிவபெருமான் புத்தேளிரைக் கடைக்கணித்து நோக்கி நுந்தலைவன் என்றது தன் இளைய மகனாகிய முருகனை. கடவுளர் படைத்தலைவனாக முருகனைக் கருதி அங்ஙனங் கூறினான். இன்னுஞ் சிறிஞன்—இப்பொழுதும் சிறியனாயிருக்கின்றான். மழலை—

குதலைச் சொல். நிரம்பிற்றிலன்—எழுத்தொலி நிரம்பப் பெற்றிலன். சிவபெருமான், மகவின்மேற் சென்ற காதலான் அவனை விட்டுப் பிரியமாட்டாமையின் இப்பொழுது அசுரரொடு பொருதற்குத் தகுதியிலன்; அதனான் முருகனை இப்பொழுது போர்க்குச் செலுத்த முடியவில்லையென்பான் மழலை நிரம்பின முருகனை மழலை நிரம்பிற்றுமிலனென்றான். நிரம்பிற்றும் என்னும் உம்மை விரித்துக்கொள்க. தாடகை சுவாகு மாரீசர்களைப் போய்த்தொலைத்தற்குக் கௌசிக முனிவன் இராமனை வந்துகேட்டபொழுது தசரதன் கூறியவாறு ஈண்டுக் கருதத் தக்கது. இனி நாலைந்தாண்டு வருக என்றான்; இப்பொழுது உடைவாள் செறிக்கும் பன்னிர்யாண்டகவையனாதலாற் பதினாறாட்டையகவைக் காளைப் பருவமே போர்பொரத் தொடங்கத் தகுதியுடைத்து எனக் கருதி; இவ்வாறு முருகனை அசுரப் போர்க்குத் தகுதியிலனென்றது தகுதியின்மையணி. நாலைந்து என உலக வழக்கச்சொல்லாற் கூறியது உலகவழக்கு நவிற்சியணி. இங்ஙனம் சிவபெருமான் முருகனைப்பிரியமாட்டாமையாகிய விறலினை (சத்துவத்தை) மறைத்துரையாடினது கொய்ம்மையணி. (இலேசவணி) போக—அதுவரையும் நுங்களுலகம் புக்கிருக்க; என்று அருள்—விடை. வழங்கினும்—கொடுத்தானாயினும். தான்—சிவபெருமான். தான் அருள் வழங்கினும் நின்னைக் கடிது போர்க்குச் சென்றுவர விடுப்பான் போலும் என இயைக்க. கடிது—விரைந்து. விடுப்பான்-விடுக்குங் கருத்தினனாயுள்ளான். உயர்வறவுயர்ந்த கடவுளாயினும் மகவின் மேற் சென்ற காதன் மயக்கங் கடக்கமாட்டாமையாற் புத்தேளிருடைய பரிபுலம்பற்கும் இரககமில்லான் போலச்சொன்னானாயினும் தம்போறிவான் ஒருவாறு தேறி விரைவில் நின்னைப் போர்க்குச் செலுத்திக் கடவுளரைக் காப்பானெண்ணினான் என்றவாறு. அதனால் வாட்படையை எடுத்து உடையின் இடையிலிறுக்கிய கச்சிற்கோத்த உறையிற் செருகி அடக்கிப் பழகுவாயாகவென வுரைக்க. அதனால் எனவொரு சொல் இசை

யெச்சமாக வருவிக்க. சால்—அமைந்த. உடை—கச்சுடை. ஆகுபெயரால் அதிலே கோத்துக்கட்டிய வாளுறையை உணர்த்திற்று. செறித்தல், உறையில் அடக்குதலுமாம்; உறையிற் பொதிந்த வாளை உடையிற் கச்சினாற் கட்டுதலுமாம். கண்வாளோடு உடைவாளைச் செறித்தல் பழகுவாயாக வென்றது வினைப்புணர் நிலையணி. முருகன் உறையிலே வாளைச் செறிக்கும் எழிலினைத் தகுதியான இளம்பருவ மங்கையர்கள் காதலித்துக்காமுற்றுக் கண்ணானோக்குதலைக் கண்வாள் செறித்தல் என உருவகித்துக் கூறினாள். தாழ்—நீண்ட. இச்செய்யுளிற் பண்டு நடந்து கழிந்த புத்தேளிர் புலம்பலும் முருகனைச் சிவபெருமான் சூரபன்மப் போருக்கு விடுத்தலும் இப்பொழுது நிகழ்வனபோலக் கூறியது நிகழ்வினவிற்சியணி.

சமழ எளியேம் பொருந்தும் எனமாறுக. ஈண்டும் அவா; என்பது அவவு என நின்றது. ஓவியம் பொதிந்த என மாறியுரைக்க. மெய்யுறை—கவசம்: சட்டை. பொதி—மறைத்த: மெய்யுறைப்புறம் முழுதும் பல்வேறு ஓவியமமைத்து நிரப்பிய; என்றவாறு. புலங்களிற் பரவும் அவாவில்லாமை. அப்புலங்களினின்றும் வரும் கேடு புகுதாமற் காத்தலான் மெய்யுறையாக வுருவகிக்கப்படும். அதனை முருகன் போர்த்தலாவது நம்மனோரது அவாவில்லாத வுள்ளத்தின்கண் அவன் புக்கிருப்பானாதல். அவாவின்மையாகிய மெய்யுறையென விரிக்க. பொல்லா; என்பது பொலியும் என்பதன் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பொலியும்—நன்மைபயக்கும். எனவே பொல்லாத என்பது: கேடுபயக்கும் என்பதாயிற்று. இருசார்ப்பற்று—இரண்டு வகைப்பற்றுக்கள்; ஆவன: அகப்பற்றுப் புறப்பற்று என்பன. பற்றாவது: தம்பாலுள்ள பொருளை விடமாட்டாமை. அவா, அன்னதன்று; தம்பாலில்லதனைத் தமக்கு வேண்டுமென்றிருத்தல். பற்றும் அவாவும் தம்முண் முறையே காரண காரியவியையுடையன. பற்றின்மையாகிய செருப்பு; எனவுருவக

மாக்குக. பொன்னூலாகிய அழகிய செருப்பு என்க. இருவகைப் பற்றும் அற்றக்கால் நிகழும் தன்வயமிழத்தலும் இறைவயப்படுதலும் என்னும் இரண்டும், இறைவனுடைய இரண்டு திருவடிகள் எனப் புனைந்து கூறுவராதலிற் பற்றின்மையாகிய செருப்பிற் கழலைச் சேர்க்க; எனச் செப்பினுள் செவிலி. முருந்து மயிலிறகின் அடிமுள்; அதுபோலுமூரல் என மெய்யும் நிறனும் பற்றிவந்த விரவுமமாக்குக. மூரல்—பற்களும் நகையுமாம். மூரலால் முகமனிக்கும் என விரிக்க முகமனிக்கும்—உபசரிக்கும்; கடைக் கணிக்கும் என்பதுபோலப் பெயரடியிற் பிறந்த வினை. அன்பர்களை உபசரிக்கும் என்க. கதிருகாம முருகன் தன் அடியார்களைக் கண்டுழி அருள்சுரந்து முறுவல் பூத்தல் மாத்திரையால் உபசரிப்பான் என்றவாறு.

"குனித்தபுருவ முங்கொவ்வைச் செவ்வாயிற் குமிண்
சிரிப்பும்"

என்பர் ஆளுடைய வரசுகள். முந்து—உடைவாள் செறிக்குமுன்னர். குறங்கு—தொடை வட்டுடை—முழந்தாளளவு முடுக்கும்போர் மறவருடை வகை. முருகனும் போர் மறவனாதலான் இவ்வுடை கூறப்படும். ஞாண்: வட்டுடையை நுசுப்பிலே சுருக்கிக் கட்டுதற்கு வட்டுடை விளிம்புறையினுட் கோத்த சிறந்த கயிறு. இனி வட்டுடையைப் பழிபாவம் அஞ்சுதலாகிய நல்ல இல்லற துறவறவொழுக்கமாக உருவகித்துச் சிலேடையாமாறுங் கண்டுகொள்க. நுசுப்புவரை—இடையளவும். விருந்து—புதுமை; ஆகு பெயராற் புதுமைபற்றி உள்ளத்தின் கணிகழும் உவப்பின் மேற்றாயிற்று. பொடிப்ப—தோன்றிவிரிய. சுருக்கி—குறுக்கிக் கட்டி "கல்யாழாகுளி பதலையொடு சுருக்கி" என்பது புறம். நுசுப்பு வரையும் மறையவுடுத்தியென வருவித்துரைக்க; இசையெச்சம். வட்டுடையை நுசுப்பு வரையும் மறைய விரித்துக் குறங்கிலுடுத்தி நாணாற் சுருக்கியென வியைக்க. வேறு—பல.

"ஒரு பொருள் குறித்த வேறு சொல்லாகியும்
வேறு பொருள் குறித்த வொரு சொல்லாகியும்
இருபாற்றென்ப திரிசொற் கிளவி"

என்னுந் தொல்காப்பிய நூலின் கண் வேறு என்பது பல என்னும் பொருட்டாய் நின்றது நினைக்க. கலையின் செல்வமாவது: கலைகளினானாகிய அறிவு நிரம்புதல் கலையின் செல்வமென்னும் கச்சு என்க. விளிம்பு—இரண்டருகும். பச்சைமணி—மரகதவிரத்தினம். நிரைத்த—வரிசையாக வைத்துப் பதித்த. நிரைத்தகச்சு என்க. பாம்பு, கச்சுக்கு வடிவுவமம். வெருள்—அஞ்சும். வெருளும் பாம்பு சுருளுமாதலின் இடைவளையுங் கச்சிற் கினிதுவமமாகும். ஆர்த்து—கட்டி; ஆர்ப்பது வட்டுடை மேலென்க. எருந்து—கடல்விளை கிளிஞ்சில். உம்மை இறந்தனதழீஇயிற்றுமாம. உமிழ்—ஓடு உடைந்து வெளிப்படுத்தும். காழ்—முத்து. காழ்த்தடறு எனக்கூட்டி முத்துக்கள் தைத்ததடறு எனவுரைக்க. தடறு—வாள் புகுத்தும் உறை மறைத்தடறு—வேதமாகிய வாட்கூடு எனவுருவகம். வாளாகிய ஞானம் உறையும் இடனாதலின் வேதம் வாளுறையாதல் பொருந்தியவாறு காண்க. ஞானமாகிய ஈர்வாள் எனமாறிக் கூட்டிப் பொருளுரைக்க. ஈர்வாள்—அஞ்ஞானமாகிய அசுரரை வெட்டிப் பிளக்கும் வாள். தடற்றுள் உறையும் ஈர்வாளைக் கச்சிற் கட்டியருள் என்க. எண்ணும் செந்நிலை, எண் செந்நிலை. எண்ணும்—கருதும். ஞானத்திற்கு வாயிலாகக் கருதப்படும் என்றவாறு; நன்கு மதிக்கும் எனினுமாம. செந்நிலை—சாந்தம்; அஃதாவது: இன்ப துன்பங்கள்தோறும் முறையே விழைந்தும் வெறுத்தும் தந்நிலை கெடத் திரிந்து பிறழாது ஒரு நிலையே நிற்றலே சாந்தம் எனப்படுமாதலிற் சாந்தம் செந்நிலையெனப் பெயர்வழங்கப்படும். செம்மை—திரியாமை: இயற்கை. கைப்பிடி-வாளின் பிடி: வாளிற்கைப்பற்றுமிடம். சாந்தமே ஞான வாளுக்குக் கைப்பிடி யாதலிற் செந்நிலையாகிய கைப்பிடி என வுருவகத் தொகைநிலையாக்குக. கைப்பிடியுடைய ஈர்வாள்

வயிர வீர்வாள்—வயிரவிரத்தினத்தாலிழைக்கப்பட்ட ஈர்வாள் ஞானத்திற்கு வயிரம், உறுதி; அஃதாவது: மறவிவாயிலாகப் புகும் அவாவினாற் கெடுதலில்லாது ஐயந்திரிபு அறியாமைகளினீங்கி நிற்றல். இச்செய்யுளில் வந்தன இயைபுருவகம். ஞானஞ் செறித்தருளுதலென்பது ஞானத்தைத் உயிர்க்கட்டோற்றுவித்தருளுதல் என்னுங் குறிப்பிற்று. ஞானத்தை வாட்படையாகத் திருவாதவூரடிகளும் திருப்படையெழுச்சியிற் கூறியருளியவாறு நினைக்கப்படும். ஆண்டுக்கூறிய திருப்படைக்கும் ஈண்டுக் கூறிய முருகன் படைத் தலைவன். இச் செய்யுளின்கண்ணே வட்டிடைக்கும் கச்சுக்கும் வாளுறைக்கும் வாளுக்கும் தொடர்பு காணப்படுதல் போலவே நாணுகிய நல்லொழுக்கத்திற்கும் நூற்கலைக்கும் வேதத்திற்கும் ஞானத்திற்கும் தொடர்பு காணப்படுதலுங் கருதுக.

௪௰௨. கூளி பூதம். தூசி—முன்செல்லும் படை: கொடிப்படை. பஞிலம்—படைத்தொகுதி. பைஞ்ஞிலம் என்பது பஞிலம் எனத் திரிந்து நின்றது. "பன்னூறடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்" என்பது புறம். தூசிப்பஞிலமாகிய சுற்றமெனப் பெயரொட்டு. படைத் தலைவனுக்குப் படையே சுற்றமாதலிற் றூசிப்பஞிலச் சுற்றமெனப்படும். குணலைக் கூத்து—வெற்றி பெற்றுக் களித்தாடும் ஒருவகைக் கூத்து. வெற்றிபெறுதல் ஒரு தலையாகலின் வெற்றி பெற்றதாகவே கொண்டு கூளிச் சுற்றங்கள் குணலைக் கூத்தியலுமாயின. இயலும்—ஆடும். கொள்—பெருமையையுடைய; இடைச்சொல். புத்தேளிர்—தேவர். புத்தேளிருடைய வருடும் யாழிசையும் ஊதும் குழலிசையும் அடிக்கு முழவிசையும் தூவு பூத்தொகுதியும் என்க. இசையென்பதனை யாழோடும் குழலோடும் கூட்டிக்கொள்க. குவிபூ—பூக்குவியல்கள் பொதுளும்—செறியும்; இடையீடின்றித் தோன்றும் என்றவாறு. இது படையெழுச்சிக் கொண்டாட்டம். வாளிச் செலவின்—அம்பின் செலவுபோலும் விரைந்தசெலவினை யுடை

தோகை—மயிற்றூவி. தோகைக் குடைவிரிக்கு மயில். தோகையாகிய குடை. மயிலின்மேல் வீற்றிருக்கும் முருகக்கடவுளுக்கு அரசியற் குடையாகவும் வெயில் முதலியன காக்குங் குடையாகவும் தோகை விரிந்து நிழற்றுமாதலிற் றோகைக் குடையெனப்படும். தோகைக் குடையெனப் பழனிப் பிள்ளைத் தமிழுங்கூறும். மயில் வடிவாகிய இந்திரனும வந்தான். உம்மை விரிக்க. முருகனுக்குப் பண்டு இந்திரனே மயிலாகப் போர்க்களத்துத் தாங்கினன் என்பர். படையணி—படை வகுப்பு. வலன்—வெற்றி; வெற்றி தோன்ற. ஆவலங் கொட்டல்-வாய்கொட்டி ஆரவாரம் செய்தல். இது வெற்றி முழக்கங்களுள் ஒன்று. தூளிப்பொடி, சுருங்கச் சொல்லலணி. புழுதியாகிய பொடியன்றித் திருவெண்ணீற்றுப் பொடியெனவும் வேறு பொருள் தரும். தூளிப்பொடி, நீருட் குழையாத வெண்ணீற்றுப் பொடி. சூரடிமையென்பதும் சுருங்கச் சொல்லலணி; சூரனுக்கு அடிமைப்பட்டு வாழ்தலென்பதன்றி நடுக்கத்தைச் செய்யும், பிறர்க்கு அடிமைப்பட்டு வாழும் எம்மனோரது வாழ்வு எனவேறு தகுதியான பொருளுங் குறித்தறிய நிற்றலின். தொலைவுறவென்பது காரண காரியப் பொருட்டுச் செயவென் வினையெச்சம். பூசவும் தொலைவுறவும் உலவிவர; என்க. உலவிவரல்—திருவுலாப்புறம் போந்தருளுதல். உலவிவரச்செறி; யென முடிக்க. உலவிவர; என்பதனையும் உலாவிவருதற் பொருட்டு எனக்காரண காரியப் பொருட்டு வினையெச்சமாகக் கொள்க. பேரறம்—வைதிகமதம். உம்மை எதிரது தழீஇயிற்று எதிரது: முருகன் நிமிர்தல். தரியலர்—பகைவர் நாண—வெட்கமுற்று வணக்கஞ் செய்ய. நிமிர நிமிர்ந்து நாண நிமிர்ந்து என்க நிமிர; என்பதூஉம் காரண காரியப்பொருட்டு வினையெச்சம் நாண; என்பது காரியப்பொருட்டு வினையெச்சம், தார்—மாலை. ஆண்டகை; என்பது ஆண்மைக்கண் வந்த இயல்பு விளி. வாழி—வாழ்க; வியங்கோள். வாழியென்றது வாழ்த்தென்னுமோரணி

34106

முற்றும்.

விற்குமிடம்:

விவேகானந்த சபைப் புத்தகசாலை,
கொழும்பு.

சரஸ்வதி புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

திருமகள் புத்தகசாலை,
சுன்னுகம்.